உ

திரிகூடராசப்பக் கவிராயர்

இயற்றியருளிய

# திருக்குற்றாலநாதருலா

மகாமகோபாத்யாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்,

அடையாறு, சென்னை-20.

உ

ஸ்ரீஐயரவர்களின் நூருவதாண்டு நிறைவு விழா
நினைவுப் பிரசுரம்

மேலகரம்

## திரிகூடராசப்பக் கவிராயர்

இயற்றியருளிய

# திருக்குற்ருல நாதருலா

குறிப்புரையுடன்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்களாகிய
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்
*அவர்களுடைய பொருளுதவியால் வெளிவருவது.*

பதிப்பாசிரியர் :
டி. ஸ்ரீநிவாஸ ஐயர்


மன்மதஞூ ஆவணிமீ

அடையாறு 1955 சென்னை 20

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடு-13

முதற்பதிப்பு—1955
உரிமைப் பதிவு

விலை ரூ. 2—4—0

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

அடையாறு * * சென்னை 20

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்) 65, திருப்பள்ளி தெரு, சென்னை-1.



திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்

# முன்னுரை

1955 பிப்ரவரி மாதம் 19உ மகாமகோபாத்யாய டாக்டர் ஐயரவர்களின் நூறுவது ஆண்டுப் பிறப்பு விழா நம் மாகாண முதலமைச்சர், மேன்மைதங்கிய ஸ்ரீ K. காமராஜ நாடாரவர்களின் தலைமையின் கீழ், நூல் நிலையத்தில் நடந்தேறியபோது, தமிழும் சைவமும் இக்காலத்தில் தழைத்தோங்குவதற்கெனவே தோன்றியருளிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள் பேரன்புடன் ரூ. 1000 நூல் நிலையத்திற்கு நன்கொடையாக உதவி, அதனைக் கொண்டு ஐயரவர்களின் அவ்விழாவின் நினைவுக் குறியாக இங்குள்ள ஓலைச் சுவடிகளிலிருந்து ஏதேனும் ஒரு நூலைப் பதிப்பிக்க வேண்டுமென்று பணித்தருளினார்கள். அப்பேரன்பின் விளைவே இப்பிரசுரமாகும்.

இங்குள்ள சுவடிகளில் இந்நூலின் பிரதி ஒன்றையும் ஸ்ரீ ஐயரவர்களின் பௌத்திரர் ஸ்ரீ கா. சுப்பிரமணிய ஐயரவர்கள் அன்புடனளித்த இந்நூலின் பிரதி ஒன்றையும், பிறவற்றையும் ஒப்புநோக்கிச் சிறந்த பாடங்களைத் தேர்ந்தெடுத்து, குறிப்புரை முதலியன எழுதி இதனைப் பதிப்புக்கும் முழுப்பொறுப்பையும் பண்டித ஸ்ரீ L. ஸ்ரீநிவாஸ ஐயரவர்கள் அன்புடன் ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுடன் வழக்கம்போல் உடனிருந்து உதவியவர் இந்நூல் நிலைய நூற்பாதுகாப்பாளர் வியாகரண சிரோமணி ஸ்ரீ தி. இராமானுஜ ஐயங்கார் அவர்களாவர். திருக்குற்றாலத் தேவஸ்தான நிர்வாகியும், சிறந்த தமிழபிமானியுமான ஸ்ரீ V. சங்கரநாராயணபிள்ளை அவர்கள் அத்தலச்செய்திகள் பலவற்றை எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி அன்புடன் அளித்து உதவினார்கள். இந்நூலை இரத்தினம் பிரஸ் (பிரான்சு) அச்சுக்கூடத்தார் விரைவாகவும் அழகாவும் அச்சிட்டுதவினார்கள்.

இவர்கள் யாவர்க்கும் இந்நூல் நிலையம் தன் மனமார்ந்த நன்றியையும் கடப்பாட்டையும் தெரிவித்துக் கொள்ளுகின்றது. ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகளவர்களுடைய பேரன்புக்கு இந்நூல் நிலையம் என்றும் கடமை கொண்டதாகும்.

இவ்வரிய நூல் வெளி வருவதற்கு அருளிய இறைவன் கருணையை வியந்து வணங்குகின்றேன்.

இங்ஙனம்,

**ரா. விசுவநாதன்**

*கௌரவ அமைச்சர்.*

1—10—'55

# முகவுரை

எழிலார் இராச சிங்கத்தை இராமேச் சுரத்தெம் எழிலேற்றைக்
குழலார் கோதை வரைமார்பிற் குற்றா லத்தெங் கூத்தனை
நிழலார் சோலை நெடுங்களத்து நிலாய நித்த மணாளனை
அழலார் வண்ணத் தம்மானை அன்பிலணைத்து வைத்தேனே.

[திருநாவுக். தேவார. பாவநாசத் திருப்பதிகம்.]

திருக்குற்றால நாதருலா என்பது பாண்டி நாட்டில் உள்ள திருக்குற்றாலம் என்னும் தலத்தில் கோயில் கொண்டு விளங்கும் திருக்குற்றால நாதர் என்னும் திருநாமமுடைய சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு மேலகரம் திரிகூடராசப்பக்கவிராயர் என்னும் புலவர் பெருமானால் இயற்றப் பெற்ற உலா என்னும் ஒரு வகைத்தமிழ்ப் பிரபந்தமாகும்.

திருக்குற்றாலம் தேவாரப் பதிகம் பெற்ற பாண்டி நாட்டுச் சிவத்தலங்களுள் ஒன்று. இத்தலம் திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசிக்கு அடுத்துள்ளதும், உன்னத மலையருவிகளின் நீர் வீழ்ச்சிகளையுடையதும், சுகாதாரத்திற்கு ஏற்ற இயற்கை வளங்களும் வனப்புகளும் அமையப் பெற்றதும், தீர்த்தம் மூர்த்தி க்ஷேத்திரம் என்னும் மூவகைச் சிறப்புக்களால் உயர்ந்து விளங்குவதும், திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிய இரு தேவாரத் திருப்பதிகங்களோடு, திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் ஆகிய இருவரும் ஆங்காங்குப் புகழ்ந்து பாடிய பல பாசுரங்களைக் கொண்டதும், பட்டினத்தாரால் தனிப்பாடல்களில் சிறப்பிக்கப் பெற்றதும், வடமொழியிலும் தமிழிலும் புராணங்களையும், பலவகைப் பிரபந்தங்களையும் கொண்டதுமான பெருமைகளையுடையது.

உலா என்பது தமிழ் மொழியில் உள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இது பாட்டுடைத்தலைவன் வீதியிற் பவனி வருகையில் எழுவகைப்

பருவத்து மகளிர் அத்தலைவனைக் கண்டு அவன் வடிவழகிலும், அவனது மற்ற சிறப்புக்களிலும் ஈடுபட்டு அவன்பாற் காதல் கொண்ட நிலையில் புலவரால் கலிவெண் பாவாற் புனைந்து பாடப்பெற்ற ஒருவகைத் தனி நூலாகும். இவ்வாறு பவனிவரும் தலைவன் திறத்துக் காதல் கொண்ட மகளிர் இல்வாழ்க்கையிலுள்ள குலமகளிர் அல்லர் என்பதும், பொது மகளிரான கணிகையர்களே ஆவர் என்பதும் ஆசிரியர் பாரத்துவாச நச்சினார்க்கினியர் தாம் எழுதிய தொல்காப்பிய உரையில் (தொல் புறத். சூ. 30, 31.) அறுதியிட்டுத் தெளிவுறக் கூறியிருப்பதால் விளக்கமாகும். இதற்கேற்ப இம்மகளிரைத் தளிப்பெண்டிர் என்று தென்னிந்தியத் தமிழ்ச் சிலாசாஸனங்கள் கூறுவன காணலாம். இந் நூல் உலாப்புறம் என்றும் வழங்கப் பெறும். புறவுலா என்பதே இலக்கணப் போலியாக இங்ஙனம் மாறிவந்தது என்பர் நன்னூல் உரையாசிரியருள் ஒருவரான சங்கர நமச்சிவாயர்; (நன்னூல். சூ. 267. சங்கர. உரை.) இதன் பொருள் புறப்பொருளின் பாற்படும் உலா என்பதாம். இவ்வுலா என்னும் நூலின் இலக் கணங்களைப் பன்னிருபாட்டியல், இலக்கண விளக்கம் முதலிய பிற்கால நூல்கள் ஒருவாறு வரையறுத்துக் கூறி யுள்ளமை காணலாம். பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்ப ராமாயணம் முதலிய தமிழ்ப் பெருங் காப்பியங்கள், அக்காப்பியத் தலைவர்கள் உலாச்சென்றதாகக் கூறும் பகுதிகளின் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு பிற் காலத்துப் புலவர்கள் தத்தம் கருத்துக்களுக் கியையப் பல பாகுபாடுகளுடன் கலிவெண்பாவால் உலா என்னும் பெயருடன் தனி நூலாகப் பாடுவராயினர் என்பது கொள் ளத்தக்கது.

புலவர்கள் தமிழில் தத்தம் திறமைக்கேற்ப, கருத்துக் களைச் சொற்களாலும் சொற்றொடர்களாலும் பொருட் சுவைகளுடன் பலவகை அணிபெற அமைத்துத் தாம்வழி படும் கடவுண்மீதும், தம்மை ஆதரித்து வந்த அரசர்கள், பிரபுக்கள் முதலிய உபகாரிகள் மீதும் உலாக்கள் பல பாடி

யுள்ளார்கள். சேரமான் பெருமாள் நாயனர் அருளிச் செய்த ஆதியுலா என்னும் திருக்கயிலாய ஞானஉலாவும், கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் சோழமன்னர் மூவர் மீது இயற்றியருளிய *மூவருலாவும் மேற்கூறிய இருவகை உலாக்களுக்குச் சிறந்த உதாரணங்கள் என்னலாம்.

குற்றலநாதருலா என்னும் இந்நூல் குற்றலத்துச் சிவ பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப் 'பெற்றதாதலின் இது மேற் கூறியவற்றுள் முதற் பிரிவைச் சேர்ந்ததாகும். இவ்வித உலாவைக் கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்தபக்கம் என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறும்; (புற. வெண். பாடாண் : 49.)

இவ்வுலாக்களில் தலைவர்கள் தத்தமக்குரிய ஊர்திகளில் பவனி வந்ததாகக் கூறப்பெறுவன காணலாம். ஆனல் ஸ்தல சம்பந்தமாகக் கடவுண்மீது பாடப்பெற்ற உலாக்க ளெல்லாம் அக்கடவுள் திருத்தேரில் பவனி வருவதாகவே கூருநிற்கும். ஆயினும் மதுரைச் சொக்கநாதருலா, ஏழு வகைப் பருவமகளிர்க்கேற்ப, ஏழு நாட்கள் ஏழுவகை வாக னங்களில் அவ்வுலாத் தலைவரான சோமசுந்தரக் கடவுள் பவனி வந்தனர் எனக் கூறுகின்றது. மூவருலா அதன் தலைவர்கள் தம் பட்டத்து யானை மீது ஏறிப் பவனி வந்த தாகக் கூறும். இவ்வுலாக்களெல்லாம் பவனி வந்த தலை வரைக் காணவந்த மகளிர் அத்தலைவர்பால் காதல்கொண்ட நிலையில் அவரவர் பருவத்திற் கேற்ற உணர்ச்சிகளையும், செயல்களையும் விளக்கிக் கூறுவன காணலாம்.

தனித்தனியே பல நிகழ்ச்சிகளையும் பொருள்களையும் கொண்ட பிரிவுகளோடு பலவகைச் செய்யுள்களால் அமையப்பெறும் மற்ற காப்பியங்களைப் போலல்லாமல் உலா என்பது தொடர்ந்த பொருளுடைய ஒரு நெடும் பாட் டால் இயங்குகின்றதாதலின் இதனைத் தொடர்நிலைச் செய்

---

* மூவருலா இந்நூல் நிலையப் பதிப்பாகப் பழையவுரை, குறிப் புரைகளுடன் வெளிவந்துள்ளது.

யுள்களில் ஒன்றாகக் கருதுவதும், சிறு காப்பிய வரிசை களுள் ஒன்றாக வைக்கத்தகுவதும் ஏற்புடைத்தாகும்.

தமிழ் நூல்கள் மகளிர்க்குரிய பருவங்களைப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என ஏழு வகையாகப் பாகுபாடு செய்துள்ளனர். கொங்குவேளிர் என்னும் புலவர் பெருமான் தாம் இயற்றி யருளிய பெருங்கதை என்னும் காப்பியத்தில், உஞ்சைக் காண்டம் நீராட்டரவம் என்னும் பகுதியில் மகளிரில் இவ் வேழுவகையினரைப் பற்றிய செய்திகளைத் தனித்தனியே விரித்து விளக்கியுள்ளமை காணலாம். மகளிர்தம் இப் பருவங்களுக்குள்ள கால எல்லையிற் சில நூல்கள் சிறிது மாறுபாடுகள் கொண்டுள்ளன எனினும், பொதுவாக அம் மகளிரின், உலகியலை அறியும் நிலை எய்தாத இளம்பருவம் பேதைப் பருவம் என்றும், காம உணர்ச்சி ஒருவாறு அரும்பி அதனை உணர்ந்தும் உணராததுமான நிலையில் உள்ள பருவம் பெதும்பைப் பருவம் என்றும், அவ் வுணர்ச்சியை நன்கு எய்திய பருவம் மங்கைப் பருவ மென்றும், அவ்வுணர்ச்சியிற் பயின்றுவரும் பருவம் மடந்தைப் பருவமென்றும், அவ்வுணர்ச்சியில் முதிர்ந்து இன்பத்திற் றிளைக்கும் பருவம் அரிவைப் பருவம் என்றும், மகப்பேற்றை அடையும் பருவம் தெரிவைப் பருவம் என்றும், காம உணர்ச்சி தளர்வுறத் தோன்றும் பருவம் பேரிளம்பெண் பருவம் என்றும் ஒருவாறு பாகுபாடு செய்து கொள்வது பொருத்தமுடைத் தென்னலாம். மேற்கூறிய ஏழுவகைப் பருவங்களுள் காமவுணர்ச்சியின் இயல்பைச் சிறிது உணர்ந்தும், பெரிதும் உணராமலும் உள்ள பெதும் பைப் பருவத்தை விளக்கிக் கூறுதல் அரிது. ஆதலின், "பேசும் உலாவிற் பெதும்பை புலி" என்ற ஆன் றோர் வாக்கும் தொன்றுதொட்டு வழங்கிவருகின்றது என்னலாம்.

இக்குற்றால நாதருலாவில், தலைவர் பவனி காணவந்த மகளிர், மற்ற உலாக்களிற் காணப்பெறுவது போல மானிட மகளிர் மட்டும் அன்றி, தேவமகளிர், நாகமகளிர்,

வித்தியாதர மகளிர், கீரரமகளிர், கானக மகளிர், வரை மகளிர் எனப் பலரும் ஆவர் என்பதோடு, அன்னோரில் இன்னோர் இப்பருவத்தினர் என்று வகுத்துக் கூறியிருப்பதும் இவ்வாசிரியர்* கொண்ட ஒரு புது முறையே ஆகும். ஆயினும், பாட்டுடைத் தலைவரான குற்றால நாதர் மேற்கூறிய. எல்லா உலக மகளிருங்கண்டு விரும்பத்தக்க பேரழகும் பெருஞ்சிறப்பும் வாய்ந்தவர் என்பதாலும், மும்மூர்த்திகளுக்கும் மேம்பட்ட ஒப்பற்ற ஒரு தனி மூர்த்தியாய் விளங்கும் பெருமையுடையவ ராதலாலும் அவ்வாறு கூறியது முற்றும் பொருத்த முடைத்தே என்னலாம்.

இவ்வுலா பக்தி ரஸத்தின் செம்பாகமாய், ஆங்காங்கு, யமகம், திரிபு, சிலேடை, மடக்கு, முரண், எண்ணணி, சொல்லணி முதலிய பல அழகுகள் விரவியும் பல புராண வரலாறுகள், உவமைகள், சொற்சுவைகள், பொருட்சுவைகள் ததும்பப்பெற்றும், படிப்போர்க்கு இன்பமும் ஊக்கமும் ஊட்டி, அன்னோரைப் பக்திவெள்ளத்தில் திளைத்து மகிழச் செய்கின்றது. இவ்வாசிரியர் இந்நூல் தொடக்கத்தில், "நாமே வுலாத்தேர் நடாத்துமே," (காப்பு. வெண்பா. 2.) என்று கூறியதற் கிணங்க இந்நூல் நடை பலவிதச் சித்திர அலங்காரங்களால் நிறைந்த ஒரு பெருந் திருத்தேர் அசைந்து செல்லும் ஒரு தனிப் பெருமித நடையில் மிளிர்ந்து இயங்குகின்றது காணலாம்.

இந்நூலில், 440. ஆம் கண்ணி, கிடைத்த எல்லாப் பிரதிகளிலும், சீர், மோனை எல்லாம் பிறழ்ந்து பொருள் விளங்காமல் இருந்தமையால், அதனை அவ்வாறே பதிப்பிக்காது, திருந்திய பாடம் கிடைக்குமேல், மறுபதிப்பில் திருத்திப் பதிப்பிக்கலாம் என்ற துணிவால் சொற்போக்குக்கும் பொருள் தொடர்புக்கும் ஏற்றபடி அக்கண்ணியை ஒருவாறு திருத்திப் பதிக்கப் பெற்றுள்ளது.

## இவ்வுலாவில் வந்துள்ள விசேடங்கள்

1. குற்றாலநாதர் பவனியில் உடன் வந்தவர்கள்:— அக்னி, அச்வினி தேவர், இந்திரன், இரதி, கருடர், கந்திருவர், காரைக்காலம்மையார், கிங்கிலர், கிம்புருடர், கின்னரர், குபேரன், சந்திரன், சித்தர், சுந்தர மூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமாள் நாயனார், தண்டீசர், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், திருமால், தேவகணநாதர், நிருதி, பதினொரு உருத்திரர், பன்னகர், பன்னிருஆதித்தர், பிரமன் பூதப்படைகள், மகாசாத்தா, மன்மதன், மனுநீதிச் சோழன், மாணிக்க வாசகர், முருகப்பிரான், முனிவர்கள், முனிவர் எழுவர், யமன், வயிரவர், வரகுண பாண்டியன், வருணன், வாயு, விடபதேவர், வித்யாதரர், விநாயகர், வேதாளர்.

2. அம்பிகையுடன் வந்தோர்:—ஐந்து காமகளிர், கங்கை முதல் ஏழு நதிமாதர்கள், கலைமகள், காளிமுதல் ஏழு மாதர்கள், சயமகள், பூமகள், வீரத்திருமகள்.

3. ஆபரண வகைகள்:—உதர பந்தனம், கங்கணம், கட்டு வடம், கடகம், கண்டசரம், குதம்பை, குழை, கொப்பு, சங்கக் குழை, சரப்பளி, சிலம்பு, சுட்டி, தண்டை, தொடி, பதக்கம், பொன்னரிமாலை, பொன்னரைஞாண், மகரக்குழை, மகுடம், முத்தாரம், வாகுவலயம்.

4. இசைக் கருவிகள்:—கரடிகை, கல்லவடம், காளம், கின்னரியாழ், சங்கு, சல்லரி, தக்கை, தடாரி, திடிமம் அல்லது திண்டிமம், திமிலை, திருச்சின்னம், துடி, துந்துமி, படகம், பதலை, பம்பை, பேரி, மகரயாழ், மும்முரசு, முரசம், முருடு, முழவம், மொந்தை.

5. இராக வகைகள்:—ஆகிரி, கலியாணி, கவுடமலாரி, காந்தாரி, காம்போதி, குச்சரி, கொல்லி, சங்கரா பரணம், சவுராட்டம், சாயரி, செயசாட்சி, தேவகாந்தாரி, தோடி, நாட்டை, பூவாளம், மாளவி, முகாரி, மோகனம், வசந்தம், வயிரவி, வராடி.

6. சிவனடியார்கள்:—ஆனயநாயனர், காரைக் காலம்மையார், சாக்கியநாயனர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரமான்

பெருமாள் நாயனார், தண்டீசர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார், மனுநீதிச்சோழன், மாணிக்க வாசகர், முப்போதும்திருமேனி தீண்டுவார், வரகுண பாண்டியன்.

7. பிற சிவத்தலங்கள்:—ஆரூர், காசி, கொடுங்குன்றம், சிவபுரம், சேதுநகர், திருக்கயிலாயம், திருக்காளத்தி, திருச்சாய்க்காடு, திருச்சிராப்பள்ளி, திருச்செங்காடு, திருநள்ளாறு, திருநெல்வேலி, திருப்பரங்குன்றம், திருப்புனவாயில், திருப்பெருந்துறை, திருவண்ணாமலை, திருவாலங்காடு, திருவாவடுதுறை, திருவானைக்கா, திருவீழிமிழலை, திருவெண்காடு, திருவையாறு, தில்லை, நாகைக் காரோணம், மதுரை, விருத்தகிரி, வேணுபுரம், வேதவனம்.

8. சைவத் தமிழ்நூல்கள்:—அற்புதத் திருவந்தாதி, ஆதியுலா, சிவபுராணம், திருப்பல்லாண்டு, திருவாசகம், திருவிசைப்பா, திருவிளையாடற் புராணம், தேவாரம், பொன்வண்ணத் தந்தாதி.

9. பறவைகள்:—அன்னம், கருடன், காக்கை, காடை, கிளி, குயில், கோழி, செம்போத்து, புறா, பூவை, மயில், வண்டு.

10. மரவகைகள்:—ஆத்தி, இலஞ்சி, கற்பகம், குறும்பலா, சண்பகம், மதுகம் (இலுப்பை).

11. மலர்கள்:—ஆத்தி, ஆம்பல், கழுநீர், காந்தள், குமுதம், கொன்றை, சண்பகம், தாமரை, தும்பை, நீலம், பன்னீர், பாதிரி, மல்லிகை, முல்லை.

12. மலைகள்:—இமயம், திரிகூடம், பரங்குன்றம், பொதியமலை, மேரு, மைந்நாகம், விந்தம், விருத்தகிரி.

13. மகளிர் விளையாட்டுக்களும் பிறசெயல்களும்:—அம்மனையாடல், இசைபயில்தல், கழங்காடல், அன்னம் கிளி பூவை, மயில் புறவு இவற்றுடன் பயிலுதல், சித்திரம் வரைதல், சிற்றில் அமைத்தல், சிறுசோறடுதல், செய் குன்றில் ஏறி விளையாடுதல், பந்தடித்தல், பாவையுடன் விளையாடல், புனலாடல், பூங்கன்று நட்டு வளர்த்தல், பூமாலை தொடுத்தல், போது கொய்தல், வண்டல் அயர்தல்.

14. விசேஷ மூர்த்திகள்:—குழல்வாய்மொழியம்மை என்னும் அம்பிகை, சண்பக விநாயகர், திருக்குற்றாலநாதர், திருவிலஞ்சி முருகர், பைரவர்.

15. புண்ணிய நதிகள், தீர்த்தங்கள்:—ஏழுகடல், கங்கை, காவிரி, குடந்தை, மாமக தீர்த்தம், சித்திராநதி, சிவமது கங்கை, திரிவேணிசங்கம், தேனருவி, பொங்குமாகடல், வடவருவி.

16. இத்தலத்தில் வந்து வழிபட்டுப் பேறெய்தினோர்:—அகத்திய முனிவர், இந்திரன் முதலியதேவர்கள், கங்கை, கவுற்சனன், தருமசாமி, புட்பகந்தன் என்னும் அந்தணர்கள். யமன், யானை, வாசுகி, வேடன் முதலினோர்.

17. இத்தலத்திலுள்ள மற்ற விசேஷங்கள்:—சங்கக்கோவில், சங்கவீதி, சண்பகத்தடாகம், சண்பகவனம், சித்திரசபை, தரணிபீடம் என்னும் பராசக்திபீடம், தெய்வமுரசு, சாவாமூலித்தடம், பொங்குமாகடல், மூவாமுனிவர்குகை, வானவில்.

18. இத்தலத்து வழிபாட்டு முறை:—மகுடாகமவிதி.

உலா என்னும் இந்நூல், அன்பின் வழியதாய் இன்பந் துய்க்கும் ஐந்திணை நெறிப்படாது, புறத்திணைப்பகுதியிற் சேர்ந்துள்ளதெனினும், கடவுண் மாட்டு நயத்தல் என்னும் பெருமைபற்றி, இறைவன் பெருமைகளையும், அருட் செயல்களையும் விளக்கிப் படிப்போரைப் பக்திவெள்ளத்தில் திளைத்து மகிழச்செய்யுஞ் சிறப்பால், இதுவும் பேரின்பப் பேறு எய்தற்கு ஒரு வழிகாட்டெனெ ஆன்றோர் வகுத்துக் கொண்டனரென்பது கொள்ளத் தக்கதாம்.

இந்நூலாசிரியரே இத்தல சம்பந்தமாக மற்றும் பல நூல்கள் இயற்றியுள்ளமையால் அவை, இவர் ஆண்டு வரும் சொற்றொடர்களையும் பொருள் நோக்கங்களையும் அறிந்து கொண்டு இந்நூலுக்குக் குறிப்புரையெழுதப் பெரிதும் உதவியாயிருந்தன.

## இந்நூலைப் பதிப்பிப்பதற்கு உதவியாகக் கிடைத்த பிரதிகள்

1. இந்நூல் நிலைய ஏட்டுச் சுவடி. ... .... 1

2. திருவல்லிக்கேணி, தியாகராஜ விலாஸம்' மகா மகோபாத்யாய, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் பௌத்திரர், ஸ்ரீ K. சுப்பிரமணிய ஐயரவர்கள் உதவிய காகிதப்பிரதி. ... ... ... ... 1

3. திருக்குற்றாலக்கோயில் வெளியீடு முதற்பதிப்பும், இரண்டாம் பதிப்பும் ஆகிய பிரதிகள். ... ... 2

இவற்றுள் இந்நூல்நிலைய ஏட்டுப் பிரதியிலும், தியாக ராஜ விலாஸத்துக் காகிதப்பிரதியிலும் எழுதினோர்களால் ஏற்பட்ட எழுத்துப்பிழைகளால் ஆங்காங்குச் சிறு மாறு பாடுகள் சில உள்ளனவெனினும், அவையிரண்டும் ஒன்றே யெனக்கொள்ளலாம். திருக்குற்றாலக்கோயில் வெளியீட்டு அச்சுப்பிரதிகள் சிலதிருத்தங்களையும், பாடபேதங்களையும் செய்துகொள்ள உதவியாய் இருந்தன.

இந்நூலைப் பதிப்பிக்குமாறு என்னை ஊக்கியும் அவ்வப் போது உரிய அபிப்பிராயங்களைக் கூறி எனக்கு உதவி அளித்தும் வந்த, இந்நூல் நிலயத்துக் கௌரவ அமைச்சர் ஸ்ரீ ரா. விசுவநாத ஐயர் எம். ஏ. அவர்களுக்கும், பண்டிட் ஸ்ரீ டி. வடிவேலு முதலியார், வியாகரண சிரோமணி ஸ்ரீ தி. இராமாநுஜ ஐயங்கார், சிரஞ்சீவி வைத்தியநாதன் முதலிய நூல்நிலைய அங்கத்தினர்களுக்கும், எனது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூற் பதிப்பில் என் கவனக் குறைவாலும் அறி யாமையாலும் நிகழ்ந்துள்ள, பிழைகள் பல இருக்கலாம். இதனைக் கண்ணுறும் பெரியோர்கள் அவற்றைக் குறிப் பிட்டு உதவினால், ஏற்று மறு பதிப்பில் திருத்தி வெளியிட உபகாரமாய் இருக்கும் என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

'குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்குற்றார் ஆருளரோ' என்று திருநாவுக்கரசு நாயனார் அவர்களும்,

(திருவங்கமாலை : 10) 'குற்றாலத் தானையே கூறு' (தனிப் பாடல்) என்று பட்டினத்தார் அவர்களும் அருளிப் போந்த உறுதிமொழிகளின் வழியில், ஒரு சிறிது ஈடுபடுமாறு இக்குற்றாலநாதர் உலாவைப் பதிப்பிக்கும் வாய்ப்பை எளியேன் எனக்கு அருளிய, குழல்வாய்மொழியம்மை பங்கன் ஸ்ரீ குற்றாலநாதப் பெருமான் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

அடையாறு,
சென்னை,
1—10—1955

இங்ஙனம்,
**L. ஸ்ரீநிவாஸன்,**
பதிப்பாசிரியர்.

---

## நூலாசிரியர்.

இந்நூலை இயற்றிய ஆசிரியர், திரிகூடராசப்பக் கவிராயர் என்னும் புலவர் பெருமான் ஆவர் இவர் திருக்குற்றாலத்தைச் சார்ந்த மேலகரம் என்னும் ஊரில் வாழ்ந்து வந்த சைவ வேளாளர் மரபினர். இவர் தமிழ் இலக்கிய, இலக்கணங்களைம், சைவத்திருமுறை நூல்களையும், புராணங்களையும் உரியமுறையிற் பயின்று அவற்றில் தெளிந்து ஆறிய அறிவோடு, சொற்சுவை பொருட்சுவை ததும்பப் பலவகை அணிகளோடு, செய்யுட்கள் இயற்றும் நாவளமும் அமையப் பெற்றவர். இவர் தம் வாழ் நாட்களில் பெரும்பகுதியைத் திருக்குற்றாலநாதர் கோயிலில் திருத்தொண்டு புரிந்து வந்ததில் ஈடுபடுத்தினவர். இதற்கிணங்க, இவர் தம்மைக் குற்றாலநாதர் கொத்தடிமை என்று கூறுவது காணலாம். (திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, மகாமகோபாத்யாய டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு முகவுரை.) கொத்தடிமை என்பது குடும்ப வழிவழி அடிமை என்னும் பொருளுடையது. 'கொத்தடிமை யான குடிநான் பராபரமே' என்று (பராபரக்கண்ணி : 148) தாயுமான வரும் தம்மைக் கூறிக்கொண்டமை காண்க. இதனல்

இந்நூலாசிரியரது குடும்பத்தினேர் பரம்பரையாகக் குற்ருல நாதர் கோயில் திருத்தொண்டிலும், வழிபாட்டிலும் சிவ பக்தியிலும் சிறந்து விளங்கினர் என்பதோடு, கல்விச் சிறப்பின் மிக்கவர்கள் என்பதும் கொள்ளக் கிடக்கும். இதற்கேற்ப, இவ்வாசிரியரது மூத்த மைந்தரான பண்டா ரக்கவிராயர் என்பவர் சிவநேயச் செல்வராய் விளங்கிய தோடு இக்குற்ருலத்தைச் சார்ந்ததும், இதன் தொடர் புள்ளதுமான திரு இலஞ்சி என்னும் பதியில் கோயில் கொண்டு விளங்கும் முருகப்பிரான்மீது, திருவிலஞ்சி முருகன் உலா என்ருெருநூல் இயற்றியுள்ளமை அக் குடியின் மேற்கூறிய சிறப்புக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு என்னலாம். நிற்க :—

இக் குற்ருலநாத ருலாவின் ஆசிரியரான, திரிகூட ராசப்பக் கவிராயர், மற்றும் பல நூல்கள் இயற்றியுள்ளார். அவற்றுள், இப்பொழுது தெரியவருவன, திருக்குற்ருலத் தலபுராணம், திருக்குற்ருலக் குறவஞ்சி, திருக்குற்ருல மாலை, திருக்குற்ருலச் சிலேடை வெண்பா, திருக்குற்ருல யமக வந்தாதி, திருக்குற்ருலக் கோவை, குழல்வாய்மொழியம்மை கலிப்பா மாலை, கோமளமாலை, திருக்குற்ருலப் பிள்ளைத் தமிழ், திருக்குற்ருல ஊடல், திருக்குற்ருலப் பரம்பொருள் மாலை, நன்னகர் வெண்பா என்பனவாம்.

இந்நூல்களுள், திருக்குற்ருலத் தலபுரணம் முன்னரே அச்சாகி வெளிவந்துள்ளது, திருக்குற்ருலக் குறவஞ்சி, திருக்குற்ருல மாலை, திருக்குற்ருலவூடல், திருக்குற்ருல நாத ருலா, திருக்குற்ருலப் பரம்பொருள் மாலை, திருக்குற்ருலச் சிலேடை வெண்பா, திருக்குற்ருல யமக வந்தாதி, திருக் குற்ருலக் கோவை (அபூர்த்தி) என்பன திருக்குற்ருலநாத சுவாமி கோயில் வெளியீடுகளாக அச்சாகி வெளிவந் துள்ளன.

திருக்குற்ருலச் சிலேடை வெண்பாவையும், இந்நூலா சிரியர் புதல்வர் இயற்றிய திருவிலஞ்சி முருகன் உலாவை யும் மகாமகோபாத்யாய டாக்டர். ஸ்ரீ உ. வே. சாமி

நாதையரவர்கள், தனித்தனியே குறிப்புரைகளுடன் பதிப்பித்துள்ளார்.

இந்நூலாசிரியர் இயற்றியவை யன்றி, இத்தலசம்பந்தமாகப் பிறர் இயற்றிய இரண்டு கோவைகளும், ஓர் அந்தாதியும், ஒரு கலம்பகமும், ஒரு சிலேடைவெண்பாவும், உள்ளனவென்பது டாக்டர். ஐயரவர்களின் குறிப்புக்களால் தெரியவருகின்றது.

இந்நூலாசிரியரை ஆதரித்து வந்தவர், இவர்காலத்தில் மதுரையிலிருந்து ஆட்சி புரிந்துவந்த நாயக்கவம்ச மன்னரான ஸ்ரீ முத்துவிஜய சொக்கநாத நாயக்கர் என்பவர் ஆவர். அம்மன்னர் இவ்வாசிரியர் இயற்றிய குற்றாலநாதர் குறவஞ்சி என்னும் நூலைப் பாராட்டி, மகிழ்வெய்தி இவருக்கு மானியமாகச் சில விளைநிலங்கள் வழங்கியுள்ளார் என்பதும், அந்நிலங்கள் உள்ள இடத்திற்குக் குறவஞ்சிமேடு என்ற பெயர் இன்றும் வழங்கி வருகின்ற தென்பதும் தெரியவருகின்றன. இப்புலவர் பெருமான் மேற்கூறிய முத்துவிஜய சொக்கநாதநாயக்கர் காலத்தவர்என்று அறியப்பெறுவதால், இவர் வாழ்ந்து வந்த காலம் கி. பி. 17-வது நூற்றாண்டின் பிற்பகுதியும், கி. பி. 18-வது நூற்றாண்டின் முற்பகுதியுமான ஏறக்குறைய இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் என்று கொள்ளலாம்.



மகாமகோபாத்யாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
(1855 — 1942)

உ

செந்திலாண்டவன் துணை.

திருச்சிற்றம்பலம்

மேலகரம்

ஸ்ரீ திரிகூடராசப்பக் கவிராயர்

இயற்றிய

# திருக்குற்றால நாதருலா

மூலமும் குறிப்புரையும்

---

காப்பு

*தேர்கொண்ட குற்றாலத் தேவாதி தேவனிசைத்*
*தார்கொண் டுலாமாலை சாற்றவே—நார்கொண்டு*
*செண்பகவி னாயகருந் தென்னிலஞ்சி வேலருமென்*
*நண்பகவி னாயகரா னார்.* 1

---

## குறிப்புரை

தேர்கொண்ட - தேர்மீது கொண்ட; தேர் - மங்கலச்சொல். குற்றாலத் தேவாதிதேவன் - குற்றாலத் தலத்தில் உள்ள தேவர்களுக் கெல்லாம் மேலான தேவனான சிவபெருமான். குற்றாலம் - பிறவி நோயை அறுப்பது என்ற வடசொற்றொடரின் திரிபு என்பர்; திருக்குற்றாலத். தவமகிமைச் : 5. இசை - புகழ். தார்கொண்ட - மலர் களைக்கொண்டு தொடுக்கப்பெற்ற; தார் - மலர்; "கடைதிறக்குந் தார்கண்ட வண்டும்" (திருவெங்கைக்கோவை. 65.) உலாமாலை - உலா என்னும் பிரபந்தமாகிய பாமாலை; இங்கு உலாமாலை என்றமை யால், முன் தார் என்பதற்கு மலர் என்று பொருள் கொள்ளப்பட்டது. சாற்ற-அணிவிக்க; சொல்ல என்பதும ஆம். நார்-அன்பு. செண்பக விநாயகர்: திருக்குற்றாலத்துக் கோயிலில் எழுந்தருளியுள்ள விநாய கரின் திருநாமம்; குற்றாலம் சண்பகவனம் என்னும் பெயருடைமை பற்றி அவ்விநாயகருக்கு அப்பெயர் வந்ததுபோலும். தென - அழகு; தெற்கும் ஆம். இலஞ்சி - குற்றாலத்தைச் சார்ந்ததும் முருகக் கடவுள் கோயில் கொண்டுள்ளதுமான ஒருதலம்; அங்கு இலஞ்சி, தலவிருட்சம்; இலஞ்சி - மகிழமரம். நண்பு அக இல் நாயகர் - நட்பு மேற்கொண்டு என் மனமாகிய வீட்டின் தலைவர்; இனி, நள் பகவு இல் - இடையில் பிளவு இல்லாத; இடையறாத என்றபடி; நள்பகவு - நண்பகவு; நண்பகல் என்பதுபோல. உலாமாலை சாற்ற சண்பக விநாயகரும், இலஞ்சி வேலவரும் நண்பாய் என் மனமாகிற கோயி லுக்கு நாயகராய் அமர்ந்தார் என்பதும், அத்துணையால் தாம்

பூமே வுலாத்தேர்ப் புரவலர்குற் றாலருக்கென்
நாமே வுலாத்தேர் நடாத்துமே—பாமேவு
பாரதியார் சொற்கலைகள் பாய்பரியாய்க் கும்பனருள்
சாரதியாய்ப் போந்தருளத் தான். 2

கல்லாம் புணையாங் கனல்புனலா மேடெறியும்
பொல்லாத செங்கலுஞ்செம் பொன்னுமாம்—வல்லூமை
பேசுமா மக்கவிகள் பேசுவித்தார் குற்றாலத்
தீசனருள் பேசாதார் யார். 3

---

எடுத்துக்கொண்ட இப்பிரபந்தம் இனிது முடியும் என்று துணிந்தாம் என்பதும் போந்த பொருள்.

2. பூமேவு உலாத்தேர் - பூமியில் உலாவிவரும் தேரையுடைய; பூமியைத் தேராகக்கொண்டு உலாவிய என்றுங்கொள்ளலாம்; 22; பூமியைத் தேராகக்கொண்டது திரிபுர சங்கார காலத்தில். குற்றாலப் புரவலர்க்கு - நம்மைக் காத்தருள் செய்யும் குற்றாலநாதருக்கு. என் நா மேவு உலாத்தேர் - என் நாவினால் சொல்வதை மேற்கொண்ட உலா என்னும் பிரபந்தமாகிய தேரை. நடாத்தும் - நடத்துவாம். பாமேவு - பாக்கள் பொருந்திய. பாரதி - கலைமகள். கலைகள் - அறுபத்துநான்கு கலைகள். பாய்பரி - பாய்ந்து செல்லுங் குதிரைகள்; பாமேவு சொற்கலைகள் என்றும் கூட்டிப் பொருள் கொள்ளலாம். கும்பன் - கலசத்திற் பிறந்த அகத்தியன்; 271. அருள் - அருளே. போந்து அருள - வந்து எனக்குத் துணை புரிய. தான்: அசை. பாரதி சொல் கலைகள் பரிகளாகவும், அகத்தியர் அருள் சாரதியாகவும் வந்தருள உலாத்தேரை நடத்துவாம் என்க.

3. கல் ஆம் புணை ஆம் - கருங்கல் நீரைக் கடத்தற்கு ஆகக் கூடிய தெப்பமாகும்; இது திருநாவுக்கரசர் பொருட்டு நிகழ்ந்த அருட்செயல். ஏடு எறியும் கனல் புனல் ஆம் - ஏடு எறியப்பெற்ற நெருப்பு நீர்போல் குளிர்ந்து அழிந்தது; இது ஞானசம்பந்தர் பொருட்டு நிகழ்ந்த அருட்செயல். பொல்லாத செங்கலும் செம்பொன் ஆம் ஆம் - சிறப்பற்ற செங்கல்லும் சிவந்த பொன்னாகி ஆகுமாம்; இது திருப்புகலூரில் சுந்தரர் பொருட்டு நிகழ்ந்த அருட்செயல். வல் ஊமை பேசுமாம் - கடிய ஊமை பேசும்; இது மாணிக்கவாசகர் பொருட்டுத் தில்லையில் நிகழ்ந்த அருட்செயல். அக்கவிகள் - அத்தெய்வத் திருமுறைப்பாடல்களை. பேசுவித்தார் - தமது அருளால் மேற்கூறிய நால்வரைக்கொண்டு பேசும்படி செய்தவரான. குற்றாலத்து ஈசன் அருள் - திருக்குற்றாலத்தில் கோயில் கொண்டுள்ள ஈசனது அருளை. பேசாதார் யார் - யாவரே பேசிப் புகழாதவர்.

## நூல்

### திருக்குற்றால நாதர் சிறப்பு

1. பூமேவு கஞ்சம் பொறையுயிர்த்த புத்தேளும்
நாமேவு வெண்கமல நாயகியும்—நேமித்

2. திருப்பாற் கடலுடைய தேவுமலை வெற்பால்
பொருப்பாற் கடலுடைய பொன்னும்—மருப்பார்ந்த

3. வெள்ளிமலை யேறிவரு மேருமலை யும்பனிதோய்
வள்ளிமய வெற்பின் மடப்பிடியும்—தெள்ளியசீர்

4. மூவருமுத் தேவியரு மென்னு முறைதோன்றத்
தாவருமுத் தேவிரவு தாமம்போல்—மேவருபால்

**1-2.** பூமேவு கஞ்சம் - அழகு பொருந்திய தாமரை. பொறை உயிர்த்த - பெற்ற. புத்தேள் - கடவுளாகிய பிரமதேவன். நாமேவு - அந்தப்பிரமன் நாவில் அமர்ந்துள்ள. வெண் கமல நாயகி - வெண்டாமரை நாயகியான கலை மகள். திருப்பாற் கடலுடைய நேமித்தேவும் - பாற்கடலைத் தனக்குப் பள்ளியிடமாகக் கொண்ட சக்கராயுதமுடைய திருமால். வெற்பால் பொரு - மலையைப் போன்ற; இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ இங்கு மூன்றும் வேற்றுமை உருபாகிய ஆல் என மயங்கி வந்தது. வெற்பால் பொருமலை என இயைக்க. பாற்கடலுடைய பொன் - பாற்கடலைத் தனது பிறப்பிடமாக உடைய திருமகள். பொருபாற்கடல் என்பது பொருப்பாற்கடல் என எதுகை நோக்கி வல்லொற்று மிகுந்தது. மருப்பு ஆர்ந்த - கொம்புகள் பொருந்திய.

**3.** வெள்ளிமலை - வெள்ளிமலைபோன்று வெண்ணிறமும் பெருமிதமுங்கொண்ட இடபம். மேருமலை - பொன்மலை போன்ற சிவபெருமான்; வெள்ளிமலை இடபத்திற்கும், மேருமலை சிவபெருமானுக்கும நிறம் பெருமை முதலியன நோக்கி உருவகங்களாயின. பனிதோய் - எப்பொழுதும பனியால் மூடுண்ட. வள் - செழுமையுள்ள. இமயவெற்பு - இமயமலை. மடப்பிடி - இளம்பிடிபோன்ற உமாதேவி. தெள்ளியசீர் - கற்றோர்களால் ஆராய்ந்து உரைத்த தெளிவான சிறப்புடைய.

**4.** மூவர் - பிரமன், திருமால், சிவபிரான். முத்தேவியர் - அம் மூவர் தேவியர்களான, கலைமகள், திருமகள், உமாதேவி. தா அரு - குற்றம் இல்லாத. முத்தே விரவு தாமம் - முத்துக்கள் கலந்து

(பி - ம்.) 3. வள்ளிமலை வெற்பின்.

5\. முற்றுவளக் கும்ப முலைசுரப்ப வூழிதொறும்
பெற்றுவளர்க் குந்தரணி பீடத்தான்—மற்றுமயன்

6\. பண்டுறைப்பாற் சொல்லப் பதிஞ,யிரம்பருவம்
தண்டுறைப்பால் வானோர் தவம்புரியக்—கண்டு

7\. பவத்துரோ கந்தீர்க்கும் பால்விடைமேல் வந்து
சிவத்துரோ கந்தீர்த்த தீர்த்தன்—உவப்பாகும்

8\. அஞ்சக் கரத்தினு லாலினிலை யம்புகலால்
மஞ்சு முளரிக்கண் மன்னுதலால்—செஞ்ச

---

தொடுக்கப்பெற்ற மாலை. மே வரு - மேன்மேலும் வளரும். பால் - பாலினுல்.

5\. முற்று - நிரம்பியுள்ள. வள கும்ப முலை - செழுமையுற்ற கும்பம்போன்ற முலை. மேவரு முலை என்றுங் கூட்டலாம். சுரப்ப - சுரந்து ஊட்ட, ஊழிதொறும் - உகமுடிவாகிய ஊழிக்காலங்களில் எல்லாம். பெற்று வளர்க்கும் - மூவரும் முத்தேவியருமென்னப் பெற்று வளர்த்து வரும். தரணி பீடத்தான் - தரணிபீடம் என்னும் பராசக்தி பீடத்தை யுடையவன்; தரணிபீடம்; திருக்குற்றாலத். I-*10 : 4*. மகாப்பிரளயத்தில் பிரம விஷ்ணு சிவன் ஆகிய முத்தேவரும் அவர்கள் தேவியரும் அழிய, மீண்டும் பராசக்தி அம்முத்தேவர் முதலிய எல்லோரையும் படைக்கிருள் என்பது விளங்கும். அயன் - பிரமன்.

*6-7*. உறைப்பால் - கோபத்தோடு. தண் துறைபால் - குற்றுலத்துக் குளிர்ந்த அருவித் துறையினிடத்து. பவத்து ரோகம் - பிறவிநோய். பால்விடை - பால்போன்று வெண்ணிறமான இடபம். சிவத்துரோகம் - சிவ அபசாரம். தீர்த்தன் - பரிசுத்தன்.

இவ்விரண்டு கண்ணிகளிற் கூறப்பெறும் வரலாற்றின் விரிவை, திருக்குற்றாலத் I. *10, 11*-வது சருக்கங்களிற் காண்க.

8\. இக்கண்ணி, பிரமன், திருமால் சிவபெருமான் என்னும் மூவர்க்குஞ் சிலேடையாக அமைந்துள்ளது.

பிரமன் : அஞ்சக் கரத்தினுல் - அன்னப்புள்ளைக் கொடியாகக் கொண்ட கையினுல்; அஞ்சம் - ஹம்ஸம் என்ற வடசொற்றிரிபு. ஆலின் இலயம் புகலால் - கற்பாந்த காலத்தில் பிரளய வெள்ளத்தில் அழிவு அடைதலால்; ஆல் - நீர் வெள்ளம்; "ஆலின்மேல் ஆலமர்ந்

9. அரிகூட மாமல ரோனாதி யானன்
திரிகூட மாமலைவாழ் தேவன்—பரிவால்

10. பவமதுகங் கைத்துறைவார் பத்தியில் தித்திக்கும்
சிவமதுகங் கைத்துறைவாழ் செல்வன்—குவடணியால்

11. பண்பகத் தடாதகையார் கொங்கைப் படாம்போலும்
செண்பகத் தடாகத் திருநதியான்—ஒண்பார்

---

தான்'' (திருவாய்மொழி : *9. 10 : 1*, ஈடு) மஞ்சு முளரிக்கண் மன்னுத லால் - அழகிய தாமரைமலர் மீது பொருந்தியிருப்பதால்.

**திருமால் :** அம் சக்கரத்தினல் - அழகிய சக்கராயுதத்தை உடைமையால். ஆலின் நிலையம் புகலால் - (பிரளய காலத்தில் ஆலிலையில் இருப்பிடமாகக் கொண்டு போய்ப் புகுவதால். மஞ்சு முளரிக்கண் மன்னுதலால் - குளிர்ந்த தாமரை போன்ற கண்கள் பொருந்தியிருப்பதால்.

**சிவபிரான் :** அஞ்சு அக்கரத்தினல் - பஞ்சாக்கரங்களையுடைமையால். ஆலின் நிலையம் புகலால் - கல்லாலின் கீழ் தன் இருப்பிடமாகப் போயிருப்பதால். மஞ்சு - வலிய. முளரிக்கண் - நெருப்புவிழி. மன்னுதலால் (நெற்றியில்) பொருந்தியிருப்பதால். செஞ்ச - சிறப்பாக ; செவ்விய.

*9.* அரிகூடு அ மா மலரோன் ஆதி ஆனன் - கோடுகள் பொருந்திய அந்த மாட்சிமை பொருந்திய தாமரை மலர்மேல் உள்ள பிரமன் முதலாகக்கொண்ட முத்தேவரும் ஆனன். திரிகூடமலை - மூன்று குவடுகளாய் உள்ள குற்றாலமலை. பரிவால் - அன்பினல் ; இரக்கமேலீட்டினல்.

*10.* பவ மதுகம் - பிறவியாகிய இலுப்பையை ; மதுகம் எட்டியும் ஆம் ; இவை இரண்டும் கைப்புள்ள மரங்கள். கைத்து - வெறுத்து. உறைவார் - இக்குற்றால நகரில் சைவ நெறியில் தங்கியிருப்பவர். பத்தியில் - அவர்கள் செய்யும் பக்தி வழிபாட்டைப்போல. தித்திக்கும் - மதுரச் சுவையாய் விளங்கும். பரிவால் பத்தியில் தித்திக்கும் என்று கூட்டுக. சிவமது கங்கை : குற்றாலத்தில் கங்கை தன் பாவந்தீரத் திரிகூடநாதனை மதுவினல் அபிஷேகம் செய்து பூசித்த ஒரு தீர்த்தம்.

*11.* குவடு அணியால் - மலைச்சிகரத்திற்கு ஆபரணம் போல் விளங்குவதால். பண்பு அக தடாதகையார் - அழகுக்கு இருப்பிட

12. விடவரு வித்தடக்கி விட்டருள விண்ணாரும்
வடவரு வித்தடத்து வாணன்—படிபவர்பால்

13. ஆங்கமல மாமருவி யாம்பல் கழுநீராய்த்
தேங்கமல மாமருவித் தீர்த்தத்தான்—ஓங்கடியார்

14. மாதவளச் சங்கமுக மாத்திரைபோல் வீற்றிருக்கும்
வேதவளச் சங்கமுக வீதியான்—வேதம்

---

மாலை மீனாக்ஷிதேவியின். கொங்கைப்படாம் போலும் - தனங்களின் மேல் போர்க்கப்பெற்ற மேலாடை போன்று விளங்கும். செண்பகத் தடாகத் திருநதியான் - சண்பகத்தடாகத்தோடு கூடிய அழகிய நதியை உடையவன்; சண்பகத்தடாகம்: இது குற்றாலத்தில் உள்ள ஒரு தீர்த்தம்; சண்பகத்தடாகம் குவட்டுக்கு அணியாகவும், தடாதகைக் கொங்கைப் படாம் போலும் விளங்கும்; முக்குவடு தடாதகையின் மும்முலைகளுக்கு உவமை. ஒண்பார் - இயற்கை அழகு பொருந்திய பூமியில்.

12. விட வருவித்து - விடுவதற்காகத் தேவர் உலகிலிருந்து வருவித்து. விண் ஆரும் வட அருவித் தடம் - வானில் விளங்கும் வட வருவி விழும் இடம். வாணன் - வாழ்பவன். படிபவர்பால் அவ்வட அருவியில் மூழ்குபவரிடத்து.

13. ஆங்க மலமாம் - அங்க அழுக்காகும்; அங்கம் என்பது ஆங்கம் என நீண்டது. அருவி ஆம்பல் - அருவியாகிய தீவினை; ஆம்பல் - துன்பமும் ஆம். கழுநீராய் - கழுநீர்போலப் பிரிந்துபோக. தேங்கு அமலமாம் அருவி தீர்த்தத்தான் - தேங்கி விளங்கும் பரிசுத்த மான வட அருவி என்னும் புண்ணிய தீர்த்தத்தை யுடையவன்; "தீவினையைக் கழுநீராய்ப் பிரித்தெறியுந்திரிகூடத் தெய்வக் கங்கை" (திருக்குற்றாலந். 1. 7 : 10) ஓங்கு அடியார் - சிறந்த அடியார்களுக்கு.

14. மா தவள சங்கமுக மாத்திரைபோல் - பெரிய வெண்மை யான சங்கத்தினிடத்து விளங்கும பெருஞ் செல்வம்போல; அதா வது சங்கநிதிபோல; மாத்திரை - பாக்கியம்; பெரு நிதி. அடியார் களாகிய சங்கின்முகத்து விளங்கும் செல்வம்போல என்றும் பொருள் கொள்ளலாம்; இனி, அடியார்களாகிய சங்கின் முகத்தின் அளவாக வீற்றிருக்கும் என்பதும் ஒன்றும். வேத வள சங்கமுக வீதியான் -

---

(பி - ம்.) 13. அங்கமல மாமருவி; தெங்கமல மாமருவி.

15. பெறும்பலவின் மூலப் பிரணவமூ டான்
குறும்பலவின் மூலக் குழகன்—உறும்பலனைப்

16. பொற்றால நன்னகரம் புக்கார் புகவிரும்பும்
குற்றால நன்னகர்க் கோயிலான்—முற்றாவத்

17. தெய்வமுர சார்க்குஞ் சித்திரப்பூ மன்றத்துச்
சைவ முரசார்க்குந் தாண்டவத்தான்—சைவமன்றி

---

வேத ஒலியின் செழுமை விளங்கும் சங்கம் போன்ற பக்க வீதிகளை யுடையவன்; திருக்குற்றாலக்கோயில் சங்கக்கோயில் என்றும், அக் கோயிலையடுத்த திருவீதி சங்கவீதி என்றும் பெயர்பெறும்; திருக்குற்றாலச் சிலேடை வெண்பா. *14.* வேதம் - வேதங்கள்.

*15.* பெறும்பலவின் - பெறும் பலவற்றின். மூலப்பிரணவம் ஊடான - மூலமந்திரமாகிய பிரணவத்தைத் தன் உள்ளே கொண் டுள்ள. குறும்பலவின் மூலக் குழகன் - குறும் பலாமரத்தின் அடி யில் எழுந்தருளியுள்ள இளையோன்; அதாவது மூப்பில்லாது என்றும் இளமையோடிருப்பவன். வேதமே குறும்பலா ஆகவும், அவ்வேதத்திற்கு மூலமான பிரணவமே அம்மரத்திற்கு மூலமாகவும் கொள்ளப்படும்; திருக்குற்றாலந். I. *11 : 19.* உறும்பலனை - தாம் அடையும் புண்ணியத்தின் பலனை.

*16.* பொன் தால நன்னகரம் புக்கார் - பொன்னுலகில் உள்ள சிறந்த அமராவதி யென்னும் நகர் புகுந்தவர்; தாலம் - தலம் என்பதின் விகாரம். விரும்பும் - அந்தத் துறக்கத்தை விட்டு இங்கு வர விரும்பும். குற்றால நன்னகரம்—குற்றாலமென்னும் நன்ன கரத்தையே; குற்றாலத்திற்கு நன்னகரம் என்றொரு பெயருண்டு.

*17.* முற்றா அ தெய்வ முரசு. தெய்வமுரசு: இது குற்றாலக் கோயிலில் உள்ள சித்திர சபையில் தினம் இருமுறை முழங்கப் பெறும் முரசம். சித்திரப்பூம் மன்றம் - சித்திரசபை. சைவமுரசு - சிவமுரசு; திருக்குற்றாலந். I. *9 : 19*; சைவசமய முழக்கமாகிய முரசு. தாண்டவத்தான் - தாண்டவஞ் செய்யும் நடராஜ மூர்த்தியாக எழுந் தருளியுள்ளவன். சைவமன்றி - சிவபரமாய்ச் செய்யாமல்; சைவ உணவு அல்லாமல்.

---

(பி - ம்.) *16.* முற்றாலத்.

18. ஆடுதின்ற தக்கன் மகளாய தன்றிமயக்
கோடுதந்த செல்வக் குமரியார்—நீடுதவம்

19. செய்யுநா ளெந்தைமணஞ் செய்யவரு நாள்நமக்கோர்
உய்யுநா ளென்றுலக மோரெழும்—பெய்யும்

20. மதுமணக் காவணத்து வானோர் குழாமும்
புதுமணக் காவணத்துப் போத—அதுபெருட்டால்

### சிவபிரான் அகத்தியரைத் தென்பால் அனுப்பியது

21. தென்பா லுயர்ந்துவட திக்கெலாந் தாழ்ந்ததுகண்
டன்பாற் குறுமுனியை யாங்கழைத்து—முன்புநாம்

22. வாங்கா மலைசிலையாய் வாங்குநா ளோரடிக்குத்
தாங்காத தேர்முழுதுந் தாங்குமோ—ஆங்கதற்கும்

---

*18.* ஆடுதின்ற - ஆட்டின் புலாலைத்தின்ற; சிவபிரான் பொருட்டுச் செய்யப்படாத வேள்வியில் உண்ணும் அவி உணவு புலால் தின்ற பாவத்தை உண்டாக்கும் என்பது இதனால் பெறப் படும். தக்கன் மகளாயது அன்றி - தக்ஷனது மகளான தாட்சாயணி யாக இருந்தது அன்றி; இவள் சதி எனவுங் கூறப்படுவள். இமயக் கோடு - இமயமலை. தந்த - பெற்றளித்த. குமரியார் - பார்வதிதேவி.

*19.* உலகம் ஓர் ஏழும் - பூவுலகில் உள்ள ஏழு பெரும் நிலப்பரப்புக்களில் வாழும் மனிதர்களும் பெய்யும் - பொழிகின்ற.

*20.* மது மண கா அணைத்து - தேனும் மணமும் பொருந்திய கற்பகச்சோலையில் பொருந்தி வாழ்தலையுடைய. புதுமண காவணத் துப்போத - புதிய பார்வதி கல்யாணப் பந்தலுக்குப் போய்ச்சேர.

*22.* வாங்காமலை-வளையாத மேருமலையை. முன்பு நாம் சிலையாய் வாங்குநாள் - முன் நாம் திரிபுர சங்கார காலத்தில் வில்லாக வளைத்த அன்று. ஓர் அடிக்குத் தாங்காத தேர் - எனது ஒரு பாதத்தால் அழுத்த அதனைத் தாங்காது அச்சு நொருங்கிய தேராகிய பூமி. முழு தும் தாங்குமோ - உலகத்திலுள்ளோரையும் வானிலுள்ளோரையும் தாங்கும் வலியுடையதோ? ஆங்கு அதற்கும் - அப்போது அந்தத் தேருக்கும்.

---

(பி - ம்) *18.* மகவாய.

23. சாரதிக்கு மைந்தனுநீ தானன்றே வாதலினல்
நேர நிறுத்தயாம் நீவேண்டும்—யாரிடத்தும்

24. போற்றுபர நாமதிகம் புங்கவர்க்கு ணீயதிகம்
சாற்றுமூ வாறிற் றமிழதிகம்—ஏற்ற

25. தலங்களிற்குற் ருலத் தலமதிக நான்கும்
துலங்கிலன்றே தென்பால் துலங்கும்—நலம்பெருகு

26. முத்தேவு மாகியந்த முக்குடுமி வெற்பகத்தே
எத்தேவும் போற்ற விருக்குநாம்—சித்திலயன்

27. போலாகி முன்னுட் புவிபடைத்தே மிந்நாளில்
மாலாகிக் காத்து வளர்க்கின்றேம்—மேலான

---

**23.** சாரதிக்கு மைந்தனும் நீ - சாரதியாய் இருந்த பிரமனுக்கு மைந்தனும் நீ ; அகத்தியர் பிரமகுமாரர் ; 43. யாம்நேரநிறுத்த - யாம் இந்தப் பூமியைச் சாயாது நேராக நிலைபெறச் செய்ய. நீ வேண்டும்-நீ பணி புரியவேண்டும்; நீயே அதற்குத் தகுதியுள்ளவன் என்ற படி. யாரிடத்தும் - யாவர் இடத்திலும்.

**24.** போற்றுபரம் - போற்றி வணங்கப்பெறும் மேலான கடவுளருள். நாம் அதிகம் - நாமே மேலான தெய்வமாவோம். புங்கவருள் - உயர்ந்த இருடிகளுள். சாற்றும் மூவாறில் - சொல்லும் மொழிகள் பதினெட்டினுள் ; சிறந்த மொழிகள் பதினெட்டு ; "ஆரிய முதலிய பதினெண் பாடையில்" (கம்ப. கிட்கிந்தா. பம்பா நதிப். 14) ஏற்ற - சிறந்த.

**25.** நான்கும் - திசைகள் நான்கும் ; இனி, மேற்கூறிய, சிவன், ரிஷியாகிய நீ, தவம், தமிழ் ஆகிய நான்கும் எனக்கூறலும் பொருந்தும். தென்பால் - தென் திசை.

**26.** முக்குடுமி வெற்பு - திரிகூடாசலம். திரிகூடம் முத்தேவும் ஆகியது ; திருக்குற்றலந். 1. 7 : 9. சித்தில் - நம் மாயையில்.

**27.** மாலாகி - திருமாலாக இருந்து. காத்து வளர்க்கின்றேம் - பூமியைக் காத்து வளர்த்து வருகின்றேம்.

---

(பி - ம்.) 25: தென்பார். 26. சித்திலேயன். 27. மின்னுளில்.

28. சீதத் தமிழாற் சிவமாகப் பூசைசெய்யப்
போதத் தமிழ்முனிநீ போதுகெனக்—காதல்

29. விடைபெற்ற பொன்மலையை விட்டகன்று பாரச்
சடைபெற்ற பொன்மலைபோற் சார்ந்து—படைபெற்ற

தென்பால் அகத்தியர் புரிந்த அருஞ்செயல்கள்

30. வாதாவி வில்வலனை மாய்த்து வினைசாய்த்து
மீதாவி வில்வலனும் வெய்யோனைப்—போதாமல்

31. வாதுகொண்ட விந்த மதமடக்கி நம்பரனைத்
தூதுகொண்ட மிக்கதமிழ்ச் சோனாட்டை—மேர்துதிரைப்

---

28 சீதத் தமிழ் - தண்மை மிக்க தமிழ். சிவமாகப் பூசை செய்ய - நான் சிவரூபமாக மாறும்படிப் பூசை செய்ய. போதத் தமிழ் முனி - ஞானமிக்க தமிழ் அறியும் முனிவன். நீ போதுகென - நீ போவாயாக என்று கூறியருள. காதல் - அவர் பால் அன்புடைய; காதல் என்பதை விடைக்குங் கூட்டிப் பொருள் கொள்ளலாம்.

29. விடைபெற்ற பொன்மலை - இடபத்தைத் தனது வாகன மாகக் கொண்ட மேருமலை போன்ற பொன்னிறமுடைய சிவபிரானை; " வெள்ளிமலை யேறிவரும் மேருமலை " 3. என்றதுங் காண்க. சடைபெற்ற பொன்மலை : அகத்தியர்.

30. வாதாவி வில்வலனை மாய்த்து : அகத்தியர் வாதாவி வில் வலன் என்னும் இரு அசுரர்களை மாய்த்தமை ; கம்ப. ஆரணிய. அகத் தியப் 38 ; வில்வலன் - இவன் இல்வலனென்றும் வழங்கப்பெறுவன். வினை சாய்த்து - தீவினைகளைப்போக்கி. வில் வலனும் வெய்யோனை - ஒளியிற் சிறந்த சூரியனை. மீ தாவி போதாமல் -'தன்னைத் தாண்டி மேலே செல்லாமல்.

31. வாதுகொண்ட - மேற்கிளம்பித் தடுத்து எதிர் வழக்குச் செய்த; வாது - தருக்கமும் ஆம். விந்தம் - விந்தியமலை. மதம் அடக்கி - செருக்கடக்கி. அது உருவிற்குழ்ந்து கீழ் அடங்கும் படிச்செய்து; அகத்தியர் விந்தமலையின் செருக்கடக்கியது; கம்ப. ஆரணிய. அகத்தியப்: 39; நன்னெறி. 37. பரனைத் தூதுகொண் டது; சுந்தரமூர்த்தி நாயனார் பரவை நாச்சியாரிடத்துச் சிவபெரு மானைத் தூதாகச் செல்லவிடுத்தது. தமிழ்மிக்க சோனாடு என மாற்றுக.

32. பொன்னிநா டாக்கிப் பொதியத் தமிழ்நாடு
கன்னிநா டாகக் கருதியே—பொன்னின்

33. விரிகூட வெற்பையொரு வெய்யவன்சூழ்ந் தென்னத்
திரிகூட வெற்பைவலஞ் செய்து—கிரியருவி

அகத்தியர் குற்றாலத்தில் கண்ட காட்சிகள்

34. தேனொருபா லாட்டச் சிவபரனைத் தெய்வகங்கை
தானொருபா லாட்டுந் தடம்பார்த்துக்—கானொருபால்

35. மூவா திருக்கு முனிவர் குகைபார்த்துச்
சாவாத மூலித் தலம்பார்த்துப்—பூவாது

---

**32.** பொன்னி - காவிரி. அகத்தியர் காவிரி நதியை வருவித்துச் சோணாட்டை வளப்படுத்தியது; கம்ப. ஆரணிய, அகத்தியப். 49; மணிமேகலை. பதிகம். பொதியத் தமிழ்நாடு - பொதிய மலையைத் தன்னிடங்கொண்ட செந்தமிழ் நாடு ; அதாவது பாண்டி நாடு. கன்னி நாடு ஆக - கன்னி நாடு என்று. கன்னிநாடு என்பதற்கு, என்றும் அழியா இளமை பொருந்திய நாடு, தடாதகைப் பிராட்டியார் அரசியாயிருந்து ஆண்ட நாடு, கன்னித்துறையை யுடைய நாடு எனப் பல பொருள் கொள்ளப்பெறும். பொன்னின் - பொன்னால்.

**33.** விரி கூட வெற்பை - விரிந்த சிகரங்களையுடைய மேருமலையை. ஒரு வெய்யவன் சூழ்ந்தென்ன - ஒரு சூரியன் சுற்றி வருவது போல ; சூரியன் மேருமலையைச் சுற்றி வலம் வருபவன். வலம் செய்து - வலமாகச் சுற்றிவந்து ; திரிகூட மலை மேருவாகவும் அகத்தியர் வெய்யவனாகவும் உவமிக்கப்பெற்றன. கிரி அருவி - மலையருவி.

**34.** சிவபரனை - சிவபிரானை குற்றாலநாதரை. தேன் ஒரு பால் ஆட்ட - ஒரு புறம் தேனால் அபிடேகம் செய்ய. தெய்வகங்கை - ஆகாய கங்கை ; 10. தடம் - தடாகம் ; இடமும் ஆம். கான் ஒரு பால் - கானின் ஒரு புறத்தில்.

**35.** மூவாது இருக்கும் - மூப்படையாது என்றும் இளமையோடு இருக்கும். திரிகூடமலைக் குகைகளில் மூவா முனிவர் பலர் இருந்து தவம்செய்து வருகின்றனர் என்பது ; திருக்குற்றாலத். I. 5 : 2.

---

(பி - ம்.) 32. பொதிய தமிழ்நாடு.

36. காய்த்தமறை மூலக் கனிபார்த்துக் காயாது
பூத்ததனி மூலப் பொழில்பார்த்துப்—பூத்ததிலே

37. வண்டு படரா மலர்பார்த்து வானவரும்
கண்டு நிலையாக் கடல்பார்த்துக்—கொண்டொருவர்

38. ஏற்றுச் சிலைபார்த் தெழுந்தவா வும்போக்கும்
தோற்றாக் கழுநீர்த் துறைபார்த்து—நோற்றுப்

39. பிறந்தோ ரிறவாப் பிறவா நகர்பார்த்
திறந்தோர் பிறவா விடம்பார்த்—தறந்தழைக்கும்

40. குற்றால மீதோ குறும்பலாச் சாயையிதோ
வற்றா வடவருவி வைப்பிதுவோ—கற்றிரளாய்

---

சாவாத மூலித்தலம் - என்றும் அழியாத பல அரிய மூலிகைகள் உள்ள இடம்; இந்தத் திரிகூடமலையில் அரிய மூலிகைகள் பல உள்ளன; மூலித்தலம் என்பதற்கு - மூலப் பொருளாகிய சிவபெருமானது தலம் என்றும் கொள்ளலாம்.

*36.* பூவாது காய்த்த மறைமூலக்கனி - பூவாமலே காய்க்கும் வேதமும் பிரணவமும் ஆன குறும்பலாவின் கனி; *15.* காயாது பூத்த தனி மூலப்பொழில் - வாடிக் காய்ந்து போகாது எப்பொழுதும் தளிர்த்துப் பூத்து விளங்கும் ஒப்பற்ற இத்தலத்திற்கு மூலமாய் உள்ள பொழில்; காய்க்காமல் பூத்து விளங்கும் மரங்களையுடைய பொழில் என்னலுமாம்.

*37.* வண்டு படரா மலர் - சண்பகமலர். கடல் - பொங்குமா கடல் என்னும் தடம்.

*38.* ஒருவர் ஏற்றுச்சிலை - வானவில். அவா - ஆசை. அவாவும் என்ற உம்மை, பாவத்தையும் என்று எஞ்சியது தழுவிய எச்சவும்மை ஆகும். தோற்றாக் கழுநீர்த்துறை - கட்புலனுக்குப் படாத வடவருவிக் கழுநீர்த்துறை; *13*; திருக்குற்றாலத். I. 7 : 10.

*39.* இறவாப் பிறவா நகர் - இறந்துபின் பிறவாத்தன்மையை யளிக்கும் நகர்.

*40.* சாயை - நிழல். வைப்பு - இடம்.

41. மாவாய் மரமாய் மனிதராய்த் தேவரெல்லாம்
தாவாத் தவம்புரியுந் தானமிதோ—மேவுமலை

42. வில்லார் தலைநாள் விதியா யிருந்துலகம்
எல்லாம் படைக்கு மிடமிதுவோ—சொல்லாப்

43. பரம ரகசியங்கள் பார்க்கவென்றே நம்மைப்
பிரமர் தவம்புரிந்து பெற்றார்—தரம்வேறு

44. காட்டினர் போலப் பலமுள்ள காட்டிலெமை
ஓட்டினா ரன்றே வுமாபதியார்—ஈட்டுதலம்

45. காணுதற்கு மெந்தையிரு கண்ணல்லா லாயிரங்கண்
பூணுவித்தா னில்லைப் பொறாமையோ—தாணுவைத்தான்

46. நன்னகரிற் கண்டன்றே நாளுமிந்தி ராதியர்கள்
பொன்னகரில் வாழப் புகல்பெற்றார்—என்னக்

---

41. மாவாய் - மிருகங்களாய், மரமாய் - பல மரங்களாய். தாவாத் தவம் - கெடாத தவம்.

42. மலைவில்லார் - மேருமலையை வில்லாகக் கொண்ட சிவ பிரான். தலைநாள் - ஆதிகாலத்து. விதி - பிரமன்.

43. நம்மை என்பது அகத்தியரைக் குறிக்கும்; அவர் பிரம குமாரராதலின்; 23. தரம் - சிறப்பு.

44. பலம் உள்ள - நற்பலனை அளிக்கும் தன்மையுள்ள. உமாபதியார் தமக்கு அருள்புரியவே அங்கு அனுப்பினர் என்பது அகத்தியர் கருத்து. ஈட்டு தலம் - தேடிக்கண்டு கொண்ட இத் தலத்தை.

45. எந்தை - என் தந்தையாகிய பிரமன். பூணுவித்தான் இல்லை - பெறும்படிச் செய்தான் இல்லை. பொறாமையோ - இது அவனது பொறாமைக் குணமோ; தான் காணாத சிவபிரான் வடிவைப் பிறர் காண்பது என்பதிற் பொறாமை; பொறாமை - பொறுமை இன்மை. தாணு - நிலைபெற்றவன்; சிவபெருமான்.

46. நாளும் வாழ என்று கூட்டுக. புகல்பெற்றார் - குற்றால நாதனை வந்து சரணடைந்து ஆதரிக்கப் பெற்றார்; புகல் - மகிழ்ச்சி, இருப்பிடம் என்னலும் ஆம்.

---

(பி - ம்.) 44. காட்டிலெம்மை.

அகத்தியர் திருமால் உருவை சிவலிங்கமாக மாற்றிப் பூசித்தது

47. களிகூர்ந்து செங்கமலக் கண்ணனுறை கோயில்
வெளிவாயி லுத்தரபால் மேவத்—தெளியா

48. வயிணவர்கள் சைவருக்கே வாயில்தடை யென்னப்
பயிரவரும் பாரார்போற் பார்ப்பக்—கயிலையில்வாழ்

49. அண்ணலடி போற்றுத வந்தணரைக் கோதமனும்
கண்ணுவனு மிட்ட கடுஞ்சாபம்—நண்ணுமல்

50. போமோ வெனப்புறமே போந்துசிவ பூசைமுற்றி
தாமோ தரனடியார் தம்மைப்போல்—மாமோன

51. ஞானமொரு முத்திரையால் நண்ணியொரு நாரணனூர்
தானசம யம்பரவத் தானேகி—வானளவும்

---

47. உத்தரபால் - வடபுறம். தெளியா - சிவன் விஷ்ணு என்பவர் ஒருவரே யென்று தெளிவை அடையாத

48. வைணவர்கள் - வைஷ்ணவ அந்தணர்கள். வாயில் தடை என்ன - வழி தடையாகும் என்று கூறித் தடுக்க; தடை செய்தவர் முதலில் கடைகாப்பாளர் என்பதும், பின்னர் வயிணவ அந்தணர் என்பதும், தல புராணத்தால் அறியப்படுகிறது. II. 3 : 87, 88. பயிரவர் : இவர் குற்றாலம் வடபெருங்கோயிலின் வாயிலினருகே கோயில் கொண்டுள்ள சிவகணத்து ஒருவர்; திருக்குற்றாலத். II. 3 : 135. பாரார்போல் பார்த்தது : இவர் சிவகணத் தொருவ ராதலின்.

49. கோதமனும் கண்ணுவனும் இட்ட கடுஞ்சாப வரலாறு புலப்படவில்லை.

50. தாமோதரன் - திருமால். மோன - மௌனமான.

51. ஞான முத்திரை - சின் முத்திரை. நாரணனூர் தானசமயம் பரவ - திருமால் கோயில் வழிபாட்டு முறைப்படித் துதித்துப் பூசை செய்ய.

---

(பி - ம்.) 47. செக்கமலக்.

52. கோலவட மேருநிகர் கோயிலிடை மாயனென
நீலவரை போனிமிர்ந்து நின்றானைச்—சாலப்

53. பவளவரை போலாகப் பாவித்துத் தானோர்
தவளவரை போல்நீறு சாத்திச்—சிவனருளே

54. பாடிப் பணிந்து பரவிப் பலமுறைகொண்
டாடிச் சிவானந்த மள்ளூறி—ஆடகவிற்

55. செங்கரா தேவா திகம்பரா வேதாந்தா
சங்கரா சம்பூ சதானந்தா—பொங்கரவா

56. குற்றால நாதா குறுகு குறுகென்று
பொற்றா ளிணைகுறுகிப் போற்றுதலும்—வற்றா

57. தருள்பெருக மேன்மே லறம்பெருக வெங்கும்
பொருள்பெருகப் போதம் பெருகத்—தெருள்பெருகச்

58. சாற்றுந் தமிழ்பெருகச் சைவ நெறிபெருக
நாற்றிசையிற் றென்பா னலம்பெருகப்—போற்றுமுனி

---

52. மாயனென - திருமாலாக. சால - முழுவதும், அல்லது சிறந்த. கோயிலுக்கு மேருவும், திருமாலுக்கு நீலவரையும் ஒப்பு.

53. பவள வரைபோல் பாவித்து - பவள மலைபோன்ற சிவபெருமானாகத் தியானம் செய்து. தவளவரைபோல் நீறுசாத்தி - வெண் குன்றம்போலத் திருநீறு பூசிக்கொண்டு.

54. சிவானந்தம் அள்ளூறி - சிவ ஆனந்த அமுது ஊற்றுப் பெருக்கெடுத்து.

55. ஆடக வில் செங்கரா - பொன்னான மேருவில்லை ஏந்திய கையுடையோனே. செங்கரா முதல் (56) குற்றாலநாதா என்பதுவரையிலுள்ள சொற்கள் சிவபிரானைத் துதித்து விளித்த பெயர்கள்.

56. குறுகு குறுகென்று - நீலவரை போல் மாலாகி நின்ற உருவம் குறுகிக் குறுகி ஒரு சிவலிங்க வடிவமாக மாறுகவென்று. போற்றுதலும் - துதிசெய்தலும்; போற்றியது கூர்மவேட்டுவத் தியானம் என்பர்; திருக்குற்றாலந். II. 3 : 137.

57. போதம் - ஞானம். தெருள் - அறிவின் தெளிவு.

58. தென்பால் - தென் திசை. முனி - அகத்தியர்.

---

(பி - ம்.) 55. பொங்கரவ.

59. தீர்க்கம் பெருகச் சிவமயமா கக்குறுகி
யார்க்கும் பெரியபிரா னகினேன்—ஏர்க்கும்

60. பரவலன்பாற் பாணனுக்குப் பாட்டெழுதுஞ் சீட்டுப்
புரவலன்பால் விட்ட புலவன்—சுருதி

61. வனப்படிக்கா சிட்டு வடித்ததமி ழோர்க்குத்
தினப்படிக்கா சிட்ட தியாகன்—முனைத்தும்

62. பொருதுபிர மாதியர்க்குப் போர்மாலை மாற்ற
விருதுசிர மாலையிட்ட வீரன்—சுரரும்

---

*59.* தீர்க்கம் - நெடுங்கால வாழ்வு; அகத்தியர் இன்றும் பொதியமலையில் தவ வாழ்வில் நிலைத்திருப்பதாகவே நம்மனோர் துணிபு. குறுகி - குறுகிய சிவவடிவமாகி; திருக்குற்றாலத். II : *3* : *143*. ஏர்க்கும் - மேலோங்கும்; சிறக்கும்.

*60*, பரவல் அன்பால் - பரந்த அன்பினால். பாணனுக்கு மதுரைப் பாணபத்திரன் என்னும் அடியான் பொருட்டு. பாட்டு எழுதும் சீட்டு - சீட்டுக் கவியாக எழுதிய பாட்டை. புரவலன் - சேரன். புலவன - தேவன்; மதுரையில் சங்கப் புலவராய் விளங்கிய சோமசுந்தரக் கடவுள் என்னலும் ஆம். பாட்டு: சிவபிரான் தன் அடியானை பாணபத்திரனுக்காக எழுதியனுப்பிய 'மதி மலி புரிசை' என்ற தொடக்கத்துத் திருமுகப் பாசுரம். இப்பாசுரம் *11*-ஆம் திருமுறையில் முதலில் வைத்துத் தொகுக்கப்பெற்ற பெருமை யுடையது. இச்சரித்திர விரிவை, திருவிளையாடற் புராணம் *42*-வது திருவிளையாடலிற் காணலாம். சுருதி - வேதம்.

*61.* வனப்பு அடிக்கு - அழகிய சிவபிரான் திருவடிக்கு. ஆசிட்டு-பற்றுகக் செய்து. வடித்த-தெளிந்து கூறிய. தமிழோர்க்கு-தமிழ் மறையாகிய தேவாரம் அருளிய, சம்பந்தர், திருநாவுக்கரையர் ஆகிய இருவருக்கு. தினப்படிக்காசு இட்ட தியாகன்-நாள்தோறும் படிக்காசிட்டருளிய கொடையாளி; காசு - பொற்காசு; இது திருவீழிமிழலையில் நிகழ்ந்த அருட்செயல். முனைத்தும் - எதிர்த்தும்.

*62.* பொருது - போர் செய்து பிரமாதியர்க்கு - பிரமன் முதலான தேவர்களுக்கு. போர்மாலை - போரிடும் மயக்கம். விருது - வெற்றிச்சின்னமாக. சிரமாலை - தலைமாலை. சிவபிரான் பிரமவிஷ்ணு முதலான தேவர்களின சிரங்களைக்கோத்து மாலையாக அணிந்தவர்;

63. இறவாமைக் காலமுண்டோ னெம்பெருமா னென்றும்
பிறவாமை தோன்றும் பெருமான்—அறவாழி

64. மூவர் பெருமான் மொழியு மறுசமயத்
தேவர் பெருமான் சிவபெருமான்—மேவ

65. அரியசிவ லோகத் தருமைப் பெருமான்
பெரியசிவ லோகப் பெருமான்—அரிபிரமர்

66. வானோர் முனிவோர் மறையோர் முதலானோர்
ஏனோருங் காட்சி யெமக்கென்னக்—கானோங்கு

திருவிழாக்கள்

67. மேல விடபத்து விண்ணிடப மேறியெனக்
கோல விடபக் கொடியேற்றி—ஆலயத்து

68. மேவா மரமும் விலங்கொடுபுள் ளும்பரவித்
தேவாம் பெரிய திருநாளிற்—பூவாளும்

---

" தலைமாலை தலைக்கணிந்து " (அப்பர் தேவாரம்; திருவங்கமாலை) சுரரும் - தேவர்களும்.

*63.* இறவாமைக்கு ஆலம் உண்டோன் - இறவாதிருக்கும்படி விடத்தை உண்டவன். அற ஆழி - தருமசக்கரத்தை நடத்தும்.

*64.* மூவர் - மும்மூர்த்திகள். அறுசமயம்:—சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணபத்யம், கௌமாரம், ஸௌரம் என்பன; *121*, *273*; இதனை வேறுபடக் கூறுவதும் உண்டு;

*66.* ஏனோரும் - மற்றவர்களும். கான் - காட்டில்.

*67.* மேலவிடபத்து - உயர்ந்த மரக்கிளையின்மேலே. விண் இடபம் - வானிலுள்ள இடபராசி. ஏறியென - ஏறி விளங்கும் தோற்றம்போல. கோல இடபக்கொடி - அழகிய விடைக்கொடி.

*68.* மேவா - பொருந்திய. மரமும் - குறும்பலா முதலான அங்குள்ள எல்லா மரங்களையும். விலங்கு - மிருகம். புள் - பறவை. பரவி - அவையனைத்தும் தேவகணங்கள் என்பது புராண வரலாறாதலின் அவற்றை வணங்கித் துதித்து. தேவு ஆம் பெரியதிருநாள் -

---

(பி - ம்.) *64.* மறுசமையத். *68.* பூவாமு.

69. மூவேந்தர் தங்கள் முறையியற்ற வந்துவந்து
தேவேந்தர் போற்றுந் திருநாளில்—பாவேந்தர்

70. முத்திரைசெய் பங்குனியில் மும்மூன்று நாளுலவிச்
சித்திரைநீ ராடுந் திருநாளில்—அத்தனர்

71. காட்டிடுமெய்க் காட்டொருநாட் கண்டிடுவோ ரிந்திரற்கும்
சீட்டிடுமா திக்கத் திருநாளில்—வேட்டொருநாள்

72. பூமே லயனாகிப் புண்டரிகக் கண்ணனெனத்
தாமே யிரண்டாநாட் சார்ந்தருளி—மாமூன்றில்

---

தெய்வத்தன்மை வாய்ந்த பெரியதிருநாளில். பூ ஆளும் - பூமியை ஆட்சிசெய்யும்.

*69.* மூவேந்தர் - சேர, சோழ, பாண்டியரென்னும் மூன்று அரசர்கள். முறை இயற்ற - அவரவர்களுக்கு ஏற்பட்ட வழிபாட்டு முறையான திருப்பணிக்கட்டளைகளைச் செய்ய. வந்து வந்து - அவரவர்களுக்கு உரிய முறைப்படி ஒருவர்பின் ஒருவராகவந்து. தேவேந்தர்-தேவ அரசர்கள். பாவேந்தர் - பாக்களையுணர்ந்த புலவர்; பாவலரும் ஆம்.

*70.* முத்திரைசெய் - இலாஞ்சினை வைத்துக் குறிப்பிட்டுள்ள; பெயர்ப்பதிவு செய்துள்ள என்னலும் ஆம். பங்குனியில் மும்மூன்று நாள் உலவி - பங்குனிமாதத்தின் கடைசி ஒன்பது நாட்கள் வீதியில் உற்சவங்கொண்டு எழுந்தருளி. சித்திரை நீராடும் திருநாளில் - சித்திரை விஷுவில் தீர்த்தங்கொண்டருளும் திருநாளில். அத்தனர் - சிவபிரான்.

*71.* காட்டிடு மெய்க்காட்டு - நேரில் வந்து எல்லோரையும் கண்காணிக்கும். ஒருநாள் - அந்த ஒரு தினத்தில்; மெய்க்காட்டுத் திருநாள் எனபது பந்தற்காட்சி போன்று காட்சி அருளும் திருநாள் என்னலாம். கண்டிடுவோர் - கண்டு தரிசனம் செய்யப்பெற்றோர். இந்திரற்கும் சீட்டிடும் - இந்திரனுக்கும அதிகாரநெறியில் சீட்டெழுதும்படியான. ஆதிக்கம் - தலைமை அல்லது உரிமையை அடையும். திருநாளில் - மேற்கூறிய மெய்க்காட்டுத்திருநாளில். வேட்டு - விரும்பி. ஒருநாள் - முதல் திருநாளன்று.

*72.* பூமேல் அயனாகி - தாமரைமலரின்மேல் விளங்கும் பிரமனாகி. இரண்டாம் நாள் புண்டரிகக் கண்ணனெனத் தாமே சார்ந்தருளி - இரண்டாம் நாளில் தாமரைக்கண்ணனாகிய திருமாலெனத் தாமே வந்து காட்சியளித்து. மாமூன்றில் - மூன்றாவது திருநாளில்.

73. போத வுருத்திரராய்ப் போந்தருளி நாலாநாள்
சீதவயல் சூழ்கிளுவைச் சின்னணைஞ்சான்—காதலனும்

74. பேகன்வீ ரப்பன் பெரிய சுவாமிதந்த
வாகனவெள் ளேற்றின் மகேச்சுரரா—ஆருநாள்

75. ஐந்திற் சதாசிவமே யாகியருள் செய்வரெனத்
துந்துமித டாரி துவைப்பவே—விந்தை

---

73. போத உருத்திரராய் - அறிவு அல்லது ஞானவடிவான உருத்திரமூர்த்தியாய். நாலாம் நாள் - நான்காவது திருநாளில். சீத வயல் சூழ் - குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த. கிளுவைச் சின்னணைஞ்சான் - கிளுவை என்னும் ஊரில் வாழ்ந்த சின்னணைஞ்சான் என்னும் ஒரு ஜமீன் தலைவர்; இவர் சொக்கம்பட்டி சமஸ்தானத்தலைவராய் இருந்தவர்; இவர் குற்றாலத்தில் உள்ள சித்திரசபையைச் செப்போடு வேய்ந்தவர்; திருக்குற்றாலக்குறவஞ்சி. 52. காதலன் - அந்தச்சின்னணைஞ்சான் புதல்வனும்.

74. பேகன், வீரப்பன, பெரிய சுவாமி என்னும் பெயர்களை யுடையவன். வாகன வெள்ளேற்றின் - வாகனமாகிய வெள்ளிய இடபத்தில். மகேச்சுரராய் - மகேசுரர் என்னும் தோற்றத்தோடு காட்சியளித்து; மகேசுரர் சிவமூர்த்திகளுள் ஒருவர்; இவர் எட்டுக் கரங்களையும், அரவப்பூணூலையும், சிங்கத்தோலையும் யானைத்தோலையும் உடையவர்; அபிதாந சிந்தாமணி.

75. ஐந்தில் - ஐந்தாம் திருநாளில். சதாசிவம் - இவர் சிவமூர்த்திகளில் ஒருவர்; இவர் ஈசானம், தத்புருஷம், வாமம், அகோரம் சத்தியோசாதம் என்னும் ஐந்து திருமுகங்களோடு விளங்குபவர். இவர் தேவர்க்கும் இருடிகளுக்கும் வேதம் ஆகமம் முதலியவற்றை உபதேசித்த மோட்ச காரணமூர்த்தி என்பர். துந்துமி, தடாரி— இவை வாத்தியங்கள். துவைப்ப - முழங்க. விந்தை - அழகு வாய்ந்த. 'விந்தை அணங்கு' என்று கூட்டிச் சயமாது கண்டு வருந்தும் என்றும் கொள்ளலாம்.

---

(பி - ம்.) 73. கிளிவைச் சின்னனைஞ்சான். 74. மகேச்சரரா

76. அணங்குகுழல் வாய்மொழியென் னம்மைமணக்,கோலம்
இணங்குதிருப் பள்ளி யெழுந்தும்—அணங்கவள்சொல்

77. காதலித்த தென்னக் கருப்பம்பால் முக்கனிகள்
சீதநறும் பாலாடித் தேனடி—மோதுபன்னீர்க்

78. கொங்கை யுவந்தாடிக் கும்பமிள நீராடிக்
கங்கையெனத் தெண்ணீர் கலந்தாடிப்—பொங்குதிசை

79. மேலாடை யுட்சாத்தி மேற்சாத்தி னற்பழைய
மாலானு ரென்னும் வகைதோற்றி—நாலேழின்

---

76-77. அணங்கு குழல் வாய்மொழி என் அம்மை - தெய்வத் தன்மை வாய்ந்த குழல் வாய்மொழி அம்மை என்னும் தேவி ; இது குற்றாலத்தில் கோயில்கொண்டுள்ள அம்பிகையின் திருநாமம். இப் பெயர் வடமொழியில் வேணுவாக்வாதினீ என வழங்கும். மணக் கோலம் இணங்கும்-கலியாணகோலத்தோடு பொருந்தும். திருப்பள்ளி எழுந்து - திருப்பள்ளிக் கோலத்தோடு பள்ளியறையிலிருந்து எழுந்து. ஐந்தாம்திருநாளே திருக்கல்யாணத்திருநாள் என்றும் ஆறும் திரு நாள் காலை திருப்பள்ளி யெழுதல் என்றும் கொள்க. அணங்கு அவள் சொல் - அத்தேவியின் சொற்களை. காதலித்தென்ன - தாம் விரும்பியதுபோல. கருப்பம்பால் - கருப்பஞ்சாறு. முக்கனிகள் - வாழை, மா, பலாஆகிய முப்பழங்கள். சீத நறும் பால் தேன் ஆடி - குளிர்ச்சியும, சுவையும் மணமும் உள்ள பாலும் தேனும் அபிஷேகங் கொண்டருளி; கருப்பம்பால் முக்கனி சீத நறும்பால் தேன் ஆகிய பொருள்கள் குழல் வாய்மொழி அம்மையின் மொழிக்கு உவமை. மோது பனனீர் - வீசுகின்ற பன்னீரின்.

78. கொங்கை - மணத்தை. கும்ப இளநீர் - குடம்போன்ற இளநீர். தெண்ணீர் - தெளிவான நீர் ; சுத்தஜலம். பொங்கு திசை - வியாபித்த திசைகளாகிய.

79. மேலாடை - மேலே விளங்கும் ஆடையை. திசையாடை யுடைமை, திகம்பரன் என்பதைக் குறிக்க வந்தது உட்சாத்தி - உட்புறமாய் அணிந்து. மேல் சாத்தினல் - மேலே அணியும ஆடை யினல். பழைய மாலானுர் என்னும் வகை தோற்றி - இவர் முன் திருமாலாய் இருந்தார் என்று சொல்லும்படி காட்சியளித்து ; திரு மால் பொன்னுடையர் ஆதலால், மேற்சாத்து பொன்னுடை

80. மற்றச் சிவாகமமேல் வைக்குமகு டாகமத்தால்
கொற்றத் திருப்பூசை கொண்டருளி—நெற்றிக்குப்

81. புண்டரமுஞ் சாத்திப் பொலிவாய்த் திரிகூட
மண்டபத்தி லாசனமேல் வந்திருந்து—பண்டுதுயில்

82. கோப்பா யிசைந்துதிருக் கோயிலொரு வாயிலுக்கும்
காப்பா யணிந்ததிருக் காப்பணிந்து—மாப்புணரி

83. சாலமிட லென்றுசெவிச் சாத்து மகரம்போல்
கோல மகரக் குழைதரித்துக்—காலம்

84. தெரித்ததுபோய் மேருச் சிகரமிசை வெய்யோன்
தரித்ததுபோற் பொன்மகுடந் தாங்கிக்—கிரிப்பெண்

---

என்பது விளங்கும். நால் ஏழில் - ஏழாந்திருநாளில்; இங்கு நாள் என்பது எதுகை நோக்கி நால் எனத் திரிந்தது. குறிப்பு:—தேரில் உலாவருங் காட்சியே இந்நூலின் பொருளாதலால், திருநாட்களின் விளக்கம் ஏழாம் நாளொடு நின்றது.

*80.* மகுடாகமம் - இது சிவாகமங்கள் இருபத்தெட்டில் ஒன்று. குற்றாலநாதருக்கு மகுடாகம விதிப்படி பூசை நடைபெறுகின்றது; இந்த மகுடாகமபூசை முறையை அகத்தியர் இலஞ்சி முருகன்பால் கேட்டு அறிந்தனர் என்று இத்தலபுராணம் கூறும்; II.3:115.

*81.* புண்டரம் - திரிபுண்டரம். பண்டுதுயில் - முன் தான் இங்கு மாலாய் இருந்தபோது தனக்குத் துயில்வதற்கு.

*82.* கோப்பாய் இசைந்து - ஏற்ற படுக்கையாய்ப் பொருந்தியிருந்து. வாயிலுக்குக் காப்பாய் அணிந்து - கோயில் திருவாயிலுக்குக் காவலாக அழகுற அமைந்து இருந்த ஆதிசேடனை; திருக்காப்பு அணிந்து - அழகிய காப்பாகக் கையில் அணிந்து. ஆதிசேடன் வாயில் காவலாகப் பணி செய்திருப்பது; திருக்குற்றாலத். *1.: 24.* திருக்காப்பு - ரக்ஷாபந்தனம் என்னும் காப்பு. புணரி - கடல்.

*83.* சாலம் - கூட்டம், தொகுதி. மகரம்போல் - மகரமீனைப் போன்ற. கோலமகரக்குழை - அழகிய மகரவடிவாய் அமைந்தகுழை; குழை - காதணி.

*84.* காலம் தெரித்தது போய் - காலத்தைத் தெரிவித்து இயங்கி வந்ததைவிட்டு. வெய்யோன் - சூரியன். தரித்ததுபோல் - நிலையாய்த்தங்கி நின்றதுபோல. கிரிப்பெண் - பார்வதிதேவி.

---

(பி - ம்.) *84.* திரித்ததுபோய்.

85. புடைபோங் களவிடத்தைப் பொங்காமற் கட்டும்
தடைபோலக் கட்டுவடஞ் சாத்தி—விடவேகம்

86. அண்டரளக் கொண்ணு வழுதமய மானதெனத்
தண்டரளக் கண்ட சரம்பூண்டு—மண்டலமிட்

87. டேகு குழையா மிருசுடர்மேற் கோளனைய
வாகு வலயம் வயக்கியே—தோகையுமை

88. கொங்கையா லிட்ட குறிமறைப்பக் கங்கையாள்
செங்கையால் வெண்சேறு தீற்றியதோ—வெங்கதிரும்

89. தோற்றவொளி தோற்றமற் றும்பிதரு போர்வைவிட்டுப்
போற்றுமட லாளியுரி போர்த்ததோ—ஏற்றுதிரு

---

85. புடைபோம் - பக்கங்களிற் பரந்துபோகும். களவிடத்தை - சிவபிரான் கழுத்தில் இருந்த விஷத்தை. கட்டுவடம் - கழுத்திற் கட்டிக்கொள்ளும் பட்டையான ஓர் அணி; கலித். 96. உரை.

86. அண்டர் - தேவர். அளக்கொண்ணு - அளக்கமுடியாத. தண் தரள - குளிர்ந்த முத்துக்களாலான. கண்டசரம் - கழுத்தில் அணியும் பலவடங்களாய் அமைந்த ஓர் அணி. மண்டலம் இட்டு - வட்டமிட்டு.

87. இருசுடர் - சந்திர சூரியர். கோள்அனைய - இராகு கேது என்னும் கோட்களாகிய பாம்புகள்போல. வாகுவலயம் - தோள்வளை. வயக்கி - விளங்க அணிந்து; இருகுழைகள் சந்திர சூரியர்களுக்கும், அக்குழைகளுக்கு அருகேயுள்ள வாகுவலயங்கள் இராகுகேதுக்களுக்கும் உவமை. தோகை உமை - மயில்போன்ற உமாதேவி.

88. கொங்கையால் இட்டகுறி - கொங்கை படத்தழுவியதால் செய்த வடுவாகிய அடையாளம்; 540. இது காஞ்சிநகரில் அம்பிகை சிவபிரானைத் தழுவியதால் ஏற்பட்ட அடையாளம். தன் மாற்றுளான அம்பிகையிட்ட கொங்கைத் தழும்பை ஈசன் மேனியிற் கண்டு கங்கை அது பொறுதவளாய் அச்சுவடு தெரியாமலிருக்க வெண்சேறு பூசியதோ.

89. தோற்ற - குற்றாலநாதருடைய பொன்மேனி ஒளிக்குத் தோற்றுப்போன. தோற்றமல் - பிறர்க்குத் தோன்றச்செய்யாமல். தும்பிதருபோர்வை - யானை தந்த தோலாகிய போர்வை: இது யானையையுரித்துப் போர்த்துக்கொண்ட வீரச்செயலைக் குறித்தபடி. விட்டு - நீக்கிவிட்டு. அடல் ஆளி உரி போர்த்ததோ - வலிமை மிக்க சிங்க உரியைப் போர்த்துக்கொண்டவாரோ? அல்லது.

90. உள்ளநிறை யன்பு முயர்கருணை யும்பெருகி
வள்ளலார் மார்பில் வதிந்ததோ—தெள்ளும்

91. குவலயமும் விண்ணுலகுங் கொண்டபெருங் கீர்த்தி
அவயவமெல் லாம்பரந்த வாறோ—சுவைகளெட்டும்

92. பின்மலையச் சாந்தப் பெருக்கெழுந்த தோவென்னத்
தென்மலையச் சாந்தநறுஞ் சேறணிந்து—பொன்மலையை

93. நேர்பெறவில் லாக்கியநாள் நெற்றிக்கண் ணூருகி
மார்பிலிரு பாலும் வடிந்ததோ—தார்பொதுளும்

---

*90.* ஏற்று திரு உள்ளம் - சிறப்பமைந்த திருவுள்ளத்தில். வள்ளலார் - அக்குற்றாலநாதருடைய. வதிந்ததோ - தங்கியதோ? வள்ளலார் ஏற்று திருவுள்ள நிறையன்பும் உயர்கருணையும் பெருகி மார்பில் வதிந்ததோ' என இயைக்க. தெள்ளும் - தெளிவாகும்.

*91.* குவலயமும் விண்ணும் கொண்ட பெருங்கீர்த்தி - மண்ணும் விண்ணும் வியாபித்துக்கொண்ட தமது பெரியகீர்த்தி. அவயவம் எல்லாம் - அங்க உறுப்புக்களில் எல்லாம். சுவைகள் எட்டு - எட்டு இரசங்கள்: அவை :—சிங்காரம், வீரம், கருணை, பெருமிதம், நகை, பயம், இளிவரல், கோபம் என்பன.

•*92.* பின்மலைய - பின்னிட்டோட. சாந்தப் பெருக்கெழுந்ததோ - சாந்தம் என்ற ஒன்பதாம் சுவை பெருக்கெடுத்து ஓங்கியதோ?. தீற்றியதோ, போர்த்ததோ, வதிந்ததோ, பரந்தவாறோ, பெருக்கெழுந்ததோ, (*88-92*) என்று பலவாறுக ஐயங்கொள்ளும்படி. தென்மலையச் சாந்து அணிந்து - தென்மலயமலைச் சந்தனமணிந்து : தென் - அழகும் ஆம். மலையச்சந்தனம் மிகவும் சிறப்புள்ளது. பொன்மலையை - மேருமலையை.

*93.* நேர்பெற - செம்மையாக. வில்லாக்கிய நாள் - வில்லாக வளைத்துக்கொண்ட திரிபுர சங்காரகாலத்து. தார் பொதுளும் - மாலையில் நெருங்கியுள்ள.

---

(பி - ம்.) *91.* குவலையமும்.

94. கானமலர்க் கூந்தற் கவுரி யிமாசலப்பெண்
பீனதனத் தேமல் பிதிர்ந்ததோ—மீனவிழிக்

95. கங்கையிட்ட பொன்னோ கலியாணச் செல்விமலை
மங்கையிட்ட பொன்னரிய மாலையோ—இங்கிதென

96. மின்னிதழி னால்முருக்கை வென்றா ரதிசயிப்பப்
பொன்னிதழி மாலை புனைந்தருளி—முன்னிகலி

97. வித்தாரச் சந்திரரும் வெய்யவருஞ் சூழ்வதென
முத்தார மும்பதக்க மும்பூண்டு—மைத்தகளம்

---

94. கானமலர்க் கூந்தல் - மணமிக்க மலர்களையணிந்த கூந்தலை யுடைய ; கானம் - காட்டில் உள்ள என்னலும் ஆம். கவுரி இமாசலப் பெண் - இமயமலையரசன் பெண்ணான கவுரி என்னும் பார்வதி. பீனம் - பருத்த. தனத்தேமல் - தனங்களின் மேற்பரந்த சுணங்கு. பிதிர்ந்ததோ - உதிர்ந்த விதமோ. மீனவிழி - மீன்கள் போன்ற அல்லது மீன்களாகிய விழிகளையுடைய.

95. கலியாணச்செல்வி - மணமகளான உமாதேவி. பொன்னரிமாலை - ஓர் அணி. இங்கு இது என - இங்கு இது என்ன வென்று.

96. மின் இதழினால் முருக்கை வென்றோர் - ஒளியுடைய உதடுகளால் செம்முருக்கம் மலரை வென்ற மகளிர். பொன் இதழி மாலை - பொன்னிறமான கொன்றை மலர்மாலை ; குற்றாலநாதர் புனைந்து கொண்ட இதழிமாலை, 'மேருமலை நெற்றிக்கண்ணால் உருகி இருபாலும் வடிந்ததோ, தேமல் பிதிர்ந்ததோ, மங்கையிட்ட பொன்னரி மாலையோ' என்று நிச்சயிக்கவொண்ணாது, மகளிர் அதிசயிக்குமாறு விளங்கியது என்பதாம். முன் இகலி - முன்னே பகைத்து வந்து.

97. வித்தார - விரிவையுடைய. சந்திரரும் வெய்யவரும் - பல சந்திரர்களும் சூரியர்களும் சூழ்வது என - சூழ்ந்திருப்பதுபோல ; முத்தாரங்களுக்குப் பல சந்திரரும், பதக்கங்களுக்குப் பல சூரியர் களும் உவமை. மைத்த - கருநிறங்கொண்ட. களம் - கழுத்து ; கழுத்து மைத்தமை உண்டவிடம் அங்குத் தங்கியதால்.

---

(பி - ம்.) 94. யிமையாசலப்பெண். 96. முன்னிகவி.

98. காரொழுக்கம் மின்னொழுக்கங் காட்டுவது போற்கழுநீர்த்
தாரொழுக்க நூலொழுக்கந் தாபித்துச்—சீரியகைக்

99. கற்பகத்தைக் காமவல்லி சுற்றியெனக் கங்கணமும்
பொற்கடக முந்தொடியும் பூட்டியே—முற்கடுப்போல்

100. உண்ணுவரோ வென்றுபசி யோரமுதம் போலானார்
தண்ணுதர பந்தனமுஞ் சாத்தியே—அண்ணலுக்குப்

101. பன்னகநா ணன்றிப் படர்சிலைநா ணானதெனப்
பொன்னரைஞாண் போதப் பொலிவித்து—முன்னுதிசை

---

*98.* கார் ஒழுக்கம் கழுநீர்மாலைக்கும், மின் ஒழுக்கம் அணிந்துள்ள பூணூலுக்கும்; இது நிரனிரையணி. தாபித்து-நிலைநிறுத்தி. சீரிய - அழகான, சிறப்பமைந்த. கை - கையர்கிய.

*99.* கற்பகம் கைக்கு உவமை; அதன் கொடைச்சிறப்பினால்; முன் *61*-இல் தியாகன் என்றதும் நோக்குக. காமவல்லி - விருப்பத்தை அளிக்கவல்ல ஒரு தெய்வத்தன்மைவாய்ந்த கொடி. இது கற்பக விருக்ஷத்தைச் சுற்றி வளர்ந்திருப்பது. கங்கணம், கடகம், தொடி என்பன கையில் அணியும் வளைபோன்ற அணிகள். இவை காமவல்லிக்கு உவமை. கடு - விஷம்.

*100.* பசி அமுதம் போலானார் - பசிக்கு அமுதம்போன்ற குற்றாலநாதர். முன் கடுப்போல் உண்ணுவரோ என்று - முன் விஷமுண்டதுபோல இன்னும் உண்பாரோ என்று. தண் - குளிர்ந்த. உதரபந்தனம் - அரைக்கச்சை. சாத்தி - அணிவித்து. கடுவுண்டாலும் வயிற்றில் புகுந்து ஊறு செய்யாதிருக்கவென்று உதரபந்தனம் அணிவித்தது.

*101.* பன்னகம் - பாம்பு. நாண் அன்றி - அரைஞாணாக இல்லாமல். படர் சிலை நாண் ஆனது என - பிறரை வருத்தும் தன் வில்லுக்கும் நாண்கயிறாக ஆனது என்று. பொன் அரைஞாண் போதப் பொலிவித்து - பொன் அரைஞாணைப் பொருந்தும்படி விளங்க அணிந்து. முன்னு திசை - பொருந்திய திசைகள்.

---

(பி - ம்.) *101*, பொன்லரைநாண்.

102. எட்டா முடைதாரம் பன்னியருக் கீந்துகொண்ட
பட்டா முடைதாரம் பாங்கமைத்துக்—கொட்டியதோர்

103. ஆயிரங்கைப் பேரியன்றி யம்மைதிருத் தாளமன்றிப்
பாயிரவே தச்சுருதிப் பண்ணன்றித்—தூயதுடிக்

104. கைவழக்க மன்றியிரு கால்முறைதப் பாதுகொட்டும்
தெய்வமுர சென்னச் சிலம்பணிந்து—நவ்விதனை

105. ஏற்கும் பவளவெற்பி லிந்திரவிற் போல்மணிகள்
சேர்க்குந் திருவா சிகைசேர்த்துத்—தார்க்குலவு

---

*102.* எட்டாம் உடை - எட்டாகிய உடையை; அதாவது திகம்பரத்தை. தாரம் பன்னியர்க்கு - தாருகாவனத்தில் இருந்த இருடிபத்தினிகளுக்கு; தாரம் - தாருகாவனம் என்பதின் விகாரம். ஈந்து - கொடுத்து; அதாவது அவர்களை நிர்வாணமாகச்செய்து. கொண்ட - இப்பொழுது தாம்கொண்ட. பட்டு ஆம் உடைதாரம் - பட்டாகிய உடைதரித்தலை; தாரம் - தரித்தல். பாங்கு அமைத்து - அழகாக அமைய உடுத்து. கொட்டியதோர் - முழக்கியதாகிய ஒரு.

*103-104.* ஆயிரங் கைப்பேரி-பாணாசுரன் தன் ஆயிரங்கைகளாலும் முழக்கும் பேரி. அம்மை திருத்தாளம் அன்றி - அம்பிகை தன்கையில் வைத்துக்கொட்டும் திருத்தாளக்கருவி அல்லாமல்; சிவபிரான் நடனஞ்செய்யும்போது அம்பிகை அருகில் இருந்து தாளம் போடுவதாகக் கூறப்பெறும்; கலித். 1.10,13; குடந்தைக் கீழ்க்கோட்டத்துக் கூத்தப்பிரான் அருகே, தேவி, கையிற் தாளம் வைத்துப் போடுவது போலக் காட்சியருள்வதும் காணலாம். பாயிர வேதச்சுருதிப்பண் அன்றி - பல பொருளடக்கங் கொண்ட வேதச் சுருதியாகிய பாடல் அல்லாமல். தூய துடி—பரிசுத்தமான உடுக்கை. கை வழக்கம் - கையால் ஒலிக்கச்செய்தல். இருகால் முறை தப்பாது - காலைமாலை ஆகிய இருகாலத்தும் முறை தவறாமல். தெய்வமுரசு - சித்ரசபையில் முழங்கும் முரசு; 17. நவ்வி - மான்.

*105.* பவளவெற்பில் இந்திரவில்; பவழமலை திருக்குற்றால நாதரையும், இந்திரவில் திருவாசிகையையும் குறித்தன. திருவாசிகை; இது திருவாசி என்றும் வழங்கும்; இது கடவுள் திருவுருவின் பின் வட்டமாக அழகுறப் பொருத்தப் பெற்றிருக்கும் பிரபை. S. I. ii. Page 136. தார்க்குலவு - மாலையால் விளங்கிய.

106. வேணிமயி லோடி விரைந்தொளிப்பச் செம்பாதிக்
காணிமயி லங்கே கலாமிப்ப—வாணிச்

107. சுருதியவ ளூடலுக்குத் தூதுசெல்வ தொப்பப்
பருதிதன தேக்கரவாற் பார்ப்பப்—பொருவழக்குத்

108. தொண்டன் பிறப்புந் தொடருமெதிர் காட்டியெனப்
பண்டநிலைக் கண்ணாடி பார்த்தருளித்—தண்டாத

109. தேவாரப் பண்ணுந் திருவா சகத்தமிழும்
பாவார் திருவிசைப்பாப் பல்லாண்டும்—நாவார்.

---

*106.* வேணிமயில் - சடைமீது உள்ள மயில்போன்ற கங்கா தேவி. செம்பாதிக்காணி மயில் - ஈசன் உருவில் சரிபாகம் தனக்கு உரிமையாகக்கொண்ட மயில்போன்ற அம்பிகை. கலாமிப்ப - கோபங்கொள்ள. வாணி - சரஸ்வதியின்.

*107.* சுருதி - வீணையில் எழுப்பும் ஒலி. அவள் ஊடலுக்கு - அந்த அம்பிகையின் பிணக்கத்திற்கு. பருதி - சூரியன். ஏக்கர வால் - இச்சையுடன்; இச்சொல் ஏக்கறவு என்றும் வழங்கும். பொரு வழக்கு - எதிர்த்து வழக்காடிய.

*108.* தொண்டன் - முன் ஆலாலசுந்தரர் என்ற சிவகணத் தொருவர். பிறப்பும் - பின் சுந்தரமூர்த்தியாக அவதரிக்கும் பிறப்பையும். தொடரும் - தமக்கும் அச்சுந்தரருக்கும் இனி உண்டாகும் பிணிப்பையும். பொரு வழக்குத் தொண்டன்: என்றது சிவபிரானோடு வலிந்து எதிர் வழக்காடிய உரிமை யுடைமைபற்றி; சுந்தரருக்கு வன்தொண்டர் எனப் பெயர் வந்ததும் இங்கு நோக்கத் தக்கது. எதிர்காட்டி என-முன் கயிலையில் நேரே எதிர்காட்டும் நிலைக் கண்ணாடியை ஒத்த. ஒப்பு. திருப்பூவணநாதர் உலா; 124. தண்டாத - தடைபடாத.

*109.* தேவாரப்பண்-சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் இம்மூவர் அருளிய தேவாரப் பாடல்கள். திருவாசகத்தமிழ்-மாணிக்க வாசகர் அருளிய திருவாசகம். திரு விசைப்பா-திரு மாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்பவர்களால் அருளிச் செய்யப் பெற்ற பாடல்கள்; இவர்களுள் திருமாளிகைத் தேவரும், சேந்தனாரும் ஒருவரே யென்பது தற்கால ஆராய்ச்சி வாயிலாய் அறியப் பெறும்; பல்லாண்டு அருளியவர் மேற் கூறிய சேந்தனாரே.

110. சிவபுரா ணக்கவியுஞ் சேரர்கோன் பாட்டும்
சிவபிரான் கொண்டருளிச் செய்து—நவமாக

உடன் வருவோர்

111. வெற்றியண்ட கூடத்தில் மேருவையே டாயெழுதப்
பெற்ற கணக்காயப் பிள்ளையும்—கொற்றவேல்

112. காட்டுகட லிற்றோய்த்துக் கற்பொடியிட் டுச்சூர்மேல்
தீட்டி முனைபார்த்த சேவகனும்—நாட்டம்

113. படைத்தசிவ மாம்பயிர்க்குப் பால்பாயப் பாயா
துடைத்தகா லைவெட்டு முழவோனும்—முடைச்சமணர்

---

*110.* சிவபுராணக் கவி-சிவ புராணங்களாகிய பாடல்கள்; இவை சைவம், பவிஷ்யம், மார்க்கண்டேயம், லிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம் என்னும் பத்துப்புராணங்கள். சேரர் கோன்பாட்டு - சேரமான பெருமாணுயனுர் அருளிய பொன் வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, திருக்கயிலாய ஞானவுலா என்னும் மூன்றும் ஆம். நவமாக-புதிதாக.

*111.* வெற்றி அண்ட கூடத்தில் - வெற்றிகொண்ட அண்ட கூடமாகிய இடத்தில். கணக்காயப்பிள்ளை-எழுதும் விநாயகர். கொற்ற வேல்-வெற்றிதரும் வேலாயுதம்.

*112.* காட்டு கடலில் தோய்த்து-தேவர்கள் காட்டிய கடலில் தோய்த்து அதை வற்றச்செய்து. கல்பொடியிட்டு-கிரவுஞ்ச கிரியைக் குடைந்து தூளாகச்செய்து. சூர்மேல் தீட்டி-சூரபதுமன்மீது அவ் வேலைப்பாய்ச்சி. முனைபார்த்த - அவ்வேலின் நுனி மழுங்காதது பார்த்து மகிழ்ந்த. சேவகன்-சிறந்தபோர் வீரனுன முருகக் கடவுள். நாட்டம்-நாட்டுதல்; நிலை நிறுத்துதல்.

*113.* சிவமாம் பயிர்க்கு - சைவமென்னும் பயிர்க்கு. பால் பாய - பாலையே நீராகப் பாய்ச்சுவது போல் அபிஷேகம் செய்ய. உடைத்த - அப்பாற்குடத்தை உதைத்து உடைத்த. காலை வெட்டும் உழவோன்-தன் தந்தையின் காலைவெட்டிக் கீழேவீழ்த்திய தீவிரபக்தியுடைய தண்டீசர். முடைச்சமணர் - குளிக்காது உடல் அழுக்கேறிக்கெட்ட நாற்றம் வீசப்பெறும் சமணர்கள்.

---

(பி - ம்.) *111.* யேடாவெழுதப்.

114. தாக்கு மணிசிதறித் தாலமெங்குஞ் சைவமணி
கோக்கும் பரசமய கோளரியும்—மாக்கல்

115. கடல்செலுத்தி நாட்டிற் கவிமதுரச் செங்கோல்
அடல்செலுத்து நாவுக் கரசும்—படர்செலுத்தும்

116. அல்லென்றும் பாராம லாண்டவனைப் பெண்டூது
சொல்லென்று சொல்லிவிட்ட தோழனும்—நல்ல

•117. மருந்துறையுந் தான மறைத்துறையிற் றேடிப்
பெருந்துறையிற் கண்ட பிரானும்—அருந்தமிழால்

---

*114.* தாக்கும்மணி சிதறி - தாக்கி மந்திரித்த ஜபமாலைமணி சிதறியோடி விழ; தாக்கும்மணி - ஒலிக்கும்மணி என்பதும் பொருந்தும். தாலமெங்கும்-உலகமெங்கும். சைவமணி கோக்கும்-சிவ மணியாகிய உருத்திராட்ச மணியைக்கோத்து அணியும் சைவர் களாகச்செய்த. பரசமய கோளரியும்-பிற சமயவாதிகளுக்கு ஒரு சிங்கம் போன்ற திருஞானசம்பந்தரும்; பரசமய கோளரி என்பது இவரது பேர்களுள் ஒன்ருகவே வழங்கப்பெறும். மாக்கல் - பெரியகருங்கல்லை.

*115.* கடல்செலுத்தி-தெப்பமாக மிதந்துவரும்படி கடலிற் செலுத்தி. கவி - தாம் அருளிய தேவாரப்பாடல்கள். மதுரச் செங்கோல்-இனிமைதரும் செங்கோலின். அடல்செலுத்தும்-வலிமை யை உலகிற் செலுத்திய. அரசு என்பதற்கு ஏற்பச் செங்கோலும் கூறப்பெற்றது. படர்செலுத்தும்-துன்பத்தை உண்டாக்கும்.

*116.* அல் என்றும் பாராமல் - இருட்டு என்றுங்கருதாமல். பெண் தூதுசொல்என்று - பெண்பாலாகிய பரவை நாச்சியாரிடம் தூதாகப் போய்ப்பேசு என்று. ஆண்டவனை - தியாகேசராகிய சிவ பெருமானை. தோழனும்-தம்பிரான்தோழர்என்னும் சுந்தரமூர்த்தியும்.

*117.* நல்லமருந்து உறையும்தானம்-பிறவிநோய்க்கு நல்லமருந் தாகிய சிவபெருமான் இருப்பிடத்தை. மறைத்துறையில் தேடி-வேத நூற்றுறைகளை ஆராய்ந்து தேடி. பெருந்துறையில் கண்டபிரான்- திருப்பெருந்துறை என்னும் தலத்தில் குருந்தின் நீழலிற் கண்டு கொண்ட பெருமானுகிய மாணிக்கவாசகர்.

118. ஆதியுலாப் பொன்வண்ணத் தந்தாதி சொன்னவனும்
வீதியுலாக் கன்றுபழி மீட்டோனும்—பாதியெல்லாம்

119. தேவியெனக் கண்டுமொரு தேவியைநந் தேவனுக்கே
ஆவியெனக் கைக்கொடுத்த வண்ணலும்—மேவியசீர்

120. அந்தாதி யாற்புகழ்ந்த வம்மனையு மட்டகிரி
பந்தாடும் பூதப் பதாதிகளும்—நந்தாத

121. தொண்டர் குழாங்களுந்தாஞ் சூழ்ந்தசம யத்தொகையும்
அண்டரெல்லாம் போற்று மடியாரும்-தெண்டிரைபோல்

122. கோபுர வாசற் கொளநிரைப்பத் தேவரெல்லாம்
மீபுர வாசல் வெளியடைப்ப—மாபுரத்துச்

---

*118.* ஆதிஉலாப்பொன்வண்ணத்தந்தாதி சொன்னவன்-திருக் கயிலாய ஞானஉலா என்னும் ஆதிஉலாவோடு பொன்வண்ணத் தந்தாதியைச் சொன்ன சேரமான் பெருமாள் நாயனுர்: *110.* வீதி உலாக் கன்றுபழி-திருவாரூர்வீதியில் உலாவுதலை மேற்கொண்ட பசுவின் கன்றைக்கொன்ற பாவம். மீட்டோன் - தன்னைப்பற்றுமல் மீட்ட மனுநீதிச் சோழன்.

*119.* தேவியெனக் கண்டும்-தான்மணம் செய்துகொண்டதேவி இவள் எனஅறிந்தும். ஒருதேவிதனை-ஒப்பற்ற அத்தேவியை. நம் தேவனுக்கே ஆவியெனக் கைக்கொடுத்த அண்ணல்-இவ்வழகிய நங்கை நம்தேவனுகிய மருதீசருக்கே பிராணநாயகி ஆகக்கடவள் என்று அவ்வீசனுக்குக் கொடுத்த பெரியோனுகிய வரகுணபாண்டியர்; "விரும்பின கொடுக்கை பரம்பரற்கென்று, புரிகுழற்றேவியைப் பரிவுடன் கொடுத்த, பெரிய வன்பின் வரகுணதேவர்" திருவிடைமருதூர் மும்மணிக்கோவை: 28. மேவியசீர்-சிறப்புப்பொருந்திய.

*120.* அந்தாதியாற் புகழ்ந்த அம்மனை - அற்புதத்திருவந்தாதி என்னும் பிரபந்தத்தால் புகழ்ந்து துதிசெய்த காரைக்காலம்மை. அட்டகிரி பந்தாடும் பூதப்பதாதிகள்-எட்டுக் குலபருவதங்களை எடுத்துப் பந்துபோல் விட்டெறிந்தாடும் பூதப்படைவீரர்; *533.* நந்தாத-கெடாத.

*121-122.* சமயத்தொகை-ஆறுசமயங்கள். *64, 273* அண்டர்-தேவர். கொள-கொள்ள. நிரைப்ப-வரிசை வரிசையாக நிற்க. மீ புரம்-சுவர்க்க நகரம். மாபுரத்து-குற்றாலநகரினுள்

---

(பி - ம்.) *121.* சமையத்தொகையும். *122.* கொளநிறைப்ப.

123. செல்லன்மின் செல்லன்மின் றேர்ப்பவ்னி சேவியுமின்
நில்லுமி னென்றுநம்பி நேர்சிறுத்த—வெல்லுமிசைத்

124. தேவர் பிரானுர் திருவாடு தண்டின்மேல்
பூவலர்தார் வல்லியுடன் போந்தருளி—மேவுபெரும்

125. மாகடலைத் தாவியம்பொன் மந்தரம்வந் தாலனைய
வேகட வாமணித்தேர் மீதேறிச்—சேகரத்து

126. வாலமதி யைத்தொடர்ந்து வட்டமதி வந்ததெனக்
கோலமணி முத்தின் குடைநிழற்ற—மேலதனைக்

127. காலவட்டச் சூரியர்கள் கண்டுதடு மாறுதல்போல்
ஆலவட்டம் பொன்விசிறி யாங்கசைப்ப—மூலநதி

128. வாழ்வதனைக் கண்டு வருநதியெல் லாமயங்கி
வீழ்வனபோல் வெண்கவரி மேலிரட்ட—வாழித்

---

*123.* செல்லன்மின், செல்லன்மின்-அடுக்கு விரைவுப்பொருளில் வந்தது. நம்பி-நந்திதேவர். இசை புகழ்.

*124.* தேவர்பிரானுர்-குற்றால நாதர். திருவாடுதண்டு-கோயில் வாகனக் காவுதண்டு; "சேமத்திருவாடு தண்டினு மேற்செல்ல" (திருப்பூவண நாதருலா: 64, 89.) வல்லி-குழல்வாய்மொழி யம்மை.

*125.* கடல்-கடல்போன்ற பெரியஅடியார் கூட்டம். அம்பொன் மந்தரம்-அழகிய பொன்மலையான மேருமலை; மந்தரம்-மேரு; மேருமலை தேருக்கு உவமை. வேகடவா மணித்தேர்-சாணைபிடிக்கப்பெற்ற இரத்தினங்களால் விளங்கும் தேர்; கடவா: உடன்பாட்டுவினை. சேகரத்து-முடிமீதுள்ள.

*126.* வாலமதியை-இளம்பிறைச்சந்திரனை. வட்டமதி-முழுமதி; குடை வட்டமதிக்கு உவமை; "சீதமதிக் குடைக்கீழ் செம்மையறங் கிடப்ப" (நளவெண்பா. I. 19.)

*127.* காலவட்டச் சூரியர்கள்-காலசக்கரத்தின் வழியேசெல்லும் சூரியர்கள்; சூரியர் பன்னிரு வராதலின் பன்மையில்குறித்தது. ஆலவட்டம்-பெருவிசிறி. மூலநதி-ஆதிநதியாகிய கங்காநதி.

*128.* வாழ்வதனைக் கண்டு - குற்றாலநாதரின் சடைமீது வாழும் சிறப்பைக்கண்டு. மயங்கி - அவ்வாழ்வு தமக்கில்லையே என்று

129. தடைக்கொடியா லாதவன்றேர் தாழ்க்கும் மறுகில்
விடைக்கொடிமுன் போய்நிலவு வீசக்—கொடைப்பெருமைத்

130. தம்பிரான் வெள்ளிமலை தாள்படைத்த தென்னவிடை
நம்பிரான் முன்னே நடந்தேக—அம்புயத்து

131. மைந்தனொரு புள்ளேற மைந்தனைமுன் பெற்றெடுத்த
தந்தையொரு புள்ளரசு தானேற—ஐந்தருவில்

132. அவ்வரசு நான்குகோட் டத்திதனி லேறமழுச்
செவ்வரசர் பன்னொன்று சேவேற—வெவ்வுதயர்

---

எக்கத்தால் மயங்கி. வருநதி யெல்லாம் வீழ்வனபோல் - ஓடிவருகின்ற மற்ற நதிகள் வீழ்வனபோல். இரட்ட - மேலுங்கீழும் மாறி மாறியாட. வாழி-நிலைபெற்று விளங்கும்.

*129.* தடைக்கொடியால்-செல்லுவதற்குத் தடையாக நிறைந்து விளங்குங்கொடிகளால். ஆதவன் தேர்தாழ்க்கும்-சூரியனுடைய தேர் மேற்செல்லாது தடைபெற்று நிற்கும். மறுகில்-வீதியில். விடைக்கொடிமுன்போய்-குற்றால நாதருடைய இடபக்கொடி அம்மறுகில் உள்ள கொடிகளுக்கு முன்சென்று. கொடைப்பெருமை-தமது அருட்கொடையினால் பெருமை வாய்ந்த.

*130.* தம்பிரான் - சிவபெருமானுடைய. வெள்ளிமலைதாள் படைத்ததென்ன-வெள்ளிமலையான கயிலைமலை பாதங்களைப்பெற்று நடந்து வந்தாற்போல. விடைநம்பிரான் - விருஷபதேவர்; விருஷப தேவருக்குத் தாள்படைத்த வெள்ளிமலை இல்பொருளுவமை. அம்புயத்து-தாமரைமலரிற் பிறந்த.

*131.* மைந்தன்-பிரமதேவர். புள்-வாகனமாகிய அன்னபபறவை. தந்தை-அப்பிரமன் தந்தையாகிய திருமால். புள்அரசு-பறவைகட்கரசான கருடன். ஐந்தருவில் - பஞ்சதருக்களின் நிழலில் வாழும்; ஐந்துதருக்கள்; சந்தானம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம், அரிசந்தனம் என்பன.

*132.* அவ்வரசு-அந்த அரசனை இந்திரன். நான்கு கோட்டு அத்தி-நான்கு தந்தங்களையுடைய அயிராவதமென்னும் யானை. மழுச் செவ்வரசர் - மழுவேந்திய உருத்திரர் பதினொருவர். சே ஏற இடபங்களில் ஏற. வெவ்வுதயர்-வெம்மையுடைய சூரியர்கள்.

---

(பி - ம்.) *130.* தான்படைத்த. *132* பன்னிரண்டு.

133\. பன்னிருவர் தேரேறப் பைம்பொன் விமானத்து
முன்னிருவர் நாலிருவர் மொய்த்தேற —வன்னி

134\. தகரேறச் சண்டன் சமைந்துகடா வேற
மகரமிசை யேற் வருணன்—பகரும்

135\. நிருதிநர வாகம் நிலவப் பவனன்
பொருகலையிற் புட்பகத்திற் பொற்கோன்— திருமதியோர்

136 தண்டரளத் தேரிற் றவமுனிவ ரோரெழுவர்
வண்டரளப் புட்பகவி மானத்துச்—சண்ட

137\. வயிரவர்சு வானத்து வாம்பரிமா சாத்தா
பெயருமத வேழப் பிடரில்—உயர்மதப்

---

133\. பன்னிருவர்-பன்னிருவர்களும், தேர் ஏற-தத்தம் தேர் மீது ஏற. பைம்பொன் விமானத்து - பசியபொன் விமானத்திலே. இருவர்-அச்விநி தேவர்களாகிய இருவரும்; நாலிருவர்-அஷ்டவசுக்கள். மொய்த்தேற-நெருங்கி ஏற. வன்னி-அக்னிதேவன்.

134\. தகர் ஏற-தனது வாகனமாகிய ஆட்டுக்கடா மீது ஏற. சண்டன்-யமன். சமைந்து-ஆயத்தமாக; பொருந்தி என்னலும் ஆம். கடா ஏற-தனது எருமைக்கடாவின் மீது ஏற. வருணன் மகரமிசை ஏற-வருணன் தன்வாகனமாகிய சுறுமீன்மீது ஏற.

135\. நிருதி - தென்மேற்குத் திக்குக் காவலனாகிய நிருதி என்பவன். நரவாகம் நிலவ - தனது நரன் என்னும் யக்ஷனாகிய வாகனத்தின் மீது விளங்க. பவனன் - வாயுதேவன். கலை - கலைமான். பொற்கோன் - செல்வத்திற்கு இறைவனாகிய குபேரன். புட்பகத்தில் - தனது புஷ்பகம் என்னும தெய்வ விமானத்தில். திருமதி - அழகிய சந்திரன.

136\. தண்தரளத் தேரில்-குளிர்ச்சியுள்ள தனது முத்து விமானத்தில். முனிவர் ஓரெழுவர் - ஸப்த ரிஷிகள்: அத்திரி, பிருகு, குத்ஸர், வஸிஷ்டர், கவுதமர், காச்யபர், ஆங்கிரஸ் என்பர். வண்தரள புட்பக விமானத்து - வளம் பொருந்திய முத்துக்களால் ஆன புட்பக விமானத்தில். சண்ட - வலிமை மிக்க. வயிரவர் - வயிரவமூர்த்தி.

137\. சுவானத்து வாம்பரி-தன் நாயாகிய குதிரையின்மீதும். மாசாத்தா-மஹாசாஸ்தா என்னும் ஐயனார். பெயரும் மத வேழப் பிடரி-போகும் மதயானையின் பின்கழுத்தில். உயர்மத-செருக்குமிக்க.

138. போரேறு காமன் புரவிகிளி சேர்த்தொருகால்
தேரேறி வில்லெடுத்துச் சேவிப்பப்—பாரேறு

139. சித்தர் மகாமுனிவர் தேவர் கணநாதர்
வித்தகர் கந்திருவர் வேதாளர்—பத்தியாழ்

140. கின்னரர் கிம்புருடர் கிங்கிலர் மாகருடர்
பன்னக ராதிப் பதினெண்மர்—துன்னி

141. வரைப்பொங்கு மாகடலை வந்துவளைந் தேழு
திரைப்பொங்கு மாகடலார்த் தென்ன—இரைப்பமணி

142. மார்பழகு காணுதொறும் வல்லியிம யாசலப்பெண்
போர்பழகு கொங்கைமலை பூரிப்பப்—பேரழகை

---

*138.* போர் ஏறு காமன் - மதப்போரிற்சிறந்த மன்மதன். புரவி கிளி சேர்த்து - தனது குதிரையாகிய கிளியைப் பூட்டி. ஒருகால் தேர் ஏறி - ஒப்பற்ற தென்றல் காற்றாகிய தேர்மீது ஏறி. வில் எடுத்து சேவிப்ப-தன் கரும்புவில்லெடுத்துப் பணிபுரிய. பார் ஏறு - உலகிற் சிறப்படைந்த.

*139.* வித்தகர் - வித்தியாதரர்.

*140.* கிங்கிலர்-கிங்கரர் என்னும் தேவ ஏவலாளர். கருடர் இவர் தேவகணங்களுள் ஒருவர். பன்னகர்-நாகர். பதினெண்மர்-பதினெட்டு வகைப்பட்ட தேவகணத்தவர்; 501, 505. துன்னி-நெருங்கி.

*141.* வரைப் பொங்குமா கடலை-குற்றாலமலையில் உள்ள பொங்குமாகடல் என்னும் நீர்த்தடத்தை. திரைப்பொங்கு ஏழுகடல் ஆர்த்தென்ன-அலைகளோடு பொங்கி மேலெழும் ஏழுகடல்களும் கோஷிப்பது போன்று. இரைப்ப-ஒலிசெய்ய. மணி-அழகிய; மாணிக்கமணி போன்ற என்றலும் ஒன்றும்.

*142.* மார்பு அழகு-குற்றாலநாதருடைய திருமார்பின் அழகை. வல்லி-கொடிபோன்ற. இமயாசலப்பெண்-இமயகிரி யரசன்பெண்ணை குழல்வாய்மொழி அம்மையின். போர்பழகு-பொருவதிற் பழகிய. கொங்கைமலை-முலைகளாகிய மலைகள். பூரிப்ப - உணர்ச்சியால் பருத்து வளர்ந்தோங்க. பேர்அழகை-அக்குற்றாலநாதரது சிறந்த அழகை.

143. ஒண்கமலப் பாகீ ரதிமுகமோ ராயிரமும்
கண்களாய்க் கண்டு களிகூ ரத்—தண்கமலப்

144. பூமகளு மேழுகலைப் பூமகளு மைந்துகுலக்
காமகளு மெண்ணெண் கலைமகளும்—நாமத்

145. தருமகளிர் போற்றுஞ் சயமகளும் வீரத்
திருமகளு மாமியில்லாச் செல்வ—மருமகளைச்

146. சூழ்ந்து வலம்புரியைச் சூழ்கோடிச் சங்கம்போல்
வாழ்ந்து முறைமுறையே வாழ்த்தெடுப்பத்—தாழ்ந்துவட

---

143. பாகீரதி முகம் ஓர் ஆயிரமும்-கங்கை தன் ஓர்ஆயிரம் முகங்களிலும்; கங்கை, பகீரதன் கொண்டுவந்தமையால் பாகீரதி எனப் பெயர்பெற்றது. கமலக் கண்களாய்க் கண்டு - அங்குள்ள தாமரை மலர்களையே கண்களாகக்கண்டு. களிகூர-பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைய.

144. பூமகள் - இலக்குமி. ஏழுகலைப் பூமகள் - ஏழு வித்யாதத்துவம் என்னும் தெய்வமகளிர்; வித்யாதத்துவம் ஏழென்பது சைவ சமயக்கொள்கை; அவையாவன: காலம், நியதி, கலை, வித்தை, அராகம் புருஷம், மாயை என்பன. ஐந்துகுலக் காமகள் - தேவதருக்களாகிய தெய்வச்சோலை மகளிர் ஐவரும்; 144. எண்எண் கலைமகளும் அறுபத்துநான்கு கலைகளுக்குரிய கலைமகளும். நாம - புகழுடைய.

145. தருமகளிர் போற்றும் - மேற்கூறிய ஐந்து தருக்களாகிய தெய்வ மகளிர் துதிக்கும். சயமகள் - ஜயலக்ஷ்மி. வீரத் திருமகள்-வீரலக்ஷ்மி. மாமியில்லாச் செல்வ மருமகளை - குழல்வாய் மொழியம்மையென்னும் அம்பிகையை; சிவபிரானுக்குத் தாயில்லாமையால் அவர் தேவியாகிய அம்பிகையை மாமியில்லாச் செல்வ மருமகள் என்ருர்.

146. வலம்புரி-வலம்புரிச் சங்கம்; பலசங்குகள் சூழ வலம்புரிச் சங்கம் விளங்கும்; 263. கோடி என்பது பல என்னும் பொருளில் மிகுதிப் பொருளைக் குறிப்பது. வாழ்ந்து-சிறப்பெய்தியிருந்து. முறைமுறையே-அவரவர்க்கு உரிய தகுதிப்படியே. வாழ்த்து எடுப்ப-மங்கல வாழ்த்துத் துதிசெய்ய.

147. கங்கைமுத லோரெழுவர் காளிமுத லோரெழுவர்
செங்கை குவித்துமுன்னே சேவிப்பப்—பொங்குதலில்

வாத்திய வகைகளின் முழக்கம்

148. பம்பை தடாரி பதலை துடிதிமிலை
வெம்படகந் தக்கை வியன்முழவம்—பம்பு

149. கரடிகை சல்லரி கல்லவடம் மொந்தை
முருடு திடிமன் முழங்கத்—திரள்வாணன்

150. ஓரா யிரங்கை முரசொலிப்பப் பானுகம்பன்
ஈரா யிரங்கையிற்சங் கேத்திசைப்ப —நேரே

151. செவியி லிருவரிசைத் தேன்பொழிய யாழோர்
அவிசொரியும் பண்ணமுத மாட்டத்—தவிராக்

---

*147.* கங்கை முதல் ஓர் எழுவர் கங்கை முதலான ஒப்பற்ற ஏழு தீர்த்தகன்னியர்கள்; அவர்கள : கங்கை, யமுனை, ஸரஸ்வதி, சிந்து, நருமதை, கோதாவரி, காவேரி ஆகிய நதிகள; 264, காளிமுதல் ஓர் எழுவர். காளி, பிராமி, மகேசுவரி, கௌமாரி, நாராயணி, வாராகி, இந்திராணி எனனும் ஏழுமாதர்கள்.

*148-149.* பம்பைமுதல், திடிமன்வரை கூறப்பெற்றவை தோற் கருவி வாத்தியங்கள். திடிமன்: இது திண்டிமம் என்பதின் இடைக் குறை ; 480. வாணன்-வாணசுரன். திரள் - தொகுதியான.

*150.* ஓராயிரங்கை-தனது ஓராயிரம் கைகளாலும். முரசுஒலிப்ப- முரசு என்னும் வாத்தியத்தை முழக்கஞ்செய்ய. பானுகம்பன்-இவன் சிவகணத்தில் ஒருவன். ஈராயிரங்கை-தனது இரண்டாயிரங் கைகளாலும். சங்கு ஏத்து இசைப்ப - சங்கை எடுத்துத் துதித்துக் கோஷம் செய்ய.

*151.* செவியில்-குற்றாலநாதர் இருசெவிகளிலும். இருவர்-கம் பளர், அசுவதரர் எனனும் இரு நாக அரசர்கள்; இவர்களை இருமுனி வர்கள் என்றுங் கூறுவர். இசைத்தேன்-இசையாகிய தேன்; ‘ திரு வாசக மென்னும் தேன் ’ எனறதுபோல. யாழோர்-யாழில் வல்ல கந் திருவர். அவிசொரியும் பண்அமுதம் ஆட்ட-யாகத்தில் சொரியும் அவி அமுதம்போல இசையாகிய அமுதைப்பருகச் செய்ய, தவிரா- நீங்காத.

விருது கூறல்

152. கலைவளைத்த திங்களங் கண்ணியான் வந்தான்
மலைவளைத்த வில்லாளி வந்தான்—கொலைவளைத்த

153. வேடக் கொடியனுக்கும் வேற்றூன் கவர்நரிக்குங்
கூடக் கதிகொடுத்த கோன்வந்தான்—மாடத்து

154. மேதகு மாமறையோன் வேசையாற் கள்ளுண்ட
பாதகந் தீர்த்த பரன்வந்தான்—நீதமில்லா

155. ஆபாத வேதியனுக் கன்றுமந்த மாருதத்தால்
மாபாத கந்தீர்த்த மால்வந்தான்—பாபம்

156. பழிவிலங்கு செய்யாமை பார்த்து நமன்தூதர்
வழிவிலங்கு நாருடையான் வந்தான்—மொழிகடந்தான்

157. நாதத் திரிகூட நாயகன்வந் தானென்று
சீதத் திருச்சின்னஞ் சேவிப்பப்—பேதையரும்

---

152. கலைவளைத்த திங்கள் அம் கண்ணியான்-கலைகள்வளைத்த மூன்றும் நாளின் இளம்பிறையை அழகிய தலையிற்சூடும் மாலையாகக் கொண்ட குற்றாலநாதர். மலை - மேருமலையை. 'கொலைவளைத்த - கொலைத்தொழில்களைச் சூழ்ந்துசெய்த.

153. வேற்று ஊன்-தனதல்லாத பிற புலால்களை. வேடக்கொடியனுக்கும் நரிக்கும் அருள்புரிந்தமை ; திருக்குற்றாலத் தலபுராணம் 17வது சருக்கத்தால் விளங்கும்.

154. மேதகு-மேன்மைபொருந்திய. மறையோன் பாதகந்தீர்த்தது : திருக்குற்றாலத் தலபுராணம் தருமசாமிச் சருக்கம் காண்க.

155. ஆபாத - கொடிய. மால் - பெரியோன் ; 'மாமஞ்ஞையூர்ந்து நின்ற மால்' (சீவக. 286.) இச்சரித விரிவைத், திருக்குற்றாலத் தலபுராணம் மந்தமாருதச் சருக்கத்திற் காண்க.

156. நார் - அன்பு. இக்கண்ணியின் வரலாறு திருக்குற்றாலத் தலபுராணம் புட்பகந்தச் சருக்கத்திற் காண்க.

157. மொழிகடந்தான் - வாக்குக்கு அப்பாற்பட்டவன்; மொழி - சொல்லும் ஆகும். நாத - ஒலி வடிவமான. திருச்சின்னம் - விருது கூறும் வாத்தியம். சேவிப்ப - முழங்க.

**வந்த பலவகை மகளிர்கூட்டம்**

158. நாகப் பெதும்பையரும் ஞாலத்து மங்கையரும்
மாகத்தி லுள்ள மடந்தையரும்—போகத்தர்

159. பூமி யரிவையரும் பூநீர்த் தெரிவையரும்
காமருவு பேரிளம்பெண் கன்னியரும்—நாமத்

160. திருமகளார் பண்ணைத் திரளும் வரையில்
அரமகளி ராயமு மாக - நிரைநிரையாய்

161. மாடமுஞ் சூளிகையு மாளிகையுஞ் செய்குன்றும்
கூடமு மண்டபமுங் கோபுரமும்—நாடகச்

162. சாலையுஞ் சித்திரப்பொற் சாளரமுஞ் சிங்காரச்
சோலையுங் கார்மறுகுஞ் சூழ்மறுகும்—வாலமட

---

158. நாகப்பெதும்பையர் - நாகலோகமகளிர். ஞாலத்துமங்கையர் - புவிமகளிர். மாகம் - விண். போகத்தர் பூமி - பாதாளலோகம். பூநீர்த்தெரிவையர் - நீரர மகளிர். காமருவு - சோலையில் வாழும். கன்னியர் - கானகமகளிர்.

160-161. நாமத் திருமகளார் - சிறப்புடைய அழகிய மகளிர். பண்ணைத்திரள - தொகுதிக்கூட்டம். வரையில் அரமகளிர் ஆயம் - அளவு இல்லாத தெய்வ மகளிர் கூட்டம்; வரையில் - மலையில் என்னலும் ஆம். நிரைநிரையாய் - வரிசை வரிசையாக. சூளிகை-மேன்மாடத்து முன் முற்றம். மாளிகை-மேன்மாடமுள்ள பெருவீடு. செய்குன்று - செயற்கைக்குன்று. மாடம், மாளிகை, மண்டபம் இவற்றின் உயரம் நோக்கி இவற்றில் இருந்த மகளிர் தெய்வமகளிர் போலவும், செய்குன்று, கோபுரம் இவற்றில் இருந்த மகளிர் வரையர மகளிர் போலவும் விளங்கினர் என்க.

162. சாளரம் - பலகணி. கார் மறுகும் - மேகங்கள் கடந்து செல்ல முடியாது வருந்தும். சூழ் மறுகும் - நாற்புறமுஞ் சூழ்ந்த வீதிகளும். வாலமட - மிக இளமையான. குறிப்பு:—157 முதல் 159 வரையுள்ள கண்ணிகளில் மகளிரின் ஏழு பருவப்பெயர்களும் வந்துள்ளமை காண்க.

163. மான்போற் குயில்போல் மயில்போல் மடப்பிடிபோல்
தேன்போல் மதுரச் சிறுகிளிபோல்—மீன்போல்

164. விழியார் நெருங்கிவட வெற்புமத வேளும்
அழியாத தாருவனத் தாரும்—பழையபகை

165. வெல்லவென்று சொல்லி விடுபடையுஞ் சின்னமும்போல்
வல்லசங்க வீதியெல்லாம் வந்தீண்டி—தொல்பரனை

---

*163.* மான், குயில், மயில், பிடி, தேன், கிளி, இவை மகளிர் உரு, பேச்சு முதலியவைக்கு உவமை.

*164.* வடவெற்பு - மேருமலை. மதவேள் - மன்மதன். அழியாத - இறவாத. தாருவனத்தார் - தாருகவனத்து இருடிகள். பழையபகை :—மேருவை, முன் வில்லாக வளைத்தபகை ; மதவேளை, முன் தன் கண்ணழலால் சுட்டு எரித்தபகை ; தாருவனத்தாரை அவர் பன்னியர் தம்கற்புநிலை யழியச் செய்த பகை; (*102*). வெற்பு:—தம்மிடம் உள்ள மான், குயில், மயில் பிடி, வண்டு, கிளி இவற்றை அனுப்பியது போலும். மதவேள்:—காளமாகிய குயில், நாணாகிய வண்டு, குதிரையாகிய கிளி இவற்றை அனுப்பியது போலும். தாருவனத்தார் :—அவ்வனத்திலுள்ள, மான், குயில், மயில், பிடி, வண்டு, கிளி இவற்றையனுப்பியதுபோலும். மகளிர் கூட்டம் படையும் சின்னமும்கொண்டு வந்து ஈண்டி என்க.

*165.* படை - போர்ப்படை ; ஆயுதமும் ஆம். சின்னம் - காளம் முதலிய வாத்தியம். சங்கவீதி ; *14.* ஈண்டி - நெருங்கி வந்து. தொல்பரனை - பழம் பொருளாகிய குற்றால நாதரை. குறிப்பு : *163-165* வரையுள்ள மூன்று கண்ணிகள். "மானினம் வருவ போன்றும் மயிலினம் திரிவ போன்றும், மீனினம் மிளிர்வ போன்றும் மின்னினம் மிடைவ போன்றும், தேனினஞ் சிலம்பி யார்ப்பச் சிலம்பினம் புலம்ப வெங்கும், பூநனை கூந்தன் மாதர் பொம்மெனப் புகுந்து மொய்த்தார்" (கம்ப. பால. உலாவியற். *1.*) செய்யுளை நினைப்பூட்டுகின்றன.

### மகளிர் பாராட்டு

166. முன்னீ ரிறைத்து முழுக்காட்டும் வாரணம்போல்
பன்னீ ரிறைப்பப் பணைமுலைகள்—நன்னீர்போல்

167. பூந்தளிருங் கொண்டீர் புனையீ ரெனப்புலம்பு
மாந்தளிர்போற் செங்கை வளைபுலம்ப—ஏந்துபுயக்

168. காவியுஞ் சண்பகமும் கண்டுவண்டு வீழ்வனவும்
போவனவும் போல்விழிகள் போய்மீளத்—தாவியளி

169. செல்லுவது மீள்வதுந் தேவனுடன் பூவையர்மால்
சொல்வதுவு மீள்வதுமாந் தூதேய்ப்ப—அல்குலெனும்

---

166. முன் நீர் இறைத்து முழுக்காட்டும் வாரணம்போல் - முன்னே தன் துதிக்கையால் நீரை மொண்டுவந்து ஊற்றி அபிடேகம் செய்து பூசித்த யானைபோல்; யானை பூசித்தது; திருக்குற்றாலத் தலபுராணம் யானை பூசித்த சருக்கம். பணைமுலைகள் பன்னீர் இறைப்ப-மகளிரின் பருத்த முலைகள் பன்னீரை இறைக்க. பணை முலைகளுக்கு வாரணம்; வாரணம - யானை; "யானை முன்வரும் அன்புளார் முலை யானை முன் வருமன்பிலார்" (திருவரங்கக்கலம்பகம். 27.) நன்னீர் போல் - நல்ல கங்கைப் புனலைப்போல.

167. பூம் தளிரும் - அழகிய வில்வம், அறுகு ஆகிய தளிர்களை யும். மாந்தளிர்போல் - மாந்தளிர்போன்ற. செங்கை - செம்மை யாகிய என் கையாற்றழுவுதலை. புனையீர் - அணிவீரல்லீர். என, வளை புலம்ப - கையில் அணிந்த வளைகள் புலம்புவனபோல் ஒலிக்க. ஏந்துபுய - தாங்கிய புயத்தில் உள்ள.

168. காவி - நீலோற்பல மலர். காவியைக்கண்டு வண்டு வந்து மொய்ப்பதும், சண்பகம் வண்டு மூசா மலர் ஆதலின் அதனை விட்டு அது நீங்குவதும்போல மகளிர விழிகள் வீழ்வனவும் போவனவும் ஆக.

169. அளி - வண்டு. தேவனுடன் - குற்றாலநாதருடன். பூவையர் - மகளிர். மால் - காம மயக்கம். சொல்வதும், மீள்வதுமான. தூது ஏய்ப்ப - மகளிர் விடு வண்டுத் தூதை ஒப்பாக.

170. விந்தை கடற்சுழியால் வெல்லவொளி யிட்டதென
உந்திச் சுழிகலையி னூடொளிப்பப்—பந்திப்

171. புயங்களொரு நான்கும் புதுமலர்க்கண் மூன்றும்
வயங்குதிருக் கைம்மான் மழுவும்—தயங்கு

172. புரிநூன் மணிமாலைப் பொங்கருவி தூங்கும்
வரைபோ லிலங்குதட மார்பும்—திரைமேய்ந்த

173. கார்பூத்த கந்தரமுங் கங்கா நதிமுடித்த
தார்பூத்த திங்கட் சடாடவியும்—நீர்பூத்த

174 பாதாம் புயமும் பரிபுரமுஞ் சோதிமுகச்
சீதாம் புயமுந் திருக்குழையும்—நாதாந்த

175. நாதனை யாரூர்க்கு நாயகனைத் தில்லையில்வாழ்
போதனை வேணு புரத்தானை—வேத

---

170. விந்தை - அதிசயிக்கத்தக்க. வெல்ல - வெல்லுவதற்கு எண்ணி; அல்குல் கடற்சுழிக்கு உவமை. ஒளியிட்டது - ஒளிந்து கொண்டது. உந்திச்சுழி - கொப்பூழ். கலை - ஆடை. பந்தி - வரிசையாக வுள்ள.

171. புதுமலர்க்கண் - அப்பொழுது மலர்ந்த மலர்போன்ற கண்கள் வயங்கு - விளங்குகின்ற. தயங்கு - அசைகின்ற.

172. புரிநூல் - முப்புரிநூலாகிய பூணூல். மணி மாலை - இரத்தினமாலை; முத்துமாலையும் ஆம்; மாலை - மாலையால். புரிநூலும் மணிமாலையும் அருவிகளுக்கு. தூங்கும் - அசைந்து ஓடிவரும்; தூங்குதல் - அசைதல்; "தூங்குங் களிறே துயருறு" (நீதிநெறிவிளக்கம். 38). திரை மேய்ந்த - அலைகள் மேற்கிளம்பப்பெற்ற.

173. கார்பூத்த - விஷமாகிய கருமை படர்ந்த. கந்தரம் - கழுத்து. தார் - கொன்றைமாலை. திங்கள் சடாடவி - சந்திரன் விளங்கும் சடையாகிய காடு. நீர்பூத்த - ஈரம் அல்லது குளிர்ச்சி மிக்க; நீர்பூத்த அம்புயம் எனக் கூட்டுக.

174. பாதாம்புயம் - பாதத்தாமரை. பரிபுரம் - தண்டை. சீதாம்புயம் - குளிர்ந்த தாமரை. நாதாந்த - நாதவெளியின் முடிவான.

175. ஆரூர் - திருவாரூர். போதன் - அறிவுமயமானவன். வேணுபுரம் - சீகாழி.

176. வனத்தானை யண்ணா மலையானை யையா
னனத்தானைத் தென்மதுரை யானைக்—கனத்த

177. திரிகூடத் தானைத் திசைகூட மாவின்
உரிகூடத் தானை யுரியானை—அரியானைக்

178. கண்டு பரவிக் கதிருதயங் கண்டமலர்ப்
புண்டரிகக் கான்போற் பொலிவெய்தித்—தண்டரளத்

179. தொங்கலால் வெண்குடையாற் சோதிப்பொற் கங்கையொடு
திங்கள் முடித்ததிருத் தேர்பாரீர்—பொங்குசுடர்

180. ஆழிசங்கக் கோவி லகிலமெல்லா முண்டுமிழும்
வாழிசங்கக் கோவில் வளம்பாரீர்—ஊழிதங்கு

---

176. வேதவனம் - திருமறைக்காடு என்னும் வேதாரணியம். அண்ணாமலை - திருவண்ணாமலை. ஐ ஆனனத்தான் - ஐந்து திரு முகங்களையுடைய சிவபெருமான்; ஐந்து முகங்கள்; ஈசானம், தற் புருஷம், அகோரம், வாமம், சத்தியோசாதம் என்பன.

177. திரிகூடம் - குற்றாலமலை. திசை கூட - திக்கு வரைக்கும் சென்று உலாவிவந்த. அ மாவின்-அந்தத் தாருகாவனத்து இருடிகள் ஏவி விட்ட அந்த யானையின். உரி கூட - தோலோடு கூட. தானை - பலவிதமான பட்டு முதலிய ஆடைகளையும். உரியானை - உடைய வனை. அரியானை - காண்பதற்கு அரியவனை.

178. பரவி - துதிசெய்து. கதிர் உதயம் கண்ட மலர்ப் புண்ட ரிகக் கான்போல் - சூரிய உதயங்கண்ட தாமரைமலர்க் காடு போல. பொலிவு எய்தி - அழகை அடைந்து. தண்தரள - குளிர்ந்த முத்துக்களால் ஆன,

179, தொங்கல் - மாலை; தொங்கல் கங்கைக்கும், வெண்குடை திங்களுக்கும் உவமை; தேர், தரள மாலையும் வெண்குடையும் அணிந்துள்ளது என்க.

180. அகிலமெல்லாம் உண்டு உமிழும் ஆழி சங்கக் கோ இல்- உலகம் எல்லாவற்றையும் முன் உண்டு உமிழ்ந்த சக்கரமும் சங்கமும் உடைய இறைவனாகிய திருமாலின் இருப்பிடம். வாழி - என்றும் நிலையான வாழ்வைப்பெற்ற; அதாவது என்றும் அழியாத. சங்கக்

---

(பி - ம்.) 180, ஆழிசங்கக் கோயில்; வாழிசங்கக்கோயில்.

181. தீதிலயன் போலத் திசைமுகத்தோ டாரணங்கள்
வீதி சிறந்த விதம்பாரீர்—ஆதிபிரான்

182. வேதத் திருக்கோலஞ் செய்யும் விரைமலர்த்தாட்
போதத் திருக்கோலம் போற்றுவீர்—மாதரீர்

183. வீதிவள மோபணில வீதியுடை யான்றிருத்தேர்ச்
சோதிவள மோபெரிது சொல்லுமென்பார்—ஓதிரண்டு

184. புண்ணியனைக் காட்டும் பொருளன்றோ வாதலினல்
கண்ணிரண்டை யார்பிரிப்பார் காணென்பார்-அண்ணலுக்குத்

---

கோவில் வளம்பாரீர் - சங்கக்கோவில் என்னும் சிவாலயமாக மாறிய சிறப்பைப் பாரீர். ஊழிதங்கு - பல ஊழிக்காலத்தும் அழியாது நிலை பெற்றிருக்கும்.

181. தீது இல் அயன்போல - கேடற்ற பிரமனைப்போல. திசைமுகத்தோடு - நான்கு திசைமுகமாகப் பரவியதோடு. ஆரணங்கள் சிறந்த வீதி வளம் - வேத ஒலி சிறந்து விளங்கும் வீதிகளின் சிறப்பை. பிரமன் திசைமுகமும் வேத ஒலியும் உடையவன்; அதுபோல, வீதிகள் நான்கும் திசைமுகமாகப் பரவி வேத ஒலியால் சிறந்து விளங்குவன; ஆதலின் பிரமனுக்கு ஒப்பாகச் சிலேடைப் பொருளில் வந்தது.

182. வேதத்து இருக்கு ஓலம் செய்யும் - வேதத்தின் இருக்குக்கள் முறையிட்டு முழங்கும்; இருக்கு - மந்திரங்கள் அடங்கிய பாடல். விரைமலர்த்தாள் - தெய்வமணங் கமழும் தாமரைமலர் போன்ற பாதங்களின். போதத் திருக்கோலம் - ஞானத்தை அளிக்கும் அழகின் சிறப்பை.

183. பணிலவீதி - சங்கவீதி. ஓது இரண்டு - இகம் பரம் என்று இரண்டாகச் சொல்லும்.

184 புண்ணியனை - நல்வினைகளின் பயனாக உள்ளவனை. காட்டும் - நமக்குத் தெரிவிக்கும். பொருள் அன்றோ - பொருளாக உள்ளன அல்லவா நம் கண்கள் என்பன. கண்ணிரண்டை - கண்கள் இரண்டின் பார்வையை. யார் பிரிப்பார் - யாவரே பிரித்து அவற்றைத் தனித்தனியே நோக்கச் செய்வார்; ஒருவரும் இல்லை என்றபடி;

---

(பி - ம்.) 184 காண்டும் பொருளன்றோ.

185. தேனமுத வெள்ளத் திரட்டோ தெவிட்டாத
வானமுதந் தானோ வடிவென்பார்—ஆனதுவாம்

186. காமப் பசிக்குநமைக் கைதொடவொட் டாமலென்னோ
வாமத் தொருத்திகுறி வைத்ததென்பார்—காமமெல்லாம்

187. ஈட்டுமிடக் கண்ணோ விடக்கணுக்கே யாதிக்கம்
கூட்டுவலக் கண்ணோ கொடிதென்பார்—மீட்டுரைக்கின்

188. மற்றைக்கண் மேற்குறையோ மாரனுக்கா திக்கமிட்ட
நெற்றிக்கண் மேலென் னிபமென்பார்—முற்றிழைசேர்

---

"நோக்குமாற், கண்ணிரண்டு மொன்றையே காண்" (நன்னெறி 6). காண் என்பார் - இதனை நீ தெரிந்துகொள் என்று கூறுவார். இதனால், இரண்டு கண்களும் ஒரே பொருளை நோக்குமாபோல இகபரங்களுக்குரிய புண்ணியங்கள் இரண்டும் சிவபிரானையே நோக்கி நிற்கும் என்பது பெறப்பெற்றது.

*185.* தேனமுத வெள்ளத்திரட்டும், தெவிட்டாத வான் அமுதமும் தானோ அண்ணலுக்கு வடிவு என்பார். தெவுட்டுதல் - அதிகம் உட்கொண்டமையால் மேலும் வேண்டாது வெறுத்தல். வான் அமுதம் - தேவாமிர்தம்.

*186.* கைதொட ஒட்டாமல் - கையாற்கூடத் தொட்டு மகிழ முடியாதபடி. என்னோ - ஏனோ. வாமத்து ஒருத்தி - தமது இடப் பாகத்தில் அமர்ந்த குழல் வாய் மொழியென்னும் உமாதேவியாகிய ஒருத்தியை. குறி - நம்மைத்தடை செய்யும் நோக்கமாக வைத்தகுறி.

*187-188.* காமம் எல்லாம் ஈட்டும் - விருப்பத்தை எல்லாம் தன்னிடத்தே சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும். இடக்கண்ணோ- பார்வதிக்குரிய இடக்கண்ணோ? இடக்கணுக்கே - அந்த இடக் கண்ணுக்கே. ஆதிக்கம் கூட்டும் - அதிகாரத்தைச் சேர்த்து வைக்கும். வலக்கண்ணோ - சிவபிரானுக்குரிய வலக்கண்ணோ? கொடிது- இவ்விரண்டில் எது கொடிது? இரண்டும் கொடியன. மீட்டுரைக்கின்- மீண்டும் உரைப்போமானால். மற்றைக்கண் மேல் குறையோ - மூன்றாவது கண்ணாகிய நெற்றிக்கண் மேற் (கொடுமைக்கு) குறை யுளதோ? மாரனுக்கு ஆதிக்கம் இட்ட - சுட்டெரித்த மன்மதனை மீண்டும் பிழைக்க வைத்ததன்றி, அதிகாரமளித்த. நெற்றிக்கண் மேல் என் இபம் - நெற்றிக்கண்மீது என்ன காரணத்தைச் சொல்வது; இபம் - காரணம்.

---

(பி - ம்.) *188.* மாமனுக்காதிக்க.

189. ஆணிக் கனகவல்லி யாதியகி லாண்டவல்லி
மாணிக்க வல்லிபுணர் மாமலையே—பூணித்துப்

190. புத்தித் திருக்கொழித்துப் போதானந் தக்கடலில்
தித்தித் திருக்குமின்பத் தெள்ளமுதே—சத்திக்காய்

191. தட்டிலிருந் தாடித் தருதாணு வாலயப்பூந்
தொட்டிலசைந் தாடுதனித் தோன்றலே—கட்டழகு

,192. வாமவல்லி யானமலை மங்கையொடு கங்கையெனும்
காமவல்லி நின்றுபடர் கற்பகமே—பூமகரம்

193. சங்கந் திரிவேணி சங்கமத்துத் தண்பிறையாம்
வங்கந் தவழுமின்ப மாக்கடலே—இங்குக்

---

*189.* ஆணிக்கனகம் -- மாற்று உயர்ந்தபொன். மாமலை - பெரிய மேருமலை போன்ற சிவபெருமான். பூணித்து - சூளுரை செய்து; "பஃறலைப் பூழியிற் புரட்டலென் பூணிபபாம்" (கம்ப. சுந்தர. பிணிவீட்டுப். 63).

*190.* திருக்கு - முரண்பாடு ; கோணலும் ஆம். போதானந்தக் கடல் - ஞானமான இன்பக்கடல். தெள்ளமுது - தெளிந்த அமுதம். சத்திக்காய் - பராசக்தியாகிய தேவிக்காக.

*191.* தட்டில் இருந்து ஆடி - தேர்த்தட்டின் மீதிலிருந்து ஆடி; திரிபுர சங்கார காலத்தில் அம்பிகை காணச் சிவபெருமான் ஆடியது ; இதற்குக் கொடுகொட்டி என்று பெயர் ; சிலப். 6 : 40-43. ஆலயப் பூந்தொட்டில்-ஆலயத்தில் உள்ள அழகிய மஞ்சத்தில் ; குறிப்பு:—ஏடுகளில் மாலயப்பூந் தொட்டிலில்' என்று காணப்பெறுகின்றது. கட்டழகு - சிறந்த உடலமைப்பின் அழகு.

*192.* வாமவல்லி - சிவபெருமான் இடப் பாகத்தில் உள்ள உமாதேவி. காமவல்லி - கற்பகத்தருவின் மீது படரும் ஒரு தெய்வக் கொடி. கற்பகமே - கற்பகதருப் போன்றவனே ; காமவல்லி படரும் கற்பகம் ; 99.

*193.* பூமகரம் - பூக்களின் மகரந்தங்களும் ; மகரம் - மகரந்தம் என்பதன் குறை. சங்கம் - சங்குகளும் (விளங்கும்). திரிவேணி சங்கமத்து - திரிவேணி சங்கமம் என்னும் தீர்த்தத்தில் ; இது, பிரயாகையில் உள்ள கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள் கூடுமிடம்.

---

(பி - ம்.) *191.* மாலையப்பூந். *193.* இங்கிது தான்.

மகளிர் முறையீடு

194. கலைசேர வாகமத்தைக் கண்டீரெம் பாலும்
கலைசேர வாகமத்தைக் காணீர்—கலைசோர

195. மானு மதியும் வளர்த்தீரெங் கண்முகமாம்
மானு மதியும் வளர்க்கிலீர்—கானமெங்கும்

196. காக்கைசே ராமற் கடிந்தீர் கருங்குயிலும்
காக்கைசே ராமற் கடிந்திடீர்—காக்கைநெடு

---

தண்பிறையாம் - குளிர்ந்த பிறைச் சந்திரனாகிய. வங்கம் - கப்பல். தவழும் இன்ப மாக்கடலே - செல்லும் இன்பக்கடல் போன்றவனே! இதில், சிவபிரான் சடைக்குத் திரிவேணி சங்கமமும், சடையிலுள்ள பிறைக்குத் திரிவேணி சங்கமத்தில் சஞ்சரிக்கும் வங்கமும், சிவபிரா னுக்குக் கடலும் உவமைகள்; "பொங்கு திரிவேணி சங்கமெனக் கொழிக்கும்" (திருக்குற்றாலக் குறவஞ்சி. 48.)

*194.* கலைசேர - எல்லாக் கலைகளும் ஒன்று சேரும்படியாக, ஆகமத்தை - பிரமாண ஆகமநூல்களை. கண்டீர் - உண்டாக்கினீர். எம்பால் உம் கலை சேர - எம்மிடம் உமது திருமேனி சேர; அல்லது, எம்பாலும் கலைசேர - எம்மிடத்தும் ஆடை கழலாமற் பொருந்த. ஆகமத்தை - உம் வருகையை. காணீர் - செய்யமாட்டீர்.

*195.* மற்ற மான்கள் சேர்வடையக் கையில் ஏந்திய மானையும், கலைகள் நிரம்பாது என்றும் இளம்பிறையாகவே இருக்கும் சந்திரனை யும் வளர்த்தீர். கலை என்ற சொல்லை மான், மதி இரண்டுக்குங் கூட்டிப்பொருள் கொள்ளப்பட்டது. எம் கண் முகமாம் - எங்கள் கண்ணும் முகமுமாகிய. மானும் மதியும் - மானையும் சந்திரனையும்; கண், மானுக்கும், முகம், மதிக்கும் உவமைகள். கானம் எங்கும் - இக்குற்றாலத்துக் காடுக ளெங்கும்.

*196.* காக்கை சேராமற் கடிந்தீர் - காகங்கள் சேராமல் துரத்தி விட்டீர்; குற்றாலக் கானில் காகங்கள் அணுகா; திருக்குற்றாலக் குறவஞ்சி. 66. கருங்குயிலும் காக்கை சேராமல் கடிந்திடீர்-கரிய குயிற் குஞ்சுகளை யும் காகம் சேராமல் துரத்த மாட்டீர்; கூவி விரகதாபம் விளைக்கும் குயில்களை இல்லாமற் செய்யமாட்டீர்; குயிலுக்குத் தன் முட்டைகளை அடைகாத்துக் குஞ்சுகளை வளர்க்கத் தெரியாது. காகங்களே குயில் முட்டைகளைத் தம் முட்டைகள் என்று எண்ணி அவற்றை அடை

---

(பி - ம்.) *194.* காணீர் கலைசேர.

197. மாலாய்ப் பிரமமாய் வைகினீர் யாங்களெல்லாம்
மாலாய்ப் பிரமமாய் வைகவோ—மேலாரின்

198. கொங்கை முகந்தருளிக் கொன்றையுகந் தீரெமது
கொங்கை முகந்தருளக் கூடாதோ—மங்கைக்காய்

199. அன்றிலங்கை புக்கீ ரவள்போலப் போம்வாரும்
என்றிலங்கை புக்கே மெளியேமோ—தென்றலேவிண்

200. பொங்கவிடித் தூணுறக்கம் போக்கினீர் குற்றமெம்போல்
கங்கணமுஞ் செய்ததுண்டாற் காட்டுவீர்—நங்கையராம்

---

காத்துக் குஞ்சு பொரிக்கச்செய்து வளர்க்கின்றன எனபது கவி மதம்; இதனால் வடமொழியில் குயிலுக்கு 'அந்நியபுஷ்டா' என்று ஒரு பெயரும் வழங்குவதுண்டு. காக்கை - காத்தலைச் செய்யும்.

197. நெடுமாலாய் - நெடிய திருமாலாகவும். பிரமமாய் - பிரமனாகவும்; பிரமம் - இங்கு, பிரமன். வைகினீர் - இங்கு நெடுங்காலம் தங்கியிருந்தீர். மாலாய் பிரமமாய் வைகவோ - மயக்கங்கொண்டவர்களாய், உலக இச்சையில் ஈடுபடாத ஜடம்போல இருக்கவோ. மேலாரின் - வானிலுள்ள தேவர்களின்.

198, கொங்கை - கற்பகம் முதலிய மலர்களின் நறுமணத்தை. முகந்து அருளி - ஏற்று எடுத்துக்கொண்டு. கொன்றை - கொன்றை மலரை. உகந்தீர் - விருப்பாக ஏற்றுக்கொண்டீர். எமது கொங்கை முகந்தருளக் கூடாதோ - எங்கள் தனங்களை அணைந்தருளக் கூடாதோ. மங்கைக்காய் - மந்தோதரி என்னும் ஒரு மங்கையின் பொருட்டு.

199. அன்று இலங்கை புக்கீர் - முன்னொருநாள் இலங்கை நகருக்குச் சென்றீர்; „திருக்குற்றாலக் குறவஞ்சி : 29; இவ்வரலாற்றை உத்தரகோச மங்கைப் புராணத்திலுங் காண்க. அவள் போல - அந்த மண்டோதரிபோல. போம்வாரும் என்றிலம் - அங்குப் போம், இங்கு வாரும் என்று உமக்குக் கட்டளை யிட்டோமில்லை. கைபுக்கேம - உம்மிடம் நாமாக வந்தடைந்தோம். எளியோமோ - அதனால் யாங்கள் உமக்கு எளியோராய் விட்டோமோ?

200. தென்றலை - தென்றற் காற்றை. விண் - ஆகாயத்தில். பொங்க விடுத்து - பொங்கி யெழுந்து வீசவிட்டு. எம்போல் - எங்களைப்போல. கங்கணமும் - அஃறிணைப் பொருளாகிய எங்கள் கைக்

---

(பி - ம்.) 199. தென்றலைவீண். 200. எம்பொற் கங்கணமும்.

201. பன்னகரார் வாடப் பகலிரவா மிந்நகரும்
நன்னகரோ குற்றால நாதரே—முன்னம்

202. விடவசனங் காட்டு மிடற்றீர்சந் தாபம்
விடவசனங் காட்டியெமை மேவீர்—கடவதெனச்

### தேர் செல்லுதல்

203. சேமத்தே ரல்குலார் சென்றுரைப்ப நம்பெருமான்
நாமத்தேர் வீதி நடாவுதலுங்—காமத்தேர்

204. தானுங் கடாவிநெடுஞ் சாரிகைபோய் வேளுலகம்
ஈனுங் கடவுளுட னேகினன்—தானுமொருப்

---

கங்கணங்களும்; கங்கணத்தின்பாற் பகைமை பாராட்டியது அவற்றைக் கழன்றோடச் செய்தது; அவரது அருளின்மையால் விரகத்தில் நிகழ்ந்ததாதலின்.

201. பன்னகரார்-பலநகரத்தினரும். பகல் இரவாம் இந்நகரும்-(சோலைகள் சூழ்ந்து சூரியவெப்பம் தோன்றாமல் அடர்ந்த நிழல் உடைமைபற்றி) பகற்போதும் இரவு போல விளங்கும் இந்நகரும். நன்னகரோ - நன்னகர் என்னும் பெயர் பெறத் தக்கதோ; இனி, காம உணர்ச்சியால் அம்மகளிர்க்குப் பகலும் புலராது இரவாகி வருத்தும் இந்நகர் என்னலும் ஆம். முன்னம்-எதிராக; இஃது இடமுன்.

202. விட அசனம் - விஷமாகிய உணவை. மிடற்றீர் - கழுத்தையுடையீர். சந்தாபம் விட - மனநோய் நீங்க. வசனம்காட்டி-பேசி. மேவீர் - எங்களை அடையமாட்டீர். கடவது என - இது நீவிர் செய்யத்தக்க காரியம் என்று.

203. சேம தேர் அல்குலார் - காவலோடு கூடியதும் தேர் போன்றதுமான அல்குலையுடைய மகளிர்; சேமம் - இன்பமும் ஆம்; சேமத்து ஏர் அல்குலார் என்று பிரித்துப்பொருள் கொள்ளலும் ஒன்றும். நாமத்தேர் - அச்சத்தைத்தரும் தேர், நாமம் - புகழும் அழகும் ஆம். நடாவுதலும் - செலுத்துதலும். காமத்தேர் - காமத்தை உண்டாக்கும் தன் தென்றலாகிய தேரை.

204. கடாவி - செலுத்தி. சாரிகை போய் - சுற்றி வந்து. வேள் - மன்மதனும். உலகம் ஈனுங் கடவுளுடன் - பிரமனாய் இருந்து உலகங்களைப் படைத்த கடவுளாகிய குற்றாலநாதருடன்.

---

(பி - ம்.) 201. மின்னகரு.

## பேதை

205. பேதை சிறுபருவப் பெண்பிள்ளை பஞ்சரத்துப்
பாதை யறியாப் பசுங்கிள்ளை—கோதுதளிர்

206. ஓங்கும் பரம்பொருளா ருய்யானச் சண்பகத்தின்
பூங்கொம்பி லாடாப் பொலந்தோகை—வாங்குசிலை

207. ஈட்டுநுதல் மூன்று மிளம்பிறைபோற் காட்டியதில்
கோட்டுமிருள் போலுங் குழலினள்—நாட்டுக்குப்

208. பண்டென்ற செஞ்சொற் பதினெட்டோ டின்னமுமொன்
றுண்டென்று காட்டு முரையினள்—வண்டுபோல்

---

205. பேதை - ஐந்து முதல் எட்டுப் பிராயம் வரை உள்ள பருவத்து இளம்பெண். சிறுபருவம்-இளம்பருவம். பஞ்சரத்துப்பாதை அறியா - தான் வாழும் கூட்டுக்குத் திரும்பி வரும் வழிதெரியாத. பசுங்கிள்ளை - இளங்கிளிப்பிள்ளை போன்றவள். கோதுதளிர் - பறவைகள் கோதித்தின்னும் தளிர்களையுடைய ; கோதுதல் - சிறிது சிறிதாகக் கொத்தித் தின்னுதல்.

206. உய்யானச் சண்பகத்தின் - சண்பகச்சோலையில் ; இது குற்றாலமலையில் உள்ளது ; 11, 206. பூங்கொம்பில் ஆடாப்பொலன் தோகை - அழகிய கிளைகளில் ஆடி மகிழாத அழகிய மயில் போன்றவள் ; பொலன் தோகை - பொன்னிறம் பொருந்திய மயில் என்னலும் ஆம். வாங்குசிலை - வளைந்த வில்லுக்கு.

207. ஈட்டுநுதல் - ஒப்பாகச் சொல்லக்கூடிய நெற்றி. மூன்றும் இளம்பிறைபோல் - மூன்றும்நாள் தோன்றும் இளம்பிறைபோல. காட்டி - தெரியச்செய்து. அதில் கோட்டும் இருள் போலுங் குழலினள் - அந்த இளம்பிறையின்மீது வளைந்து கொண்டிருக்கும் இருளைப்போனற கரிய கூந்தலை யுடையவள் ; அதாவது நீண்டு வளராது சுருண்டு கவிந்த கூந்தலை யுடையவள். நாட்டுக்கு - நம் பாரத நாட்டுக்கு.

208. பண்டு என்ற செஞ்சொல் - முன்னுள்ளவையென்று சொல்லப்பெறும் சிறந்தமொழிகள். பதினெட்டோடு - பதினெட்டு என்ற எண்ணிக்கையோடு; மொழிகள் பதினெட்டு; "ஆரிய முதலிய பதினெண் பாடையில்" (கம்ப. கிட்கிந்தா. 1: 14). இன்னமும் ஒன்று உண்டு என்று - மேலும் ஒரு மொழி உண்டு என்று. காட்டும்

209. அம்புபோல் வாட்போ லடையாளம் பெற்றதல்லால்
வெம்புபோர் செய்யா விழியினுள்—பைம்புலன்சேர்

210. மாமணலி னுள்மறைந்த வாயிலி கும்பம்போல்
நாம நெடுங்கடன்மை நாகம்போற்—பூமேல்

211. விளைக்கநா ளிட்டவின்றை வித்துப்போல் நாளை
முளைக்கநாட் பார்க்கு முலையாள்—கிளைத்த்தந்தக்

212. கூம்பல் முளரித் துணைபிறவாக் குற்றத்தால்
ஆம்பல் பிறந்திறக்கு மல்லியாள்—தேம்புதென்றற்

---

உரையினுள் - தெரிவிக்கும் சொல்லையுடையவள்; மேற்கூறிய பதினெண் மொழிகளிலும் அடங்காத வேறு தனிமொழி என்று சொல்லக்கூடிய பேச்சையுடையவள்; பேதையின் திருந்தாக் குதலை மொழி, வேறு ஒரு புரியாத புதுமொழி போன்றது என்க.

*209.* அடையாளம் பெற்றதல்லால்-உருவ ஒப்புமையேகொண்டதல்லாமல். வெம்பு போர் செய்யா விழி; உணர்ச்சியோடு ஆடவரைப் போரிடுவது போல நோக்கும் தன்மை அமையாத விழி; பேதைப்பருவத்தினள் ஆதலின் வெம்புபோர் செய்யாவிழி எனப்பட்டது. பைம் புலன் சேர் - பசிய வயலில் உள்ள.

*210.* மணலின் உள் மறைந்த வாயிலி கும்பம்போல் - மணலினுள் மறைந்த வாயில்லாத குடம் போலவும். நாம நெடுங்கடல் மைநாகம்போல் - அச்சத்தைத் தரும் நெடிய கடலினுள் மறைந்திருந்த மைந்நாக பர்வதம் போலும். பூமேல் - பூமியின்மீது.

*211.* விளைக்க இன்றை நாளிட்ட வித்துப்போல் - விளைவை உண்டாக்க இன்றைத்தினம் விட்ட விதைபோலவும். மணலுள் மறைந்த குடம், கடலுள் மறைந்த மைந்நாகமலை, இன்றை விட்ட விதை இவை, வெளிவந்து வளருஞ் சமயத்தை எதிர்பார்த்துத் தம் உருவம் தோன்றாமல் உள்ளடங்கியிருக்கும் பேதை முலைகளுக்கு உவமைகள். கிளைத்த தந்த - முளைத்த பல்லாகிய.

*212-213.* கூம்பல் முளரி-குவிந்த தாமரை மொட்டு. துணைபிறவாக் குற்றத்தால்-பக்கத்தில் துணையாகப் பல் தோன்றாமல் இருப்பதால். ஆம்பல் பிறந்து இறக்கும் அல்லியாள் - ஆம்பல் மலரில் தோன்றி மறையும் அகவிதழைப்போன்ற வாயையுடையவள்;

213. கன்று தனைப்பிடித்துக் காட்டென்பாள் நாசியிடைத்
தென்றலினைக் காட்டத் திடந்தீர்வாள்—ஒன்றுசெய

214. ஒன்று விளைத்திடுவா ளொன்றைநினைத் தொன்றையெடுத்
தொன்றைவிடுத் தொன்றை யுரைசெய்வாள்—முன்றிலிடைத்

215. தாம்பைப் பிடிக்குந் தரம்போல வூருகின்ற
பாம்பைப் பிடிக்கும் பராயத்தாள்—பூம்பாவைச்

216. சேய்க்குரைக்கு முண்மையாள் சிற்றிலைச்சி ரூரழிக்கத்
தாய்க்குரைக்க வோடுந் தகைமையாள்—வாய்க்குணவாய்

---

ஆம்பலின் அகவிதழ்கள் வரிசையாய் நெருங்கி யிராமல் இடையிடையே விளங்குவனபோலப் பேதையின் விழுந்த பற்கள் இடைஇடையே முளையாமல் இருக்கும் என்க. இதில், முளரி, ஆம்பல் முதலிய நீர்ப்பூக்களின் பெயர்கள் வந்துள்ளமை நோக்குக. தேம்பு தென்றல் - மெலிவுறும் தென்றல் காற்றின். கன்றுதனை - கன்றை; தென்றலுக்குக் கன்று இருக்கும் என்பது பேதை துணிபு. காட்டு என்பாள் - அதனோடு விளையாடக் கருதி அதைத் தனக்குக் காட்டு என்று சொல்லுவாள். நாசியிடை - மூக்கின் இடையே. திடம் தீர்வாள் - தென்றலுக்குக் கன்று உண்டு என்ற உறுதியை விட்டுத் தளர்வுறுவாள். ஒன்றுசெய - ஒரு காரியத்தைச் செய்ய எண்ணி.

214. ஒன்று விளைத்திடுவாள் - வேறு ஒரு செயலைச் செய்து முடிப்பாள். ஒன்றை நினைத்து, ஒன்றைத் தொடங்கி, ஒன்றை நீக்கி, ஒன்றைப் பேசுவாள்; நினைப்பு, செயல், பேச்சு இவற்றில் ஒவ்வாதவள் என்றபடி; இவை பேதையின் குணங்கள். முன்றில் இடை - வீட்டு முன்புறத்து.

215. தரம் - விதம். பராயம் - வயசு. பூம்பாவைச்சேய் - அழகிய தன் பாவையாகிய குழந்தை.

216. உண்மையாள்-அந்தரங்கத்தை யுடையவள். சிற்றிலைச் சிரூர் அழிக்க-பேதை கட்டின சிறுமணல் வீட்டைச் சிறு பையன்கள் சிதைக்க; மகளிர் மணலில் சிறுவீடு கட்டி விளையாடுவதும், அவ் வீட்டைச் சிறுவர்கள் சிதைத்தலும் ஆகிய செயல்களைப் பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தங்களில் காண்க.

217. உண்ணுவதும் வெண்மணற்சோ றூட்டுவதும் போல்மார்க்கம்
பண்ணுவது மெய்போலப் பார்த்திருந்து—வண்ணமரப்
218. பிள்ளைதனை யூட்டியந்தப் பிள்ளையுண்ணுக் குற்றமெல்லாம்
கிள்ளையுட னேதோ கிளத்துவாள்—கிள்ளைபோல்
219. பாவைதனைச் செஞ்சொற் பயில்விக்க வேணுமென்று
பூவைதனை வேண்டிப் புகலுவாள்—பாவைதனக்
220. கூட்டமுலை வேணுமுனைப் போலெனத் தாய்முன்னே
கூட்டமிடு வாளதற்குக் கோதைமார்—ஈட்டமிகும்
221. துங்கமணற் சிற்றிலிடைச் சோறுண்டாம் போதுனக்குக்
கொங்கையுண்டா மென்று கொடுசெல்லச்—சங்கையில்லா
222. அண்டமெல்லாஞ் சிற்றிலா யாதிபரை யாமொருத்தி
வண்டலயர் சங்க மறுகிலே—விண்டலைபாய்
223. தேனருவி தன்னிற் சிறிய மணிகொழித்து
வான மதிலும் வளைமறுகும்—ஞான

---

*217-218.* மார்க்கம்-வழி; முறை. வண்ண-அழகான. மரப்பிள்ளை-மரப்பாவையாகிய பிள்ளை. கிள்ளை-கிளி. கிளத்துவாள்-சொல்லுவாள்.

*219.* பாவைதனை-மேற்கூறிய மரப்பாவையை. பூவை-நாகணவாய்ப்புள்.

*220-221.* கூட்டம இடுவாள் - சண்டையிடுவாள்; கூட்டம் - போர்; திவா. ஈட்டம மிகும் - கூட்டம்மிகுந்த. சோறுண்டாம் போது-சோறு சமைத்து உண்டு மகிழும்போது. கொடு செல்ல-அழைத்துக் கொண்டு செல்ல. சங்கையில்லா - எண்ணிக்கை இல்லாத.

*222.* ஆதிபரை-முதற்றேவி. வண்டல் அயர்-வண்டல் விளையாட்டில் ஈடுபடுதலில்; வண்டல், மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று. சங்கமறுகு - சங்க வீதி; *14.* விண் தலைபாய் - வானிடத்திலிருந்து பாய்ந்து வரும்.

*223.* தேனருவி-குற்றாலமலையில் உள்ள ஓர் அருவி. வான மதிலும்-வானோங்கிய மதிலும. வளை மறுகும்-சங்க வீதியும்; *14, 165, 222*; வளை - சங்கு; இனி மதிலைச் சுற்றி வளைந்துள்ள வீதிகள் என்னலும் ஆம். ஞான-உண்மை ஞானத்தை அளிக்கும்.

---

(பி - ம்.) *218.* கிளர்த்துவாள்.

224. வலம்புரிக் கோயிலும் வாயிலு மாக்கிப்
பிலம்புரிவா யிற்சத்தி பீடம்—நலம்புரியும்

225. தெய்வக் குறும்பலவுஞ் செய்துகுழல் வாய்மொழிபால்
சைவப் பெருமானைத் தானமைத்து—மைவைத்த

226. கண்ணாரைக் காணுக காணுக வென்றழைத்துக்
கண்ணா ரமுதனையாள் காட்டுங்கால்—விண்ணாறும்

227. கொன்றைச் சடையுங் குழவிப் பிறைமுடியும்
வென்றித் திருநீற்று மெய்யழகும்—மன்றத்தில்

228. ஆடிய தாளு மதற்கிசைய நின்றிருவர்
பாடியகா துங்கருணைப் பார்வையும்—நீடியகை

---

224. வலம்புரிக் கோயிலும்-சங்கக் கோயிலும்; 180. வாயில்-கோயில் சந்நிதி வாயில். பிலம்புரி வாயில் சத்தி பீடம்-முழை போன்ற வாயிலொடு விளங்கும் குற்றாலக்கோயிலிலுள்ள பராசக்தி பீடம் என்னும் சந்நிதி; இது தரணிபீடம் என்றும் வழங்கப்பெறும்; திருக்குற். புரா. 10:4.

225. தெய்வக் குறும்பலவும்-தெய்வத் தன்மை வாய்ந்த குறும் பலா மரமும்; இது குற்றாலக்கோயிலில் உள்ள தலவிருக்ஷம். செய்து-அமைத்து. குழல்வாய் மொழிபால்-குழல்வாய் மொழியம்மை என்னும் தேவியின் பக்கத்தில். சைவப் பெருமானை-சிவபெருமானாகிய குற்றால நாதரை. மைவைத்த-கருநிறம் தங்கியிருக்கும்படி எழுதப் பெற்ற; மை எழுதப்பெற்ற என்றும் கொள்ளலாம்.

226. கண்ணாரை - கண்களையுடைய மற்ற மகளிரை நோக்கி. காணுக காணுக என்று - காண்பீர்களாக என்று; அடுக்கு வியப்பையும், விரைவையும் தெரிவிக்க வந்தது. கண் ஆரமுது அனையாள்-கண்ணுகிய தெவிட்டா அமுதம் போன்ற பேதை. விண் ஆறும்-வானதியான கங்கையும்; விண் நாறும்-வானெங்கும் மணங்கமழும் என்பதும் ஆம்.

227. குழவிப் பிறைமுடியும்-இளம்பிறையை யணிந்த சடை முடியும். வென்றித் திருநீற்று-தரித்துக் கொள்வோர்க்கு வெற்றியாகிய நன்மைகளை யளிக்கும் திருநீற்றினை அணிந்த. மெய் அழகும்-திருமேனியழகும. மன்றத்தில்-சித்திர சபையில்.

228. இருவர்-அச்வதரர், கம்பளர் என்னும் இருநாக அரசர்கள். பாடிய காது; அவ்விருவர் சிவபிரான் காதுகளில் குண்டலங்களாக இருந்து எப்பொழுதும் இன்னிசை பாடிக் கொண்டிருப்பவர்; 151. நீடியகை-நீண்ட கரங்களில்.

229. மானு மழுவு மணிமகர குண்டலமும்
கூனும் பணிலக் குழையழகும்—சேனை

230. உடையா னுலகே ழுடையான் றிசையெட்
டுடையான் புலியூ ருடையான்—அடியார்

231. திருப்பரங் குன்றத் திருந்தான் மதுரைத்
திருப்பரங் குன்றத் திருந்தான்—பொருப்புரஞ்சேர்

232. கன்னித் திருவானைக் காவினை னைப்புரந்தான்
கன்னித் திருவானைக் காவினன்—நன்னகரச்

233. சித்திர மான தியானத்தன் வாயநம
சித்திர மான தியானத்தன்—சித்திரப்பூம்

---

*229.* மழு - கோடாலி ; இது பரசு என்றுங் கூறப்பெறும். கூனும் பணிலக் குழை-வளைந்த சங்காகிய குழை ; குழை - காதணி. சேனை - பூதங்களாகிய படை.

*230.* புலியூர் - தில்லைநகர்; வியாக்கிரபாதர் என்னும் புலிக்கால் முனிவர் வழிபட்ட தலமாதலின் புலியூர் எனப்பெயர்பெற்றது. அடியார்-தம் அடியார்களது.

*231.* திரு பரம் குன்ற-அழகிய அல்லது சிறந்த மேலான நிலை குறைய; திருப்பரம் - செல்வச் சிறப்பு எனலும் ஆம். திருந்தான் - மாறுபாடு அடையமாட்டான். மதுரை திருப்பரங்குன்றத்து இருந்தான் - மதுரைக்கு அருகேயுள்ள திருப்பரங்குன்றம் என்னும் தலத்தில் இருப்பவன். பொருப்பு உரம் சேர் - மலைபோன்ற மார்பின் வலியுடைய.

*232.* கன்னி - அழிவில்லாத. திருவானை-செல்வத்தை யுடையவனும். காவினானை-கற்பகம் முதலிய பூஞ்சோலைகளை யுடையவனுமான இந்திரனை. புரந்தான்-காத்தருள் செய்தவன். கன்னி திருவானைக் காவினன்-காவலோங்கிய, திருவானைக்கா என்னும் தலத்தையுடையவன் ; சிறந்த சக்தி பீடங்களில் ஒன்றாகிய திருவானைக்கா என்னலும் பொருந்தும். நன்னகர - நன்னகரமென்னும் குற்றாலத்தில் உள்ள.

*233.* சித்திரமா னதியான் - சித்திராநதி என்னும் சிறந்த புண்ணியநதியை யுடையவன், 'மாநதி' என்பது எதுகை நோக்கித் திரிந்தது. அத்தன் - எல்லா உயிர்கட்கும் தந்தையானவன். வாய

234. பூரிச் சரணும் புயத்தா னுமைமுலைக்குப்
பூரிச் சரணும் புயத்தினன்—பேரிகறங்

235. கோவியமா மன்றத் தொருவாதான் மாமகச்சீர்
ஓவியமா மன்றத் தொருவாதான்—தேவப்

236. பெருமா னிடபப் பெருமா னருமைப்
பெருமான்குற் றாலப் பெருமான் —றிருநாமம்

237. புத்தியன்றி யோதுகினும் புட்பகந்த னார்மொழிக்குச்
சித்திவந்த முன்னைத் திருவருள்போல்—எத்திசையும்

---

நமசி - இது பஞ்சாக்ஷரத்தின் மாறலில் ஒன்று. திரமான தியானத்தன் - அடியார்கள் செய்யும் நிலையான தியானத்திற்கு இடமானவன். சித்திரப்பூம்-சித்திரத்தில்உள்ள பூப்போன்று என்றும் அழகுகெடாத.

*234.* பூரிசரணும் புயத்தான்-பொற்பாதங்களாகிய தாமரைகளையுடையவன். உமைமுலைக்குப் பூரிச்சு அரண் ஆம் புயத்தன் - உமாதேவியின் முலைகளுக்கு விரிவடைந்து (விம்மி) ஓர் அரண்போல் விளங்கும் புயங்களையுடையவன். பேரி கறங்கு - முரசு முழங்கும்.

*235.* ஓவிய மா மன்றத்து ஒருவாதான்-சித்திர சபையை விட்டு நீங்காதவன். இது குற்றாலக் கோயிலில் உள்ள சபை. மாமகச் சீர்ஓவிய - பெருமை பொருந்திய யாகத்துக்குரிய சிறப்பு நீங்கிய; சிறப்பு நீங்கியது தக்ஷயாகத்திற்குச் சிவபெருமானை விலக்கியது. ஒருவாதான்-ஒரு போரினைச் செய்தவன்; போர் செய்தது; வீரபத்திரராகத் தோன்றி யாகத்தை அழித்து அந்த யாகஞ்செய்த தக்கனையும் மற்ற தேவர்களையும் அழித்தது. இனி, மாமகசீர்-மாட்சிமை பொருந்திய திருமணமாகிய சிறப்பு. ஓவிய-தடைபட்டு நீங்கியதால் ஏற்பட்ட. மா மன்றத்து - திருவெண்ணெய் நல்லூரில் இருந்த ஊர்மன்றினிடம். ஒரு வாதான் - (சுந்தரமூர்த்தி நாயனார் பொருட்டுச் செய்த) ஒரு வழக்கை யுடையவன் என்றலும் பொருந்தும்.

*236.* இடபப் பெருமான்-இடபத்தை வாகனமாகவுடைய பெருமான். திருநாமம்-அவன் திருப்பெயரை.

*237.* புத்தி அன்றி-புத்தியில் பதிவுஇல்லாமல். புட்பகந்தன்; இவன் பாண்டிநாட்டுக் கொற்கையென்னும் நகரில் வாழ்ந்துவந்த குசலன் என்னும் ஓர் அந்தணன்; இவன் வரலாறு **திருக்குற்றாலத் தலபுராணம்,** புட்பகந்த சருக்கத்திற் காண்க. சித்திவந்த - நற்கதி வந்த.

238. அந்தர துந்துமிக ளார்ப்ப வளைமறுகில்
சுந்தரத் தேர்மீது தோன்றுதலும்—பைந்தொடியார்

239. ஆனந்த வெள்ளத்தி லன்னக் குழாம்போலத்
தானந்த மில்லான் சரண்போற்ற—மானனையாள்

240. அன்னையருந் தாதியரு மாடலுயிர்ப் பாங்கியரும்
தன்னையரும் போற்றுதல்போற் றன்போற்றிப்-பின்னையந்தக்

241. கோனைப் பணிதலன்றிக் கோன்கரத்தி லேபிடித்த
மானைச் சிலர்பிடித்து வாருமென்றாள்—மோனைப்

242. பிடியே யமுதே பிரசமலர்த் தேனே
கொடியே வசந்தக் குயிலே—வடிவெழுதாப்

243. பொன்னே மணியே புகழ்ப்பெருமா னேந்தியமான்
மின்னே நமக்கெளிதாய் விட்டதோ—முன்னேதான்

---

238. வளைமறுகு-சங்க வீதி; 223. குறிப். பைந்தொடியார் - பசிய வளைகளணிந்த மகளிர்.

239. அன்னக்குழாம்-அன்னப்பறவைகளின் கூட்டம். தான் அந்தம் இல்லான்-தனக்கு ஒருமுடிவு அல்லது அழிவு இல்லாத குற்றாலநாதர். சரண்-பாதங்களை. மான் அனையாள்-மான்போன்ற பேதை.

240. அன்னையர்-தாயர்; செவிலித்தாயர் ; இவர் பலர் ஆதலின் பன்மையில் கூறப்பெற்றது. தாதியர் - பணிப்பெண்கள். ஆடல் உயிர்ப்பாங்கியர்-தன்னோடு விளையாடும் உயிர்த் தோழியர். தன் ஐயரும்-தன் தமையன்மார்களும்; ஐயர்-தமையன்மார், "முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர்" (புறப். வெண்பாமாலை, 176.) தான் போற்றி-பேதை தானும் துதிசெய்து வணங்கி.

241. கோனை-தலைவரான குற்றாலநாதரை. மோனை-முதன்மையான.

242. பிரசமலர்த் தேனே-பூந்தாதுக்களோடு கூடிய பூக்களில் உண்டாகும் தேன்போன்றவளே; வசந்தக்குயிலே-வசந்தகாலத்தில் இன்பமாகக் கூவும் குயிலே. வடிவு எழுதா-உருவை எழுதமுடியாத அழகமைந்த.

243. பொன்னே - பொன்போன்றவளே ; பொன, இலக்குமியும் ஆம். புகழ்ப் பெருமான்-பெரும்புகழுடைய சிவபெருமான். மின்னே-

244. அக்கினியி லேபிறந்த தன்றோ வதுவன்றித்
திக்கிஜையெல் லாஞ்செவிடு செய்ததுகாண்—மிக்கினிமேல்

245. ஏதுசெவி டாகா திங்குவந்தா லுன்பாவை
காதுசெவி டாகுமெனக் கட்டுரைப்பப்—பேதுறலாய்த்

246. தன்பாவை யைக்கயவர் தங்கடனம் போல்மறைத்துப்
பொன்பாவை நின்று புலம்பெய்த—நன்பெருமான்

247. போதுவிளை யாட்டயர்ந்து போந்தான் பொருமதனும்
போதுவிளை யாட்டயர்ந்து போயினன்—மாது

---

மின்னல் கொடிபோன்றவளே; 242 பிடியே என்பது முதல் 243 மீன்னே என்பது வரையில் உள்ள விளிச்சொற்கள் பேதையைக் குறிப்பன.

**244.** அக்கினியிற் பிறந்தது - (விரும்பும், சிவபிரான் கையில் உள்ளமான்) முன்னம் தாருகவனத்து இருடிகள்செய்த யாகத் தீயினின்றும் தோன்றியது. செவிடு செய்தது - செவிடாகும்படி உரத்துக் கத்தியது. காண்-இதனை நீ தெரிந்துகொள் ; காண் முன்னிலை அசையும் ஆம்.

**245.** மிக்கு இனிமேல் இங்குவந்தால் ஏது செவிடாகாது-அவர் கையை விட்டுக்கடந்து இனிமேல் அஃது இங்கு வருமானல் எதுதான் செவிடாகாது. கட்டுரைப்ப—என்று எடுத்துக்கூற. பேதுறலாய் - துன்பம் அடைந்தவளாய்.

**246,** தன்பாவையை - தன் குழந்தையாகிய பாவையை. கயவர் தனம்போல - கீழோர் தேடிவைத்த பொருளைப்போல. மறைத்து - ஒளித்துவைத்து ; கீழோர் தாம் தேடிய பொருளைத் தாமும் அனுபவியாது பிறர்க்கும் வழங்காது வறிதே மறைத்துவைப்பர் ; அதுபோலப் பேதையும், தன் பாவையைத் தானும் வைத்து விளையாடி மகிழாமலும், அதற்கு என்ன கேடுவருமோ என்று அஞ்சிப் பிறரிடங் காட்டாமலும் மறைத்து வைத்தாள் என்க. பொன்பாவை - பொற்பதுமை போன்ற பேதை ; பொன்பாவை : எதுகைநோக்கி இயல்பாயிற்று. புலம்பு எய்த - புலம்புதலை அடைய.

**247.** போது விளையாட்டயர்ந்து-அப்போது பவனியாகிய திருவிளையாட்டிலே ஈடுபட்டு. போந்தான்-அவ்விடம்விட்டு மேற்

### பெதும்பை

248. பெதும்பைவிழி நீலப் பிணைபொருமென் றஞ்சிக்
குதம்பைகுடி போன குழையாள்—கதம்பமுலை

249. இந்திரைக்கோ மார னிரதிக்கோ மேனகைக்கோ
சுந்தரிக்கோ நேரிளைய தோகையாள்—சிந்தை

250. மகிழுங் கதிர்க்குவெளி வாராம லுள்ளே
நெகிழுங் கமலமுகை நேர்வாள்—திகழ்தற்காய்

251. ஆல மொருபா லமுதமொரு பாலிருந்து
கால மதுபார்க்குங் கண்ணுனாள்—மாலானன்

---

சென்றான். பொருமதனும் - காமுகர்களை வருத்தும் மன்மதனும். போது விளையாட்டயர்ந்து - தன்மலர்க்கணை விடுதலாகிய விளையாட்டில் ஈடுபட்டு.

248. பெதும்பை - எட்டுப் பிராயத்துக்குமேல் பதினோராவது பிராயம் வரையுள்ள இளம்பெண். விழி நீலப்பிணை - விழியாகிய கருநிறமாய் உள்ள பெண்மான்; விழிக்கு மான் உவமை. பொருமென்று - தன்னோடு பகைக்கும் என்று. குதம்பை - காதுவளர அணியும்தக்கை; தக்கை - நெட்டி. குடிபோன - வேற்று இடத்திற்குச் சென்ற ; குழையாள் - குழை என்னும் குண்டலத்தை அணிந்தவள் ; பெதும்பைப் பருவம், குழையணியும்பருவம் என்பது பெறப்பெற்றது. கதம்பமுலை - வாசனைக் கலவை பூசப் பெற்ற முலை.

249. இந்திரை-இலக்குமி. மாரன் இரதி-மன்மதன் தேவியான ரதி என்பவள். மேனகை-தேவதாசியர்களுள் ஒருத்தி. சுந்தரி-இந்திராணி. இந்திரை, இரதி, மேனகை, சுந்தரி ஆகியோர் வடிவழகிற் சிறந்தவர்கள். தோகை - மயில்போன்ற பெண்.

250. சிந்தை மகிழும் கதிர்க்கு-தன்மனம் மகிழ்வதற்குக் காரணமான சூரியனுக்கு ; கமலம் கதிர்கண்டு சிந்தை மகிழும் இயல்பினது. உள்ளே நெகிழும் - உட்புறத்தே தளர்ச்சியுறும். கமல முகை - தாமரை யரும்புக்கு. நேர்வாள் - ஒப்பாவாள் ; அதாவது பெதும்பைக்குப் பெண்மைத் தன்மை முழுதும் வெளிப்படையாய்த் தோன்றாது, உள்ளே வரவர் வளர்ச்சியடைந்துவரும் என்பது இதனால் விளங்கும்.

251. ஆலம்-விஷம். அமுதம் - அவ்விஷத்தை மாற்றவல்ல அமுதம். அமுதம்-மருந்து ; ஒப்பு: " இருநோக் கிவளுண்க ணுள்ள

252. அண்டமெல்லாம் பண்டளக்க வங்குரித்தவாமனன்போல்
தண்டருவி னங்கந் தருமுளைபோல்—மண்டுசமர்

253. பின்னிட்ட போர்மாரன் பேரணிக்குத் தூசிபோல்
முன்னெட்டிப் பார்க்கு முலையினாள்—நன்னகர்க்கோன்

254. நீடுதிருத் தொண்டர் நினைத்த கருமமெல்லாம்
கூடுதல்போற் கூடுங் குழலினாள்—நாடோறும்

255. பூச முடிக்கப் புனையப் பணிபூண
ஆசையல்லால் மற்றொன் றிலாசையில்லாள்—பாசிழையார்

---

தொருநோக்கு, நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" குறள். 1091. காலமது பார்க்கும் - ஆலம் அமுதம் இரண்டையும் சேர்த்துவைத்து நோக்கக்கூடிய மங்கைப்பருவம் அடையும் காலத்தை எதிர்பார்த்திருக்கும். கண்ணாள் - கண்களையுடையவளானாள். மால்ஆனான் - திருமாலானவன்.

252. அங்குரித்த-முளைத்த. வாமனன்-குறள்வடிவாய் மாபலிபால் வந்த திருமால். தண் தருவின் அங்கம்தரு முளைபோல்-குளிர்ச்சியைத்தரும் கற்பகத்தருவின் அங்கமாகிய கிளைபெற்ற முளைபோல. மண்டுசமர் - மிகுந்தபோரில்.

253. பின்னிட்ட-முன்தோற்றுப்போன. போர்மாரன்-போரையுடைய மன்மதனது. பேரணிக்கு-பெரியசேனைகளுக்கு; தூசுபோல்-போரில் முன்செல்லும் வீரப்படைபோல். முன் எட்டிப் பார்க்கும் - உள்ளே இருந்து வெளிவர முன்னே எட்டி நோக்குவதுபோல விளங்கும். நன்னகர்க்கோன் - நன்னகர் என்னும் குற்றாலநகருக்கு இறைவரான சிவபெருமானுடைய.

254. நீடு திருத்தொண்டர் - நெடும் திருத்தொண்டு புரியும் அடியார்கள். கூடுதல்போல் கைகூடிப்பலன் அளிப்பதுபோல. கூடும் குழலினாள் - ஒன்றுசேர்ந்து வளர்ந்துள்ள கூந்தலையுடையவள்; முன் பேதை கூந்தலைப்பற்றிக்கூறும் 207 வது கண்ணியையும் அதன் உரையையும் நோக்குக.

255. பூச - நறுமணக் கலவைகளைப் பூசிக்கொள்ள. முடிக்க-குழலைச்சீவி அலங்காரமாய் முடிந்துகொள்ள. புனைய - மாலைமுதலியவற்றை அணிந்துகொள்ள. பணிபூண - அணிகலன்களைத் தரித்துக்கொள்ள. பாசிழையார் - பசிய அணிகளையுடைய பெண்கள்நிறைந்த.

---

(பி - ம்.) 253. தூசிபோல்.

256. மாட மறுகில் மணக்கோலஞ் செய்துவிளை
யாட மறுகு மவாவுடையாள்—கூடவிளை

257. யாடப் பெருதமத னுகமநூற் செய்திசில
மாடப் புருவால் வகைதெரிவாள்—பாடமாம்

258. அன்ன நடையி லழகுநடை தித்திவிக்குஞ்
சின்ன நடையுடைய சித்திரப்பெண்—நன்னர்ப்

259. புனிதநறுஞ் சண்பகத்தின் பூங்கா வனத்துப்
பனிதவழு மல்லிகைப்பூப் பந்தர்—இனிதமைத்த

260. மாணிக்கம் பச்சைவயி டூர்யச் சதுரக்கை
ஆணிக் கனக வரமியத்துச்—சேணித்த

---

256. மாட மறுகில் - மாடங்கள் நிறைந்து விளங்கும் வீதியில். மணக்கோலம் செய்து - கல்யாணக்கோலம் செய்து. மறுகும் - சுழன்று ஓடும். அவாவுடையாள் - ஆசையுடையவள்.

257. கூட விளையாடப் பெருத - தான்சேர்ந்து விளையாடுவதற்குப் பருவத்தகுதி பெருத. மதனுகம நூல் செய்தி-மதனஆகம சாஸ்திரச் செய்திகளில். சில - சிலவற்றை. மாடப்புருவால் - தனது மாடத்தில் வாழும் புருக்களால். வகைதெரிவாள் - விதம்அறிந்து கொள்வாள்; இதனை, "செங்கால மடப்புறவம் பெடைக்குப்பேசுஞ் சிறுகுரலுக் குடலுருகிச் சிந்தித்தாங்கே" என்று திருமங்கைமன்னன் அருளிச் செய்த பாசுரம் ஒருவாறு அறிவுறுத்துவது காண்க; திருநெடுந் தாண்டகம். 17. பாடம் ஆம்-மற்றமகளிர் நடப்பதற்குப்பாடம் கற்றுக்கொள்ளத் தக்கதான.

258. அன்னநடையின்-அன்னத்தின் நடையைவிடச் சிறப்புள்ள; இன் என்ற உருபு இங்கு எல்லைப்பொருளில் வந்தது. அழகு நடை - அழகான நடை. தித்திவிக்கும் - மதுரிக்கச்செய்யும். சின்ன நடையுடைய - மந்த நடையையுடைய. சித்திரப்பெண்-அழகியபெண். நன்னர் - அழகிய, அல்லது மேலான.

259. புனித-தூய்மையான. பனிதவழும்-குளிர்ச்சிபொருந்திய.

260. மாணிக்கம் பச்சை வயிடூர்யம் - மாணிக்கம், மரகதம் வைடூர்யம் என்னும் இரத்தினங்கள் இழைக்கப்பெற்று. சதுரக்கை - நாற்கோண வடிவாய் அமைந்த. ஆணி கனக அரமியத்து - மாற்றுயர்ந்த பொன்னுலாகிய மேன் மாடத்தினிடத்து. சேணித்த - உயரத்தில் இருந்த.

261. காடை புறவுகுயில் கான மயில்கோழி
பேடையளி செம்போத்தும் பின்செல்லச்—சேடியரும்

262. பூவையுங் கிள்ளையும் பொன்மானு முன்செல்லப்
பாவையர் பையெனப் பையெனப்போய்—மாவளைசூழ்

263. சாதி வலம்புரியோர் தாரா கணமதிபோல்
மாதர் வலம்புரிய வந்திருந்து—மோதுதிரைத்

264. கங்கை முதலேழு கடவுள்நதி முத்தமெல்லாம்
பொங்கு முவர்க்கடற்கே புக்கவென—நங்கோமான்

265. வாழு மதுரையிலே மாமிக்கா யன்றழைத்த
ஏழு கடல்முத்து மினிதெடுத்துச்—சூழுமிசைப்

---

*261.* காடை, புறவு, குயில், கானமயில், கோழி, பேடை அளி, செம்போத்து; இவை பறவைகள்; பேடை அளி - பெண் வண்டு. இவை, பெதும்பையால் வளர்க்கப்பெருதவையும் சேணில் உள்ளவையும் ஆம். சேடியரும் - பணிப் பெண்களும்.

*262.* பூவை - நாகணவாய்ப்புள்; இதுமைனு என்று வழங்கப்பெறும். கிள்ளை - கிளி. பொன்மான் - பொன்னிறம் பொருந்திய மான். இவை பெதும்பையால் வளர்க்கப் பெற்றவை. பாவையர் - உடன்வரும் மற்றைத் தோழியர். பையெனப் பையெனப்போய் - ஒவ்வோர் அடியும் மெதுவாக வைத்து நடந்து; அடுக்கு எண்ணுப் பொருளது. மாவளை சூழ் - அழகிய சங்குகள் சூழப்பெற்ற.

*263.* சாதி வலம்புரி - உயர்ந்த வலம்புரிச் சங்கம்; வலம் புரிச் சங்கம் பல சங்குகளாற் சூழப்பெற்று விளங்கும், *146.* தாராகண மதிபோல் - நட்சத்திரக் கூட்டங்களுக்கு நடுவே விளங்கும் சந்திரன் போல; "இந்துவின் கொழுந்து விண்மீ னினத்தொடும் வருவ தென்ன" (கம்ப. பால. கோலங்காண்: *23.*) வலம்புரிய - வலமாகச் சுற்றிவர.

*264.* கங்கை முதல் ஏழு கடவுள் நதி - கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நருமதை, ஸிந்து, காவேரி என்னும் ஏழு தெய்வ நதிகள்; *147.*

*265.* மாமி - காஞ்சன மாலையென்னும் பாண்டிமாதேவி; இவள் மீனுட்சிதேவியின் அன்னை. சிவபிரான் தன் மாமிக்காக ஏழு கடல்களை மதுரையில் வருவித்தது; திருவிளையாடற்புராணம் 9-ம் படலம்

266. பாகக் கிளிகள் பவளவாய் முத்தாட
மோகக் குமிழிலொரு முத்தாடத்—தாகத்தால்

267. கொங்கைதனி லாடவெம்மைக் கூட்டுகென முத்தமெல்லாம்
செங்கைமே லாடுஞ் செயல்காட்டப்—பொங்கமரர்

268. நஞ்சுதனைக் கண்டு நடுநடுங்கி யோடியநாள்
அஞ்சலெனக் காத்த வருளொன்றும்—செஞ்சடைமேல்

269. பன்னுகம் வைத்தபிரான் பாணியினும் வேணியினும்
முன்னுளில் வைத்த முடியிரண்டும்—எந்நாளும்

---

காண்க. ஏழுகடல்கள்; உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, மது என்பன தனித்தனி நிறைந்த ஏழு கடல்கள்.

*266.* இசை பாகக் கிளிகள் - இசையின் பகுதிகளைத் தம்மிடம் கொண்ட கிளிகள். பவளவாய் முத்தாட - பவளம்போன்ற தம் வாய்களால் முத்தங்கொடுத்துக் கொஞ்சி விளையாட. கிளிகள் பெதும்பை வளர்த்து வருவன. மோகக் குமிழில் ஒரு முத்து ஆட - மோகத்தை உண்டாக்கும் குமிழ் போன்ற மூக்கில் ஒப்பற்ற ஒரு முத்து அசைந்து ஆடிக்கொண்டிருக்க ; முத்து - மூக்கில் அணிந்துள்ள, மூக்குத்தி அல்லது புல்லாக்கில்,தொங்கும் முத்து. தாகத்தால் - வேட்கையினால்.

*267.* கொங்கைதனில் ஆட - கொங்கையில் படிந்து விளையாட. கூட்டுகென - நீங்கள் எங்களைச் சேர்த்துவைப்பீர்கள் என்று. செங்கைமேல் ஆடும் செயல்காட்ட - அவளது சிவந்த கைகளின் மேல் ஆடுவனபோன்ற செய்கையைத் தெரிவிக்க. அமரர் - தேவர். பொங்கு - பொங்கி எழுந்து வந்த.

*268.* நஞ்சு - பாற்கடல் கடைந்தபோது உண்டான விஷம். அஞ்சல் எனக்காத்த - பயப்படாதீர்கள் என்று சொல்லி அந்த விஷத்தையுண்டு அத்தேவரைக் காத்த.

*269.* பன்னுகம் - பாம்பு; இது பன்னகம் என்பதின் நீட்டல் விகாரம்; "பன்னுக வேந்தன் பதைத்துருகி" (நளவெண்பா, கலிநீங்கு. 1) பாணி - கை. வேணி - சடை. பாணியில் பிரமன் தலைமுடியும், வேணியில் கங்கையை முடித்த முடியும்.

---

(பி - ம்.) *267.* மேலோடுஞ். *269.* என்னுளும்.

270. ஈன்றருளிக் காத்தருளித் தீர்த்தருளி யித்தலத்தே
தோன்றி நடத்துந் தொழில்மூன்றும்—ஆன்றதமிழ்க்

271. கும்பனுக்கும் வாசுகிக்குங் கூர்தரும ராசனுக்கும்
உம்பருக்குஞ் சொன்ன வுரைநான்கும்—நம்புலியூர்

272. கூடலா லங்காடு குற்றாலம் நெல்வேலி
ஆடலார் மன்ற மவையைந்தும்—வீடொன்றாக்

273. கண்டாலு மோரூர்க்குக் காட்டும் பலநெறிபோல்
உண்டாஞ் சமயநெறி யோராறும்—தொண்டனெனப்

274. பன்னியொரு பாணனுக்காய்ப் பாணனெதிர் பாடியங்கோர்
இன்னிசையால் வென்ற விசையேழும்—மென்மலரோன்

---

270. ஈன்றருளி, காத்தருளி, தீர்த்தருளி - பிரமன், மால், சிவன் என்னும் முத்தேவராய் இருந்து உலகை முறையே படைத்தும், காத்தும் அழித்தும். ஆன்ற தமிழ் - சிறந்த தமிழை யுணர்ந்த.

271. கும்பன் - குடத்திற் பிறந்த அகத்தியர். வாசுகி - வாசுகி என்னும் அரவரசன். கூர் தருமராசன் - சிறந்த தருமராஜன் (யமன்) உம்பர் - தேவர். மேற்கூறிய நால்வருக்கும் குற்றாலநாதர் உபதேசம் செய்தமை; இதன் விரிவைத் திருக்குற்றாலத் தலபுராணத்தில் காண்க. புலியூர் - சிதம்பரம்; வியாக்கிரபாதர் என்னும் புலிக்கான் முனிவர் இருந்து தவம் செய்த தலம் ஆதலின் புலியூர் எனப்பெயர் உண்டாயிற்று.

272. கூடல் - மதுரை நகர். ஆலங்காடு - வட திருவாலங்காடு என்னும் தலம். நெல்வேலி - திருநெல்வேலி. ஆடல் ஆர் மன்றம் - சிவபிரான் ஆடல் பொருந்திய சபைகள்; இவை, தில்லையில் பொற்சபை, மதுரையில் வெள்ளியம்பலம், ஆலங்காட்டில் இரத்தின சபை, திருநெல்வேலியில் தாமிர சபை, குற்றாலத்தில் சித்திர சபை ஆம். வீடு ஒன்றாக - மோக்ஷம் என்பது ஒன்றேயாக.

273. சமயநெறி ஓர் ஆறு; 64, 121.

274. பன்னி - விளங்குமாறு விரித்து. பாணனுக்காய் - பாணபத்திரன் என்னும் தன் அடியனுக்காக. பாணன் எதிர் - இசை வல்லான் என்னும் வேற்று நாட்டுப் பாணன் எதிர் விறகு விற்போனாய் வந்து. பாடி - சாதாரி என்னும் பண்ணைப்பாடி. இசை ஏழு - ஸ, ரி, க, ம, ப, த, நி, என்னும் ஏழு இசைகள்; இவை தமிழில் முறையே, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்எனப்

275. விண்டிருவர் காணுத வேதாந்த வீடுகளும்
பண்டிருவர் கண்டுவப்பப் பாடியே—கொண்டுகழங்

276. காடும் பொழுதி லடியார் பழவினையைச்
சாடும் பிரானமரர் தம்பிரான்—நாடுதனில்

277. தீர்த்த விசேடந் தலவிசேட மாச்செய்ய
மூர்த்தி விசேட முடிவைத்தோன்—நீத்தம்வீழ்

278. பன்றிக்கும் வேடனுக்கும் பண்டு சிவலோகம்
ஒன்றிக்கு வேட முதவினேன்—கொன்றை

---

படும். இவ்வரலாறு திருவால வாயுடையார் திருவிளையாடல், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் இரண்டிலும் சிறிது பேர் மாறுபாடுகளுடன் காணப்பெறும். மலரோன் - பிரமதேவன். 268 முதல், 274 முடிய உள்ள கண்ணிகளில் ஒன்று முதல் ஏழு எண்கள் தொடர்ந்து எண்ணணியாக அமைந்தது, ஆடுங்கழங்குகள் ஏழு என்பதைக் குறிக்கும்.

275. விண்டு - திருமால்; விஷ்ணு என்ற வடசொற்றிரிபு. வேதாந்த வீடுகளும் - வேதங்களுக்கு முடிவாய் உள்ள சிவபிரானது அடி, முடியாகிய இடங்களையும். பண்டு இருவர் கண்டு உவப்பப் பாடியே கொண்டு - முன் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய இருவரும் இக்குற்றாலநாதர் அடிமுடிகளைத் தெரிசித்து மகிழ்வுற்றுப் பாடிய தேவாரப் பாடல்களைப் பெதும்பை தானும் பாடிக்கொண்டே; இனி, கம்பளர் அச்வதரர் என்னும் இருநாக அரசர்கள் பார்த்து மகிழப் பெதும்பை பாடிக்கொண்டு என்று பொருள் கொள்ளலும் ஒருவாறு பொருந்தும். கழங்கு - கழற்சிக்காய்; கழங்காடல் மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று.

276. பழவினையை - பண்டைத் தீவினையை. சாடும் - தாக்கி அழிக்கும்.

277. மா செய்ய முடி - மாட்சிமையுடன் சிறந்த சிகரம். தீர்த்தம், தலம், மூர்த்தி என்னும் மூன்று விசேடங்களின் சிகரங்களாக இக்குற்றாலத் தலத்தை அமைத்தவன். நீத்தம் வீழ் - குற்றால அருவி வெள்ளத்தில் விழுந்த.

278. சிவலோகம் ஒன்றிக்கும் - சிவலோகம் போய்ப் பொருந்தும். வேடம் - சிவகணத்தவரது திருவேடம். உதவினேன் - கொடுத்

279. முடியாளன் வானோர் முடிசூட்டும் பொற்சே
அடியாள னெந்தை யருளாளன்—கொடிமாடக்

280. கூடலான் கூடாரைக் கூடலான் முப்புரப்போர்
ஆடலான் சித்திரமன் றாடலான்—நாடெல்லாம்

281. பேரி கறங்கப் பிறங்கு பலகோடி
சூரியர்க ளோருருவாய்த் தோன்றியே—மேருவுடன்

282. மேதினியில் வந்ததென விண்ணோர் புடைசூழச்
சோதிமணித் தேர்மீது தோன்றுதலும்—பாதியிலே

283. வெல்லுங் கழங்காடல் விட்டாள் புனல்பிரித்துச்
செல்லுமொரு பாலனம்போற் செல்கின்றாள்—கல்லுருவச்

---

தருளினவன்; இவ்வரலாறு, திருக்குற்றாலத் தலபுராணம், நதி வீழ் வேடன் கதிபெறு சருக்கத்தால் அறியலாம்.

279. எந்தை - எங்கள் தந்தை போன்றவன். அருளாளன் - அருளையே தன் ஆட்சி முறையாகக் கொண்டவன். கொடி மாட - கொடிகள் விளங்கும மாடங்களையுடைய.

280. கூடலான் - கூடல் என்னும் மதுரை நகரைத் தன்து இருப்பிடங்களில் ஒன்றாகக் கொண்டவன். கூடாரை - பகைவரை. கூடலான் - சேராதவன். முப்புரப்போர் ஆடலான் - திரிபுரங்கள் அழியப்போர் செய்தவன். சித்திரமன்று ஆடலான் - குற்றாலத்தில் உள்ள சித்திர சபையில் திருநடனம் செய்கிறவன். சித்திரசபை குற்றாலத்தில் சிவபிரான் திருநடம் புரியும் சபை; 272. இக்கண்ணி மடக்கு என்னும் அணியில் அமைந்துள்ளது.

281. கறங்க - ஒலிக்க. பிறங்கு - விளங்குகின்ற.

282. மேதினி - பூமி. சூரியனுக்குக் குற்றாலநாதர் திருவுருவும், மேருவுக்கு அவர் பவனிவரும் தேரும்.

283. அத்திருவுலாக் கண்டு, உறுதியாகத்தான் வெல்லக் கூடிய தன் கழங்காடுவதைப் பாதியில்விட்ட அப்பெதும்பை. புனல் பிரித்துச் செல்லும் ஒரு பால் அனம் போல் : பால் புனல் பிரித்துச் செல்லும் அனம்போல் என்று கூட்டுக ; செல்லும் - பாலைமட்டும் உண்ணச் செல்லும். அனம்போல் - அன்னப்பறவை போல ; இங்குப் புனல் கழங்காடுதலுக்கும், பால் குற்றாலநாதர் பவனி தரிசனத்திற்கும், அன்னம், பெதும்பைக்கும் உவமைகள்.

284. செஞ்சிலையா னெந்தைமுகத் திங்களெதிர் கண்டவுடன்
கஞ்சமலர் போலுமிரு கைகுவித்தாள்—விஞ்சுநிலச்

285. சேணிருக்குந் தானமுந் தேவரிடர் தீரவுண்ட
ஊணிருக்குந் தானத் தொளியிருளும்—பாணியின்மேல்

286. மானிருக்கும் வீறுமந்த மானுமிடம் பார்த்திருக்கத்
தானிருக்குஞ் சங்கத் தனிக்குழையும்—மானிலத்தின்

287. மீதெலாந் தேடினவன் மெய்த்தவத்தாற் கண்டொருநாள்
காதலே வைத்ததிருக் கண்சாத்தும்—சீதமலைத்

---

284. கல் உருவச் செஞ்சிலையான் எந்தை - கல்லாகிய மேரு மலையை அழகிய சிறந்த வில்லாகக்கொண்ட எங்கள் தந்தைபோன்ற குற்றால நாதர். முகத்திங்கள - முகமாகிய சந்திரனை. கஞ்சமலர் போலும் - தாமரை மலர்போன்ற. இரு கைகுவித்தாள் - இரு கைகளைக்கூப்பி வணங்கினாள்; சந்திரனைக்கண்ட தாமரைமலர் கூம்புவது இயல்பு; குற்றாலநாதர் திருமுகம் சந்திரனுக்கும், பெதும்பை கைகள் தாமரை மலர்களுக்கும் உவமை. விஞ்சுநில - விரிவான நிலத்திற்கு.

285. சேண் இருக்கும் - உயரத்தில் இருக்கும். தானமும் - அக்குற்றாலநாதர் எழுந்தருளிப் பவனிவரும் தேர்த்தட்டின் இடத்தையும். ஊண் இருக்கும் தானத்து ஒளியிருளும் - உணவாகக் கொண்ட விஷம் தங்கியிருக்கும் கழுத்தினிடத்து ஒளியுடன் விளங்கும் இருளும்; விஷம் கருநிறமாதலின் இருளுக்கு உவமை; ஈசனது கழுத்தில் உள்ள விஷமாகிய இருள் அவர் மேனியின் பொன்னிறத்தால் ஒளியை அடைந்தது என்க. பாணியின் மேல் - கையின் மீது.

286. வீறும் - தனிச்சிறப்பும்; பெருமிதமும் ஆம். இடம் - இடப்புறமாக. சங்கத் தனிக்குழை - சங்கினால் ஆகிய காதணி; சிவபிரான் சங்கக்குழையணிந்தவர்; "சங்கக்குழையனைத்தென் கருவாபுரித்தானுவை"; "செய்ய குழைத்துய்யமதிச் சங்காச நத்தினன்" (திருக்கருவை. கலித். 56; திருக்குற்; சிலேடை: வெண்பா: 1;) மான் இடப் புறத்தே, இருந்து பார்த்திருக்க, அதன் கண்ணுக்குத் தெரியும்படி குழையை அணிந்திருக்கிறார் என்பதில் மான் குழையை விரும்பும் என்பது தொனிக்க நின்றது நோக்கத் தக்கது; (குழை - தழை) மானிலத்தின் - பூமியின்.

287. மீதெல்லாம் தேடியவன் - எங்கும் தேடிய திருமால். கண்டு ஒருநாள் - ஒருநாள் தெரிசனம் செய்து. காதலேவைத்த - அன்

---

(பி - ம்.) 287. வீணை மறந்தாள்.

288. தேனிருக்கு மோர்பாற் செழுமையுங்கண் டாளொருபால்
நானிருக்க வேணுமென் று நன்கிசைத்தாள்—கானிருக்கும்

289. பூவே மருக்கொழுந்தே பொன்னேமின் னேயுனக்குத்
தேவேசன் பாலிருக்கச் செல்லுமோ—மாவேழு

290. பாரா னதிலொருவன் பாழியண்டத் தேயொருவன்
தேரா தலைவதின்னந் தேராயோ—யாரேனும்

291. இன்னகுல மின்னகுண மின்னவரென் றிங்கிவரை
இன்னமறி வாருண்டோ யேந்திழையாய்—முன்னமே

---

பினால் வைத்த. திருக்கண் சாத்தும் - அத்திருமாலின் கண்சாத்தப் பெற்று விளங்கும் அழகும்; திருமால் தன் மலர்விழி யொன்றைப் பிடுங்கிச் சிவபெருமான் திருவடியில் இட்டு அருச்சித்தது திருவீழி மிழலை என்னும் தலத்தில். சீதமலை - குளிர்ச்சிமிக்க இமயமலை யரசனது.

288. தேன் இருக்கும் - தேன்போன்ற புதல்வியான உமாதேவி இருக்கும். ஓர்பால் செழுமையும் - இடப்புறமான ஒருபுறத்தே விளங்கும் சிறப்பும; மலைத்தேன் சிறப்புடையது என்ற ஒரு பொருள் தொனிக்க நின்றது. கண்டாள் - பார்த்தவளான பெதும்பை. ஒருபால் - மற்றொருபுறமான அப்பெருமான வலப்புறத்தில். நன்கு இசைத்தாள் - தெளிவுபடக் கூறினாள்.

289. பூவே, மருக்கொழுந்தே, பொன்னே என்பன பெதும்பையை நோக்கி அவள் தாய் கூறியவை. தேவேசன் - தேவர்களுக்கு ஈசனான குற்றால நாதர். செல்லுமோ - ஏற்குமோ. மா ஏழு - பெரிய ஏழு கண்டங்களாக உள்ள.

290. பார் ஆனதில் - பூமியில். ஒருவன் - ஒருவனான திருமாலும். பாழி அண்டத்தே ஒருவன் - பெரிய புற அண்டமாகிய ஆகாயத்தில் ஒருவனான பிரமனும். தேராது - தேடிக்காணாது. அலைவது - அலைந்து திரிந்து கொண்டிருப்பதை. தேராயோ - நீ தெரிந்துகொண்டா யல்லையோ.

291. குலம், குணம் முதலியவை இல்லாதவர்; அதாவது அவற்றைக் கடந்து மேம்பட்டவர் என்பது கருத்து. ஏந்திழையாய், என்ற விளி பெதும்பையைக் குறித்தது.

292. எண்ணான் கறம்வளர்க்கு மெம்பெரு மாட்டியெதிர்
பெண்ணார் பிறரிருக்கப் பேறுளதோ—ஒண்ணாது

293. வாவென்று தாய்தொடர வாக்குமன மும்விழியும்
தேவன் றிருவழகிற் சேர்த்தியே—ஏவென்ற

294. கண்ணி தொடரவொரு காமத் தொடர்பில்லான்
நண்ணிய பொற்றேர் நடாவினான்—வண்ணச்

295. சிலைபார்த்து நாண்பார்த்து சித்தசனுந் திங்கள்
கலைபார்த்து வீதி கடந்தான் – இலகுதல

---

292. எண்ணான்கு அறம் வளர்க்கும் - உலகில் முப்பத்திரண்டு தருமங்களும் வளரக் காஞ்சியில் இயற்றிக் காட்டிய. எம்பெருமாட்டி - எங்கள் தலைவியான உமாதேவி. பெண்ணார் பிறர் - பெண்களாகிய நம் போன்ற பிறர். இருக்க - அப்பெருமான் பால் போய் வீற்றிருக்க. பேறு - பாக்கியம். ஒண்ணாது - இது உனக்குத்தகாது.

293. தாய் - செவிலித்தாய். சேர்த்தி - சேரவிட்டு. ஏவென்ற - அம்பைத் தன் கூர்மையாலும், வடிவாலும் வென்ற; ஏ - அம்பு. ஏ என்ற என்றுங் கொள்ளலாம்.

294. கண்ணி - கண்களையுடைய பெதும்பை. தொடர - செவிலித் தாயைப் பின் தொடர்ந்து செல்ல. ஒரு காமத்தொடர்பு இல்லான் - ஒன்றிலும் ஒருவிதப்பற்றும் இல்லாத குற்றாலநாதர்; கடவுளைப் பற்றற்றான் என்று குறிப்பிட்டதை நோக்குக; குறள்: 350. நண்ணிய - அங்குவந்த. நடாவினான் - செலுத்தி மேற் சென்றான். வண்ண - அழகிய.

295. சிலைபார்த்து - தன் கரும்பு வில்லைப் பார்த்து. நாண் பார்த்து - வண்டாகிய அவ்வில்லின் நாணைப்பார்த்து. சித்தசன் - மன்மதன்; காம இச்சை மனத்தில் உதிக்கும் உணர்ச்சியாதலால் அதனை உண்டுபண்ணும் மன்மதன் சித்தசன் எனப்பட்டான். திங்கள் கலைபார்த்து - தன் உபகரணங்களுள் ஒன்றாகிய குடையான சந்திரனது கலைவளர்ச்சியைப் பார்த்து. வீதி கடந்தான் - பெதும்பை நின்றிருந்த வீதியைத் தாண்டிச் சென்றான். இலகுதல - விளங்கு தலையுடைய.

மங்கை

296. மங்கைப் பருவ மடமா னெருத்திமது
கங்கைத் துறையிற் கதிர்ப்பவளம்—பைங்கா

297. தளவும் படைபோய் வினயமுஞ் சூதும்
களவுங் கொடுதிரும்புங் கண்ணாள்—தளவநகை

298. அன்னநடை யார்க்கு மனங்கனுக்கும் வாயூற
இன்னமுத மூறு மிதழினாள்—நன்னயஞ்சேர்

299. காமரச தாளிக் கரும்புகரும் பில்வைத்த
மாமதுரத் தேன்போல் வசனத்தாள்—தாமநுதல்

---

296. மங்கை, பன்னிரண்டு முதல் பதின் மூன்றுவது ஆண்டு வரையுள்ள பருவப்பெண். மடமான்-இளமான்போன்ற. மதுகங்கை: 10. கதிர்ப்பவளம்-ஒளி பொருந்திய பவளம் போன்றவள். பைங்காது-பசிய நிறமுள்ள காது.

297. அளவும் - உள்ள இடம் வரையிலும். படைபோய் - படையெடுத்துச் சென்று. வினயம் - வணக்க வொடுக்கம்; மரியாதை தெரிவிக்கும் நடிப்பு. கொடு - கொண்டு. கண்கள் வினயமும் சூதும் களவும் கொண்டுள்ளன. தவள நகை - வெண்மையான பற்களை யுடைய.

298. அன்ன நடையார்க்கும் - இம்மங்கை யொழிந்த மற்ற பெண்களுக்கும். அனங்கனுக்கும் - மன்மதனுக்கும்; சிவபெருமானால் அங்கம் எரிபட்டதால் அனங்கன் எனப்பட்டான்; "அங்கம்வெந் தன்றுதொட் டனங்கனே யாயினான்" (கம்ப. பால. தாடகைவதைப். 1.) வாய் ஊற - அருந்தக் கருதி வாயில் நீர் ஊற. இன்னமுதம் - இனிய சுவையையுடைய அமுதம்.

299. காமரச தாளிக் கரும்பு - காமச் சுவையைத் தரும் ரஸ தாளிக் கரும்பு; ரசதாளிக் கரும்பு, கரும்பு வகையில் சிறந்தது; வாழையிலும் ரஸதாளி என்று ஓர் உயர்ந்த வகையுள்ளமை அறிக. வசனத்தாள் - மொழியையுடையவள்; மங்கையின் வசனத்திற்கு ரச தாளிக்கரும்பினிடம் வைத்துள்ள இனியதேன் உவமை. தாமநுதல் - ஒளி பொருந்திய நெற்றியாகிய; தாமம் - ஒளி; பிங்கள.

300. இந்துவுக்கு மாறா யிருட்கூட்டம் போலளிகள்
வந்துவந்து கூடு மலர்க்குழலாள்—முந்த

301. இளைத்ததவத் தோர்க்கு மிடைக்குமிடை யூறாய்
முளைத்த குரும்பை முலையாள்—கிளைத்தமுலை

302. முன்னழகுஞ் சோதி முகத்தழகும் பூங்கோதைப்
பின்னழகும் வாய்ப்பான பெண்ணரசு—நன்னகர

303. மாடத்து மாட மனைப்புறத்தி லிட்டமணிப்
பீடத்து மன்றிப் பிறபோகாள்—பேடைவெயில்

304. கோடைக்கு வந்து குளிர்தென்றல் வீசுகின்ற
மேடைப் புறத்திலொரு மேலரங்கில்—ஆடல்

---

*300.* இந்து - சந்திரன். மாறு - பகை. அளிகள் - வண்டுகள். மலர்க்குழலாள் - மலர்கள் அணிந்த கூந்தலையுடையவள்; நெற்றிக்கு இந்துவும், குழலுக்கு இருளும்; இருட் கூட்டம் மேன்மேலும் அதிகரிப்பதற்கு அளிகள் வந்துவந்து கூடுவதும் உவமைகள் ஆயின.

*301.* இளைத்த - காயக்கிலேசம், முதலிய தவ நியமங்களால் இளைப்படைந்த. தவத்தோர்க்கும் - தவநெறியாகிய உறுதி நிலையில் உள்ளவர்க்கும்; உம்மை, உயர்வுசிறப்பு இடைக்கும் - தனங்களைத் தாங்கமுடியாது மெலிந்த இடைக்கும்; இரண்டாவது உம்மை இழிவு சிறப்பு. தவத்தோர் மன உறுதியை மாற்றும் வனப்பு வாய்ந்த முலை என்க.

*302.* பூம் கோதைப் பின்னழகும் - அழகிய மாலைகளோடு விளங்கும் பின்னலின் அழகும்; பின் - பின்னல்; "பின்னொடு முடித்த மண்ணு முச்சி" (அகநா. *73:1.*); பின்னழகு - பின்புற அழகும் ஆம். வாய்ப்பு ஆன - பொருத்தமாக அமைந்த. நன்னகரம் - குற்றாலம்; *11, 46, 201, 232, 233, 390, 464, 467.*

*303.* பிற போகாள் - வேறு இடங்களுக்குச் செல்லாள். பேடை - பெண்பறவை போன்ற மங்கை. வெயில் - வெயில் மிகுந்த.

*304.* மேல் அரங்கில் - மேன்மாடத்து மேடையில். ஆடல் - விளையாடுதற்கு உரிய.

305. கிளிக்குலங்கள் சூழவொரு கேகயத்தின் பேடை
பளிக்கறையி லாடும் படிபோல்—ஒளித்திருந்து

306. செண்டு பிடித்த முலையழகிற் செய்களவு
கண்டு பிடித்துக் கடாவுவபோல்—பண்டு

307. படித்த நடையின்னம் பயிற்றிடென வன்னம்
அடித்தலத்தில் வீழு மதுபோல்—அடிக்கடிமேல்

308. மேலேறி வீழ்வதனால் மெல்லியலாள் புன்னகைக்கு
மாலேறி வீழு மணித்திரள்போற்—கோலமுத்தின்

**பந்தடித்தல்**

309. பந்தடிக்குந் தோறும் பணைமுலைக்கும் பந்தடிப்ப
வந்தடிக்கும் பின்னே மயில்நடிப்ப—முந்தடிக்கும்

---

305. கேகயத்தின் பேடை - பெண்மயில். பளிக்கறை - பளிங்குப் பாறை; "பளிக்கறை கண்டதில் வைகல் பயினரூர்" (கம்ப. ஆரணிய. அயோமுகிப்: 37). படி - விதம். கிளிக்குலங்கள், மங்கையுடன் சேர்ந்து விளையாடும் மற்ற மகளிருக்கும், கேகயத்தின் பேடை மங்கைக்கும் உவமைகள்.

306 செண்டு பிடித்த முலை - பூச்செண்டைத் தன்னிடம் பிடித்து வைத்துக்கொண்டது போன்ற முலை; பிடித்த என்பதை உவமை வாசகமாகக்கொண்டு செண்டைப் போன்ற முலை என்னலும் ஆம். கடாவுதல் - வினவுதல். பண்டு - முன்

307. படித்த நடை - முன் மங்கையிடம் கற்றுக்கொண்ட நடைச்சிறப்பை; 257, 258. இன்னம் பயிற்றிடு என - இன்னமும் கற்றுக் கொடு என்று. அன்னம அடித்தலத்தில் வீழும் அதுபோல் - அன்னப்பறவை பாதங்களில் விழுந்து வணங்கிக் கேட்டுக்கொள்வது போல. அன்னம் பந்துக்கு உவமை.

308. மால் ஏறி - விருப்பம் மேலிட்டு. வீழும் - கீழே விழும்; - ஆசைப்படும் என்னலும் ஒன்றும்.

309. பணை - பருத்த. முலைக் கும்பம் தடிப்ப - கும்பம்போன்ற முலைகள் பந்தாட்டத்தின் விசையினால் விம்மித் தடிப்புற. அடிக்கும் பின்னே வந்து மயில் நடிப்ப - அம்மங்கை அடிகளுக்கும் பின்னாக வந்து அவள் பந்து அடிப்பதுபோல மயில் நடிக்க, முந்து அடிக்கும் - முன்னே பந்தை அடிக்கும்.

310. செங்கையுங் கண்ணுஞ் சிலைப்புருவ மும்பிறழப்
பைங்குமுதச் செங்கனிவாய் பண்மிழற்றப்—பொங்கு

311. குழையசைய வார்காதிற் கொப்பசையச் செம்பொன்
இழையசையச் சுட்டி யிசைந்தேற—மழைபொதுளும்

312. கொண்டை சரியக் குழைமகரந் தாவுமிரு
கெண்டைவரி வண்டைக் கிழித்தோட—மிண்டி

313. அரும்பி நிரம்பி யடர்ந்து திரண்ட
குரும்பை யிரண்டுங் குலுங்க—நெருங்கு

---

310. சிலைப்புருவம் - விற்போன்ற புருவம்; "வில்லொக்கும் நுதல் என்றாலும்" (கம்ப. மாரீசன்வதைப். 74) பிறழ - மாறுபட; புடை பெயர்ச்சியால் நிலைமாற. பைங்குமுதச் செங்கனிவாய் - புதிய செவ்வல்லி போன்றும், சிவந்த கொவ்வைக்கனி போன்றும் விளங்கும் வாய். பண் மிழற்ற - இசைபாட; "பண்கள்வாய் மிழற்றுமின் சொல்" (கம்ப. பால. நாட்டுப். 10.) பொங்கு - ஒளிமிகுந்து விளங்கும்.

311. வார் காதில் - நீண்ட காதுகளில். கொப்பு - மகளிர் மேற் காதில் அணியும் ஓர் அணி. செம்பொன் இழை - சிவந்த பொன்னாற் செய்த சரடு. சுட்டி - மகளிர் முன் நெற்றியில் அணியும் பதக்கம் போன்ற ஓர் அணி. இசைந்து ஏற - ஆட்டத்தை ஒத்து மேல் ஏற. மழை பொதுளும் - மேகத்தைப்போல் அடர்ந்திருக்கும்.

312. குழை மகரம் தாவும் - மகர மீன் வடிவாய் அமைந்துள்ள குழை என்னும் காதணியை நோக்கித் தாவிவரும். இருகெண்டை - இரு கெண்டைமீன்கள் போன்ற கண்கள். வரிவண்டை - மங்கையின் அருகே சுழலும் கோடுகள் அமைந்த வண்டின் கூட்டத்தை. கிழித்து ஓட-இடையே பிளந்துகொண்டு செல்ல. மங்கையின் கொண்டைக்கு மழையும், கண்களுக்குக் கெண்டையும் உவமைகள். கெண்டை மகரத்தைத் தாவுதல் என்றது, முரணணி. மிண்டி - நெருங்கி.

313. அரும்பி - அரும்பு போலத்தோன்றி. நிரம்பி - வளர்ச்சியில் நிறைந்து. அடர்ந்து - நெருங்கி. திரண்ட - பருத்த. குரும்பை - குரும்பை போன்ற முலை; குரும்பை உவமையாகு பெயர். நெருங்கு - ஒடுங்கியுள்ள.

314. மருங்கு லொசிந்து வருந்தி வருந்தி
ஒருங்கு பதுங்கி யொதுங்க—விரைந்து

315. குனிந்து நிமிர்ந்து குழைந்து முனிந்து
கனிந்து மலர்ந்து கவிழ்ந்து—முனங்கொ

316. டிருந்து புறங்கொ டெழும்பி யிடங்கை
திரிந்து வலங்கை திரும்பி—நிரைந்தொரு

317. மித்த பதக்க மிகுத்த சரப்பளி
முத்து வடத்திரள் மொய்த்தெழ—ஒத்தெழு

318 மத்தக வெற்பின் மதத்த தனக்குடம்
உத்தரி கத்தை யுதைத்திட—எய்த்தொரு

319. பட்டு ரவிக்கை பதைத்திட மெய்த்துகில்
கட்டளை சக்கணி கற்றிட—மட்டலர்

---

314. மருங்குல் - இடை. ஒசிந்து - சாய்ந்து. வருந்தி வருந்தி - அடிக்கடி மெலிவு அடைதலை மேற்கொண்டு. ஒருங்கு - ஒருபடியாக முழுதும்.

315. முனம்கொடு - முன்புறமாகக் கொண்டு.

316. இடங்கை - இடப்புறம். வலங்கை - வலப்புறம். நிரைந்து - வரிசையுற விளங்கி.

317. ஒருமித்த - ஒன்று சேர்ந்த. பதக்க மிகுந்த சரப்பளி - பதக்கத்தோடு கூடிய சரப்பளி; சரப்பளி - பல சரங்களாக அமைந்த மாலை. மொய்த்து - நெருங்கி.

318. மத்தக வெற்பின் - யானையைப்போல; மத்தகத்தை யுடைய மலை; மத்தகம் என்ற குறிப்பால் யானையைக் குறித்தது; இது இல்பொருள் உவமையும் ஆம். மதத்த தனக்குடம் - செருக்குற்று விளங்கும் தனமாகிய குடங்கள். உத்தரிகம் - மேலாடை. எய்த்து - சோர்வுற்று.

319. கட்டளை - முறை பொருந்திய. சக்கணி - ஒரு வகைக் கூத்து. மட்டு அலர் - தேனுடன் பொருந்திய பூக்களின்.

320. கந்த சுகந்த கதம்ப வசந்தமி
குந்தசு கொந்தள குங்கும—சந்தன

321. பார படீர பயோதர வாடைகு
பீரென வாடிய பேரணி—தாரணி

322. எங்கு நிரம்ப விருகை பவுரிசுற்றத்
தங்கமலர்த் தாளிரண்டுஞ் சாரிவரச்—செங்கண்

323. படைமதனைப் போராடப் பாரமணித் தண்டை
இடையொசியு மென்றே யிரங்கப்—புடைசேர்

---

*320.* கந்த - மணமும். சுகந்த கதம்ப - நன்மணம் வீசும் கலவையும். வசந்த மிகுந்த - நறுமணமதிகமான; வசந்தம் - நறுமணம்; **சூடா, நிகண்டு.** சு - அழகிய. கொந்தள - கூந்தற் சுருளின். வாடை எனக்கூட்டுக. குங்கும சந்தன - செஞ்சந்தனம் அணிந்த; குங்குமப்பூ கலக்கப்பெற்ற சந்தனம் அணிந்த என்னலும் ஆம்.

*321.* பார - கனமானதும், படீர - உயர்ந்தெழுந்ததுமான. பயோதரம் - நகில். வாடை - நறுணம்; கொந்தள வாடை, பயோதர வாடை எனக்கூட்டி இயைக்க. குபீரென - திடீரென்று. பேரணி - ஒருவகை நாட்டியம்; **மகாபரத சூடாமணி,** *1004.*

*322.* பவுரி - வட்டம். சாரிவர - சாரிகள் பயில. சாரி: பூசாரி, ஆகாசசாரி என இருவகைப்படும். செங்கண் - சிவந்த கண்கள்.

*323.* படைமதனை - மலர்களான அம்புகளையுடைய மன்மதனோடு; இங்கு மூன்றும் வேற்றுமை உருபு ஓடு என்பது இரண்டாம் வேற்றுமை ஐ உருபாக மயங்கி வந்தது. பார மணித்தண்டை - கனமான ரத்னங்களைப் பருக்கைக் கற்களாக உடைய தண்டை என்னும் கால் அணி; மணித்தண்டை என்பதற்கு மணிகள் இழைக்கப்பட்ட தண்டை என்னலும் ஆம். இடை ஒசியும் என்றே இரங்க - மங்கையின் இடை ஒடிந்துவிடும் என்றே வருந்திப் புலம்புவது போல ஒலிக்க; தண்டை இரங்கல்; ஒப்பு: "மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற, மாட்டா திடையென்று வாய்விட்டு - நாட்டேன், அலம்புவார் கோதை யடியிணையில் வீழ்ந்து, புலம்புமா நூபுரங்கள் பூண்டு" (**நளவெண்பா** I: *33.*) புடைசேர் - அத்தண்டையை அடுத்துள்ள.

324. சிலம்பு புலம்பச் செயஞ்செய மென்றங்கை
அலம்பு வரிவளைக ளார்ப்ப—நலஞ்சேர்

325. அரம்பைய ரஞ்ச வயிராணி செம்பொற்
கரங்கள் பிதிர்ந்து கலங்கப்—பரிந்துவிளை

326. ஆடினாள் பந்துபிடித் தாடுந் தொறுமடவார்
பாடினார் மன்மதவேள் பாக்கியமே—ஓடைமட

### மகளிர் முறையீடு

327. அன்னமே தெள்ளா ரமுதமே மாற்றுரையாச்
சொன்னமே யெங்கள் சுகிர்தமே—முன்னமே

---

*324.* சிலம்பு - (தண்டையினும் வேறான) ஒரு வகைக்கால் அணி. புலம்ப - தண்டை இரங்கியது போல வருந்தி ஓலமிட. செயம் செயம் என்று - நமக்கே வெற்றியென்று ; அடுக்கு ; உவகைப் பொருளில் வந்தது; சயம் - பந்தாட்டத்தில் உண்டாகும் வெற்றி. அம் கை அலம்பு - அழகிய கைளின் மேலும் கீழும் ஏறி இறங்கி யோடும். வரி வளைகள் - பல சித்திரக்கோடுகள் அமைந்த வளையல்கள். ஆர்ப்ப - ஆரவாரஞ் செய்வனபோல ஒலி செய்ய. நலம் சேர் - அழகு பொருந்திய.

*325.* அரம்பையர் - தேவமகளிர். அயிராணி - இந்திராணி. கரங்கள் பிதிர்ந்து - கைகளை உதறி; இது தோற்றுப் போகும் நிலையில் உண்டாகும் மெய்ப்பாடு. பரிந்து - பற்று மேற்கொண்டு.

*326.* விளையாடினாள் - மங்கை பந்து விளையாடினாள். மதவேள் பாக்கியமே - மன்மதனுக்குப் பெரும் செல்வம் போன்றவளே. ஓடை மட - ஓடையில் வாழும் இளமை பொருந்திய.

*327.* அன்னமே - அன்னம் போன்றவளே. தெள் ஆரமுதே - தெளிவான, சுவை கெடாத அமுதம் போன்றவளே. மாற்று உரையாச் சொன்னமே - மாற்றுரைத்துப் பார்க்க வேண்டாத பொன்னே; பொன் மாற்று உரைத்துப் பார்க்கப்படும். அப்படிப் பார்ப்பது இல்லாத பொன் என்று இல்பொருள் உவமையாகவும் கொள்ளலாம்; "மாற்றறியாத செழும்பசும் பொன்னே" (இராமலிங்கசுவாமிகள் திருவருட்பா) எங்கள் சுகிர்தமே; சுகிர்தம் - நல் வினைப்பயன். அன்னமே முதல் சுகிர்தமே என்பது வரையில் உள்ள விளிகள் மங்கையை நோக்கி மற்ற மகளிர் கூறியவை.

328. எய்த்த முனிவரர்மே லின்னங் குறையுளதோ
மெய்த்தவத்தா ரிந்நாட்டில் வேண்டாவோ—ஒத்தேறிக்

329. கச்சு முலையுமொரு கந்துகமும் போராடக்
கொச்சையிடைப் பாவி குடிபோமோ—அச்சமதன்

330. ஈரம்பு மூவம்பி னீரிரண்டுங் கைவிட்டான்
ஓரம்பு வைத்திருந்தா லொண்ணுதோ—சீராட்டுக்

---

328. எய்த்த - முன் புரிந்த தவநியமங்களால் மெலிவடைந்ததோடு உன் அழகைக்கண்டு காமுற்றுத் தம் தவநியமங்களைக் கைவிட்டு இளைத்த. முனிவரர் - முனிவர்களிற் சிறந்தோர். இன்னம் குறையுளதோ - மேலும் நீ அவர்கள் பால் செய்ய வேண்டிய துன்பங்களிற் குறையுள்ளதோ. ஒத்து ஏறி - ஒன்றுக்கொன்று சமமாக மேல் ஏறி வளர்ந்து.

329. கச்சு - முலைப்பட்டிகை. கந்துகம் - பந்து. ஒத்து ஏறி என்பது கச்சுமுலைகள் இரண்டும் ஒன்றுக்கொன்று ஒத்து ஏறி என்றும், கச்சுமுலையும் கந்துகமும் ஒத்து ஏறி என்றும் கொள்ளலாம். போராட - போரிடுவன போல விளங்கி ஆட. கொச்சை இடைப் பாவி - பாவம் செய்து குறைந்த நிலையடைந்த இடை ; பாவி என்பது இரக்கத்தைக் குறிக்கும் சொல்லாகவும் கொள்க; குடிபோமோ - அவ்விடத்தைத் துறந்து வேறிடத்துக்குக் குடிபோய் விடுமோ? அச்சமதன - உன் பேரழகைக்கண்டு உன்மீது தன அம்புகளைவிட அச்சங்கொண்ட மன்மதன்.

330. ஈரம்பு மூவம்பில் - ஐந்து அம்புகளில்; மன்மத பாணங்கள் ஐந்து ; அவை, தாமரைப்பூ, மாம்பூ, அசோகமலர், முல்லைமலர், நீலோற்பலம் என்பன. ஈரிரண்டும் - நான்கையும் ; அவை நீலம் ஒழிந்த மற்ற நான்கு. கைவிட்டான் - விட்டுவிட்டான். ஓரம்பு - மற்றொன்றாகிய நீலமலரை. வைத்திருந்தால் - அவன் அதை உன்மீது விடாமல் தனக்கு ஓர் உபகரணமாக வைத்திருந்தால். ஒண்ணுதோ - அது அவனுக்குத் தகுதியுடைத் தாகாதோ ; அந்தக் கணையையும் அவன உனமீது தூண்டினால், அது பயனற்றதாக முடியும் என்பது மங்கையின் உடனிருந்த மற்ற மகளிர் துணிபு. சீராட்டு - சிறப்பைச் செய்தல்.

331. காணச் சுரும்பெழுமே காம னடுப்படையில்
நாணற்று நிற்பதொரு நாணன்றே—பூணவிது

332. யாம்பார்த் தமையா திறையவர்குற் றாலலிங்கர்
தாம்பார்த் தமைவதெனத் தானமைப்பப்—பூம்பாவை

333. மேவியபந் தாடல் விடுத்தகன்று நன்னகர்வாழ்
தேவியொரு பாகனையே தேடுதலும்—காவியத்தோர்

334. சிந்தா சமுத்திபோற் சென்றாடத் தீர்த்தமெதிர்
வந்தாடப் பெற்றதொரு வாழ்வுபோல்—கொந்தாடும்

---

331. காண - கண்டுமகிழ. சுரும்பு - வண்டுகள். எழுமே - மன்மதன் நாண்கயிருக இருக்கும் நிலையைவிட்டு உன் கூந்தல் முதலியவற்றில் உள்ள நறுமணத்தை விரும்பி உன்னிடம் வந்துவிடுமே. காமன் - மன்மதன். நடுப்படையில் - அவன் சேனையாகிய மகளிர் என்னும் நம்மிடையில். நாணற்று நிற்பது - நாண் இல்லாமல் நிற்பது. நாண் - வில் நாண், வெட்கம் என்னும் இரு பொருள் தொனிக்க அமைந்துள்ளது. நாண் அன்றே - அவனுக்கும் நமக்கும் வெட்கத்தை உண்டாக்குமன்றே. இது பூண என மாற்றுக; நீ விரும்பியபடி இந்தக் குற்றாலநாதர் அருளைப்பூண.

332. யாம் பார்த்து அமையாது - நாம் பார்த்துச் செய்ய அமையும் காரியம் அன்று. குற்றால லிங்கர் தாம்பார்த்து - குற்றாலலிங்கர் தம் அருள்கொண்டு நோக்கி. அமைப்பத்தான் அமைவது - செய்யத் தான் ஏற்படக்கூடியது. என - என்று மங்கைக்குக் கூடவிருந்த மகளிர் கூற. பூம்பாவை - அழகிய பாவை போன்ற மங்கை.

333. மேவிய - அதுகாறும் தான் ஈடுபட்டிருந்த. நன்னகர் வாழ் தேவி ஒரு பாகனையே - குற்றால நகரில் வாழும் குழல்வாய் மொழியம்மையெனும் தேவியைத் தன் ஒரு பாகத்தில் கொண்ட சிவபெருமானை; நன்னகர்; 302. குறிப். தேடுதலும் - தேடி வரும்போது. காவியத்தோர் - காவியங்கள் இயற்ற வல்ல கவிவாணர்.

334. சிந்தா சமுத்திபோல் - நினைப்பால் எழுவது உடனே செய்யுளாய் வெளிவருவது போல. சென்றாட - போய் ஆட நினைத்த. தீர்த்தம் - புண்ணிய தீர்த்தம். எதிர்வந்து - தானே தன் எதிரே வந்து. ஆடப்பெற்றதொரு வாழ்வுபோல் - நீராடப்பெற்றதான ஒரு நல்வாழ்வு பலித்ததேபோல. கொந்து ஆடும் - பூங்கொத்துக்கள் ஆடப்பெற்ற.

### மங்கை குற்றாலநாதரைத் தெரிசித்தது

335. கற்றைத் திருச்சடையுங் கங்கா நதிப்பெருக்கும்
நெற்றிக் கிசைந்தவொரு நேத்திரமும்—வெற்றித்

336. திருநீல கண்டமுஞ் சேவடியும் வல்லி
கருநீலக் கண்களிப்பக் கண்டு—திருவால

337. வாயானை யன்பருக்கு வாய்ந்தானை நெல்வேலி
மேயானை வெண்ணிலவு வேய்ந்தானைத்—தாயான

338. ஊரானை வெள்ளிவிடை யூர்ந்தானை யண்டருக்கும்
வாரானைத் தொண்டருக்கு வந்தானைப்—பேரான

339. குற்றாலத் தானைக் குழல்வாய் மொழிபாகம்
பெற்றானை யண்டமெல்லாம் பெற்றானைப்—பற்றான

---

335. நேத்திரம் - கண். வெற்றி - தேவர்களும் மற்றை எல்லா உயிர்களும் பிழைக்கச் செய்த வெற்றியை அளித்த.

336. திருநீல கண்டமும் - அழகிய கரிய கழுத்தும். வல்லி - கொடிபோன்ற மங்கை ; வல்லி : உவமை ஆகுபெயர். கரு நீலக் கண் களிப்பக் கண்டு - பெரிய நீலமலர் போன்ற கண்கள் களிப்படையத் தெரிசித்து ; கருமை - பெருமையும் ஆம்.

337. திருவால வாயானை - திருவாலவாய் என்னும் பதியை உடையவனை; ஆலவாய் - மதுரை. வாய்ந்தானை - அருள்புரிய அமைந்தவனை. நெல்வேலி - திருநெல்வேலி என்னும் தலம். மேயானை - பொருந்தி யிருந்தவனை. வேய்ந்தானை - சடையில் அணிந்தவனை.

338. தாயான ஊரானை - தாயுமானவராய் எழுந்தருளிய திரு சிராப்பள்ளி யென்னும் ஊரையுடையவனை. வெள்ளிவிடை ஊர்ந்தானை - வெண்ணிறமான இடபத்தைத் தன் வாகனமாகக் கொண்டு ஏறி நடத்தினவனை. அண்டருக்கும் வாரானை - தேவர்க்கும் எளிதில் காட்சியளிக்க வராதவனை. தொண்டருக்கு வந்தானை - அடியார்க்கு அருள்புரிய எளிதில் எதிர் வந்தவனை. 337, 338 கண்ணிகள் முரண் என்னும் அணியாக அமைந்துள்ளன.

340. சிந்தை களிப்பச் சிவந்தபவ ளந்துடிப்ப
விந்தைப் புளகரும்பி மெய்பனிப்ப—வந்தித்தாள்

341. போதக் கடலைப் பொருந்தவெதிர் நோக்கினுள்
காதற் கடலைக் கரைகாணுள்—கோதைமுலை

மங்கை குறையிரத்தல்

342. அந்தக் குறியுடைய வாகமுடை யீர்நானும்
இந்தக் குறிபோ லிடலாமோ—முந்தவே

343. இந்துவிளை யாடு மிலங்குசடைப் பேராற்றில்
வந்துவிளை யாட வரலாமோ—பைந்தடங்கண்

344. இந்தீ வரத்தா ளிவளொருத்திக் கோர்பாகம்
தந்தீ ரெனக்குந் தரலாமோ—சொந்தம்

---

*340.* சிவந்த பவளம் - செம்பவளம் போன்ற வாய் இதழ்கள்; பவளம் உவமையாகு பெயர். விந்தைப்புளகு அரும்பி - வியப்பினுல் உண்டாகும் மெய்க்கூச்செறிதலாகிய மெய்ப்பாடு. மெய்பனிப்ப - உடல் நடுங்க. வந்தித்தாள் - வந்த குற்றால நாதரைக் கண்டு வணங்கினுள்.

*341.* போதக் கடலை - ஞானக்கடலாகிய அப்பெருமானை; போதக் கடலை வந்தித்தாள் என்றும் இயைத்துக் கொள்ளலாம். பொருந்த - நன்ருகப்பதிய. காதற் கடலைக் கரை காணுள் - ஆசைக் கடலின் கரையைக் காணுதவளாய் நின்ருள். கோதைமுலை - உமா தேவியின் முலைகளின்.

*342.* அந்தக் குறியுடைய - அந்த அடையாளமுடைய; அந்தம் - அழகும் ஆம். ஆகம் - திருமார்பு ; இது காஞ்சியில் அம்பிகை இறைவனைத் தழுவியதால் ஏற்பட்ட முலைத்தழும்பு. *540 ; 550.* நானும் இந்தக் குறிபோல் இடலாமோ-யானும் இதுபோல் என் தனக்குறியும் உமது திருமார்பில் உண்டாகுமாறு உம்மைத் தழுவலாமோ என்பது.

*343.* இந்து - சந்திரன். இலங்கு சடைப்பேராறு - சடையில் விளங்கும் பெரியநதி ஆகிய கங்கை. பைந்தடங்கண் - பசிய இடமகன்ற கண்ணுகிய.

*344.* இந்தீவரத்தாள் - நீலமலரையுடைய குழல்வாய் மொழியம்மை ; தடங்கண் பைம் இந்தீவரத்தாள் - இடமகன்ற கண்ணுகிய புதிய நீலமலரை யுடையவள் என்று கூட்டிப்பொருள் கொள்ளலும் ஆம் ; "பைங்குமுதச் செங்கனிவாய்" (*310.* குறிப்.)

345. ஒருவர் குடியிருந்தா லோரூரிற் கூடி
இருவ ரிருந்தா ரிலையோ—பெருகுபுகழ்

346. அண்ட முடையீ ரருமந்தச் செம்மெயிலே
கண்ட மிகக்கறுத்தீர் கண்ணேறோ—விண்டுரையீர்

347. ஏதே வெனமயங்கு மேந்திழையைப் பாரான்போல்
மாதேவன் வேறோர் மறுகணைந்தான்—கோதைக்குக்

348. காமாரி கோலங் கருத்திலே நின்றமையால்
பூமாரி தூவிப் பொருமதன்—ஆமாறு

349. பார்க்குமட்டும் பார்ப்பன் பழையபய மேற்கொண்டோ
போர்க்குமட்டு மீறுமற் போயினான்—தார்க்குழலாள்

350. சந்தனமு முத்துந் தழலா யழலுமென்றும்
கந்தநறுந் தண்புழுகு காந்துமென்றும்—மந்தநடைத்

---

*346.* அருமந்த - அரிய; அரிய அமுதம் போன்று சிறந்த. செம்மெயிலே - சிவந்த உமது திருமேனியிலே. கண்டம் - கழுத்து. கறுத்தீர் - கறுப்பானீர்; கண்டம் கறுத்தது; விஷம் அங்குத்தங்கி யிருப்பதால். கண்ணேறோ - இது பிறர் உமது அழகைக்கண்டு வைத்த திருஷ்டி தோஷமோ; கண்ணேறு: இது கண்ணேச்சில் என்றும் வழங்கும். விண்டு உரையீர் - உள்ளதை உள்ளவாறு விளங்கச் சொல்வீராக.

*347.* ஏதே என ; ஏகாரம் வினா ; மகாதேவன் - குற்றாலநாதர். மறுகணைந்தான் - வீதியை அடைந்தார்.

*348.* காமாரி - மன்மதனை யழித்த குற்றாலநாதர். பூ மாரி தூவி பொரு மதன் - மலர்க்கணைகளாகிய மழையைப்பெய்து போர் புரியும் மன்மதன்,

*349.* பழைய பயம் - முன் தன்னைச் சுட்டெரித்த பயம். மீறுமல் - மீறிச் செய்யாமல். தார்க்குழலாள் - மாலையணிந்த கூந்தலுடைய மங்கை.

*350.* இது முதல் மூன்று கண்ணிகள் பிரிந்து தனியிருக்கும் தலைவியின் துன்பநிலையை உணர்த்துவன. தழலாய் அழலும் - நெருப்பாய் எரியும். தண் புழுகு - குளிர்ச்சியைத் தரும புனுகு. காந்தும் - வெப்பத்தால் கருகிப்போகும். மந்தநடை - மெதுவாக நடந்துவரும்.

351. தென்றல் சிறுபுலிபோற் சீறிவந்து பாயுமென்றும்
அன்றிலிளம் பேடை யலறுமென்றும்—ஒன்றாக

352. யாமம் விடியா திரவுபக லாமென்றும்
காமமிது வென்றுங் கண்டறிந்தாள்—தாம

மடந்தை

353. மடந்தை யிவளொருத்தி மன்மதன் கேளி
நடந்தய லார்க்கியற்று நங்கைக்—குடந்தையார்

354. மாமக தீர்த்தமும் வானகங்கை யும்வணங்கும்
பூமது கங்கைப் புதுநறுந்தேன்—கோமதனை

355. வென்று படைத்த விருதுமக ரக்குழையும்
துன்றுபுரு வச்சிலையுந் தோற்றத்தாள்—என்றுமெழு

---

**351.** தென்றலுக்குப் புலி; 'தென்றற் புலியே யிரைதேடுதியோ' (**கம்ப.** பால. திருமணப்: 7.) இளம் அன்றில் பேடை - இளம் பெண் அன்றிற் பறவை; இது தன் சேவலைப் பிரிந்தால் தாங்காது வருந்தி யலறும்.

**352.** யாமம் - இரவு. விடியாது - புலராது. இரவு பகலாம் - இரவும் ஒரு யுகம்போல் நீடித்திருக்கும்; பகல் - ஊழிக்காலம்; "துஞ்சலுறூஉம் பகலுறு மாலை" (**பதிற்றுப்.** 7: 8.); "ஊழி பலவோ ரிரவாயிற் றோவென்னும்" (**நளவெண்பா** I.: 108.) தாம - மாலை யணிந்த.

**353.** மடந்தை - பதினைன்கு முதல் பத்தொன்பது பிராயம் வரையுள்ள பருவத்துப் பெண். மன்மதன் கேளி நடந்து - மன்மதன் விளையாட்டாகிய புணர்ச்சியின்பத்திற் பழகி. நங்கை - பெண்ணிற் சிறந்தவள். குடந்தை ஆர் - திருக்குடந்தை நகரில் உள்ள. மாமக தீர்த்தம்; பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை நடைபெறும் ஸ்நான விசேஷமுள்ள ஒரு புண்ணிய தீர்த்தம். வானகங்கை - தேவகங்கை; உம்மைகள் உயர்வு சிறப்பில் வந்தவை. பூமது கங்கை - இது குற்றாலத்தில் உள்ள தீர்த்த விசேடம்; மகாமக தீர்த்தமும், வானகங்கையும் வந்து இங்குள்ள பூமது கங்கையிற் படிந்து வணங்கித் தாம் சுமந்த பாவங்களைப் போக்கிக்கொள்ளும்; சிவமது கங்கை; 10, 296. புதுநறும் தேன்-புதிய சுவையுள்ள தேன் போன்றவள். கோமதனை-மன்மதனாகிய தலைவனை.

**355.** வென்று படைத்த விருது மகரக்குழையும் - தன் அழகினால் வென்று அவனிடமிருந்து தனக்கு உரிமையாக்கிக்கொண்ட

356 பூமான் கலைக்கெதிராய்ப் பொன்மான் மனங்கலைக்கும்
மாமான் கலைக்கு(நெடு) மாவிழியாள்—சேமக்

357. குழகப் புளகக் குமிழித் திரளைப்
பழகிச் சிமிழைப் பருகி—அழகைப்

358. பிடித்துத் திரட்டிப் பெருத்துக் கருத்தைக்
குடித்துத் தவத்தைக் குதட்டித்—தடித்தெழுந்து

359. பூரித்துச் சூதொத்துப் பூணிட்டுக் காமத்தில்
கோரித்துத் தாளத்தைக் கோபித்து—பூரித்துக்

---

விருதுபோன்ற மகர வடிவக் குழையையும். துன்று - நெருங்கிய. புருவச்சிலையும் - புருவமாகிய வில்லையும். தோற்றத்தாள் - கொண்ட தோற்றத்தையுடையவள். என்றும் எழு - என்றும் தோன்று கின்ற.

356. பூமான் - மன்மதனுடைய. கலைக்கு எதிராய் - குதிரை யாகிய மானுக்கு எதிராயும்; என்றும் மேல் தோன்றும் சந்திரனிட முள்ள மானுக்கு எதிராய் என்றும் கொள்ளலாம். பொன்மான் மனம் கலைக்கும் - சிவபிரான் கையில் ஏந்திய பொன்னிறத்த மானின் மனத்தைக் கலைத்து வருத்தும். மாமான் கலைக்கும் - சிறந்த மற்ற மான்களையும் கலைத்துத் தோற்றோடச் செய்யும். நெடு மாவிழியாள் - நீண்ட பெரிய மான்போன்ற விழிகளையுடையவள்.

357. சேம - காவலோடு கூடிய ; அல்லது நலம் பொருந்திய. குழக - இளமையான. புளக - பூரித்த. குமிழித்திரளை - நீர்க்குமிழிக் கூட்டத்தை. பழகி - அவற்றின் பழக்கத்தைத் தன்னிடம் பெற்று. சிமிழைப் பருகி - சிமிழை உட்கொண்டு. அழகைப் பிடித்து - அழகைச் சிறைபிடித்துத் தன்னிடம் வைத்துக்கொண்டு.

358. கருத்தைக் குடித்து - ஆடவரின் எண்ணத்தைக் குடித்து. தவத்தைக் குதட்டி - முனிவர்களுடைய தவத்தை மென்று. தடித்து எழுந்து - கனங்கொண்டு மேற் கிளம்பி.

359. பூரித்து - குறைவற்று நிரம்பி. சூது ஒத்து - சூதாடுங் கருவிக்கு ஒப்பாகி. பூணிட்டு - பல அணிகளைப் பூண்டு. காமத்தில் கோரித்து - காமத்தை விளைவிப்பதில் தீவிரமாகி. தாளத்தைக் கோபித்து - கைத்தாளமாகிய கஞ்சக்கருவியைப் பகைத்து; பகைத் தல் தனக்கு ஒப்பில்லாமையால்.

360. குங்குமங்கு லாவிவளர் கும்ப பயோதரத்தாள்
பொங்குமங்கு லாகிவளர் பூங்குழலாள்—எங்குமெங்கும்

361. முல்லை சொரிந்து முளரித் தொடைதூக்கு
மல்லிகைவி தானமணி மண்டபத்துச்—செல்வநிறை

362. முத்து நிரைத்த முழுவயிரத் தூண்முகப்பில்
பத்தி நவமணியின் பன்மாலைக்—கொத்தெல்லாம்

363. மந்திர போதன் வடவருவி சூழ்ந்திலங்கும்
இந்திர சாப மெனவொளிர—அந்தத்

364. துறையி லினிதுறையுந் தூவியனம் போல
இறைமணிப் பீடிகைமே லேறி—நறைகமழும்

365. கூந்தலார் சூழக் குமுதமொ ராயிரத்து
வாய்ந்ததொரு செந்தா மரைபோலப்—போந்திருந்து

---

*360.* குலாவி - கலந்து. கும்ப பயோதரம் - கும்பமுலை. பொங்கு மங்குல் ஆகி - மேற்கிளம்பி வளரும் மேகம்போல விளங்கி.

*361.* முளரித் தொடை - தாமரை மாலை. தூக்கு - தொங்க விடப்பெற்ற. மல்லிகை விதான - மல்லிகைப் பூக்களால் வேய்ந்த மேற்கட்டு; விதானம்; இது இப்பொழுது அசுமானகிரி என்று வழங் கப்பெறும்.

*362.* நிரைத்த - வரிசையாகப்பதித்துள்ள; அல்லது தொங்க விட்டுள்ள. முகப்பு - முன்புறம்.

*363.* மந்திர போதன் - ரகசியமான ஞானவடிவாய் உள்ள குற்றால நாதருடைய. இந்திரசாபம் - இந்திரவில் என்னும் வான வில்; சாபம் - வில்; வடவருவி அருகே இந்திரவில் தோன்றுதல்; 38; "தெய்வவிற் காட்டும் திரிகூட வடவருவி," (**திருக்குற்றாலத் தலப் புராண.** வடவருவிச் ; 25.)

*364.* தூவி அனம் - இறகோடு விளங்கும் அன்னப்பறவை. இறைமணிப் பீடிகை - சிறந்த இரத்தின பீடம்.

*365.* குமுதம் - அல்லி. ஆயிரம் அல்லி மலர் சூழவிளங்கும் செந்தாமரை மலர் ; குமுத மலர்கள் மடந்தையைச் சூழ்ந்த மற்ற மகளிர்க்கும், செந்தாமரை மலர் மடந்தைக்கும் உவமைகள்.

மடைந்தை யாழ் வாசித்தல்

366. தம்புரு மீட்டிச் சரமண் டலமிழற்றி
வம்புருவக் கின்னரியாழ் வாசித்துப்—பைம்பொன்

367. மகரயாழ் வாங்கியொரு மாடகமே றிட்டுப்
பகருந் திவவு வலிபார்த்துச்—சகரமுதல்

368. ஏழும் பொருத்திநரம் பேழுந் திருத்தியொலி
ஏழும் வகுத்தவிசை யேழிலே—சூழுவித்து

369. மந்தர மத்திம தாரம் வகைமூன்றும்
தந்தர மாகத் தரம்பிரித்து—முந்து

370. விரலுங் களமிடறு மெல்லிதழும் வீணைக்
குரலுங் குரலுமொன்றாய்க் கூட்டி—முரலும்

---

366. சரமண்டலம் - சுர வரிசைகள்; ஒரு வகை வாத்தியமும் ஆம். மிழற்றி - பாடி, அல்லது வாசித்து. வம்பு உருவக் கின்னரி யாழ் - புதிதான அழகிய கின்னரி என்னும் ஒரு வகை வீணை.

367. மகரயாழ் - மகர மீன் போன்ற தலைச்சிகரமுடைய வீணை. மாடகம் - முறுக்காணி. திவவு - யாழ்த் தண்டிலுள்ள நரம்புக் கட்டு; திருமுருகாற்றுப்படை. 140.

368. சகர முதல் ஏழும் பொருத்தி - 'சரிகமபதநி' இவ்வேழை யும் மாத்திரைப்படுத்தித் தொழில்செய்ய அமைத்து; சிலப். 3 : 26. உரை. நரம்பேழும் திருத்தி - வார்தல் வடித்தல் முதலிய எண்வகை களினால் நரம்புகளைத் திருத்தி; "வார்தல் வடித்த லுந்த லுறழ்தல், சீருட னுருட்ட றெருட்ட லள்ளல், ஏருடைப் பட்டடையென விசை யோர் வகுத்த, எட்டு வகையி னிசைக்கரணத்துப்." (சிலப். 7: 12-14. உரை.) ஒலி ஏழும் வகுத்து - ஏழு ஓசைகளையும் பாகுபாடு செய்து. இசை ஏழு : இசையேழாவன - சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென்பன ; (சிலப். 3: 26. உரை.)

369. மந்தரம் - படுத்தலோசை. மத்திமம் - நடு ஓசை; தாரம் எடுத்தல் ஓசை. "மந்தர மத்திம தாரமிவை மூன்றில்," (கல்லாடம். 21: 50.) இவற்றின் விரிவை, *மகாபரத சூடாமணி, 46. என்னும் நூலிற் காண்க.

370. களமிடறு - ஒலிக்கும் கழுத்து. இதழ் - உதடு. குரலும் - தன் குரலும். முரலும் - ஒலிக்கும்.

---

*இந்நூல், இந்நூல்நிலைய வெளியீடாக அண்மையில் வெளிவந் துள்ளது.

371. துவர்வாயுங் கண்டமுஞ் சூழ்விரலு மன்றி
அவயவங்க ளொன்று மசையாமற்—கவுட

372. மலகிரி தோடி வராடி முகாரி
கலியாணி யாகிரி காந்தாரி—பொலிவான

373. கொல்லி சவுராட்டங் குச்சரி காம்போதி
வல்லபெரு நாட்டை வயிரவி—வெல்லுமிசைப்

374. பூவாள மோகனம் பொங்குசங்க ராபரணம்
தேவகாந் தாரி செயசாட்சி—மாவசந்தம்

375. மாளவி சாயரி மற்றுமுள்ள ராகமெல்லாம்
தாள விதமதுர சாரமாய்க்—காளவிடப்

376. பாம்புஞ் செவிதாழ்ப்பப் பட்டமர முந்தளிர்ப்பச்
சேம்புங் கருவேம்புந் தேன்பிலிற்ற—கோம்பியும்

377. சோப மயிலுந் துயில்பயிலப் பைங்கிளியும்
கோபப் பருந்துமொரு கூட்டுறையத்—தாபரமும்

---

371. துவர் வாய் - பவழம் போன்ற வாய். கண்டம் - தொண்டை.

372. கவுடமலகரி - இது கவுடமலாரு என்னும் ராகம்; மலகரி - இதுமல்லாரி எனவும் தனியே வழங்கும். வராடி - இது வராளி என வழங்கும்.

373. கொல்லி, சவுராட்டம், குச்சரி, காம்போதி, மாளவி இவை அந்தந்தத் தேச ராகங்கள்; நம் தென்னாட்டில் வழங்கி வருபவை. சாயரி: இது சாவேரி என்று வழங்கும்.

374. சயசாட்சி: இது ஜலசாட்சி என்று வழங்கும்.

375. தாளவித மதுர சாரமாய் - பலதாளங்களோடு சேர்ந்து இனிய சுவையின் சாறுபோல்; சாரம் - சாறு. காளவிடம் - கரிய விஷம்.

376. பிலிற்ற - துளிக்க. கோம்பி - பச்சோந்தி.

377. சோப மயில் - ஒளியுடைய மயில்; சோபம் - சோபை, ஒளி; சோர்வுறும் மயில் என்னலும் ஆம்; பச்சோந்தியைக் கண்ட மயில் தன் வலி குன்றிச் சோர்வுற்று அதன் எதிர் தலைகுனிந்து படுக்கும் என்பர்; "கோம்பிக் கொதுங்கி மேயா மஞ்ஞை" (திருக்கோவையார். 21.) துயில் பயில - தூங்க. கோபப் பருந்து - சினமிக்க

378. சித்திரமு நின்றுருகத் தேவரமு தென்றுவப்பப்
பத்திபெற வொத்துதழீப் பாடினுள்—முத்துநகைத்

மகளிர் பாராட்டு

379. தையலே மாமோகச் சஞ்சீவி யேமதவேள்
தெய்வமே யெங்களுக்கோர் தீபமே—பெய்வளையே

380. கண்ணார் மணியே கனியேயுன் வாய்மொழிக்கு
விண்ணு ரமுதம் விலையாமோ—பண்ணுலே

381. இந்த வுலகு மிசைவீணைக் கின்னரர்வாழ்
அந்தவுல கும்விலை யாக்கவோ—சந்தமுலைக்

---

பருந்து. கோம்பியொடு மஞ்ஞையும், கிளியொடு பருந்தும், இவள் இன்னிசை கேட்கும் அமைதியால் தம் இயற்கைப் பகையைவிட்டுத், துயில் பயில, ஒரு கூட்டுறையும் என்க. தாபரமும் - மரங்களும்.

378. தேவர் அமுது என உவப்ப - கேட்போர் இந்த இசை தேவாமிர்தமே என்று மகிழ்ந்து கொண்டாட. பத்திபெற - பக்தி உண்டாக. ஒத்து தழீஇ - தாளத்தைத் தழுவி; தழீஇ: அளபெடை. சுருதி கூட்டும் இசைக்கருவியை அனுசரித்து.

379 முத்து நகைத் தையலே - முத்துப்போன்ற பற்களை யுடைய பெண்ணே. சஞ்சீவி - இறந்தோரைப் பிழைக்கச் செய்யும் ஓர் ஓடதி. மதவேள் தெய்வமே - மன்மதன் வழிபடும் தெய்வம் போன்றவளே. எங்களுக்குத் தீபமே - மகளிராகிய எங்களுக்கு ஒரு விளக்குப் போன்றவளே; தீபம் மற்றப் பொருள்களை விளக்கமுறச் செய்வதுபோல, மடந்தை தன் அழகால் அவளைச் சேர்ந்த மற்ற மகளிரை விளங்கச்செய்கின்றுள் என்பது அம்மகளிர் கருத்து; "வீமன் குலத்துக்கோர் மெய்த்தீபம்" (நளவெண்பா. I. 72.) பெய் வளையே - அணிந்த வளையல்களையுடையவளே; அன் மொழித் தொகை.

380. கண்ணார்மணியே - கண்ணில் விளங்கும் கருவிழியான மணிபோன்றவளே. உன் வாய்மொழிக்கு - உன் வாயிலிருந்து பிறக்கும் சொற்களுக்கு. விண்ணார் அமுதம் - தேவாமிர்தம். பண்ணுலே - உனபாட்டினுல்.

381. கின்னரர் - தேவரில் ஒரு வகையார். சந்த முலை - அழகிய முலையிடத்தேயுள்ள ; சந்தனம் அணிந்த முலையிடத்தே அணிந்துள்ள என்றலும் ஒன்றும்.

382. கொற்றமணிப் பூண்செய்த குற்றமுண்டோ தாங்காத
சிற்றிடைக்குக் கைம்மாறு செய்வதோ—வெற்றியுறை

383. ஊரனுக்குந் தென்னனுக்குந் தாருக்கு மூரிலே
சேரனுத் தாரிருந்தாற் சேதமோ—பூரையெனச்

384. செங்கலச மாமுலையார் செப்பவிது முற்றுதற்காய்
மங்கல வாழ்த்தெடுத்து வாழ்த்துவாள்—பொங்கருவிக்

385. குற்றாலம் பாடிக் குறும்பலவின் பேர்பாடிச்
சிற்றா ருடையபிரான் சீர்பாடிப்—பற்றாக்கக்

386. கங்காள வேடங் கருதி வழுத்துங்கால்
சங்காழி கைசோரத் தையலாள்—எங்கோமான்

---

382. கொற்ற மணிப்பூண் செய்த - சிறந்த இரத்திநாபரணஞ் செய்த. குற்றமுண்டோ - பிழையேனும் உண்டோ. தாங்காத சிற்றிடைக்கு - அந்த உன் முலைகளைத் தாங்காது ஒசியும் சிறு இடைக்கு. கைம்மாறு செய்வதோ - பிரதியுபகாரம் செய்யலாமா.

383. உறையூரன் - சோழன். தென்னன் - பாண்டியன். தார் அருக்கும் ஊரிலே - வழிபாட்டுக்கு வரிசை வரன்முறை பாராட்டப் படும் இந்தக் குற்றால ஊரில்; அருக்குதல்-பாராட்டுதல். (இதற்குமேல் தெளிவான பாடம் கிடைக்காமையால் இக்கண்ணியின் பொருள் விளங்கவில்லை.) பூரை என - முடிவுரையாகச் சொல் என்று.

384. செங்கலச மா முலையார்; தோழியர். இது முற்றுதற்காய் - இந்த இசைப்பாடல் முற்றுப்பெற. மங்கல வாழ்த்து - முடிவிற் பாடப்பெறும் மங்கல வாழ்த்துப் பாடல்.

385. சிற்றார் - சிறு ஆத்திமரம்; இது குற்றாலத்தில் உள்ள தல விருக்ஷங்களில் ஒன்று. பற்று ஆக்க - தன்பால் அக்குற்றால நாதருக்கு ஒரு பற்றுதலை உண்டாக்க.

386. கங்காள வேடம் - எலும்பணிந்த பிட்சாடன வேடத்தை; கங்காளம் - எலும்புக்கூடு. வழுத்துங்கால் - நினைத்துத், துதிக்கும் போது. சங்கு ஆழி கைசோர - அணிந்திருந்த வளையல்களும், மோதிரங்களும் கையைவிட்டுக்கழல; இது காமுற்ற மகளிரிடம் நிகழும் செயல்.

387. மீதே மயல்பெருகி மெய்மறந் தாள்மடவார்
ஏதோவென் றோடி யெடுப்பளவிற்—பூதப்

388. படையான் புவனம் படைத்தான்சொல் வேதக்
கிடையா னெமக்கே கிடைத்தான்—உடையான்

389. குழல்வாய் மொழிபாகங் கொண்டானோ ராயன்
குழல்வாய் மொழிபாகங் கொண்டான்—மழவிடையான்

390. நன்னகர்க்கும் பொன்னகர்க்கும் நாயகன்வந் தானென்று
சின்ன மெடுத்தெடுத்துச் சேவிப்ப—அன்னதுதான்

391. மூலமணி மந்திரம்போல் மோகவிடந் தீர்ந்தெழுந்து
சேலனைய கண்ணார் சிலர்சூழப்—பாலணுகித்

---

387. மயல் - ஆசை. மெய் மறந்தாள் - உடல் சோர்ந்து நினைவு இழந்த நிலையாளுள். மடவார் - உடனிருந்த மகளிர். ஏதோ என்று ஓடி - ஏதோ மடந்தைக்கு உடல் நோயுற்றது என்று அறியாதாராய் ஓடி. எடுப்பளவில் - அம்மடந்தையைத் தூக்கி எடுக்கும் நேரத்தில்.

388. பூதப்படையான் - பூதகணங்களைத் தனக்குச் சேனையாகக் கொண்ட சிவபெருமான். புவனம படைத்தான் சொல் வேதக் கிடையான் - உலகங்களை உண்டாக்கிய பிரமன் சொன்ன வேதங்களைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டவன்; இக்கண்ணி முரணணியில் அமைந்துள்ளது. உடையான் - என்னை அடிமையாக உடையவன்.

389. ஓர் ஆயன் - ஆனயனார் என்னும் அடியாரது. குழல் வாய் மொழி - குழலினிடத்தினின்று பாடிய பாட்டின்; குழலின் வாயின் வழியே பாடிய பாட்டின் என்னலும் ஆம். பாகம் - செம் பாகத்தை, அதாவது பக்குவத்தை. கொண்டான் - ஏற்று மகிழ்ச்சி கொண்டவன். மழவிடையான் - இளமை வாய்ந்த இடபத்தை வாகனமாக உடையவன்.

390. நன்னகர் - குற்றாலம். பொன்னகர் - சுவர்க்கநகர். சின்னம் - விருது; திருச்சின்னம் என்னும் காளமும் ஆம். எடுத் தெடுத்து - அடிக்கடி; அடுக்கு விரைவு குறித்தது.

391. மூல மணி மந்திரம் - யாவற்றிற்கும் மூலமான உயர்ந்த மந்திரம் போல; மணி மந்திரம் - விஷம் தீர உபயோகிக்கும் மணி மந்திரம் ஔடதம என்னும் மும்முறைகளால்; ஔடதம் இங்கு உபலக்ஷணத்தால் கூட்டப்பெற்றது. மோகவிடம் - காம மயக்க

392. தேர்மே லெழுந்தருளுஞ் செம்மேகம் போல்வடிவும்
கார்மேகம் போலிருண்ட கந்தரமும்—நீர்மேவிப்

393. பாதிரியுந் தும்பையும் பன்னீருஞ் சண்பகமும்
தாதகியும் பூத்த சடைக்காடும்—சோதிமுக்கண்

394. மாரு வருட்கடலும் வல்லிமுலைக் குஞ்சரங்கள்
சேருடுஞ் சந்தத் திருமார்பும்—வீருய்ப்

395. பிரமனறி யாத்தலத்துப் பெய்பிறையும் வேதச்
சிரமறியாத் தானச் சிலம்பும்—பரமபதத்

396. தம்மானை யெப்பொருளு மானனைக் குற்றாலப்
பெம்மானைத் தேவர் பெருமானை—வெம்மானைக்

---

மாகிய விஷம். சேல் அனைய கண்ணார் - சேல் மீன் போன்ற கண்களை யுடைய மகளிர்; சேல் - கெண்டை மீனில் ஒரு வகை. பால் அணுகி - அருகே சென்று.

392. சிவபிரான் வடிவுக்குச் செம்மேகம் உவமை. கந்தரம் - கழுத்து; கந்தரத்திற்குக் கார்மேகம், கழுத்தில் விடம் தங்கியிருத்தலால் உவமை. நீர்மேவி - கங்கை நீர் பொருந்தி.

393. பாதிரி, தும்பை, பன்னீர், சண்பகம், தாதகி, இவை மலர்கள்; தாதகி - ஆத்தி.

394. சோதி முக்கண் மாரு அருட்கடல் - ஒளியோடு கூடிய மூன்று கண்களாகிற ஒருபோதும் குறையாது அருள்சுரக்கும் கடல்கள்; கண்ணுக்குக் கடல் உவமை. வல்லி - குழல் வாய்மொழி யம்மையின். முலைக் குஞ்சரங்கள் - முலைகளாகிய யானைகள்; 166, 318. சேருடும் - பரிமளக் கலவைச்சேறில் திளைத்தாடும். சந்தம் - சந்தனம் நிறைந்த; சந்தம் அழகுமாம். வீருய் - பெருமிதத்தோடு.

395. பிரமன் அறியாத்தலம் - பிரமன் தேடி அறியமுடியாத இடமாகிய சிவபிரானது சிரம். பெய் பிறை - அணியப் பெற்ற பிறை. வேதச்சிரம் - வேதத்தின் சிரமாகிய உபநிடதம். தானம் - இடமாகிய திருவடி. பரமபதத்து - மேலான மோட்சமாகிய இடத்தில் உள்ள.

396. வெம்மானை - கொடியமானை; விரும்பத்தக்க மானை என்றலும் ஒன்றும்.

397. கையிலெடுத் தானையிரு கையெடுத்தாள் கண்டவுடன்
மெய்யிலெடுத் தாள்புளகம் வேண்டுவன--அய்யனருட்

398. சித்தா னவர்செயலுந் தீராத பேராசைப்
பித்தா னவர்செயலும் பேதமோ - வித்தார

399. மாவடிவம் பொன்னுன வல்லசித்தன் வாகனமேல்
தாவடிச்சென் ருள்சிறிது சாற்றுவாள்—பூவணியாய்

மடந்தை, தேரைத் தனக்கு உவமையாகக் கூறுதல்

400. தாழுங் கொடியிடையாய் தண்காவி நேத்திரத்தாய்
ஆழி தரித்தா யகல்கலையாய்—சூழ்குழலாய்

401. கொத்து மலர்க்கோதாய் கொங்கைநிறைபொன்னிறத்தாய்
முத்துவடத் தாய்பரம மோகத்தாய் — இத்தனையும்

---

397. இருகை எடுத்தாள் - இரண்டு கைகளையும் எடுத்துக் கும்பிட்டு வணங்கினுள். புளகம் - மெய்க்கூச்செறிதல். வேண்டுவன - தாம் வேண்டுவனவான.

398. அய்யன் அருள் - சிவபிரானுடைய அருளையுடைய. சித்தானவர் - ஞானிகள்தம். தீராத - நீங்காத. பேராசைப் பித்தானவர் - பேராசைப் பித்துக்கொண்ட கீழ்மக்கள். பேதமோ - வேறுபாடு உண்டோ. வித்தார - விரிவான.

399. மாவடிவம் பொன்னுன - மாட்சியுற்ற தனது திருமேனி பொன்னிறமான. வல்ல சித்தன் - எல்லாம் வல்ல சித்தனை சிவ பெருமான்; சிவபிரான் மதுரையில் எல்லாம்வல்ல சித்தனை ஒரு திருவிளையாடலையும் குறிப்பதாகும். தாவடிச் சென்ருள் - தாவி முன் சென்ருள். சிறிது சாற்றுவாள் - பின்வருமாறு சில கூறுவாளா யினள். பூவணியாய் - பூக்களை அணிந்துள்ளாய்; இது முதல் 400, 401 ஆகிய இரு கண்ணிகள் குற்ருலநாதர் பவனிவந்த தேருக்கும் மடந்தைக்கும் சிலேடை.

400-401. தேர்:—பூக்களை அணிந்துள்ளது. இடையில் தாழ்ந்த பல கொடிகளையுடையது. குளிர்ந்த செங்காவி நிறமான பட்டா டையையுடையது. சக்கரங்களைப் பூண்டுள்ளது. அகலாது நிற்கின் றது. சூழ்ந்த பல குழல் வாத்தியங்களை அருகே யடையப்பெற்றது. கொத்துக்களாகப் பல மலர்மாலைகளை யணியப்பெற்றது. மணத்தை நிறையப்பெற்ற பொன்னிறத்தையுடையது. முத்து வடங்கள்

402. நீயுமெனைப் போல்வாய் நிமலனைக்கொண் டேயகன்று
போயதுதா னீதியோ பொற்றேரே—நாயகனைத்

403. தாங்குழனைப் போல்யானுந் தாங்குதற்கென் பாற்றந்து
நீங்குதியா லல்லென்றால் நில்லென்றாள்—ஓங்கித்

404. தடுப்பவள்போற் செல்வாளைத் தாந்தடுத்து மாதர்
அடுத்தடுத்துத் தாந்தடுப்பா ராகத்—தொடுத்தொருமால்

405. தந்த பிரானு முறுவலித்துத் தானொருமால்
மைந்தனொடும் வேறோர் மறுகணைந்தான்—விந்தை

---

அணியப்பெற்றது. பார்ப்பவர்க்கு மிக்க மோகத்தை உண்டாக்குவது.

**மடந்தை** :—பூக்களை யணிந்துள்ளாள். தாழ்ந்து வளையும் கொடி போன்ற இடையையுடையவள். குளிர்ந்த நீலோற்பலம் போன்ற விழிகளை யுடையவள். மோதிரம் அணிந்துள்ளவள். விரகத்தால் தன்னைவிட்டு அகலும் ஆடையினள். அவிழ்ந்து புறமெங்கும் சூழ்ந்து விளங்கும் கூந்தலையுடையவள். கொத்தாக உள்ள மலர்களை முடிந்த கூந்தலை யுடையவள். தனங்கள்மீது நிறைந்து விளங்கும் பசலையாகிய பொன்னிறத்தை யுடையவள். முத்து வடங்களை யுடையவள். மிகவும் காம மயக்கம் உடையவள்.

402. நிமலனை - மலமற்றவரான குற்றாலநாதரை.

403. நீங்குதியால் - நீங்குவாயாக. அல் என்றால் - அவ்வாறு அவரை என்பால் விடமாட்டேன் என்றால். நில் என்றாள் - போகாது இங்கே நில் என்றாளாகி.

404. செல்வாளை - தேர்முன் எதிர் செல்வாளை. மாதர் - மற்ற மகளிர். அடுத்தடுத்து - பலர் பலமுறை தொடர்ந்து. தாம் தடுப்பாராக - தாமே அத்தேரை மேற்செல்லவிடாமல் தடுப்பவர்போல நிற்க; தேரைப் போகவொட்டாமல் தடுக்கவந்த மடந்தையை விலக்குபவரர்க வந்து அம்மகளிரே அத்தேரை மேற்போகவொட்டாது மேன்மேலும் வந்து தடைசெய்தனர் என்பது பெறப்படும். தொடுத்து - தொடர்ச்சியாக. மால் - காம மயக்கம்.

405. பிரானும் - குற்றாலநாதரும். முறுவலித்து - புன்சிரிப்புச் செய்து. மால் மைந்தனொடும் - திருமால் மகனை மன்மதனுடன்.

அரிவை

406. அரிவை யொருத்தி யரிவையர்க்கும் காதல்
பரிவை விளைக்கு மடப்பாவை—கிரிவரிவில்

407. வாங்குகைக்கு மெம்பெருமான் மாந்துகைக்கு மோர்கரத்தே
தாங்குகைக்கும் பார்க்குந் தடங்கண்ணாள்—பாங்காய்க்

408. கடிசூட்டுங் காமனுக்குங் காம னிரதிக்கும்
முடிசூட்டும் செம்பொன் முடியாய்த்—துடியடிகள்

409. அம்பொன் மடந்தைக் கபிடேக மாட்டுமிரு
கும்பகுடம் போலும் குவிமுலையாள்—உம்பரில்வாழ்

---

*406.* அரிவை-இருபதுமுதல் இருபத்தைந்து பிராயம்வரையில் உள்ள பருவத்துப் பெண்; விந்தை அரிவை - விந்தைபோன்ற அரிவை; விந்தை - சயமகள். அரிவையர்க்கும் - மற்ற மகளிர்க்கும். காதல்பரிவை விளைக்கும் - இவள்பால் காதல் இன்பம் கொள்ளும்படி செய்யும்; இவள் மற்றமகளிரே விரும்பும் அழகுடையவள் என்பது; **பரிபாடல்.** *21* , *22* உரை; **சீவக.** *587*, *2447* உரை; **கம்ப.** சூர்ப்பணகைப் : *60*. மடப்பாவை - இளம்பெண். கிரி வரிவில் - மேருமலையைக் கட்டமைந்த வில்லாக.

*407.* வாங்குகைக்கு - வளைத்தகைக்கு. மாந்துகைக்கு - விழுங்குவதற்கு. தாங்குகைக்கு - ஏந்துவதற்கு. பார்க்கும் - நோக்கும். வாங்குகைக்கு அம்புபோலவும், மாந்துதற்கு விடம்போலவும், தாங்குகைக்கு மான்போலவும் விளங்கும் தடங்கண்ணாள் என்க; தடங்கண் - இடமகன்ற கண்.

*408.* கடிசூட்டுங் காமன் - மணம்மிக்க மாலை யணிந்த மன்மதன்; சூட்டும் என்ற குறிப்பால் கடி என்பதற்கு மாலை எனப் பொருள் கொள்ளப்பட்டது. காமன், இரதி - மன்மதன் மனைவியான இரதிதேவி. துடி அடிகள் - உடுக்கை போன்ற அடிகளையுடைய. யானைக்கன்றின் பாதம் துடிபோன்றது ஆதலின் அதற்குத் துடியடி என்று ஒரு பெயர் வழங்கும்.

*409.* அம்பொன் மடந்தைக்கு - திருமகளுக்கு. கும்ப குடம் - கும்பமாகிய குடம்; ஒரு பொருட் பன்மொழி. உம்பரில் - வானில்.

410. மின்னை யுருப்பிடித்து மேகத்தை மேலேற்றிப்
பொன்னை மயக்கவிட்ட பூம்பாவை—வன்னமணிக்

411. கோமே தகவயிரக் கொத்துமலர்ப் பாவரங்கில்
பூமேல் மடவார் புடைசூழக்—காமேவு

412. கூந்தலணி தொங்கல் குலாவவொரு தாரிகையை
மாந்தளிர்போற் செங்கரத்தில் வாங்கியே—பூந்தார்

**அரிவை சித்திரங்கள் வரைதலும், அவற்றைத்
தோழியர்க்குக் காட்டுதலும்**

413. எழுதுமணி மன்றத் தெழுதா வடிவன்
பழுதுபடாச் சீரெழுதும் பாங்கர்த்—தொழுதுசென்று

414. நேரிழையார் காதலித்து நீயெழுதும் வண்ணமெல்லாம்
காரிகையா யிங்கெமக்குக் காட்டுகெனச்—சாரிகையீர்

---

410. உருப்பிடித்து - ஓர் உருவாக அமைத்து. பொன்னை மயக்கவிட்ட - பொன்னை மயங்குமாறு செய்த; பொன்னை - வடிவிற் சிறந்த இலக்குமியை என்னலும் ஆம். பூம்பாவை - அழகிய பதுமை போன்றவள். வன்ன மணி - அழகிய இரத்தினங்களான.

411. கோமேதக வயிரக் கொத்து மலர் - கோமேதகமும் வயிரமும் மலர்க் கொத்துக்கள்போல் விளங்கிய. பாவரங்கு - இடமகன்ற மேடை, அல்லது நடனசாலை. பூமேல் மடவார் - மானிட மகளிர். புடைசூழ - நாற்புறமும் சூழ. காமேவு - சோலைபோல் அடர்ந்து விளங்கும்.

412. கூந்தல் அணி தொங்கல் குலாவ - கூந்தல் மீது அணிந்த மாலை விளங்க. தாரிகை - சித்திரம் எழுதுங் கோல். மாந்தளிர்போற் செங்கரம்; மடந்தையின் கரத்திற்கு மாந்தளிர் உவமை. பூந்தார் - அழகாகவும், ஒழுங்காகவும் நிருமாணம் செய்யப்பட்ட; தார் - ஒழுங்கு.

413. எழுது மணி மன்றத்து - சித்திரச் சாலையாகிய அழகிய மண்டபத்தில். எழுதாவடிவன் - பிறரால் எழுதமுடியாத குற்றால நாதருடைய. பழுது படாச்சீர் - குறைவுபடாத அழகை. பாங்கர்- அருகே.

414. நேரிழையார் - அரிவையைச் சேர்ந்த மகளிர். வண்ணம்- விதம்; அல்லது அழகுமாம். காரிகை - வடிவழகுள்ள பெண்,

415. ஆலையிட்ட வேள்விசயத் தண்ணலையெண் ணாதுவிண்ணோர்
சாலையிட்ட வேள்வித் தலம்பாரீர்—ஆலைவாய்ச்

416. செக்கனு ராட்டுஞ் சிரர்கலக்க மும்பாரீர்
தக்கனு ராட்டுத் தலைபாரீர்—புக்கமரர்

417. பாதவங்க ளாகப் பலகோடி காலமெல்லாம்
மாதவங்கள் செய்யும் வகைபாரீர்—ஆதிபிரான்

---

சாரிகையீர் - தோழியர்காள்; இது அரிவை, மகளிரை நோக்கிக் கூறிய விளி.

415 வேள் ஆலையிட்ட விசயத்து அண்ணலை - மன்மதனை ஆலையிலிட்டு ஆட்டியதுபோல் அழித்த வெற்றியையுடைய கடவுளாகிய சிவபெருமானை; ஆலை இட்ட வேள் - கரும்பை வில்லாகக் கொண்ட மன்மதனை என்னலும் ஆம்; ஆலை - கரும்பு; " ஆலையஞ்சிலைவேள் " (கந்தபுராணம் காமதகனப் : 90.) எண்ணாது - அவர் பெருமையைக் கருதாமல் ஒதுக்கி. விண்ணோர் சாலையிட்ட வேளவித் தலம் - தேவர்கள் யாகசாலை ஏற்படுத்திய இடம் இது தக்கயாகம் நடந்த இடத்தைக் காட்டும் சித்திரம். ஆலைவாய் - ஆலையினிடத்து.

416. செக்கனுர் - செக்கார்கள். ஆட்டும் - ஆட்டுகின்ற சிரர் - சிரங்களை யுடையவர். கலக்கமும் பாரீர் - படும் துன்பத்தையும் பாரீர்: சிவபிரான பொருட்டு அல்லாமலும், மந்திர விதிப்படி அல்லாமலும் யாகப் பசுக்களாக ஆடு முதலிய பிராணிகளை வெட்டுவோர்களை யமன் ஏவற்படி தூதர்கள் பின் செக்கிலிட்டு ஆட்டி வருத்துவர் என்பது விளங்க இங்குச் சித்திரிக்கப்பட்டது என்க. தக்கனுர் - தக்ஷனது. ஆட்டுத் தலை பாரீர்: சிவபிரான் ஏவ வீரபத்திரக் கடவுள் தக்கன் தலையைத் துணித்தெறிந்தார். அது காணமற்போகவே பின தக்கன் உடலில் ஓர் ஆட்டுத்தலையைப் பொருத்தி அவனுக்கு உயிர் உண்டாக்கப்பட்டது என்பது புராண வரலாறு. அவ்வாறு ஆட்டுத்தலையுடன் தக்கனை அரிவை, தான் சித்திரித்ததைப் பாரீர் என்றாள. புக்கு அமரர் - தேவர்கள் இக் குற்றாலத்தலத்தை யடைந்து.

417. பாதவங்களாக - மரங்களாகத் தோன்றி; தேவர்கள் தக்கன் யாகத்திற்கு உதவியாக இருந்து அதனைச் செய்ததால் தங்களுக்கு ஏற்பட்ட பாவந்தீரக் குற்றாலமலையில் பலவித மரங்க

418. இத்தலத்தே தோன்றி யிமையோரைப் பொன்னுலகாம்
அத்தலத்தே வைத்த வருள்பாரீர்—மெய்த்தலத்தே

419. நீங்கா திருத்திரென வானோர் நினைத்தவரம்
வாங்கா தளித்த வளம்பாரீர்—பாங்காகப்

420. இந்திரன் பூசிக்க விமையோர்கள் பூசிக்கப்
புந்தித் தமிழ்முனிவன் பூசிக்கப்—பிந்தியொரு

421. போதகம் பூசித்த புனிதனைப் பலாவடிவாய்
வேதம்பூ சிக்கும் விதிபாரீர்—சோதி

---

ளாகத் தோன்றிப் பலகாலம் தவம் செய்தமை; **திருக்குற்றாலத்தல புராணம்.** 16-வது சருக்கத்திற் காண்க. ஆதிபிரான் - யாவர்க்கும முதற் கடவுளாகிய சிவபெருமான்.

418. இமையோரை - தேவர்களை. பொன்னுலகாம் அத்தலத்தே - பொன்னுலக மென்னும் சுவர்க்க உலகத்தில். அருள் பாரீர் - அருள் புரிவதுபோலச் சித்திரிக்கப்பட்டதைப் பார்ப்பீராக; தேவர்க் கருள்புரிந்தது; **திருக்குற். புரா.** 16. சருக்கம். மெய்த்தலத்தே - என்றும் அழியாது நிலைத்திருக்கும் இக்குற்றாலத் தலத்தே.

419. நீங்காது இருத்திர் என-என்றும் அகலாது எழுந்தருளி இருப்பீராக என்று. வாங்காது அளித்த வளம் - குறையாமல் அருள்புரிந்த சிறப்பு; இது தேவர்களுக்குச் சிவபிரான் குற்றாலத்தில் என்றும் இருந்து அருள்புரிவதாக வரங்கொடுத்ததைக் காட்டும் சித்திரம். பாங்காக - சிறப்பாக, விதிப்படி என்னலும் ஆம்.

420. புந்தித் தமிழ் முனிவன் - அறிவிற் சிறந்த தமிழ் முனிவரான அகத்தியன்.

421. போதகம் - யானை; யானை பூசித்தது; **திருக்குற்றாலத்.** 18-வது சருக்கம். புனிதனை - பரிசுத்தரான குற்றாலநாதரை. பலாவடிவாய் - குறும்பலா என்னும் மரவடிவாய்; வேதம் குறும்பலா வடிவாய்ப் பூசித்தது; **திருக்குற்றாலத்.** 11-வது சருக்கம். இது இந்திரன், இமையோர், அகத்தியர், யானை, பலாவாகிய வேதம் முதலியன பூசித்ததை விளக்கும் சித்திரம்.

---

(பி - ம்.) 421. விதம்பாரீர்.

422 அயனுகி மாலா யரனுகி நிற்பார்
பயனுந் திருக்கோலம் பாரீர்—உயர்சிலைகள்

423. எல்லாஞ் சிவலிங்க மெவ்வுயிருந் தேவரென்றே
வல்லா முலையீர் வணங்கிடீர்—ஒல்லென்

424 முழுநீர் வடவருவி மூழ்கினுர் பாவம்
கழுநீரா யோடுவது காணீர்—செழுமலையில்

425. தென்றலங்கன் றென்றுதினஞ் சென்றோர் வினைத்தளிரை
மென்றுமென்று தின்னு விதம்பாரீர்-என்றுரைப்பத்

426. தேவருந் தேவர் குழாங்களுந் தேவார
மூவரு மூவர் முனிவரரும்—யாவரும்

---

422. நிற்பார் - விளங்குபவரான குற்றாலநாதருடைய. பயனும்-திருக்கோலம் பாரீர் - நம் புண்ணியத்தின் பயனுக விளங்கும் அழகிய காட்சியைப் பாரீர். உயர் சிலைகள் எல்லாம் - இச் சித்திரத்தில் காணப்படும் உயர்ந்து விளங்கும் குன்றுகள் அல்லது மலைகள் எல்லாம்.

423. வல் ஆம் முலையீர் - சூதாடுங் கருவியை ஒத்த நகிலை யுடைய பெண்களே. ஒல்லென் - விரைவாக; இது ஒலிக் குறிப்பு; ஒல்லென்று வணங்கிடீர் என்றும், மூழ்கினுர், (424) என்றுங் கூட்டிப் பொருள் கொள்ளலாம். இது ஒரு சித்திரம்.

424. முழுநீர் - நீர் நிரம்பிய. வடவருவி மூழ்கினுர் பாவம் கழுநீராய் ஓடுவதைக் காட்டும் சித்திரம்; 13.

425. தென்றல் அம் கன்று - இளம் தென்றற்காற்று. சென்றோர் - குற்றாலத்தலத்திற் சென்றவர்களுடைய. வினைத்தளிரை - பாவமாகிய தளிர்களை; இது தென்றலாகிய ஒரு மான்கன்று தெரிசிப்போர் வினைத் தளிர்களைத் தின்னும் விதத்தை விளக்கும் சித்திரம். மேற்கூறிய சித்திரங்கள் குறிப்பிடும் வரலாறுகளின் விரிவைத் திருக்குற்றாலத்தலபுராணத்தில் காண்க

426. தேவார மூவர் - தேவாரப் பாசுரங்களை அருளிய ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி ஆகிய மூவர். மூவர் முனிவார்-இருடிகளிற் சிறந்தோரான அகத்தியர், பதஞ்சலி, வியாக்ரபாதர்.

427. வாரிமய மான வடகங்கை போலொலிப்பச்
சீரிமய மானமணித் தேர்மீதில்—வாரியுண்ட

428. தாலத்தான் பெண்ணிருந்த தாலத்தான் பெண்ணுக்கும்
தாலத்தான் போற்றியகுற் றாலத்தான்—மூலத்தான்

429. காசிநக ரான்கடவுட் காழிநக ரானடத்தும்
வாசிநக ரான்சேது மாநகரான்—ஆசிலாச்

430. செங்காடும் வெண்காடுஞ் சீதவே தக்காடும்
கொங்காடுஞ் சாய்க்காடுங் கொண்டபிரான்-இங்காட

---

427. வாரிமயமான - கடல்போன்ற. சீர் இமயமான மணித் தேர் - சிறப்புற்ற இமயமலைபோன்ற பெருமை வாய்ந்த அழகிய தேர்; மான - ஒப்பான; மணித்தேர் - மணிகளால் அலங்கரிக்கப்பெற்ற தேர் என்றலும் ஆம். வாரியுண்ட - கடலை எடுத்துக் குடித்த.

428. தாலத்தான் - நாவையுடைய அகத்தியர்; தாலம் - நாக்கு. பெண்ணிருந்த தாலத்தான் - கலைமகளாகிய ஒரு பெண்ணிருந்த நாவையுடைய பிரமதேவன். பெண் ஆக்கும் தாலத்தான் - ஆண் பனையைப் பெண் பனையாகச் செய்தவன்; தாலம் - பனை; இது சம்பந்தர் பனங்காட்டூரில் நிகழ்த்திய அருட்செயல். போற்றிய - மேற்கூறிய அகத்தியர், பிரமன், சம்பந்தர் ஆகிய மூவர் போற்றித் துதித்த. மூலத்தான் - எல்லாவற்றிற்கும் மூலகாரணமானவன்.

429. கடவுள் காழி நகரான் - தெய்வத்தன்மை பொருந்திய சீகாழி என்னும் நகரை யுடையவன். நடத்தும் வாசி நகரான் - முன் நடத்திய வாசிதீரப் பொன்தந்த திருவீழிமிழலை என்னும் நகரையுடையவன்; காழி நகரான் நடத்தும் வாசி நகரான் என்பதை ஒரு தொடராகக் கொண்டு சம்பந்தர் நடத்திய வாசி தீரப்பொன் தந்த நகர் எனவும் கொள்ளலாம். சேதுமா நகரான் - இராமசேது என்னும் திருவணையாகிய இராமேச்சரம் என்னும் பெரிய நகரை யுடையவன். ஆசு இலா - குற்றமில்லாத.

430. செங்காடு - திருச்செங்காட்டன்குடி. வெண்காடு - திருவெண்காடு. சீத வேதக்காடு - குளிர்ந்த வேதாரணியம் என்னும் திருமறைக்காடு. கொங்கு ஆடும் சாய்க்காடும் - வாசனை உலவும் திருசாய்க்காடு என்னும் தலம். கொண்ட - தமது இருப்பிடங்களாகக் கொண்ட. இங்கு ஆட - இங்குப் பவனி விழாவாட.

431. வந்தா னெனப்பேரி மாரிமுகிற் போற்கலிப்பக்
கொந்தார் மடமயிலின் கூட்டம்போற்—பைந்தாமச்

432. சேடியருந் தானுமெதிர் சென்றுபணிந் தாளுருவால்
கோடிபக லோருருவங் கொண்டதோ—சூடுமதி

433. மாலையால் மாலை வடிவெடுத்த தோமலரால்
சோலையெல்லா மோருருவாய்த் தோற்றியதோ—வேலைகரை

434. கொள்ளாக் கருணைவெள்ளக் கோலமோ வென்றயிர்த்தாள்
உள்ளாசை வெள்ளத்தி னூடயர்ந்தாள்—நள்ளாறு

மகளிர் முறையீடு

435. கோகருணை நாதரே குற்றாலக் கூத்தரே
நாகருணை பஞ்சநதி நாயகரே—மாகயிலை

---

431. மாரி முகில் - மழை பெய்யும் மேகம்; மழைக்காலத்து மேகம் என்னலும் ஆம். கலிப்ப - ஒலிக்க; பேரி ஒலிக்கு முகிலொலி உவமை. கொந்து ஆர் மடமயிலின் கூட்டம்போல் - பூங்கொத்துக்களை யணிந்த இளமயில்களின் கூட்டம்போல. பைந்தாம - புதிய மாலையணிந்த.

432. சேடியர் - பணிப்பெண்கள். தானும் என்றது அரிவையை. கோடிபகல் - கோடி சூரியன. சூடுமதி - (குற்றாலநாதர்) சூடிய சந்திரன்.

433. மாலையால் - மாலை நேரத்தால். மாலை வடிவு - ஒரு பூமாலையின் வடிவத்தை; இனி, மதி மாலையால் - சந்திரனாகிய சிவபிரானது தலையில் அணியும் மாலையினால்; "மாதர் பிறைக் கண்ணியானை" தேவாரம். மாலை - மாலைக்காலமும்; வடிவில்லாத மாலைப்போதும் ஒருவடிவெடுத்ததோ என்க. மலரால் - சூடிய மலர்களால். எல்லாச் சோலைகளும ஓர் உருவெடுத்து வந்து மலர்ந்தனபோல மிகுதியாக மலர்களை அணிந்திருந்தார் என்பது.

434. வேலை - கடலின். கரை கொள்ளா - கரைக்குள் அடங்காத. கருணை வெள்ளக் கோலமோ - கருணைப் பிரவாகத்தின் அழகோ. அயிர்த்தாள் - சந்தேகங் கொண்டாள். ஊடு - இடையே. அயர்ந்தாள் - மயங்கினாள். நள்ளாறு - திருநள்ளாறு என்னும் தலம்.

435. கோகருணை - திருக்கோகரணம் என்னும் தலம். நாகு அருணை - அருணசலம் என்னும் மலை; நாகு - மலை. பஞ்ச நதி -

---

(பி - ம்.) 432. லோருருவுங்.

436. காளத்தி வாணரே காதலா ளிவளை
ஆளத் திருவுளமோ வல்லவோ—தாளத்தின்

437. வேய்ங்குழலுந் தன்னைமிக்க தாயவ ராநிற்கப்
பூங்குழலைக் காய்வதுதான் போந்ததோ—தீங்குழலால்

438. கந்தமலர்ப் பாயல் கனல வனலூதும்
இந்த மதித்தழலை யேன்முடித்தீர்—அந்தமதி

439. மன்றலுற்ற செஞ்சடைக்கு வாரமதி யானாலும்
தென்றலைத்தான் கங்கணங்கள் சீறாதோ—இன்றளிக்கில்

---

திருவையாறு என்னும் தலம்; நாகருணை நாயகரே என்றும் பஞ்ச நதி நாயகரே என்றும் கூட்டிப் பொருள் கொள்க.

436. மாகயிலை வாணர், காளத்தி வாணர் என்க. தாளத்தின்-தாளத்திற்கு ஒத்துள்ள.

437. வேய்ங்குழலும் - குழல்வாய் மொழியம்மையும். தன்னை - இவ்வரிவையை. மிக்க தாயவரா நிற்க - மிகவும் தாயாதிபோலப் பகைகொண்டு உம்மருகே இருக்க. பூங்குழலை - பூவணிந்த கூந்தலையுடைய அரிவையை. காய்வதுதான் போந்ததோ - நீவிரும் பகைப்பதுதான் உமக்கு பொருந்திய செய்கையோ. தீம் குழலால் - இனிய குழலோசையால்.

438. கந்தமலர்ப்பாயல் - மணங்கமழும் பூப்பள்ளி; புஷ்ப சயனம். கனல - நெருப்புப்போல எரியும்படி. அனல் ஊதும் - நெருப்பை ஊதிமூட்டும். மதித்தழலை - சந்திரனாகிய நெருப்பை. ஏன் முடித்தீர் - ஏன் சடையில் முடிந்து கொண்டீர்; காமத்தின் பாற்பட்டோருக்குச் சந்திரன் நிலவொளி நெருப்புப் போன்றது; "பூணிலா மென்முலைமேற் போதச் சொரிந்ததே, நீணிலா வென்னு நெருப்பு" (நளவெண்பா. I. *102.*) அந்தமதி - அந்தச் சந்திரன்.

439. மன்றலுற்ற-பொருந்திய. வாரம் அதி ஆனாலும்-உரிமை அதிகமானாலும்; நீவிர் அளிக்கும் உரிமை அல்லது அன்பு அதிகமானாலும்; 'வார மென்னினிப் பகர்வது' (கம்ப. அயோத். மந்திரப். *39.*) இன்று அளிக்கில் - இன்று எம் அரிவையிடம் நீவிர் அருள்புரிவீரானால், தென்றலைத்தான் கங்கணங்கள் சீறாதோ - புலிபோல் சீறும் தென்றற்காற்றை உமது கையில் உள்ள கங்கணங்களாகிய பாம்புகள் சீறி உண்டுவிடாதோ; பாம்புக்குக் காற்று உணவு ஆதலின் உண்டு விடாதோ என்றனர்.

440. காளைமத னைப்படுக்குங் கண்ணினாள் கன்னிகுயிற்
காளமத னைப்படுக்குங் கன்னிமுன்—நாளிரவில்

441. சந்து பொருந்தியநீர் தையலாள் பூமுலைக்குச்
சந்து பொருந்தத் தகுங்கண்டீர்—வந்திவட்கோர்

442. மாலைகொடீ ரன்றேல் வளைகொடீ ரல்லவென்றால்
சேலைகொடீ ரிம்மூன்றுஞ் செய்யீரேல்—ஆலை

443. மதனை விலக்கிவிடீர் மன்றா டினாலும்
இதனை வழக்குவிடேம் யாங்கள்—முதல்வரே

---

440. காளை மதனைப் படுக்குங் கண்ணினாள் - காளைப் பருவத்தனான மன்மதனை வாட்டி யழிக்கும் கண்களையுடையவளும். கன்னி குயில் காளம் அதனை படுக்கும் கன்னி முன் - இளம் குயிலாகிய மன்மதனுடைய காளத்தைத் தன் இனிய இசையால் தோற்று அடங்கச் செய்யும் பெண்ணாகிய பரவை நாச்சியார் முன்னே. நாள் இரவில் - முன்னொருநாள் இரவில்.

441. சந்து பொருந்திய நீர் - சுந்தரர் பொருட்டுத் தூது செல்ல அமைந்த நீர். தையலாள் - ஒரு பெண்ணாகிய அரிவையின். பூமுலைக்குச் சந்து பொருந்த - அழகிய முலைகளுக்குச் சமாதானம் ஏற்பட ; சந்தப்பூச்சு எரிபோற் சுடாமல் குளிர்ச்சி பொருந்தி யிருக்கும்படிச்செய்ய. தகும் - நீர் இவளை ஏற்றுக்கொள்வது தக்க தாகும். கண்டீர் - முன்னிலை அசை.

442. கொடீர் - கொடுப்பீராக. சேலை கொடீர் - கழலாதிருக்கும் படி ஆடையைக் கொடுப்பீராக.

443. ஆலைமதனை - கரும்பை வில்லாகவுடைய மன்மதனை ; ஆலை-கரும்பு; 415. விலக்கிவிடீர்-எங்களைத் துன்புறுத்தாமல் விலக்கி விடீர். மன்றாடினாலும்-எதிர் வாதம் செய்தாலும்; நீவீர் சித்திர சபையாகிய மன்றில் நடனம் புரிந்தாலும் என்னும் பொருள் தொனிக்கின்றது; "மன்றாடி கான்மாறி யானவேன்" (திருவாலவாயுடையார் திருவிளையாடல். 52: 11.) முதல்வரே யாங்கள் இதனை வழக்கு விடேம் - தலைவரே இந்த வழக்கை யாங்கள் விடமாட்டோம்.

444. என்பார் சிலகூற யாரேனுந் தம்மிடத்தில்
அன்பான வர்க்குருகு மண்ணறுன்—முன்பார்த்த

445. நாட்டமொன்றுல் வேளும் நடுங்காமல் மற்றென்றுல்
வாட்டடங்க ணளு மயங்காமல்—காட்டும்

446. வலப்பா லருணோக்கம் வைத்தருளி வானோர்
கலப்பாக வீதி கடந்தான்—இலக்காம்

தெரிவை

447. தெரிவை யிவளொருத்தி சித்திரப் பூம்பாவை
அரிவையருக் கெல்லா மரசு—வரியளியை

---

444. என்பார் சில கூற - என்று அரிவையின் பொருட்டு மகளிர் சில மொழிகள் கூற; சில என்றது, கண்ணி 434 முதல் 444 வரை உள்ளவை. யாரேனும் - யாராயிருந்தாலும். அண்ணல் - பெருமை தங்கிய குற்றால நாதர். முன் பார்த்த - முன் விழித்துப் பார்த்த.

445. நாட்டம் ஒன்றுல் - நெற்றிக் கண்ணுகிய ஒன்றினுல். வேளும் - மன்மதனும். மற்றொன்றுல் - மற்றொரு கண்ணுகிய இடக்கண்ணினுல். வாள்தடம் கண்ணளும் - வாள் போன்று அகன்ற கண்களையுடைய குழல்வாய்மொழி அம்மையும். மயங் காமல் - சோர்வுறுமல். காட்டும் - அடியார்களுக்குக் காட்டும்.

446. வலப்பால் அருள் நோக்கம் - வலப்புறத்ததான அருட் கண்பார்வையை. வைத்தருளி - அரிவை பால் அன்போடு வைத்து. வானோர் கலப்பாக - உடன் வந்த மற்ற தேவர்களோடுகூட. வீதி கடந்தான் - அந்த வீதியைத் தாண்டிச் சென்றூர். இலக்கு ஆம் - யாவர்க்கும் குறிப்பொருளான; அதாவது யாவர் திருஷ்டியும் அவள் மேல் விழக்கூடிய அழகு வாய்ந்த என்பதாம்.

447. தெரிவை: இருபத்தைந்து முதல் முப்பத்தைந்து பிராயம் வரையுள்ள பருவப்பெண். சித்திரப் பூம்பாவை - சித்திரிக்கப்பெற்ற அழகிய பதுமைபோன்றவள். அரிவையர்க்கெல்லாம் அரசு - பெண் களுக்கெல்லாம் அரசி போன்றவள்; சித்திரப்பூம்பாவை அரிவையர்க்

---

(பி - ம்.) 447. அரியளியை.

448. மானைக் கடுவை வடுவைப் பொருதுவென்று
மீனைப் படுக்கும் விழிவலையாள்—ஏனமலை

449. ஒன்றுவளைத் தார்மே லுந்தளத் தோடிரண்டு
குன்றுமுளைத் தாலனைய கொங்கையாள்—மன்றல்

450. குமிழும் பிறையுங் குமுதமு முத்தும்
தமிழு மொருகமலந் தாங்க—அமிழ்தக்

451. கரும்பும் பசுங்கமுகுங் காந்தளும்வ ராலும்
அரம்பையு மாலு மரசும்—இரண்டு

---

கெல்லாம் என்று கூட்டிப் பொருள்கொள்ளலும் ஆம். வரி அளியை - பல கோடுகளோடு கூடிய வண்டை.

448. கடுவை - விஷத்தை. வடுவை - மாவடுவை. பொருது வென்று - தன் உருவின் அழகால் போரிட்டு வெற்றிகொண்டு; மகளிரின் கண்ணுக்கு உவமையான அளி, மான், கடு, வடு இவை தெரிவையின் கண்ணழகுக்குத் தோற்றவை யெனபது. மீனைப்படுக்கும் - மீனைத்தன்னுள் அகப்படச் செய்யும். விழி வலையாள் - விழியாகிய வலையையுடையவள். ஏனமலை - மற்ற மேருமலையாகிய.

449. ஒன்று வளைத்தார் - ஒன்றை முன் சிவபிரான் வில்லாக வளைத்துவிட்டார். மேலும் - அவ்வாறு மேலும் வளைக்க முடியாத படி. தளத்தோடு இரண்டு குன்று முளைத்தால் அனைய - அடித்தல மாகிய உறுதியோடு இனி வளைக்க முடியாதபடி இரண்டு குன்றுகள் முளைத்தன போல விளங்கும். மன்றல் - அழகிய, தெளிவான.

450. குமிழ் - குமிழம்பழம். குமுதம் - செவ்வல்லி. குமிழ் மூக்குக்கும், பிறை நெற்றிக்கும், குமுதம் வாய்க்கும், முத்து பற்களுக்கும், தமிழ் பேச்சுக்கும்; (தமிழ் - இனிமையென்ற பொருள் பற்றி) கமலம் முகத்திற்கும்.

451. அமிழ்தக் கரும்பு - அமிர்தம் நிறைந்த கரும்பு; இது தோளுக்கு. கமுகு - பாக்கு மரம்; இது கழுத்துக்கு. காந்தள் - காந்தள் மலர்; இது கைக்கு. வரால் - வரால் மீன்; இது முழங்காலுக்கு. அரம்பை - வாழை; இது தொடைக்கு. ஆல் - ஆலிலை; இது வயிற்றுக்கு. அரசு - அரசிலை; இது பெண் குறிக்கு, இரண்டு - இரு.

---

(பி - ம்.) 449. லுந்தரளத் தோடிரண்டு.

452. பதுமமிசை தாங்கியொரு பைங்கொடிநின் றன்ன
மதுமலர்ப்பூங் கூந்தல் வனிதை — புதுமையாய்

453. ஆளுஞ் சிலைமதனுக் காணையுஞ் செங்கோலும்
நாளும் நடத்து நடையினாள் — நீளும்

454. மரகதப் பச்சைமணி மாளிகையில் மாரன்
குரகதக் கிள்ளைக் குலம்போல் — அரமகளிர்

455. ஆயம் புடைசூ ழயிராணி போன்மடவார்
நேயம் புடைபெயரா நின்றேத்த — தூயநறும்

456. பாசடையி னாப்பணொரு பங்கயம்பூத் தாலனைய
வாசமணி யாசனத்தில் வந்திருப்ப — நேசக்

---

452. பதுமம் மிசை தாங்கி - தாமரை யரும்புகளை மேலே தாங்கிக் கொண்டு; பதுமம் - தனங்கள். ஒரு பைங்கொடி நின்றன்ன - ஒரு பச்சிளங்கொடி நின்றாற் போல. 450. குமிழ் முதல் 452. பைங்கொடி வரையுள்ளவை தெரிவையின் அங்கங்களுக்கு உருவகங்களாய் நின்றன; இது முழுவதும் இல் பொருளுவமமும் ஆம். புதுமையாய் - மற்ற மகளிரிடம் அமையாத புதுமைத் தன்மையாய்.

453. ஆளும் - தன் அடிமையாகக் கொண்டு ஆளும். சிலை மதனுக்கு - கரும்பு வில்லையுடைய மன்மதனுக்கு. ஆணையும் செங்கோலும் - ஆக்ஞா முத்திரையும் செங்கோலும். நாளும் - வாழ் நாளும்; தினந்தோறும் என்னலும் ஆம். நடையினாள் - செயலை யுடையவள்; நடை - நடப்பதும் ஆம்.

454 மாரன் - மன்மதனுடைய. குரகதக் கிள்ளைக்குலம் - குதிரையாகிய கிளிகளின் கூட்டம். அரமகளிர் - தேவமகளிராகிய.

455. ஆயம் புடைசூழ் அயிராணிபோல் - தோழியர் கூட்டம் பக்கங்களிற் சூழ்ந்திருக்க விளங்கும் இந்திராணி போல. மடவார் - பெண்கள். நேயம் புடை பெயரா நின்று ஏத்த - அன்பு இடம்விட்டு வெளியே செல்லாமல் சூழ்ந்து நின்று புகழ்ந்து பாராட்ட.

456. பாசடையின் நாப்பண் - பசிய இலைகளின் நடுவே; பாசடை மற்ற மடவார்க்கும், பங்கயம் பூத்தது தெரிவைக்கும் உவமைகள். வாசமணி யாசனம் - மண மூட்டப்பட்ட மரகதமணி; ஆசனம் பாசடைக்கு உவமை.

457. கரும்பா டினியமொழிக் கானக் குயில்போல்
வரும்பா டினியொருத்தி வந்தாள்—திருந்திழையே

458. மாதர்க் கரசே மலரா சனத்திருவே
காதற் பசும்பிடியே கன்னிகையே—ஈதுதான்

459. முந்துமலர் வீடோ முளரிப் புதுவீடு
வந்துகுடி யேறநாள் வந்ததோ—சந்தக்

460. குரும்பைமுலை போலக் கொடிமருங்குற் கூந்தல்
கரும்புக்குச் செய்ததுண்டோ சொல்லாய்—சுரும்பை

---

457. கரும்பு ஆடு இனிய மொழி - ஆடிய கருப்பஞ்சாறு போன்ற இனிய சுவை யளிக்கும் சொற்களையுடைய. கானக்குயில் போல் வரும் பாடினி - காட்டில் வாழும் குயில் போல் வந்த பாடினி; குயில் என்றது அப்பாடினியின் நிறத்தையும் அவள் இசையின் சிறப்பையும் குறிக்க வந்த உவமை; கானக்குயில் போல் - இசையிற் குயில் போன்று என்னலும் ஆம். வந்தாள்-அங்கு வந்தவள். திருந் திழையே - சீர்திருத்தி யமைக்கப்பெற்ற அணிகளையுடைய பெண்ணே; இது அன்மொழித் தொகை.

458. மலர் ஆசனத்திருவே - தாமரைமலரை இருப்பிடமாகக் கொண்ட இலக்குமி போன்றவளே. காதல் பசும்பிடியே - அன்பு மிக்க இளம்பிடி போன்றவளே. ஈது - இது.

459. முந்துமலர் வீடோ - முன்னுள்ள தாமரை மலராகிய வீடோ; இது தெரிவையைத் திருமகளாகக் கருதிக்கூறியது; 458 இல், மலராசனத் திருவே எனறதும் நோக்குக. முளரிபுது வீடு - தாமரையாகிய புது வீட்டில். குடியேற நாள் வந்ததோ - குடிபுகுந்து புதுக்குடித்தனம் செய்ய உனக்கு உரிய நாள் வந்துவிட்டதோ. சந்த - அழகிய.

460. கொடி மருங்குல் - கொடிபோன்ற (தெரிவையின்) இடையானது. குரும்பை முலைபோல - குரும்பையையொத்த அவள் தனங்களுக்குச் செய்ததுபோல. கூந்தற் சுருமபுக்கு - கூந்தலில் உள்ள வண்டுகளுக்கு. செய்ததுண்டோ - செய்த அபசாரம் அல்லது தவறு ஏதேனும் உண்டோ; இடையை முலைகள் தம் பாரத்தால் வருத்துவன போலத் தெரிவையின் கூந்தலில் வண்டுகள் தங்கி அவளிடைக்குத் துன்பத்தைச் செய்கின்றன என்பதாம்.

461. இசையால் வருந்தி யிடர்ப்படுப்ப னென்று
திசைபோன யாழ்விறலி செப்ப—மிசைபெருகு

462. நாதச் சிவபுரத்தா னாகைக்கா ரோணத்தான்
ஆதித் திருவா வடுதுறையான்—நீதித்

463. திருப்புவன வாயிலான் றென்கொடுங் குன்றத்தான்
விருத்த கிரியாளும் விமலன்—அருத்திதரும்

464. நன்னகர்வாழ் குற்றால நாதன் றசாங்கமெல்லாம்
பன்னவரா யென்னப் பணித்தலுமே—துன்னி

### பாடினியின் யாழிசை

465. அரிகூட மாமலைமே லானைவிளை யாடும்
திரிகூட மாமலையின் சீருஞ்—சுரர்களுடன்

---

461. சுரும்பை - உன் இடையை வருத்தும் இவ்வண்டுகளை. இசையால் வருத்தி - என் யாழ் இசையால் தோற்று வருந்தச் செய்து. இடர்ப்படுப்பன் - அவற்றைத் துன்பத்தில் ஆழ்த்துவேன். திசை போன - எல்லாத்திசைகளிலும் புகழ்பரவிய. யாழ்விறலி - யாழ் வாசிப்பதிற் சிறந்த பாடினி. மிசை பெருகு - மேன்மேலும் பெருகி வளர்கின்ற.

462. நாதச் சிவபுரத்தான் - நாதவடிவான சிவபுரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும்; சிவபுரம் சோணாட்டில் காவிரியின் தென்பால் உள்ள ஒரு தலம்; இது மருதாநல்லூர் என்று வழங்கும். நாகைக் காரோணம் - நாகபட்டினத்தில் உள்ள பிரபல மான சிவத்தலம். ஆதி - பழமையான.

463. புனவாயில் - பாண்டி நாட்டுத் திருப்பதிகளில் ஒன்று. கொடுங்குன்றம் - இதுவும் பாண்டி நாட்டுத் திருப்பதியே; இது பிரான்மலை யென்று வழங்கும். விருத்தகிரி - முதுகுன்றம் என்னும் விருத்தாசலம்.

464. தசாங்கம் - பத்து அங்கங்கள்: அவை: பாட்டுடைத் தலைவனது நாடு, ஊர், ஆறு, மலை, யானை, குதிரை, தானை, முரசு, தார், கொடி என்பனவற்றைச் சிறப்பித்துப்பாடுதல். பன்ன - விளம் பிப்பாட. வராய் என்ன - வருவாய் என்று. பணித்தலும் - கட்டளை யிட்டதும். துன்னி - நெருங்கி.

465. மாமலைமேல் - அம்மலையின்மீது. அரிகூட - சிங்கங்கள் வந்துகூட. ஆனை - யானைகள். விளையாடும் - அச்சிங்கங்களோடு

466. பொன்னா ரியநாடு பூதலத்துப் போந்தனைய
தென்னா ரியநாட்டின் செல்வமும்—பன்னாடும்

467. பன்னகரும் பொன்னகரும் பன்னகரும் பன்னகர்வாழ்
நன்னகரும் போற்றியசீர் நன்னகரும்—சன்னிதிக்குத்

468. தேனதியு மாகிவட கங்கைக்குத் தென்கங்கை
மானதியாம் சித்ர மகாநதியும்—ஞானவுரை

469. அம்பா யிரத்திரட்டி னாயிரவே தப்பரியும்
கொம்பா யிரத்திரட்டி குஞ்சரமும்—தம்பெருந்தேர்

---

அஞ்சாமல் சேர்ந்து விளையாடும்; ஒப்பு. ''ஆடு துறையி லடுபுலியும் புல்வாயும், கூடநீ ரூட்டிய கொற்றவனும்'' (விக்கிரம சோழனுலா: 5.) திரிகூட மாமலையின் சீரும்-திரிகூட மலை யென்னும் குற்றாலமலையின் சிறப்புக்களையும். சுரர்களுடன் - தேவர்களோடு.

466. பொன் ஆரியநாடு - பொன்னாடு ஆகிய தேவலோகம். போந்தனைய - வந்ததுபோல. தென்னாரிய நாடு - குற்றாலத்தைச் சார்ந்த நாடு ; ''அண்ணலார் நன்னகர்த் தென்னாரிய நாட்டணி புகழ்தல்'' (திருக்குற்றாலத். திருநாட்டு: 52.) பன்னாடும் - பல நாடுகளும்.

467. பன்னகரும் - பல நகரங்களும். பொன்னகரும் - சுவர்க்கத்தில் உள்ள அமராவதி யென்னும் நகரமும். பன்னகரும் - நாகர்களும். பன்னகர் வாழ் நன்னகரும் - அந்நாகர்கள் வாழும் போகவதி யென்னும் சிறந்த நகரமும். போற்றிய சீர் நன்னகரும் - பாராட்டிப் புகழ்ந்த சிறப்பையுடைய குற்றாலமென்னும் நன்னகரும்.

468. வடகங்கைக்குத் தென் கங்கை மாநதியாம்-வடக்கேயுள்ள கங்காநதிக்குத் தன் பாபங்களைப் போக்கிக்கொள்ளும் சிறப்பமைந்த சிவமது கங்கை என்னும் நதி. சித்திரமாநதி - சித்திராநதி ; இது குற்றாலத்தில் உள்ள ஒரு நதி. ஞான உரை - ஞான உரையையுடைய.

469. அம் பாயிரத் திரட்டின் - அழகிய பொருளடக்கங்களுடைய; பாயிரம் வரலாறும் ஆம். ஆயிர வேதப்பரி - ஆயிரம் சாகைகளோடு கூடிய வேதமாகிற குதிரையும்; ஆயிரம் என்பது இங்கு எண், மிகுதியைக் குறிக்கும் பொருளில் வந்தது. கொம்பு ஆயிரத்து இரட்டி குஞ்சரமும் - தந்தங்கள் இரண்டாயிரங்கொண்ட ஐராவணமென்னும் சிவபெருமான் ஏறும் யானையும். தம் பெருந்தேர்- திரிபுரசங்கார காலத்தில் தாம் கொண்ட பெருந்தேரினது.

470. ஈராழி காண விலகொளிசேர் சங்கமுடன்
ஓராழி யேந்து முயர்கொடியும்—பார்மேல்

471. வழங்குகொடை வென்றி மணம்பொலிய மன்றில்
முழங்குமொலித் தெய்வ முரசும்—தழங்குமிசைப்

472. பாவலராய் மென்சுரும்பு பண்சொரியப் பொன்சொரியும்
காவலராங் கொன்றைக் கமழ்தாரும்—தேவரால்

473. கண்ட மிருளடக்கிக் கண்மூன் றொளிபரப்பி
அண்ட முறைநடத்து மாணையும்—தொண்டருளப்

---

*470.* ஈர் ஆழிகாண - இரண்டு சக்கரங்களாகிய சந்திர சூரியர்கள் காண. இலகு ஒளிசேர் - விளங்கும் ஒளி சேர்ந்த. சங்கமுடன் ஓர் ஆழி ஏந்தும் உயர் கொடியும் - சங்கத்தோடு சக்கரத்தையும் கைகளில் ஏந்திய திருமாலாகிய உயர்ந்த இடபக்கொடியும்; திருமால் இடபமாகிச் சிவபிரான் வாகனமாகவும், கொடியாகவும் உள்ளார் என்பது புராண வரலாறு.

*471.* கொடை, வென்றி, மணம் என்னும் மூன்று முரசுகளும் விளங்க. மன்றில் - சித்திர சபையில். தெய்வ முரசு. 17, 104. தழங்கும் இசை - ஒலிக்கும் இசையோடு கூடிய.

*472.* பாவலராய் - பாவாணர் போலாகி. மென் சுரும்பு - மென்மை வாய்ந்த வண்டுகள். பண் சொரிய - பாட்டுக்களைச் சொரிவன போல மிகுதியாய்ப் பாட. பொன் சொரியும் காவலராய் - அப் பாடல்களுக்குப் பரிசாகப் பொனனைச் சொரியும் அரசர்களைப்போல. கொன்றைக் கமழ்தாரும் - கொன்றையினது மணம் வீசும் மாலையும்; பொன் சொரிதல் அக் கொனறை மாலையிலிருந்து இதழ்கள் பொன்னைச் சொரிவது போல உதிர என்றேனும், கொன்றைத்தாரில் உள்ள மகரந்தங்கள் பொன்போல் உதிர என்றேனும் கொள்ளலாம்; ஒப்பு., "காந்த ளிரவலர்போற் கையேற்பக் கொன்றைகொடை வேந்தனெனப் பொன்சொரியும் வேங்கடமே." (திருவேங்கட மாலை. 45.) தேவரால் - தேவர்களின் பொருட்டு; ஆல் உருபு மயக்கம்.

*473.* கண்டம் இருள் அடக்கி - தம் கழுத்தில், விஷமாகிய இருளை அடக்கி வைத்து. கண் மூன்று ஒளி பரப்பி - தம் மூன்று விழிகளின் ஒளிகளை அவ்வப்போது படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களைச் செய்யப் பரப்பி. அண்டம் மு

474. பானீற்று மெய்யன் பலாநிழலான் பாடலெலாம்
தேனூற்று மாறு செவியூற்ற—நூனூற்ற

475. மெல்லிடையாள் வேட்கை மிகவானாள் மேனியொரு
வல்லியினுஞ் சால வருந்தினாள்—ஒல்லை

**தெரிவை விறலியிடம் தன் குறைகூறி வருந்துதல்**

476. அயல்விறலி தன்னை யருகழைத்துக் காமச்
செயல்விரவி யாவுந் தெரித்தாள்—மயன்மகட்காய்

477. வந்தா ரெனக்கொருநாள் வாராரோ மாமாலைத்
தந்தார் புனைமாலை தாராரோ—முந்தவிடம்

---

ஆணையும் - எல்லா அண்டங்களையும் முறை தவறாது நடத்தும் கட்டளையும். தொண்டர் உள - அடியார் உள்ளத்தில்.

474. பால் நீற்று மெய்யன் - பால் போன்று வெண்மையான திருநீறு அணிந்த திருவடிவுஉடையவன். பலா நிழலான் - குறும் பலாமரத்தின் நிழலில் எழுந்தருளியிருக்கும் குற்றால நாதருடைய. பாடலெலாம் - தேவாரம் முதலிய பாடல்களை யெல்லாம். தேன் ஊற்று மாறு செவி ஊற்ற - தேனை ஊற்றுவது போலத் தெரிவையின் செவிகளில் பாடினி பொழிய. நூல் நூற்ற - நூல் நூற்றது போன்ற.

475. மெல்லிடையாள் - மெல்லிய இடையையுடைய தெரிவை. வேட்கை மிக ஆனாள் - அக்குற்றாலநாதர்பால் வேட்கை மிகக் கொண்டவ ளானாள். வல்லியினும் சால வருந்தினாள் - ஒரு கொடியினும் அதிகமாகச் சோர்ந்து வருந்தினாள். ஒல்லை - விரைவாக.

476. அயல் விறலி - அருகே யிருந்த பாண்மகள். விரவி - தெளிவுபடக் கலந்து. தெரித்தாள் - தெரிவித்தாள். மயன் மகட்காய் - மயன் என்னும் அசுரத் தச்சன் மகளான மண்டோதரிக்காக.

477. வந்தார் - இலங்காபுரிக்கு வந்து அருள்செய்த சிவபெருமான்; மண்டோதரி, மந்தோதரி, வண்டோதரி யெனவும் வழங்கப்பெறுவள். "இலங்கை யழகமர் வண்டோ தரிக்குப் பேரருளின்ப மளித்த பெருந்துறை மேயபி ரானைச்" (திருவாசகம். குயிற்பத்து: 2.); இவ்வரலாறு. 198, 199 கண்ணிகளிலும் குற்றாலக் குறவஞ்சி. 29-ம் பாடலிலும் காண்க. மாமாலை - பெரும் மயக்கம். புனைமாலை - தாம் அணிந்துள்ள கொன்றை மாலையை. முந்த விடம் - யாவருக்கும் முன்னதாக விடத்தை.

478. உண்டா ரிதழமுத முண்ணுரோ சோமகலை
கொண்டாரென் காமகலை கொள்ளாரோ—பண்டுபிறர்க்

479. கீய்ந்தா ரெனக்குவளை யீயாரோ வென்றிசைப்ப
வாய்ந்தார் தமக்கினிய வண்ணலார்—வாய்ந்ததுடி

480. திண்டிமம் மார்ப்பச் சிலதூரி யந்துவைப்பத்
தொண்ட ரரவொலியுந் துந்துமியும்—அண்டரண்ட

481. கூடத் தினுமுழங்கக் கோடீர பாரநெடு
மாடத்துப் பாந்தள் மணிவிளக்கம்—நீடச்

482. சிவமதுகங் கைப்பெருமான் செல்வப் பெருமான்
புவனமெல்லாம் போற்றும் பெருமான்—தவமுனியை

---

478. இதழ் அமுதம் - என் இதழின் அமிர்தத்தை; இதழமுதம் - அதராமிர்தம். சோமகலை - சந்திரனது கலையை. காமகலை - மதன நூற்பயிற்சியை. பண்டு - முன்.

479. வளைபிறர்க்கு ஈந்தார் - வளைகளை மதுரையில் இருந்த வணிக மகளிர்க்குக் கொடுத்தவர்; திருவிளையாடற்புராணம். வளையல் விற்ற படலம் காண்க. துடி - உடுக்கை.

480. திண்டிமம் - ஒரு வகைப்பறை; இது திடிமம் என வந்தது காண்க; 149. தூரியம் - வாத்தியம். துவைப்ப - ஒலிக்க. அர ஒலி - அரஅர என்று கோஷிக்கும் ஒலி. துந்துமி - எக்காளம். அண்டர் - தேவர்கள் வாழும்.

481. அண்ட கூடத்தினும்-அண்டங்களின் இடத்தும். கோடீர பாரம் - சடை முடியாகிய பாரம். பாந்தள் மணி விளக்கம் - பாம்பினது சூட்டில் உள்ள மணியாகிய விளக்கு; பாந்தள் மணி - நாகரத்தினம். குற்றால நாதர் சடைமுடியை மாடமாகவும், அச்சடையில் அவர் அணிந்துள்ள பாம்பின் சூட்டுமணி அம்மாடத்தில் ஒளி வீசும் விளக்கு ஆகவும் சிறப்பிக்கப்பெற்றன. நீட - நீண்ட ஒளியைச் செய்ய.

482. சிவமது கங்கை - குற்றாலத்தில் உள்ள தீர்த்தங்களுள் ஒன்று; 10. தவ முனியை - தவத்திற்சிறந்த முனிவராகிய அகத்தியரை.

483. ஆளும் பெருமா னமரர்தே டும்பெருமான்
நீளும் சுடர்மணித்தேர் நேர்தோன்ற—நாளுமெதிர்

484. வாராத செல்வம் வரப்பெற்றார் போல்வணங்கி
ஆராத காத லலையெறியப்—பேராளன்

485. மையழகு கந்தரமு மார்பழகுந் தோளழகும்
கையழகுங் கண்டாள் கருத்தயர்ந்தாள்—அய்யன்

தெரிவையின் புலம்பல்

486. விரிசடையின் மென்மதிக்கு மென்மதியுந் தோற்றாள்
பெரியபிரான் சென்னிப் பிறையே—பரிவுடைய

487. வண்கவிகை யாதலினால் மாரனுனை யெய்யானே
தென்கடலுந் தென்றலுஞ் சீறாதே—சண்பகப்பூங்

488. காவுலவு தென்றல் கருணைப் பிரான்முடிமேல்
மேவுதலா லுன்னை வெதுப்பாதே—யாவுநீ

---

483. நீளும் சுடர் மணித் தேர் - நீண்ட ஒளி விளங்கும் அழகிய தேர்; மணி - இரத்தினமும், ஒலிக்கும் மணிகளும் ஆம்.

484. ஆராத காதல் - தணியாத ஆசை. அலையெறிய - அலை வீசி எறிவதுபோல மேற்கிளம்பி வீச.

485. மை அழகு கந்தரம் - கருநிறமாகி அழகு பொருந்தி விளங்கும் கழுத்து; கருமை விஷம் தங்கியிருத்தலால். கருத்து அயர்ந்தாள் - எண்ணம் தளர்வுற்றுச் சோர்ந்தாள்.

486. மென்மதிக்கு - மென்மையான பிறைமதிக்கு. மென்மதியும் - மென்மை வாய்ந்த அறிவும். தோற்றாள் - தோல்வியுற்று இழந்தாள். பரிவுடைய - அன்புடைய.

487. வண் கவிகை ஆதலினால் - நீ (மாரனுக்கு) வளம்பொருந்திய குடை ஆதலின். மாரன் - மன்மதன். தென்கடலும் - அழகிய கடலும். சீறாது ; கடல் மாரன் முரசும், தென்றல் அவன் தேரும் ஆதலின் அவை பிறையைச் சீறா என்பது தெரிவையின் துணிவு.

488. கா உலவு தென்றல் - குற்றாலச் சண்பகப்பூஞ்சோலையில் உலாவும் தென்றல் ஆதலின்; குற்றாலத்துச் சண்பகப் பூஞ்சோலை; **11, 36, 37,** வெதுப்பாது - வெப்பங்கொள்ள வாட்டாது.

489. உண்ணாத தேன்கண் ணுறங்கா திருப்பானேன்
தண்ணான மேனி தழல்வானேன்—நண்ணுமல்

490. கோலவயி றெக்கிக் குழைவானேன் கோடிகற்ப
கால மொருநொடியிற் காண்பானேன்—மேலான

491. நின்னிடத்தி லென்னை நிறுத்தியொரு மாத்திரைப்போ
தென்னிடத்தி னீவந் திருப்பாயேல்—உன்னிடத்தில்

492. குற்றந்தீர்ப் பேனென் குறையுமுடிப் பேன்பிறவும்
பெற்றும்யா மென்று பிதற்றுதலும்—கற்றைச்

493. சடையானு மெய்தாச் சடத்தானுந் தேர்மேல்
புடையாந் திருவீதி போதத்—தொடையாடும்

489. சிவபிரான் முடிமீது உள்ள பிறை உண்பதும் உறங்குவதும் இன்றி, வளராமலும் தேயாமலும் மறைவது இல்லாமலும் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பது. அப்பிறையின் குளிர்ந்த மேனி நெருப்புப்போல எரிவது என்பது விரகங்கொண்ட தெரிவையின் உணர்ச்சி.

490. எக்கி - உள் ஒடுங்கி; பிறை உட்குழிந்து இருப்பதால் வயிறு எக்கி எனப்பட்டது. கற்பகாலம் - பிரமகற்பம் என்னும் பெரும்பொழுது. என்றும் ஒரே நிலையில் பல கற்பகாலமாகப் பிறை சிவபிரான் சடைமீது இருப்பதால் தெரிவை ஒரு சிறு பொழுதும் தனக்கு ஒரு கற்பகாலம் போல நீடித்து வருத்துவதை எண்ணி அப் பிறைமேற் பொறாமை மேலிட்டுக் கூறினாள் என்க.

491. நின்னிடத்தில் - நீயிருக்கும் குற்றாலநாதர் சடைமீது. ஒரு மாத்திரைப்போது - ஒரு நொடி நேரம்.

492. குற்றந் தீர்ப்பேன் - இதுகாறும் நீ என்னை வருத்திய குற்றத்தைப் பாராட்டாது விட்டுவிடுவேன். குறை - யான் குற்றால நாதரைச் சேராத குறை. முடிப்பேன் - நிறைவேற்றிக் கொள்வேன். பிறவும் யாம் பெற்றும் - பெற விரும்பிய மற்றவற்றையும் யான் பெற்றேனாவேன்; யாம் என்று பன்மையிற் கூறியது தன்போன்ற மற்ற மகளிரையும் உடன் கூட்டி என்க.

493. சடையான் - குற்றாலநாதர். எய்தாச் சடத்தான் - அடையாத உடலையுடையோனான மன்மதன்; எய்தாச்சடத்தான்; இது வடமொழி நடை. புடை ஆம் - பக்கத்தில் உள்ள.

(பி - ம்.) 493. மெய்து சடத்தானுந்,

494. கூந்த லுருவெளியாற் கூறியவா றேதனக்குச்
சேர்ந்ததுபோல் மாலாறித் தேறினாள்—பூந்தோகை

பேரிளம் பெண்

495. பேரிளம் பெண்ணொருத்தி பெண்ணரசு செய்யமதன்
ஓரிளம்பெண் ணான வுருவத்தாள்—மேருமுதல்

496. அவ்வுலகி லுள்ளபகை யத்தனையும் வென்றுமதத்
திவ்வுலகைப் பார்க்கு மிருதனத்தாள்—பவ்வநிரை

497. சூழம்பு ராசித் துடியுடையா ளையம்புக்
கேழம்பு கூட்டு மிணைவிழியாள்—வாழுமதி

494. தொடையாடுங் கூந்தல் - மாலைகள் அசைந்து ஆடும் கூந்தலையுடைய தெரிவை: இது அன் மொழித்தொகை. உருவெளியால் - உருவெளித் தோற்றத்தைக் கண்டதனால்; உருவெளித் தோற்றம் காமவயப்பட்டோர், தாம் காதலித்தோரை இடைவிடாது நினைக்க, அவர் உருவே தம் எதிரே வந்ததுபோல விளங்கும் போலித் தோற்றம். மால் ஆறி - மயக்கம் தெளிந்து. தேறினாள் - தெளிவடைந்தாள்.

495. பேரிளம் பெண்: முப்பத்திரண்டு முதல் நாற்பது பிராயம் வரையுள்ள பெண். பெண் அரசு செய்ய - பெண்களை ஆட்சி செய்ய. மதன் - மன்மதன்.

496. அவ்வுலகிலுள்ள பகை அத்தனையும் - வானுலகில் ஓங்கி நின்று தமக்குப் பகையாய் இருந்த மலைகள் எல்லாவற்றையும். வென்று - தம் எழுச்சியால் வென்று. மதத்து - செருக்கேறி. இவ்வுலகைப் பார்க்கும் - தாம் பெற்ற வெற்றிச் செருக்கால் பெருமிதத்தோடு இவ்வுலகமாகிய பூமியை நோக்கும்; பருவமுதிர்ச்சியால் தளர்ந்து கீழ் நோக்குவதை ஒருவாறு சிறப்பித்துக் கூறியது என்க. பவ்வம் நிரை - கடலில் வரிசையாக.

497. சூழ் அம்புராசித் துடி-சூழ்ந்து பரவியுள்ள நீர்த் தொகுதியின் சலனம் போன்ற; அதாவது அலையின் அசைவு போன்ற. உடையாள்-ஆடையை உடைவள்; அலைகள் பல வரிசைகளோடு படிப்படியாய்ச் சலித்து விளங்குவதுபோலும் ஆடையுடையாள் என்க. ஐ அம்புக்கு - மன்மதன் ஐந்து மலர்க் கணைகளுக்கு. ஏழம்பு கூட்டும் - ஏழு அம்புகளாகக் கூட்டும். இணை விழியாள் - இரண்டு கண்களையுடையவள். ஐந்தாய் உள்ள மாரன் கணைகள் இவள் கண்களோடு சேர்ந்து ஏழாயின என்பதாம்.

498. சங்குபணை காந்தள் சயிலவடந் தாங்கியொரு
மங்குல் சுமந்தொசியும் வல்லியாள்—பொங்கும்

499. அணியைச் சுமந்திளைத்த வாகத்தி னாலோ
பணிய மருங்கிளைத்த பாங்கோ—தணிவிலா

500. நாண்சுமக்க லாற்று நகிலத்தா லோமேனி
பூண்சுமக்க லாற்றாத பூவையாள்—மாண்சுமந்த

501. வல்லியர்கள் சூழ மதவேள் பணிந்தேத்தச்
செல்வ மதனிரதி சேவிப்பக்—கல்லென்

---

498. சங்கு கழுத்துக்கு. பணை - மூங்கில்; தோள்களுக்கு. காந்தள் - காந்தட்பூ; கைகளுக்கு. சயிலவடம் - மலை மண்டிலம்; நகில்களுக்கு; வடம் வட்டமென்பதின் இடைக்குறை. மங்குல் - மேகம்; கூந்தலுக்கு. ஒசியும் - சாய்ந்து வருந்தும். வல்லியாள் - கொடி போன்றவள். பொங்கும் - மேன்மேலும் வளரும்.

499. அணியை - அழகை. சுமந்து இளைத்த ஆகத்தினாலோ - தாங்கமாட்டாது சுமந்து அதனால் இளைத்துப் போன உடலின் நிலைமை யாலோ; "அழகு சுமைந்திளைத்த வாகத்தாள்" (நள வெண்பா. I: 72.) பணிய - பணிவைச் செய்ய. மருங்கு - இடை. இளைத்த பாங்கோ - அதனால் இளைத்துப்போன விதமோ; யாவர்க்கும் பணிவைக் காட்டிக் குனிந்து வணங்குவதால் இடை இளைத்தது என்பது. தணிவிலா - குறைவுபடாத.

500. நாண்சுமக்கல் ஆற்று நகிலத்தாலோ - மகளிர்க்குரிய நாணத்தை இனிச்சுமக்க முடியாதென்று மேற்கிளம்பிய நகில்களை யுடைமையாலோ. மேனி பூண் சுமக்கல் ஆற்றாத - உடலில் பூண் களைச் சுமக்கப் பொறாத. பூவையாள்-பூவை போன்ற பேரிளம்பெண்; பூவை - நாகணவாய்ப்புள். பூண் சுமக்கலாற்றாமை; அழகைச் சுமந்து இளைத்தமையாலோ, மருங்குல் இளைத்த பாங்கோ, நாண் சுமக்கலாற்று நகிலாலோ என்று ஐயங்கொள்ளத்தக்கதாய் உள்ள பூவை என்க. மாண் சுமந்த - மாட்சியைத் தாங்கிநின்ற.

501. வல்லியர்கள் - கொடிபோன்ற பெண்கள். மதவேள் - மன்மதனாகிய வேள்; வேள் - வடிவிற்சிறந்தவன்; குமரவேள் என்பது போல. மதன் இரதி - மன்மதன் தேவியாகிய இரதி. கல்லென் - கல்லென்று; கல் - ஒலிக்குறிப்பு

---

(பி - ம்.) 498. சங்குவளை. 499. மருங்கிழைத்த.

502. மணிவிளக்குச் சூழ்வசந்த மண்டபத்தி லிட்ட
தணிவிலரி யாசனமேற் சார்ந்து—திணிபெருகு

பேரிளம்பெண் குற்றாலநாதரே பரம்பொருள் எனத்துணிதல்

503. மூவுலகி லுள்ளாரில் மூவாத் தனிமுதல்வர்
யாவரெனச் சொல்லி ரெனவுரைப்ப—பூவனையார்

504. மண்ணவரைச் சொல்லி மனுவேந்த ரைநிகழ்த்த
விண்ணவரின் மேலானோர் யாரென்று—முன்னவராம்

505. வேதியரைக் கேட்ப விரிபதி னெண்கணத்தில்
சாதி நெறிபலவுந் தான்காட்டி—நீதிபெறும்

506. திக்கோரி லெண்மர் திறங்கூறி முப்பத்து
முக்கோடி தேவர் முறைவிரித்துத்—தொக்க

---

502. மணி விளக்கு - மணிகள் பல தொடுக்கப்பெற்று ஒலிக்கும் விளக்கு; இரத்தினங்களைபோல் பிரகாசிக்கும் விளக்குகள் என்னலும் ஆம். தணிவு இல் - குறைவுபடாத. அரியாசனம் - சிங்காதனம். திணி பெருகு - வலிமை மிகும்.

503. மூவா - மூப்பு அடையாத; அதாவது என்றும் இளமை யோடிருக்கும். சொல்லிர் என உரைப்ப - சொல்வீராக என்று தன்னைச் சூழ்ந்த மகளிரை நோக்கிப் பேரிளம்பெண் வினவ. பூ அனையார்- பூப்போன்ற மென்மை பொருந்திய அம்மகளிர்.

504. மனுவேந்தரை - வைவசுவத மனுவின் வழிவந்த மன்னர் களை. நிகழ்த்த - விளக்கிச் சொல்ல. இன்னவரில் - இவர்களில். முன்னவராம் - முன் படைக்கப் பெற்றோர்களான.

505. பதினெண்கணம்: பதினெண்கணங்களாவார் "தேவ ரும், அசுரரும், முனிவரும், கின்னரரும், கிம்புருடரும், கருடரும், இயக்கரும், இராக்கதரும், கந்திருவரும், சித்தரும், சாரணரும், வித்யா தரரும், நாகரும், பூதரும், வேதாளரும், தாராகணமும், ஆகாசவாசி களும், போகபூமியோரும் என இவர்" (புறநானூறு. க: 10. உரை;) இதைப் பிங்கல நிகண்டு சிறிது மாறுபடக் கூறும்; பதினெண் கணம்; 140, 531.

506. திக்கோரில் - திக்குப்பாலர்களில். எண்மர் - எட்டுப்பேர் கள். திறங்கூறி - சிறப்புக்களைச் சொல்லி. தொக்க - தொகுதியாக வுள்ள.

507. நவகோளுங் காட்டிவரும் நாள்பலவுங் காட்டித்
தவமா முனிவரரைச் சாற்றி—இவரார்க்கும்

508. ஐந்தருவி னீழ லரசுசெய்து வீற்றிருக்கும்
இந்திரனே கோமா னெனவுணர்த்தி—இந்திரனில்

509. மேலானோர் யாரென்று வேதச் சுருதியுடன்
மூலா கமத்தின் முறைபார்த்துச்—சாலப்

510. படைப்பா ரளிப்பார் படைத்தளித்த வெல்லாம்
துடைப்பார் தலைவரெனச் சொல்லி—உடைப்பெருமை

511. முப்பொருளு மாகியந்த முத்தொழிலுந் தானியற்றும்
அப்பொருளே குற்றாலத் தானென்றார்—மெய்ப்பொருளைத்

512. காட்டினார்க் கெல்லாங் கனகாபி டேகந்தூய்ப்
பூட்டினாள் மேனியெல்லாம் பொற்பணியாய்—மீட்டொருநாள்

---

507. நவகோள் - ஒன்பது கிரகங்கள். நாள்பலவும் - இருபத்தேழு நட்சத்திரங்களும். தவமா முனிவரர் - தவத்தால் மாட்சிமையுற்ற இருடிகளில் சிறந்தவர்; இவர் நாற்பத் தெண்ணாயிரவர். இவர் ஆர்க்கும் - இவர்கள் எல்லோருக்கும்.

508. ஐந்தரு - ஐந்து தேவ விருட்சங்கள்; இவை, சந்தானம், அரிசந்தனம், கற்பகம், மந்தாரம் பாரிசாதம் என்பன; 131. இந்திரனில் - இந்திரனைவிட.

509. வேதச் சுருதியுடன் - வேதங்களின் சுருதிகளோடு. மூல ஆகமத்தின் முறை பார்த்து - பிரமாணமாய் உள்ள ஆகமங்கள் கூறும் விதங்களையும் ஆராய்ந்து பார்த்து. சால - பொருந்த.

510. படைப்பார் - உண்டாக்கும் பிரமன். அளிப்பார் - காப்பவராகிய திருமால். படைத்து அளித்த வெல்லாம் - பிரமன் திருமாலாகிய இருவர் படைத்துக் காத்த அனைத்தையும். துடைப்பார் - அழிக்கும் கடவுளாகிய சிவபெருமான். தலைவரென - இம்மூவர் யாவரினும் தலைவர் என்று கூற.

511. முப்பொருள் - முத்தேவர். முத்தொழில் - ஆக்கி அளித்து அழிக்கும் முத்தொழில்கள்.

512. கனகாபிடேகம் தூய் - பொன்னை அபிஷேகம் செய்வது போலச் சொரிந்து. பொற்பணி - பொன் ஆபரணம். மீட்டு ஒருநாள் - மறுபடியும் ஒரு நாளின.

---

(பி - ம்.) 507. முனிவோரை.

513. மத்தியா னத்தில் மகாநிசியைப் போலிருண்ட
உத்தியா னத்தி லுகந்தேகிச்—சித்திரமா

514. மன்றிலே யாடும் வரதனருட் சண்பகப்பூங்
கன்றிலே யோர்மூன்று கன்றுவைத்து—வென்றி

515. அயன்பே ரரிபே ரரன்பேரு மிட்டு
வயஞ்சேரப் போற்றி வளர்த்தாள்—பயன்சேரும்

516. முக்கன்று மோங்கியநாண் முக்கட் பிரான்றிருப்பேர்
அக்கன்று முன்பூத்த வற்புதத்தால்—புக்கமலர்க்

517. கொம்பனையார் கூறக் குரவையுட னேயெழுந்து
பம்புதுடி பொங்கப் பணைமுழங்க—நம்பரமர்

518. நாளால் விழாவயர்ந்து நன்னிதியும் போனகமும்
கேளார் தமக்குங் கிளர்ந்துதவி—நீளமலர்

---

513. மத்தியானம் - நடுப்பகற்போதில். மகாநிசியைப்போல் - நடு இரவைப்போல. உத்தியானத்தில் - சிங்காரத் தோட்டத்தில்; உத்தியானம் வெயில் புக இடமிராது அடர்ந்த நிழலுள்ளதாய் இருந்தமையின் மகாநிசிக்கு உவமை. உகந்து ஏகி - விரும்பிச் சென்று.

514. சித்திரமா மன்றிலே - சித்திர சபையில்; சித்திரசபை: 17, 280. வரதன் - அடியார் விரும்பிய வரங்களைத் தந்தருளுங் குற்றாலநாதர். அருள் - படைத்தருளிய. சண்பகப் பூங்கன்று - சண்பகக் காவிலுள்ள அழகிய கன்றுகளில்.

515. அயன் - பிரமன். அரி - திருமால். அரன் - சிவபிரான். வயம்சேர - வலிமை பெற; வயம் - வேட்கையும் ஆம்.

516. முக்கன்றும் - மேற் கூறிய மூன்று சண்பகக் கன்றுகளும். அற்புதம் - ஆச்சரியம். புக்க - அங்குவந்து புகுந்த.

517. மலர்க் கொம்பு அனையார் - பூத்து விளங்கும் மரக்கொம்பு போன்ற பெண்கள். குரவை - மகிழ்ச்சி ஒலி. பம்பு - ஒலிக்கும். துடி - உடுக்கை. பொங்க - மேல் எழுந்து ஒலிக்க. பணை முழங்க - வாத்தியங்கள் ஒலிக்க. நம் பரமர் - நமது கடவுளாகிய குற்றாலநாதருடைய.

518. நாளால் - நாளாகிய திருவாதிரை நாளில்; திருவாதிரை சிவபெருமான் திருநட்சத்திரம்; "ஆதிரையா னாதிரையா னென்றே

519. கொய்து தொடுத்தேந்திக் குறும்பலவிற் கோமான்முன்
எய்துகமோ சாத்துகமோ வென்றென் று—மைதுவளும்

520. கண்ணுள் மனமுங் கசிந்துரைப்பக் காரிகையார்
பெண்ணு ரமுதே பெருந்தவமே—உண்ணாடும்

521. ஆதார மோராறு மைந்தவத் தைபுங்கடந்து
மீதான சூதான மேல்வெளியில்—நாதாந்தச்

522. சத்திநிபா தத்தினோர் சாத்தும்போ துஞ்சயிலப்
பத்தினியார் சாத்தும் பலபோதும்—ஒத்தினிதாய்

523. எப்போது மப்போதா யேத்தும் பழவடியார்
கைப்போதும் பாரளந்தார் கண்போதும்—முப்போதும்

---

யயர்வுறுமால் " (முந்தோள். 1.) விழா அயர்ந்து - திருவிழாக் கொண்டாடி. போனகம் - உணவு. கேளார் - பகைவர். கிளர்ந்து உதவி - மிகுதியாகக் கொடுத்து.

519. குறும் பலவில் கோமான் - குறும்பலா நிழலில் உள்ள குற்றாலநாதர். மைதுவளும் - மைகலங்கித் ததும்பப் பெற்ற.

520. கசிந்து - இளகி. காரிகையார் - மகளிர். உள் நாடும் - மனத்தால் தியானித்து யோகத்தால் ஆராயும்.

521. ஆதாரம் ஓர் ஆறும் - மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு இடங்களும். ஐந்து அவத்தையும் - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து நிலைமைகளும். மீதான - மேற்கூறிய ஐந்து நிலைகளுக்கும் மேலேயுள்ள. சூதான மேல் வெளியில் - சூனியமான சிதாகாச வெளியிலே. நாதாந்த - நாதத்தின் முடிவான; நாதம் - மந்திர ஓசை.

522. சத்திநிபாதத்தினோர் - சிவசக்தி ஆன்மாவோடு கலக்கும் நிலையையடைந்த மேலோர். சாத்தும் போதும் - மனத்தினால் சாத்தும் மலர்களும். சயில பத்தினியார் உமாதேவியார்.

523. எப்போதும் அப்போதாய் ஏத்தும் - எப்போதும் முன் ஏத்திய நிலையில் மாறாது ஏத்தி வழிபடும். கைப்போதும் - கைகளாகிய மலர்களும்; அதாவது எப்போதும் குவித்தகைகளோடு துதி செய்பவர்கள் என்பதாம். பார் அளந்தார் கண்போது - உலகைத் திரிவிக்கிரமனாய் அளந்த திருமாலின் கண்ணாகிய மலர்;

524. தீண்டுவார் போதும் திருமேனிப் பாங்காக
வேண்டுவார்க் கிப்போதும் வேண்டுமோ—தாண்டவஞ்செய்

525. பாதமலர்க் கிந்தமலர் பற்று தெனமறுப்ப
மாதரசி மாலாய் மயங்குத லும்—காதல்

526. அடியார் நினைத்தபடி யாடும் பெருமான்
கொடியார் மதனடக்குங் கூத்தன்—அடியவர்பால்

527. மாயை யிருளோட்டும் வலக்கண்ணன் றன்கருணை
ஏயவமு தாட்டு மிடக்கண்ணன்—தீயவினை

---

திருமால் தன் கண்ணைப் பறித்துச் சிவபெருமான் திருவடியில் இட்டு அருச்சித்தது திருவீழிமிழலை என்னுந் தலத்தில்.

524. முப்போதும் தீண்டுவார் - காலை, நண்பகல், மாலை என்னும் மூன்று காலங்களிலும் ஈசன திருவுருவைத் தீண்டிப் பூசை செய்பவரான ஆதிசைவ அந்தணர்; "முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன" என்று சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையில் குறிப்பிட்டுள்ளமையும், அதனை யடியொற்றிச் சேக்கிழார் பெருமான தாம் இயற்றியருளிய திருத்தொண்டர் புராணத்துள் 61 வது ஆக முப்போதும்திருமேனிதீண்டுவார்புராணம் என்று தனியே ஒரு பகுதியாற் சிறப்பித்துள்ளமையும் அன்னோர் பெருமைகளை விளக்குவனவாம். இப்போதும் வேண்டுமோ - நீ இப்போது இங்குக்கொண்டு வந்துள்ள மலரும் வேண்டுவது ஆகுமோ.

525. மாதரசி - பேரிளமபெண். மாலாய் - காமவசமாகி. மயங்குதலும் - சோர்வுற்று வருந்தவும். காதல் - தம்பால் விருப்பங் கொண்ட.

526. ஆடும் - செய்யும். கொடியார் - தீயோர். மதன் அடக்கும் - செருக்கை அடக்கி அழிக்கும்; மதன் - மதம் என்பதின் போலி.

527. மாயை இருள் - அஞ்ஞானமாகிய இருள். ஏய - பொருந்த. அமுதாட்டும் - அமுதவெள்ளத்தில் முழுக்காட்டும். சிவபிரானுக்குரியதாகிய வலக்கண் மாயையிருளைப்போக்கி ஞானத்தை அளிக்கும். அவரது இடக்கண்ணாகிய உமாதேவி கண் அருள்பொருந்தும் அமிர்தத்தை ஊட்டும் என்க. தியவினை - கொடிய பாவங்கள்.

528. நீறாக வேதுடைக்கு நெற்றித் திருக்கண்ணன்
ஆறாறு மேகடந்த வையாறன்—வீறாகு

529. வாகனத்தி னானு மயில்வாக னத்திருவர்
மோகனப் பிரானுமே முன்காப்ப—வாகனத்தில்

530. வையம் படைத்தானு மாலும் புறங்காப்பப்
பெய்யுமுகில் வாகனத்தான் பின்காப்பத்—தெய்வகணத்

531. தொப்பற்ற தேவ ரொருபால் முடிவணங்கச்
செப்புபதி னெண்கணமுஞ் சேவிப்ப—எப்பதமும்

532. நாளும் பரவ நமனும் பணிகேட்பக்
கோளுஞ் செயசெயெனக் கூத்தாட—வேளும்

---

528. நீறாகவே - சாம்பராக நீற்றுப் போய் அழியும்படி. துடைக்கும் - துடைத்து நீக்கும். ஆறு ஆறு மேகடந்த - முப்பத்தாறு சிவதத்துவங்களைத் தாண்டி அப்பாலுள்ள. ஐயாறன் - திருவையாறு என்னும் தலத்தையுடையவன்; ஆறாறு ஐயாறு எனபது சொல்லணி. வீறு ஆகு - பெருமிதமுடைய பெருச்சாளியாகிய.

529-530. வாகனத்தினானும்-வாகனத்தையுடைய விநாயகரும். இருவர் மோகனப் பிரானும் - வள்ளி, தேவசேனை என்னும் இருதேவியருக்கு மோகத்தை உண்டுபண்ணும் வடிவழகுடைய முருகக் கடவுளும். முன்காப்ப - முன்னே இருந்து காவல்செய்ய. வாகனத்தில்-தத்தம் வாகனமாகிய அன்னத்திலும், கருடனிலும் முறையே. வையம் படைத்தானும மாலும் - உலகம் படைத்த பிரமதேவனும், திருமாலும்; இது நிரல்நிறையணி. புறங்காப்ப - இரு புறங்களில் இருந்து காவல் புரிய; புறம்-வலம் இடமான புறங்கள். முகில் வாகனத்தான்-மேகத்தைத் தன் வாகனமாகக்கொண்ட இந்திரன். பின்காப்ப-பின் புறமாக இருந்து காவல் புரிய. தெய்வகணத்து - தேவகணத்திலுள்ள.

531. பதினெண்கணம்; 140, 505. குறிப். சேவிப்ப - தொழுது நிற்க. எப்பதமும் - சுவர்க்கம் முதலிய எல்லாப் பதவிகளில் உள்ளோரும்.

532. நாளும் - நட்சத்திர தேவதைகளும்; 507. பரவ - துதிக்க. நமனும் - யமனும்; உம்மை உயர்வுசிறப்பு. கோளும் - நவக்கிரகங்களும் ; 507. செயசெய என - சயசய என்று ஆரவாரம் செய்துகொண்டு. கூத்தாட - ஆனந்தக்கூத்தாட. வேளும் - மன்மதனும்.

533. சிலைபிடித்து நாணெறிந்து செல்லமணிப் பந்தாய்
மலைபிடித்த பாரிடங்கள் வாழ்த்த—அலைகுதிக்கும்

534. தேனு ரருவித் திரிகூடத் தெம்பெருமான்
வானோர் முரசதிர வந்தெய்தத்—தானுசை

535. வைத்தபொரு ளங்கெதிரே வந்ததென மாதரொடும்
சித்தசன்சே னுபதிபோற் செல்கின்றாள்—அத்தன்

536. படைப்பெருக்கம் பார்க்கப் பதினு யிரங்கண்
படைத்திலமே யென்றாள் பணிந்தாள்—விடைப்பிரான்

537. அல்லாற் பிரானிலையென் றந்தணர்கள் சொன்னதொகை
எல்லாம் வகையாய்க்கண் டின்புற்றாள்—கல்லால்

538. இருந்தானைப் போற்றி யெடுத்தமல ரெல்லாம்
சொரிந்தாள் மலைபோலத் தோகை—கருங்கோதை

---

533. சிலை பிடித்து - தன் கருப்புவில்லைக் கையிற் பிடித்து. நாண் எறிந்து செல்ல - நாணேசை செய்து உடன் போக; ஒப்பு. "வான்கருப்பு வில்லிகணை தெரிந்து மெய்காப்ப" (நளவெண்பா. I. 99.) மணிப்பந்தாய் மலைபிடித்த - அழகிய பந்தாக மலைகளைக் கையிற் பிடித்த. பாரிடங்கள் - பூதகணங்கள்; 120.

534. தேனுர் அருவி - தேனருவி; 10, 34; 223, 354, 468, 482. வானோர் முரசு - தெய்வமுரசு; 17, 104.

535. சித்தசன் சேனுபதி - மகளிராகிய மன்மதன் சேனைக்குத் தலைவிபோன்று விளங்கும் பேரிளம்பெண்.

536. விடைப்பிரான் - இடபவாகனரான குற்றாலநாதர்.

537. தொகை எல்லாம் வகையாய்க் கண்டு - தொகுத்துச் சொன்ன வற்றையெல்லாம் பல வகையாய் விளங்கப் பார்த்து; "தொகைவகை விரியிற் றருகென" (நன்னூல். சிறப்புப்பாயிரம்.)

538. கல்லால் இருந்தானை - கல்லால மரத்தின் அடியில் தட்சிணுமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த பிரானை. தோகை எடுத்த மலரெல்லாம் மலைபோலச் சொரிந்தாள் என்க,

539. மேகஞ் சரியவொரு மின்போற் பணிகின்றாள்
ஆகம் பசலைநிற மாகினாள்—கோகனகப்

பேரிளம்பெண் குறை நயந்து வேண்டல்

540. பாதாம் புயத்தீர் பலவளைக்கை பாய்ந்தகுறி
மீதாம் புயத்து விகாரத்தீர்—வாதாடு

541. மாலுண்டோ வில்லையோ மாமுடியின் மேற்சுமந்தீர்
மேலுந் திரிகூட மேவுவீர்—பாலும்

542. மருந்துமாந் தேவரீர் வாயமுத மென்னேக்
கருந்துமா தந்தருள லாமே—பெருந்தகையீர்

---

539. கருங்கோதை மேகம் - கரிய கூந்தலாகிய மேகம்; கோதை-கூந்தல். "அவிழ் பூங்கோதையொ டவிரிழை பொங்க" (பெருங்கதை (I. 40: 111.) மின்போல் - மின்னற் கொடிபோல; மின் பேரிளம் பெண்ணுக்கு உவமை; "மின்சேவிக்க மின்னரச சென்னும் படிநின் றாள்" (கம்ப. பால. மிதிலைக்காட்சிப்: 31.) பசலை நிறம் - பசும் பொன் போன்ற நிறம்; பசலை பூத்தல் விரகவிகாரத்தால்; கம்ப. பால. உலா வியற். 12; குலோத். உலா: 225; இராசராச. உலா: 376. கோகனக - சிறந்த பொன்போன்ற; கனகம் - பொன்; தமிழில் கோகனகம் என் பதற்குத் தாமரை என்று பொருள் உண்டு எனினும், கோகனகப் பாதாம்புயத்தீர் என்றமையால் முன் உள்ள கோகனகம் என்பதற்குச் சிறந்த பொன் என்று பொருள் கொள்ளப்பட்டது.

540. பல வளைக்கை பாய்ந்த குறி மீது ஆம் புயத்து விகாரத் தீர் - அம்பிகை தழுவியதால் பதிந்த கைவளைகளின் தழும்பாகிய அடையாளங்கள் விளங்கும் மாறுபாடுடைய புயத்தையுடையீர்; இவ்வரலாற்றின் விரிவைக் காஞ்சி புராணத்திற்காண்க.

541. மால் - மயக்கம்; காமமும் ஆம்.

542. பாலும் மருந்தும் ஆம் - பாலும் தேவாமிர்தமும் போலி னிக்கும். என் நோக்கு அருந்துமா - என் கண்கள் கண்டு உண் ணும் படி.

543. கையழகு மான்படைத்தீர் கண்பழகு மான்படைத்தேன்
பெய்பிறைக்கு நெற்றிப் பிறைபெற்றேன்—பையரவுக்

544. கல்குலுடை யேனுமைப்போ லாசையுடை யேன் றிருத்தார்
நல்கவுரித் தானவளு நானன்றோ—செல்வரே

545. தாயுமிலீர் தந்தையிலீர் தாங்கவொரு சுற்றமிலீர்
பேயுடனே யாடுவீர் பித்தானீர்—நாயகியாய்க்

546. கொச்சை மலைமகளைக் கொண்டீ ரவளுமொரு
பச்சைப்பெண் பாரம் பரிந்தவளோ—நிச்சயமாய்

547. வில்லடியுங் கல்லெறியும் வேறோர் பிரம்படியும்
வல்லியிவ ளாற்றிவிக்க வல்லவளோ—சொல்வழிக்கு

---

543. கை அழகு மான் படைத்தீர் - கைக்கு அழகாக மானை அடைந்துள்ளீர்; கையில் அழகான மானை என்னலும் ஆம். கண் பழகுமான் - கண்ணுகி என்னிடம் பழகிவரும் மானை. பெய்பிறைக்கு - நீவிர் சடையில் அணிந்துள்ள பிறைக்கு ஒப்பாக. நெற்றிப் பிறை - என் நெற்றியாகிய பிறை. பை அரவுக்கு - நீவிர் அணிந்துள்ள படமுடைய பாம்புக்கு நேராக.

544. அல்குல் உடையேன் - அல்குலாகிய அரவை யுடையவளானேன். உமைப்போல - உம்மைப்போல. ஆசையுடையேன் - நீவிர் திக்காகிய உடையையுடையீர்; நானும் உம்பால் விருப்பம் உடையவளானேன்; ஆசையுடையேன் என்பது சிலேடையணியில் அமைந்தது. திரு தார் நல்க - உமது அழகிய மாலை எனக்கு கொடுக்க. உரித்தானவள் - உரிமையுடையவள்.

546. கொச்சை - கீழ்ப்பட்ட அல்லது இழிந்த. மலைமகள் - மலையரசன் மகளான பார்வதி. பச்சைப் பெண் - இளம் பெண் ; பசுமை நிறத்தவள் என்பது உட்பொருள். பரிந்தவள் - தாங்கினவள்; பரித்தல் - தாங்குதல்.

547. வில்லடி - அருச்சுனனால் நிகழ்ந்தது. கல்லெறியும் - கல்லால் எறிதலையும்; இது சாக்கிய நாயனாரால் நிகழ்ந்தது. பிரம்படி - பாண்டியனால் நிகழ்ந்தது ; மேற்கூறிய வரலாறுகள் முறையே மகா பாரதத்திலும், பெரிய புராணத்திலும், திருவிளையாடற் புராணத்திலும் காணலாம். வல்லி-கொடிபோன்ற இவள் : அம்பிகையைக் குறிப்பது. ஆற்றிவிக்க - மேற்கண்ட அடிகளால் ஏற்பட்ட புண்களை ஆறச்செய்ய. சொல்வழிக்கு - நான் சொல்லும் வழிக்கு.

548. வந்தருள்வீ ராகில் மறுமுகம்பா ராமலுமக்
கந்தரங்க மோகனப்பெண் ணுகேனே—சொந்தமிரு

549. நாழிநெல்லு நீரளந்தால் நானுழி யாக்கேனே
ஊழிநெல்லை வேலியிட்ட வூருடையீர்—ஆழிவிடத்

550. தந்தமறு வோர்பொடியால் மாற்றேனே மற்றொருத்தி
தந்தகுறி போற்குறியுந் தாரேனே—நுந்தம்மைப்

551. பாதி யுடம்பாகப் பார்ப்பேனே பாவையர்முன்
வீதியைய மேற்க விடுவேனே—சாதியுமக்

552. குண்டாக்க மாட்டேனே வுத்தமரே நீரென்னைக்
கொண்டாலே தீருங் குறையென்ருள்—கண்டார்க்

548. அந்தரங்க - மனத்திற்குவந்த. மோகனப் பெண் - மோகத்தை உண்டாக்கும் பெண்.

549. இரு நாழி நெல் அளந்தது: காஞ்சிபுரத்தில் ஈசன் அம்பிகைக்கு இரு நாழி நெற்கொடுத்து அறஞ் செய்யச்செய்தது; இவ்வரலாற்று விரிவைக் காஞ்சி புராணத்தில் காண்க. நால்நாழி - நான்கு படி; நாழி - ஓர் அளக்கும் கருவி. ஊழி - யுகாந்த காலத்தில். நெல்லை வேலியிட்ட - நெல்லை வெள்ளத்தால் அழியாமல் வேலியிட்டுக் காப்பாற்றிய; இதனுல் அவ்வூர் திருநெல்வேலி எனப்பெயர் பெற்றது. ஆழிவிடத்து - திருப்பாற் கடலில் உண்டான ஆலகாலவிடத்தினுல் ஏற்பட்ட.

550. அந்த மறு - அந்தக் கறையாகிய குற்றத்தை. ஓர் பொடியால் - என்னிடமுள்ள ஒரு பொடியாகிய மருந்தினுல். மற்றொருத்தி - வேறொருத்தியான உமாதேவி; தனக்குச் சகளத்திரமாகக் கருதியும், அவளுடைய பெயரைச் சொல்ல விரும்பாமலும் மற்றொருத்தியென்று வெறுப்புடன் கூறியதும் ஆம். தந்தகுறி - முலைத் தழும்பும் வளைத் தழும்பும் ஆம்; 88, 540.

551. பாதி உடம்பாக - தன் உடம்பிற் பாதி அம்பிகைக்கு ஈந்து குறைவுற்றதை. வீதி ஐயம் ஏற்க - வீதிகளில் பிட்சாடன மூர்த்தியாகச் சிவபிரான் சென்றதைக் குறிப்பிட்டது. விடுவேனே - அந்த இழிந்த நிலைக்கு உம்மை யான் விடமாட்டேன் என்பதாம்.

552. சாதி உமக்கு உண்டாக்க மாட்டேனே - ஒரு சாதியும் சேராத உமக்கு என்னை ஏற்றுக் கொண்டால் சாதியில்லாக்குறை

(பி - ம்.) 552. கண்டார்.

553. அறம்வளர்த்த தாய்முகம்பார்த் தங்ஙனருள் மூர்த்தி
திறம்வளர்த்தான் தேவாதி தேவன்—முறைமுறையாய்

554. மாத ரிவரெழுவர் மாலேறப் பாதலமும்
பூதலமும் விண்ணும் புகழேற—மாதலத்துத்

555. தெய்வ நெறிவளரத் திங்கள்மும் மாரிபெய்யச்
சைவ சமயந் தழைத்தேற—மெய்யடியார்

556. பத்தி வளர்ந்தேறப் பரம்பொருண்மெய்ஞ் ஞானமெனும்
முத்திப் பயிர்கள் முளைத்தேறச்—சித்துடையான்

557. பாருடையா னண்டப் பரப்புடையான் குற்றாலத்
தாருடையான் போந்தா னுலா.

---

நீங்கி ஒரு சாதி ஏற்படும் என்பது; சாதி - உயர்வும் ஆம். கண்டார்க்கு - தம்மைத் தெரிசித்தோர்க்கு.

553. அறம் வளர்த்த தாய்முகம் பார்த்து - அறம் வளர்த்த அன்னையாகிய குழல்வாய் மொழியம்மையின் திருமுகக் குறிப்பை நோக்கி. அங்ஙன் - அவ்வன்னையின் குறிப்பின்படி. அருள் மூர்த்தி - அருள்புரியும் மூர்த்தியும். திறம் வளர்த்தான் - பலதிறப்பட்ட சிறப்புக்களை உலகில் வளர்த்தருளியவரும். தேவாதிதேவன் - தேவர்களுக்கெல்லாம் மேமபட்ட தேவருமான குற்றாலநாதர்; தேவாதி தேவன; காப்பு. I. முறை முறையாய் - வரிசை வரிசையாக.

554. இவர் எழுவர் - இது காறும் கூறிப்போந்த பேதை முதல் பேரிளம்பெண் ஈறுக உள்ள ஏழு பருவமாதர்கள். மால் ஏற - அப்பெருமான் மீது காமமேற்கொள்ள.

555. தெய்வ நெறி - ஆஸ்திக நெறி.

556. பரம்பொருள் மெய்ஞானமெனும் - பரம் பொருளாகிய சிவபிரானை அறியும் உண்மை ஞான நிலையாகிய. சித்து உடையான் - ஆன்மஞானமே தம் வடிவாகவுடைய சிவபிரான்; மாயையாகிய சித்து விளையாட்டையுடையவன் என்னலும் ஆம்.

557. அண்டப் பரப்புடையான் - பல அண்டங்களாகிய அகன்ற இடங்களையுடைய குற்றாலநாதர். போந்தான் உலா - உலாப் போந்தருளினர்.

### இறுதி வெண்பா

*வீதித் திருநெறியாய் மெய்நெறியாய் மெய்வீட்டின்*
*ஆதித் திருநெறியு மானதே—சோதித்தன்*
*பேருடையான் குற்றாலப் பெம்மான்கை மானேந்தும்*
*சீருடையான் மேவுந் தெரு.*

## திருக்குற்றால நாதருலா முற்றும்

[வெண்பா]

*வீதித் திருநெறியாய்* - குற்றால நகரின் நான்கு வீதிகளே வழியாகவும், அதுவே உண்மையின் வழியாகவும். *மெய் வீட்டின்* - என்றும் அழியாத மோட்சவீட்டின். *ஆதித்திருநெறியும்* - எவற்றுக்கும் பழமையான தெய்வ வழியாகவும். *கைமான் ஏந்துஞ் சீருடையான்* - கையில் மானேந்திய அழகுடைய குற்றாலநாதர். *மேவும் தெரு* உலாப்போந்த தெரு. ஆனது என்று முடிவு செய்க.

# இந்நூலின் குறிப்புரையில் எடுத்தாண்டுள்ள பிற நூல்கள்.

அகநானூறு
அபிதான சிந்தாமணி
இராசராச சோழனுலா
உத்தரகோசமங்கைப் புராணம்
கந்தபுராணம்
கம்பராமாயணம்
கல்லாடம்
கலித்தொகை
காஞ்சிபுராணம்
குலோத்துங்க சோழனுலா
சிலப்பதிகாரம்
சீவகசிந்தாமணி
சூடாமணி நிகண்டு
தாயுமானவர்பாடல்
திருக்கருவைக்கலித்துறையந்தாதி
திருக்குற்றாலக் குறவஞ்சி
திருக்குற்றாலச் சிலேடைவெண்பா
திருக்குற்றாலத்தலபுராணம்
திருக்குறள்
திருக்கோவையார்
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்
திருநெடுந்தாண்டகம்
திருப்பூவணநாதருலா
திருமுருகாற்றுப்படை
திருவரங்கக் கலம்பகம்
திருவருட்பா
திருவாசகம்
திருவாய்மொழி
திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
திருவிடைமருதூர் மும்மணிக் கோவை
திருவிளையாடற்புராணம்
திருவெங்கைக் கோவை
திருவேங்கடமாலை
தொல்காப்பியம்
நளவெண்பா
நன்னூல்
நன்னெறி
நீதிநெறிவிளக்கம்
பதிற்றுப்பத்து
பரிபாடல்
பிங்கலநிகண்டு
புறநானூறு
புறப்பொருள் வெண்பாமாலை
பெருங்கதை
மகாபாரதசூடாமணி
மணிமேகலை
முத்தொள்ளாயிரம்
விக்கிரம சோழனுலா

# அரும்பத முதலியவற்றின் அகராதி

[எண் - கண்ணி - எண்]


அகத்தியர் கடல்நீரை உண்டது, 428
- கயிலையிலிருந்து தென்னாடு போந்தது, 28
- குற்றாலத்திலிருந்த திருமால் உருவைச் சிவலிங்கமாகக் குறுகச் செய்து பூசித்தது, 56
- சோணாட்டைப் பொன்னி நாடாக்கியது 32
- தமிழ் முனி, 28
- தவளவரை போல நீறணிந்து விளங்கியது, 53
- பிரமகுமாரர் என்பது, 23, 43
- முனிவர்களுள் சிறந்தவர், 24
- வாதாவி வில்வலனை மாய்த்தது, 30
- விந்தமலைச் செருக்கையடக்கியது, 31

அகத்தியரைச் சடைபெற்ற பொன்மலை யென்பது 29

அங்குரித்தல் - முளைத்தல், 252

அசலம் - மலை, 142

அசனம் - உணவு, 202

அஞ்சக்கரம் - பஞ்சாக்கரம், 8

அடவி - காடு, 173

அணிவகைகள்—
- எண் அணி, 268 - 274
- எமகம், 389
- சிலேடை, 400, 401, 543, 544
- திரிபு, 1-16; 20; 60-61
- மடக்கு, 280, 395, 428
- முரண், 337, 338, 388

அந்தணரைக் கோதமனுங் கண்ணுவனும் சாபம் இட்டது, 49

அம்பிகை அறம் வளர்த்தது, 292, 553
- எண்ணான்கு அறம் வளர்த்தது, 292
- இமயகிரி அரசன் மகளானது, 18, 94
- சிவபிரான் கண்டத்தில் விடத்தை நிறுத்தியது, 84, 85
- சிவபிரான் நடவத்திற்கிசைய கையில் தாளங்கொண்டு ஒத்திசைத்தது, 103
- சிவபிரான் மேனியில் ஒரு பாகங்கொண்டது, 106
- தக்ஷன் மகளானது, 18

அம்புயத்து மைந்தன் - பிரமன், 131

அமலம் - மலம் அற்றது, 13

அயன் - பிரமன், 5, 26, 72, 181

அயிராணி, 325, 455

அரிவைஅடிகள் காமனுக்கும் இரதிக்கும் முடிகள் போன்ற சிறப்புடையன, 408
- எழுதிய சித்திரங்களும் அவற்றை தோழியர்க்குக் காட்டியதும, 415-425
- கண்ணுக்கு அம்பும, விடமும், மானும், 407
- சித்திரங்கள் வரைந்தமை, 413
- நகில்கள திருமகளுக்கு ஆட்டும் அபிடேக குடங்களுக்கு உவமை, 409
- மின் போன்ற உருவும் மேகம் போன்ற கூந்தலும், பொன் போன்ற மேனியும் உடையவள், 410

அரிவையின் அங்கச் சிறப்பு, 447-453

அரிவையைச் சேர்ந்த மகளிர் முறையீடு, 435-444

அல் - இருட்டு, 116

அள்ளூறுதல் - வேட்கையால் நீர் சுரத்தல், 54

அளி - வண்டு, 447

அறுசமயம், 64

அன்றில் - ஒருவகைப் பறவை, 351

அன்னம் பாலையும் புனலையும் பிரிக்கும், 283
ஆகமம் - வருகை, 194 ; வழி பாட்டு நூல், 194
ஆகுவாகனத்தினுன் - விநாயகர், 528, 529
ஆசு - குற்றம், 430
ஆடகம் - பொன், 54
ஆணிக்கனகம், 189, 260
ஆதிக்கம் - உரிமை, தலைமை, 71, 187
ஆதிசக்தி உலகங்களைச் சிற்றில் விளையாட்டில் அமைத்தல், 222
ஆலவட்டத்திற்குச் சூரியர்கள், 127
ஆலை - கரும்பு, 415, 442
ஆழி - சக்கரம், மோதிரம், 400
ஆறு ஆதாரங்கள், 521
ஆனனம் - முகம், 176

இசைக்குச் சித்திரமும் நின்றுருகுதல், 378
சேம்பும் கருவேம்பும் தேன் துளித்தல், 376
பட்டமரம் துளிர்த்தல், 376
பாம்பு செவி தாழ்த்தல், 376
இசை கேட்டுக் கிளியும் பருந்தும் ஒரு கூட்டில் இருத்தல், 377
இசையில் கோமபியும மயிலும் கூடித் தூங்குதல், 377
இந்திரசாபம், 363
இந்திரை - இலக்குமி, 249
இந்து - சந்திரன், 300
இமயக்கோடுதந்த செல்வக் குமரி- உமா தேவி, 18
இமயவெற்பின் மடப்பிடி, - உமா தேவி, 3
இமயாசலப்பெண், 142
இமாசலப்பெண், 94
இருக்கு - வேதமந்திரம், 182
இலஞ்சி வேலர், காப்பு, 1

உத்தரம் - வடக்கு, 47
உத்தரிகம் - மேலாடை, 318
உதயர் பன்னிருவர், 133
உமாதேவி அறம்வளர்த்தது, 292
உமாதேவியை மலைத்தேன் என்றது, 288
உமாபதி, 44
உருவம் - அழகு, 366
உறைப்பு - கோபம், 6

ஊமை பேசியது, காப்பு 3
ஊழிநெல்லை வேலியிட்ட ஊர், 549

ஏக்குதல் - உள்ளிழுத்துச் சுருக்குதல், 490
எய்த்தல் - தோல்வி அல்லது இளைப்படைதல், 326
எழுது மணிமன்றம் - சித்திரச் சாலை, 413

ஏ - அம்பு, 293
ஏக்கரவு 107
ஏய்ப்ப - ஒப்பாக, 169
ஏற்றுச்சிலை - வானவில், 38

ஐந்தரு, 508
ஐந்து அவத்தை, 521
ஐந்து மன்றங்கள். 272
ஐயனுர் வாகனம் யானை, 137

ஓவியமாமன்றம் - சித்திர சபை, 235

கங்குல் - இரவு, 544
கந்தரம் - கழுத்து, 173, 485
கந்துகம் - பந்து, 329
கம்பளர் அச்வதரர் சிவபிரான் செவிகளில் பாம்பாய் இருந்து இசை ஒலித்தல், 151
கல் புணையானது, காப்பு 3
கலித்தல் - ஒலித்தல், 431
கலை - ஆடை, 194
கவிகை - குடை, 487
கவுரி, 94

கழுநீர்த்துறை, 38
கறங்கல் - முழங்குதல், 281
கனல் புனல்போலானது, காப்பு.3

காமவல்லி, 192
காமாரி, 348
காவணம் - பந்தல், 19
காவி - நீலமலர், 168

கிங்கிலர், 140
கிளுவை - ஓர் ஊர், 73
கின்னரியாழ், 366

குடந்தை மாமக தீர்த்தம், 354
குடைக்கு வட்டமதி, 126
குதம்பை - மகளிர் காதில் அணியும் தக்கை, 248
குபேரன் வாகனம் புட்பக விமானம், 135
கும்பம் - குடம், 5
கும்பன் - அகத்தியர், காப்பு. 2, 271
குயில் முட்டையைக் காக்கை அடைகாத்துக் குஞ்சு பொரித்தல், 196
குரகதம் - குதிரை, 454
குரவை - ஆரவாரம். 517
குவடு – குன்று, 10
குழகன் - என்றும் இளமையோடிருப்பவன், 15
குழல் - ஓர் இசைக்கருவி, கூந்தல், 400
குழல் வாய் மொழியம்மை, 76, 225, 339, 389
குழலுக்கு இருள், 207
குற்றாலக் கோயில் - சங்கக் கோயில், 180, 224
குற்றாலக் கோயில், முன் திருமால் கோயிலாய் இருந்தது, 47, 51
குற்றாலக் கோயிலில் உள்ள விநாயகர் பெயர் சண்பக விநாயகர் என்பது, காப்பு. 1
குற்றாலக் கோயிலில் மகுடாகமம் என்னும் விதிப்படி பூஜை நடைபெறுவது, 80
குற்றாலக் கோயிலில் முன்னிருந்த திருமாலுக்கு நீலவரை, 52
குற்றாலச் சங்க வீதி வேதவளமுடையது, 14
குற்றாலச் சண்பகப் பூஞ்சோலை, 487 488
குற்றாலச் சித்திரசபை, 235
குற்றாலச் சித்திர சபையில் ஈசன் நடனம் செய்தல் 17, 280, 513-514
குற்றாலச் சித்திரமன்றத்துத் தெய்வ முரசு ஆர்ப்பது, 17, 471
குற்றாலத்தில்அகத்தியரைப்பயிரவர் பாரார்போல் பார்த்தது, 48
இறந்தோர்பிறவார்என்பது, 39
சிவபிரான் முத்தேவராய் இருந்தது, 26
சிவபிரான் முன் பிரமன், மால் ஆக இருந்து பின் சிவனானது, 27
சிவபிரான் முன் பிரமனாய் இருந்தது, 42
தரணிபீடம் என்னும் பராசக்தி பீடம் உள்ளது, 5, 224
திருமால் குறுகிச் சிவனாக மாறியது, 59
தேவர்கள் மரங்களாய் இருந்து பலகாலம் தவம் செய்தது, 417
தேவர்கள் மாவாய், மரமாய், மனிதராய்த் தவம்செய்தது, 41
குற்றாலத்திலுள்ள அம்பிகையின் திருநாமம் குழல் வாய் மொழியம்மை என்பது 76, 225
குறும்பலா வேதவடிவானது, 14, 15
சத்திபீடம் பிலவாயிலை யுடையது, 224

சித்திரமாநதி, 233, 668
சிலைகளெல்லாம் சிவலிங்கம் என்பது, 423
சிவமதுகங்கை, 482
சிவமதுகங்கை, குடந்தை மாமக தீர்த்தமும், வான கங்கையும் வணங்கும் பெருமை யுடையது, 354
தென்றல் அங்குச் சென்றோர் வினையைப்போக்குவது, 425
தேனருவி, 468, 534
மலை திரிகூட மலை, முத்தேவர் வடிவானது, 26
வடவருவி, படிபவர் அங்கம லத்தைக் கழுநீராய் மாற்றி ஓடச் செய்யும் 12, 13, 38, 424
வீதிக்குச் சங்க வீதி என்று பெயர், 14, 238
குற்றாலநாதர் அகத்தியருக்கருள் புரிந்தது, 483
இந்திரன் பின் காக்க உலாப் போந்தது, 530
குறும்பலாவினடியில் இருப்பது, 15, 474, 519
திருமாலும் பிரமனும் புறங் காப்ப உலாப் போந்தது, 530
முத்தேவரும் ஆவர் 511
விநாயகரும், முருகக் கடவுளும் முன் காப்ப உலாப் போந்தது, 528, 529
குற்றாலநாதரின் அருட்செயல்கள் :—கள்ளுண்ட மாமறையோன் மாபாதகம் தீர்த்தது, 154
சித்திரமன்றில் நடம்புரிந்தது, 17
தேவர்கள் சிவத்துரோகம் தீர்த்தது 7
புட்பகந்தனுக்கு அருள் புரிந்தது 237
மந்த மாருதத்தால் வேதியன் பாவம் போக்கியது, 155
யானைக்கருள் புரிந்தது,
வேடனுக்கும் நரிக்கும் நற்கதி யளித்தது, 155
வேடனுக்கும் பன்றிக்கும் நற்கதி யளித்தது, 278
குற்றாலநாதரின் திருவாசிகைக்கு இந்திரவில், 105
குற்றாலநாதரின் தேருக்கு இமய மலை, 427
குற்றாலநாதரின் தேருக்கு மந்தர கிரி, 125
குற்றாலநாதருக்கு வெள்ளி இடப வாகனம் செய்து வைத்தவன், பேகன், வீரப்பன் பெரிய சுவாமி என்பவன், 74
குற்றாலநாதருலாவை ஒரு தேராகவும், அதற்குச் சொற்கள் பரிகளாகவும் அகத்தியர் சாரதியாகவும் உவமித்தது, காப்பு. 2
குற்றாலநாதருலாவை ஒரு மாலையாகக் கூறியது, காப்பு. 1
குற்றாலநாதரே யார்க்கும் பரம் பொருள் என்பது, 503-511
குற்றாலநாதரை அகத்தியர், இந்திரன், தேவர்கள் வேதம் ஆகியோர் பூசித்தது, 420 21
குற்றாலம் சண்பகத்தடாகத்தை உடையது, 11-37
சிவமதுகங்கை யென்னும் தீர்த்த அருவியை யுடையது, 10
தரணிபீடம் என்னும் பராசக்தி பீடத்தை யுடையது, 5
தலங்களுள் சிறப்புடையது, 25
தீர்த்தம், தலம், மூர்த்தி என்னும் மூன்று சிறப்புக்களை யுடையது, 777
தென்னரிய நாட்டைச் சேர்ந்தது, 466
தேவரும் வந்து புக விரும்பும் இடம், 16

நன்னகர் என்னும் பெயருடையது 16, 46, 201, 333, 464, 467
பொங்குமா கடல் என்னும் தடம் உடையது, 141
குற்ருலமலே ஏற்ருச் சிலேயுடையது (ஏற்ருச் சிலே - வானவில்), 38
நிலேயாக் கடலுடையது, இது பொங்குமாகடல், 37
காயாது பூக்கும் பொழிலுடையது, 36
சாவாமை அளிக்கும் மூலிகைகளேயுடையது, 34
பூவாது காய்க்கு மரமுடையது, 36
தேனருவி என்னும் தெய்வ நதியை யுடையது, 34
மூவா முனிவர்கள் வாழும் குகைகளே யுடையது, 35
வண்டு படரா மலருடையது, (இது சண்பகவனம), 37
குற்ருலமலேயில் காக்கை சேரா என்பது, 196
குற்ருலமலேயில் வானவில், 363
குற்ருலலிங்கர், 332
குறும்பலவின் மூலக் குழகன் - குற்ருலநாதர், 15
குறுமுனி - அகத்தியர், 21

கூந்தலுக்கு இருள் 300

கேகயம் - மயில், 305
கேளார் - பகைவர், 518
கேளி - விளேயாட்டு, 553

கைக்குக் கற்பகமும், அதில் உள்ள கங்கண முடி தொடி கடகம் முதலியவற்றிற்குக் காம வல்லியும், 99

கோம்பாயிரத்திரட்டி குஞ்சரம், ஐராவணம் என்னும் சிவபெருமான் ஏறும் யானே, 469
கோடீரபாரம் - சடாபாரம், 481
கோதை - மாலே, கூந்தல், 401
கோம்பி - பச்சோந்தி, 376
கோளரி - சிங்கம், 114

சக்கணி - ஒருவகைக்கூத்து, 319
சங்கக்கோயில், 180
சங்கவீதி, 14, 165
சடம் - உடல், 493
சடாடவி - சடைக்காடு, 173
சண்டன - யமன், 134
சத்தினிபாதம், 522
சந்தாபம் - மனத்துன்பம், 202
சந்திரன் முத்து விமானத்தில் வருவது, 136
சந்து - தூது, 441
சரப்பளி - ஓர் அணி, 367
சரமண்டலம் - சுரவரிசை, 366

சாத்தா - ஐயனர், 137
சாதி - உயர்வு, 263
சாபம் - வில், 363
சாரிகை, 204
சாளரம் - பலகணி, 162

சித்தசன் - மன்மதன், 535
சித்திரசபை, 280
சித்திரப்பூம் மன்றம் - சித்திர சபை, 17
சித்திரமாநதி, 468
சிவத்துரோகம், 7
சிவதத்துவங்கள் முப்பத்தாறு, 528
சிவபிரான் அகத்தியரை ஆட்கொண்டது, 482-483
அம்பிகைக்குத் தனமேனியில் ஒரு பாகம் அளித்தது, 344
அம்பிகையின் முலேத்தழும்பு கொண்டது, 88, 341-342, 550
இசைவாது வென்றது, 247
உண்டவிடம் அவர் உடலுட் புகாமல் அம்பிகை தடுத்துக் கழுத்தில் இருத்தியது, 85

ஊழியில் நெல்லை வேலியிட்டுக் காத்தது, 549
எல்லாம் வல்ல சித்தனைது, 399
ஏந்திய மான் அக்கினியிற் பிறந்தது, 244
ஏறும் இடபத்திற்கு மருப் பார்ந்த வெள்ளிமலை, 3; 129
கடவுளரில் மேலானவர், 24
கங்காள வேடம் பூண்டது, 385
காதில் சங்கக் குழையணிந் தது, 286
காமத் தொடர்பு அற்றவர், 294
குலம், வருணம் என்பன இல்லாதவர், 291
குற்றாலத்தில் ஆக்கல், காத் தல், அழித்தல் ஆகிய முத் தொழில்களைச் செய்தது, 270
குற்றாலத்தில் பிரமனாய் இருந்து உலகம் படைத் தது, 42
குற்றாலத்துச் சித்திர சபை யில் நடனம் புரிவது, 280
கையில் மழுவேந்தியது, 171
கையில் மானேந்தியது, 286, இறுதி வெண்பா
சடையில் கங்கை நதியிருப் பது, 343
சடையில் பாம்பை அணிந் தது, 269
சடையில் பிறையை அணிந் தது, 152-343
சிரமாலை யணிந்தது, 62
செவியில் கம்பளர் அச்வதரர் என்பார் இசை பாடுதல், 151
சுந்திரர் மணத்தைத் தடுத்து வாதம் புரிந்தது, 235
தக்கன் யாகத்தை யழித்தது,
தாருகவனத்து இருடி பத் தினியரைத் திகம்பரர் ஆக்கி யது, 102
தாருகவன முனிவரின் செருக் கழித்தது, 102, 164
திரிபுர சங்கார காலத்தில் அம்பிகை காணத் தேர்த் தட்டிலிருந்து ஆடியது, 191
திரிபுர சங்கார காலத்தில், பூமியைத் தோராகவும், மேரு வை வில்லாகவும், பிரமனைச் சாரதியாகவும் கொண்டது, 22, 23
திருப்பெருந்துறையில் மாணிக்க வாசகருக்கு உப தேசித்தது, 117
திருவீழிமிழலையில் படிக்கா சிட்டது, 61
பரவைபால் தூதுசென்றது, 31
பாணபத்திரன் மூலம் சேரனுக் குத் திருமுகப் பாசுரம் அளித்தது, 60
பால் நீற்று மெய்யன், 474
பூமியை நேர் நிறுத்த அகத்தி யரைத் தென்பால் அனுப்பி யது, 28
மண்டோதரிக்காய் இலங்கை சென்றது, 199, 476 477
மதுரையில் எழுகடல் அழைத் தது, 262
முப்புரங்களை எரித்தது, 280
மேருவை வில்லாக்கியது, 42, 93, 162, 406-407
யானையுரி போர்த்தது, 89
வளையல் விற்றது, 479
விடம் உண்டு தேவர் இடர் தீர்த்தது, 63, 100, 285, 268, 550
வில்லடி பிரம்படி கல்லடி பெற் றது, 547
சிவபிரானது ஐந்து மன்றங்கள் உள்ள இடங்கள், 272
சிவபிரானின் கண்டம் கறுத்தது, 345

காதுகளில் இரு நாக அரசர்கள் குண்டலங்களாய் இருந்து பாடுவது 228
திருவடியில் திருமால் தன் கண்ணைப் பிடுங்கி அருச்சித்தது, 523
தேருக்கு வேதம்பரியானது 469
நடனத்திற்கு அம்பிகை தாளம் இட்டது, 103
நாள் திருவாதிரை, 518
மேனியில் வளைத்தழும்பிருப்பது, 540
வலக்கண் மாயை யிருள் ஓட்டுவது, 537
சிவபிரானுக்குப் பவளவரை, 53, 105
பாம்பு, அரைஞாணும் வில் நாணும் ஆனது, 101
பாணுகம்பன் சங்கு முழக்குவது, 150
வாணன் முரசு ஒலித்தல், 150
வேதம் பரியானது, 469
சிவபிரானைத் திருமாலும் பிரமனும் தேடிக் காணாமை, 290
நீக்கித் தேவர்கள் யாகம் செய்தது, 45
போதக் கடல் என்றது, 341
விடை பெற்ற பொன்மலை என்பது, 29
சிவமதுகங்கை - குற்றாலத்தில் உள்ள ஓர் அருவி, 10, 482
சின்னணைஞ்சான், 73

சுந்தரர் செங்கல்லைப் பொன்னாக்கியது,
சுந்தரி - இந்திராணி, 249
சுரும்பு - வண்டு, 460, 472
சுவானம் - நாய், 137

தூளிகை - மாடத்துமேலறை, 161

செங்கல் பொன்னானது, காப்பு. 3
செண்பக விநாயகர், காப்பு. 1
செய்குன்று, 161

சே - இடபம், 132
சேகரம் - முடி, 125
சேவகன் - வீரன், 112

சைவ முரசு, 17

ஞானசம்பந்தர் ஆண்பனையைப் பெண்பனை யாக்கியது, 428

தக்கன் ஆட்டுத்தலை பெற்றது, 416
தக்கன்மகள் - தாட்சாயணி என்னும் அம்பிகை, 18
தகர் - ஆடு, 134
தசாங்கம், 464
தடாதகையார், 11
தண்டீசர் தந்தை தாளைத் தடிந்தது, 113
தமிழ்—இனிமை, 450
தமிழ் மூவாறு மொழிகளுள் சிறந்தது, 24
தமிழ் முனிவன்: அகத்தியர், 420
தரணி பீடம் — குற்றாலத்தில் உள்ள பராசக்தி பீடம், 5
தரளம்—முத்து, 86, 136
தவளம்—வெண்மை, 14
தன்னையர்—தமயன்மார், 240

தாண்டவத்தான்—நடனம் செய்பவன், 17
தாண்டவம்—ஆடவர் ஆடும் நடனம், 17
தாணு—சிவபிரான், 45, 191
தாதகி—ஆத்தி, 393
தாமம்—மாலை, 4, 431
தாமோதரன் - திருமால், 50
தார் - மலர், காப்பு. 1
தாரம் - எடுத்தலோசை, 369
தாராகணம் - நட்சத்திரக்கூட்டம், 263

தாருவனம், 164
தாலம் - நா, பனை, 428
தாவடிச் செல்லல் - தாண்டிச் செல்வது, 399

திங்களங் கண்ணுரியான், 152
திரிகூடநாயகன், 157
திரிகூடமலைமேல் உள்ள சண்பகத் தடாக நதி தடாதகைப் பிராட்டியின் நகில்களின் மேலுள்ள ஆடை, 11
திரிகூட மாமலை, 9
திரிவேணி சங்கமம், 193
திருக்கு - கோணல், 190
திருச்சின்னம்,157
திருஞானசம்பந்தர் ஆண்பனையைப் பெண்பனை ஆக்கியது, 428
திருஞானசம்பந்தர் கனலைப் புனலாக்கியது, காப்பு. 3.
திருநாவுக்கரசர் கருங்கல்லை மிதக்கச் செய்தது, காப்பு.3
திரிபுரசங்கார காலத்தில் சூரிய சந்திரர்கள் தேராழிகள்ஆனது, பூமி தேரானது, 22
திருமால் சிவபிரான் கொடியில் இடபமாய் இருப்பது, 470
சிவபிரான திருவடியில் தன் கண்ணைப் பிடுங்கி அருச்சித்தது, 287
திருப்பாற் கடலில் இருப்பது,2
பிரமன் தந்தை, 131
திருவாடுதண்டு - பல்லக்கு, 124
திவவு - யாழின் நரம்புக் கட்டு, 367

தீர்க்கம் - நீடித்தல், 59
தீர்த்தம் மூர்த்தி, ஸ்தலம், 277
தீர்த்தன் - பரிசுத்தன, 7

துவர் - பவழம், 371
துவைத்தல் - ஒலித்தல், 480

தூரிகை - சித்திரம் எழுதுங் கோல், 412

தெய்வமுரசு : குற்ருலம் சித்திர சபையில் முழங்கப்பெறும் முரசு, 17
தெரிவை கண்ட உருவெளித் தோற்றம, 494
தெரிவை விறலியிடம் தன்குறை கூறல், 475-479
தெரிவைக்கும அயிராணியும், அவளைச் சூழ்ந்த மற்ற மகளிருக்கு அர மகளிரும், 455
தெரிவைக்குப் பங்கய மலரும், அவள் வீற்றிருந்த மணியாசனத்துக்குப் பாசடையும், 456
தெரிவையின் அங்கச் சிறப்பு, 447- 453
நகில்களுக்குக் குன்றுகள், 449
புலம்பல், 486 - 494
விழிக்கு, வண்டு, மான், கடு, மாவடு,மீனைப்படுக்கும் வலை, 447-48
தெருள் - ஞானம், தெளிவு, 58
தென்ஞரிய நாடு, 466

தேவாதி தேவன், காப்பு. 1
தேவு - தேவன், 2
தேனதி, சித்திராநதி, தென் கங்கை என்பன ஒன்றே, 468
தேனருவி, 223
தொங்கல் - மாலை, 412

நமன்தூதர் புட்பகந்தன் என்பானை விட்டு வழி விலகிச் சென்றது, 156
நன்னகரம் - குற்ருலத்திற்கு ஒரு பெயர், 16

நாட்டம் - கண்,445
நாப்பண் - நடு, 456
நாமம் - அச்சம், 210; அழகு, 203
நார் - அன்பு, காப்பு. 1

நாள் - நட்சத்திரம், 507
நான்கு கோட்டு அத்தி - அயிரா வதம், 132

நிபம் - வஞ்சனை, 188
நிருதிக்கு - வாகனமாம் நரன், 135
நிலையம் - இருப்பிடம், 8

நேத்திரம் - கண், 335
நேத்திரம் - பட்டாடை, 400
நேமி - சக்கரம், 1

பசலைநிறம், 539
பஞ்சரம் - கூடு, 205
படாம் - துகில், ஆடை 11
பதாதி - காலாட்படை, 120
பதினெண் மொழிகளில் தமிழ் சிறப்புள்ளது, 24
பயிரவர், 48
பயோதரம், 321
பரசமய கோளரி, 114
பராசக்தி மூத்தேவர் முதல் அனை வரையும் ஈன்றவள், 4
பராயம் - வயது, 215
பரிபுரம் - பாதச் சதங்கை, 174
பரிவு - அன்பு, 9
பவத்துரோகம், 7
பவம் - பிறவி, 7, 10
பவனன் - வாயு, 135
பனிதோய்மலை - இமயமலை, 3

பாகீரதி - கங்கை, 143
பாடினி தெரிவையைப் பாராட்டி யது, 458-61
பாடினியின் கானத்திற்குக் கரும் பின் ரசமும் குயிலும், 450
பாந்தள் - பாம்பு, 481
பாரதியார் - கலைமகள், காப்பு. 2
பாரிடம் - பூதம் 535
பாழி - பெருத்த, 290
பானுகம்பன் ஈராயிரங் கைகள் உள்ளவன், 150

பிரசம் - பூந்தாது, மகரந்தம், 242
பிரமன் தாமரையில் உதித்தவன், 1
பிரமன் திருமால், சிவபிரான் மூவருக்கும் சிலேடை, 8
பிரமன் நாவில் கலைமகள் இருப் பது, 1, 428
பிறைக்கு வங்கம், 193

பீனம் - பெருமை, 94

புட்பகந்தன், 237
புண்டரிகம் - தாமரை, 178
புத்தேள் - கடவுள், 1
புரவலர், காப்பு. 2
புரவலன் - அரசன், 60
புள்ளரசு - கருடன், 131

பூதகணங்கள் மலைகளைப் பந்தாடு தல், 120, 535
பூமி தெனபால் உயர்ந்து வடபால் தாழ்ந்தது, 21
பூவை - நாகணவாய்ப்புள், 219

பெண்ணிருந்த தாலத்தான் - பிர மன், 428
பெதும்பை அன்னநடையினும் அழகு நடையுடையவள், 258
கண்கள ஒருபால் அமுதமும் ஒருபால் ஆலமும உடை யன, 251
கழங்காடுதல், 283
சூரிய வெளிச்சம் படாது நீருள் வளரும் தாமரை அரும்பு, 250
பூவை, கிளி, மான் இவற்றை வளர்ப்பது, 262
மணக்கோல விளையாட்டில் ஆசையுடையவள், 255
மாடப்புறுவால் மதனுகம நூற் செய்தி யறிபவள், 256

முலைக்குக் கற்பகத்தின் முளை, 252
முலைக்கு வாமனன் உருவம், 252
முலை மாரன் பேரணிக்குத் தூசு போன்றது, 253

பேதை ஒன்றை நினைத்து வேறு ஒன்றைச் செய்தல்: ஒன்றை விடுத்து ஒன்றைச் சொல்லுதல், 214
கண்களைப் போர் செய்யா அம்பு என்றது, 209
சிற்றிலைச் சிறுசோர் அழித்தது, 216
சொல் பதினெட்டு மொழிகளில் அடங்காத பத்தொனபதாம் மொழி என்பது, 208
தன் பாவையைக் கயவர் தனம் போல மறைத்துவைத்தது, 246
தாம்பைப்பிடிப்பது போல் பாம்பைப் பிடிப்பவள், 215
நுதலுக்கு மூன்றாம் பிறை, 207
பற்களுக்கு ஆம்பலின் அல்லியிதழ், 212
பற்களுக்கு அல்லியிற்றோன்றியழியும் அகவிதழ்கள், 212
முலைக்கு கடலில் ஒளிந்த மைந்நாக மலை 210
முலைக்கு நாளை முளைக்க இன்று விட்டவிதை, 211
முலைக்கு மணலுள் மறைந்த வாயில்லாத கும்பம், 210
பேதையின் பேச்சு பத்தொன்பதாவது மொழி என்பது, 208
பேரிளம் பெண் கண்கள் இரண்டும் சேர்ந்து மன்மதன் கணைகள் ஏழாயின என்பது, 497
பேரிளம் பெண் குற்றாலநாதரிடம் குறைநயந்து வேண்டல், 540-542

பெண், நாண் சும்க்கலாற்றாத நகிலாள், 500
பெண், பூண் சுமக்கலாற்றாத பூவை, 500
பெண், மன்மதன் பெண்ணுருவெடுத்து வந்தது போன்றவள், 495
பெண் மூன்று சண்பகக்கன்று நட்டு வளர்த்தது, 514-515
பெண்ணின் அங்கங்களின் சிறப்பு, 495-500
பெண்ணின் அங்கச் சிறப்பு, 495-500
பெண்ணின் உடைக்குக் கடல் அலை, 497
பெண்ணின் நகிலின் சிறப்பு. 495
பெண்ணுக்கு, உடனிருந்த மகளிர் குற்றால நாதரே பரம் பொருள் என்று விளக்கியது, 503-511
பெண்ணுக்கும் குற்றால நாதருக்கும் சிலேடை, 543-544
பெண்ணை மன்மதன் சேனாபதி என்பது, 535

பொங்குமாகடல். 141, 37
பொதியத்தமிழ் நாடு கன்னி நாடென்பது, 32
பொற்கோன் - குபேரன், 135
பொறையுயிர்த்தல், 1
பொன் - இலக்குமி, 2
பொன்னி - காவிரி, 32

போதகம் - யானை, 421
போதம் - ஞானம், 58, 190, 341
போதன் - ஞானி, 175
போனகம் - உணவு, 518

மகம் - யாகம், 18
மகரயாழ், 367
மகளிர் இதழுக்கு முருக்கமலர், 96

மகளிர்க்குப் பூத்த மலர்க்கொம்பு, 516-17
மகளிர் நடைக்கு யானை, 166
மங்கை: காதளவுங் செல்லுங் கண்ணுள், சூதும் களவும் கொண்டு திரும்பும் கண்ணுள், 297
காமரசதாளிக் கரும்பில் வைத்ததேன் போலும் வசனத்தாள், 299
குழலுக்கு அளிக்கூட்டம், 300
தண்டை, இடை ஒசியும் என்று இரங்குவது, 323
நகில்கள் தவத்தோர்க்கும், இடைக்கும் இடையூறுவை, 301
நகிலுக்குச் செண்டு, 306
பந்தடிக்கும் சிறப்பு, 307-325
மதுகங்கைத் துறையில் உள்ள பவழக்கொம்பு, 296
மயிலுக்கும் அவளைச் சூழ்ந்த பெண்கள் கிளிகளுக்கும், 305
முலை தவத்தோர்க்கும், இடைக்கும் இடையூறுவது, 301
மற்ற மகளிர்க்கும் மன்மதனுக்கும் வாயூறும் அமுத இதழினள், 298
மங்கையின் இதழுக்குப் பவளம், 340
விரக தாபம், 350-352
மஞ்சு - அழகு, குளிர்ந்த, 8
மடந்தைக்குப் பூமதுகங்கைப் புதுத்தேன், 354
மடந்தைக்கும் தேருக்குஞ் சிலேடை, 400-401
மடந்தை, சங்கு ஆழிகை சோர்ந்தது, 385
பாடிய ராகங்கள், 371-375
மன்மதனைவென்று அடைந்த மகரக் குழையை உடையவள், 355
யாழ் வாசித்தல், 368-378
மடந்தையின் கூந்தலுக்கு மேகம், 360
நகில்களின் சிறப்பு, 357-60
பாட்டின் சிறப்பு, 376-378
புருவங்களுக்குச்சிலை, 355
மடந்தையைமகளிர் பாராட்டியது, 379-384
மத்திமம் – சுரத்தின் நடுவோசை, 369
மதுகம், இலுப்பை, எட்டி, 10
மந்தமாருதத்தால் வேதியன் பாதகம் போக்கியது, 155
மந்தரம் - படுத்தலோசை, 369
மருப்பார்ந்த வெள்ளிமலை - சிவபெருமான் இடபம், 3
மருப்பு - கொம்பு, 2
மலரோன் - பிரமன், 9
மழுச்செவ்வரசர் பன்னொருவர் - ஏகாதச உருத்திரர்கள், 132
மன்மதன் குதிரை - கிளி, 454 ; வாகனம் கிளி, 138

மாடகம் – யாழின் முறுக்காணி, 367
மாத்திரை - ஐச்வர்யம், 14 ; சிறு கால அளவு 49
மாமி இல்லாச் செல்வி - அம்பிகை, 145
மார்பின நூலும் மணிமாலையும் மலையிலிருந்து வீழும் அருவிகளுக்கு, 172
மாரன் - மன்மதன், 188, 532
மால் - மயக்கம், 494, 554
மைந்தன் - மன்மதன், 405

மிடறு - கழுத்து, 202

முத்திரை - அடையாளம், 51
முப்போது தீண்டுவார் - சிவபிரானைப் பூசை செய்யும் ஆதிசைவ அந்தணர், 524
மும்முரசு மன்றம், 471
முருகன் கடலில் வேலெறிந்தது, 112

சூரன் உடலைத் தடிந்தது, 112
மலையைப் பிளந்தது, 112
முளரி - தாமரை, 8, 361, 459 ; நெருப்பு, 8
முனிவர் எழுவர் வெண் முத்துப் புட்பக விமானத்து வருதல், 134

யமன் வாகனம் எருமைக்கடா, 134

யாழ் வாசிப்பின் உயர்முறை, 367 - 371
யாழோர் - கந்திருவர், 151

ரசதாளிக்கரும்பு, 299

வங்கம் - கப்பல், 193
வடவருவி, குற்றாலத்தில் உள்ள ஓர் அருவி 12, 40
வடித்த - தெளிவான, 61
வண்டுபடா மலர் - சண்பகமலர், 37
வம்பு - புதிது, மூங்கில், 366
வயிரவர், 137
வயிரவர் வாகனம் நாய், 137
வருணன் வாகனம் மகரமீன், 134
வன்னி - அக்கினி, 134
வாங்குதல் - வளைத்தல், 22
வாணனுக்கு ஆயிரம் கைகள், 150
வாத்திய வகைகள், 148 - 149
வாயுவுக்கு வாகனம் மான், 135
வாரணம் - யானை, 166

விடபம் - மரக்கிளை, 67
விடை - இடபம், 129
விடை நம்பிரான் - இடபதேவர், 130
விண்ணிடபம் - இடபராசி, 67
விநாயகர் மேருவில் மகாபாரதத்தை எழுதியது, 111
விறலி - பாடினி, 459 ; பாண்மகள், 476

வெண்கமல நாயகி, 1
வெண்கவரிகளுக்கு மலை அருவிகள், 128
வெள்ளிமலை யேறிவரும் மேரு மலை, 3

வேகடவா மணி, 125
வேணி - சடை, 106, 269
வேணுபுரம் - சீகாழி, 175
வேய்ங்குழல் - புல்லாங்குழல், 437
வேள் - மன்மதன், 204

---

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 9 | 24 | தவம் | தலம் |
| 10 | 11 | மாறும்படிம் | மாறும்படி |
| 13 | 8 | ஓட்டிஞர்ரன்றே | ஓட்டிஞரன்றே |
| 17 | 29 | திருநாள் | திருநாளில் |
| 20 | 6 | கும்பமிள | கும்பவிள |
| 21 | 15 | எழ்ரம் | எழாம் |
| 21 | 23 | அணிந்து | அணிந்த |
| 26 | 33 | S. I. II. | S. I. I. II. |
| 42 | 16 | திசைகூட | திசைகூடு |
| 47 | 8 | பொங்கவிடித் | பொங்கவிடுத் |
| 68 | 22 | நண்ணீய | நண்ணிய |
| 107 | 33 | முறை-டத் | முறைநடத்தும் |

சிவ சிவ

இந்நூலின் பதிப்புக்கு அன்புடன் பொருளுதவி செய்தருளிய திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், மகாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் புகழை நிலை நிறுத்தச் செய்தருளிய அறங்களுள், (1) சென்னை, மாகாணக் கல்லூரியில் ஸ்ரீ ஐயரவர்களின் உருவச்சிலையை நிறுவியபோது 1948 மார்ச் "சென்னைக் கல்லூரிகளில் டாக்டர் சாமிநாத ஐயர் நினைவுத் திருக்குறட் பரிசு ரூ. 3,500", (2) ஸ்ரீ ஐயரவர்கள் நூற்றுவதாண்டு நிறைவு விழாவையொட்டி நிறுவுவதாக இருக்கும் பரிசு ரூ. 3,000. ஆகியவை குறிப்பிடத்தக்கன.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் பல சிவாலயங்களில் தேவார திருப்பதிகங்களைச் சலவைக் கற்களிலே அமைக்கச் செய்திருப்பதை அன்பர்கள் அறிவார்கள். இந் நூலுக்குரிய திருக்குற்றாலநாதர் ஆலயத்திலும் அம்மன் பிராகாரத்தில் திருக்குற்றாலத் தேவாரப் பதிகங்களும், திருவரங்க மாலையும் சலவைக்கற்களிலே அவர்களால் பதிப்பிக்கப் பெற்றுள்ளன வென்பது மகிழ்ச்சிக் குரியதாகும்.

இன்னும் அவர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக இதுவரை நிறுவியுள்ள தருமங்களின் தொகுப்பு பின் வருமாறு :—

| எண் | தருமவிவரம் | | | முதற்பொருள் |
|---|---|---|---|---|
| 1. | திருமுறை வளர்ச்சிக்காக | 24 | தருமங். | 3,29,000 |
| 2. | கல்வி அபிவிருத்திக்காக | 43 | ,, | 5,53,700 |
| 3. | சைவசித்தாந்தம் பரப்ப | 7 | ,, | 1,56,000 |
| 4. | அன்னதானம் செய்ய | 76 | ,, | 17,74,500 |
| 5. | வைத்தியம் செய்ய | 5 | ,, | 1,22,500 |
| 6. | பொது தருமங்கள்—ஸ்நான கட்டம், அகதி நன்கொடை, தண்ணீர்ப்பந்தல், ஒளிவளர் விளக்கு, பசுப்பரிசு, கல்லெழுத்து முதலியன | 41 | ,, | 2,94,745 |
| | ஆகத்தருமங்கள் | 196க்கு | | 32,30,445 |

கோழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றிய

1. திருவாசக அநுபூதி உரை என்னும் திருவாசக வியாக்கியானம்

பகுதி 1. (4 அகவல்கள் : பக்கம் 484.)

காலிகோ ... ரூ. 6 8 0

பகுதி 2. (பதிகங்கள் : பக்கம் 556.)

காலிகோ ... ரூ. 7 8 0

தோலாமொழித்தேவர் இயற்றிய

2. சூளாமணி [குறிப்புரையுடன்]

முழுப்புத்தகம். (2131 செய்யுட்கள்) ... ரூ. 12 0 0

பகுதி 1. (442 பக்கங்கள்) காலிகோ ... ரூ. 6 8 0

பகுதி 2. (496 பக்கங்கள்) காலிகோ ... ரூ. 6 8 0

3. மகாபரத சூடாமணி

பகுதி 1. (நாட்டியம்) ... ரூ. 10 0 0

பகுதி 2. சங்கீதாதி ராகமேள லக்ஷணம்

(பல வித்வான்களாலும் பத்திரிகைகளாலும் புகழப்பெற்றது)

காலிகோ ... ரூ. 5 10 0

ராப்பர் ... ரூ. 5 0 0

4. ஸ்ரீ ஐயரவர்கள் திருவுருவப்படம் ... ரூ. 0 8 0

(18″ × 15″)

ஸ்ரீ ஐயரவர்களின் சரித்திரச் சுருக்கம் ... ரூ. 0 1 0